இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள்: 56

சுடர் 32 | கதிர் 169 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 31 ஞாயிற்றுக்கிழமை 14.05.2017

மகாராஜா பொதிகள் சேவை
11kg ற்கு மேல் 01kg ற்கான கட்டணம்
அவுஸ்திரேலியா 800/-
பிரான்ஸ் 750/-
உணவு பொருட்களை
விரைவாக அனுப்ப நாடவேண்டிய ஒரே இடம்
GTV Express
இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2224338 / 021-4925024
இல 25 கந்தசாமி கோவில் வீதி வவுனியா
024 - 4930200 / 076 - 6908961

அதிகாரிகளின் போலிக் கையெழுத்திட்டு

## பலரிடம் பணம் பிடுங்கிய ஆசாமி நேற்றுச் சிக்கினார்

யாழ்ப்பாணம், மே 14
யாழ்ப்பாண மாவட்டச் செயலர், பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் உள்ளிட்டோரின் போலியான » 53

## தேசிய டெங்கு ஒழிப்பு வடக்கில் ஒத்திவைப்பு

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு


யாழ்ப்பாணம், மே 14
தேசிய அவசர டெங்கு ஒழிப்புத் திட்டத்தை வடக்கு மாகாணத்தில் எதிர்வரும் 22ஆம், 23ஆம் திகதிகளில் முன்னெடுக்கு » 53

## தெருநாய்களைக் கட்டுப்படுத்த அவற்றைப் பிடிப்பதே ஒரே வழி

*உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான கலந்துரையாடலில் வலியுறுத்து*

யாழ்ப்பாணம், மே 14
யாழ். மாவட்டத்தில் அதிரித்துள்ள தெரு நாய்களால் கடிக்குள்ளாவோரின் எண்ணிக்கையும், அவற்றால் ஏற்படும் விபத்துக் » 53

## அழிவுகளின் நினைவுகள் அழியவில்லை



படம்: அமரதாஸ்

## இருவேறு இடங்களில் நேற்று நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே 14
21ஆம் நூற்றாண்டின் மானிடப் பேரவலம் நிகழ்ந்தேறியதை நினைவு கூரும், முள்ளி





» 53

## மே 18 முல்லைத்தீவுக்கு மைத்திரி செல்லலாமா?

ஆராய்கிறது அவரது செயலகம்

யாழ்ப்பாணம், மே 14
முல்லைத்தீவு மாவட்டத்துக்கு எதிர்வரும் 18ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வருவதற்கு எதிர்ப்பு » 53

# 3 மாகாண சபைகளின் ஆட்சியைப் பிடிப்பதில் மகிந்த அணி தீவிரம்

மைத்திரியின் அதிருப்தியாளர்களை இணைப்பதில் மும்முரம்

கொழும்பு, மே 14
இந்த ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவேன் என்று கடந்த மே தினத்தின் பின்னர் மகிந்த ராஜபக்ச தெரிவித்திருந்த நிலையில், மூன்று மாகாண சபைகளின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் நடவடிக்கையில் மகிந்த அணி தீவிரமாகக் களமிறங்கியுள்ளது.

வடமத்திய, மத்திய, தென் மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பிடிப்பதற்கு மகிந்த அணி முயற்சிகள் மேற்கொள்வதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. முதற்கட்டமாக மைத்திரியின் அதிருப்தியாளர்களை ஒன்றிணைக்கும் முயற்சிகளை மகிந்த அணி முன்னெடுத்துள்ளது.

இந்த ஆண்டு கூட்டு அரசின் ஆட்சியைக் கவிழ்ப்பேன் என்று கடந்த ஆண்டு இறுதியில், மகிந்த ராஜபக்ச பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார். இதன் பின்னர் தொழிலாளர் தினத்தில், பொருத்தமான தருணத்தில் ஆட்சிக் கவிழ்ப்பு நடைபெறும் என்றும் அவர் கூறியிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில், வட மத்திய » 53

முச்சந்தி முரளி



அதிகார பேராசை இப்போதைக்கு விட்டுப் போகாது போல....

மாநகரசபை கடைத் தொகுதிக் கட்டுமானம்

## ஊழல் நடந்ததா என அறிய ஐவர் கொண்ட குழு நியமனம்

யாழ்ப்பாணம், மே 14
யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் யாழ். மாநகர சபையால் உருவாக்கப்பட்ட மாடிக் கடைத் தொகுதிக் கட்டுமானத்தில் ஒழுங்கு விதிமுறைகள் முறையாகப் பின்பற்றப்படவில்லை என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. அது தொடர்பில் விசாரணை நடத்த 5 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.
யாழ். மாவட்டத்துக்குட்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண முதலமைச்சர் » 53

## வடக்கில் 50 கி.மீற்றர் வேகத்தில் காற்று வீசும்

கொழும்பு, மே 14
வடக்கு மாகாணத்தில் எதிர்வரும் சில தினங்களுக்கு மணிக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் கடும் காற்று வீசக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்தது.
“நாட்டின் பெரும்பாலான இடங்களில் பிற்பகல் 2 மணியின் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த » 53

## மூன்றாம் தரப்பு தலையிடக் கூடாது: சீனா காட்டம்

கொழும்பு, மே 14
இலங்கையுடனான இராணுவ உறவு பிராந்திய அமைதி மற்றும் உறுதிப்பாட்டுக்கு நல்லது. மூன்றாவது தரப்பு அதில் தலையீடு செய்யக் கூடாது. இவ்வாறு சீன பாதுகாப்பு அமைச்சு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று றொய்ட்டர் செய்திச் சேவை செய்தி வெளியிட்டுள்ளது.
கொழும்பில் சீன நீர்மூழ்கியைத் தரிப்பதற்கு » 53

## செயலாளர்கள் நியமனத்தை இடை நிறுத்தினார் விக்கி

இடைநிறுத்துமாறு ஆளுநரிடம் கோரினார்

யாழ்ப்பாணம், மே 14
வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராக சி.ஏ.மோகன்ராஸுக்கு வழங்கப்பட்ட நியமனத்தையும், வடக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளராக திருமதி ரூபினி வரதலிங்கத்துக்கு வழங்கப்பட்ட நியமனத்தையும், நிறுத்தி » 53

## மைத்திரியின் கோட்டை மகிந்தவிடம் சாய்கிறது!

கொழும்பு, மே 14
அரசதலைவர் மைத்திரியின் கோட்டையாகவுள்ள வட மத்திய மாகாண சபையின் ஆட்சி அதிகாரம், மகிந்த அணியிடம் பறிபோவது பெரும்பாலும் உறுதியாகியுள்ளது.
அந்த மாகாண சபையின் ஆளும் தரப்பு உறுப்பினர்கள் 17 பேர் நேற்று முன்தினம் இரவு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைச் சந்தித்து இரகசியக் கலந்துரையாடல் நடத்தியுள்ளனர். பெரும்பான்மை பலம் மகிந்த அணிக்கு கிடைத்துள்ள நிலையில், வட » 53

## மகிந்த அணியினருக்கு மைத்திரி தரப்புச் சவால்

மாகாண சபை ஆட்சியை பிடிக்கவே முடியாதாம்

கொழும்பு, மே 14
மகிந்த அணியால் வட மத்திய மாகாண சபையின் ஆட்சியையோ அல்லது வேறு எந்த மாகாண சபைகளின் ஆட்சியையோ பிடிக்கவே முடியாது என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் » 53



SDB சீதனம்
நேசமிகு அர்ப்பணிப்பு
பாதுகாப்பான எதிர்காலம்
ஒப்பந்த தொகை அவ்வாறே

011 5 411 411

| [illegible] | [illegible] | | |
|---|---|---|---|
| | புதிதாகப் பிறந்த குழந்தைக்கு | 5 வயது குழந்தைக்கு | 10 வயது குழந்தைக்கு |
| 5,000 | 995 | 1,559 | 2,440 |
| 10,000 | 1,991 | 3,117 | 4,881 |
| 25,000 | 4,977 | 7,793 | 12,202 |
| 50,000 | 9,955 | 15,586 | 24,403 |
| 75,000 | 14,932 | 23,379 | 36,605 |
| 100,000 | 19,909 | 31,172 | 48,806 |
| 500,000 | 99,549 | 155,862 | 244,031 |
| 1,000,000 | 199,099 | 311,725 | 488,062 |

அழையுங்கள் 0115 411 411

Fitch Rating BB+ (stable), Reg No: PB62PQ

SDB வங்கி

# காலி முகத்திடலுக்கு அருகே மனித எச்சங்கள் வெளிவந்தன

கொழும்பு, மே 14
கொழும்பு காலி முகத்திடலை அண்மித்த பகுதியில் ஹோட்டல் நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுவரும் வளாகத்திலிருந்து மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.
ஊழியர்கள் நிலத்தை தோண்டும் பணியில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே மனித எலும்புத் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
இது தொடர்பில் உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், சம்பவ இடத்தில் ஆய்வில் ஈடுபட்ட பொலிஸார், எலும்புத் துண்டுகள் பல ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப்பகுதியில் புதைக்கப்பட்டதாக இருக்கலாம் என்று தெரிவித்தனர். (வ-5)

# வடக்கு மாகாண சபையுடன் முன்னணி விலகியே நிற்கும்

## நினைவேந்தல் குறித்து அறிக்கை

யாழ்ப்பாணம், மே 14
"வடக்கு மாகாண சபையால் முன்னெடுக்கப்படும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்விலிருந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விலகியே இருக்கும்"
இவ்வாறு முன்னணியின் தலைவர் மற்றும் செயலாளரின் ஒப்பங்களுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:
தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வை முன்னிறுத்தி கட்சி, அமைப்பு பேதமின்றி அனைத்து தரப்பினரையும் முழுத் தமிழர் தாயகத்தையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க் கால் நினைவேந்தல் முன்னெடுக் கப்படுதல் சாலச் சிறந்தது.
இந்த நிகழ்வுக்கு தலைமையேற்று அனைத்துத் தமிழ் மக்களையும் ஒருங்கிணைத்து நினைவு கூர வேண்டிய வரலாற்றுக் கடமை தமிழ் மக்கள் பேரவையின் கைகளில் உள்ளது. அதன் அங்கத்துவ அமைப்பு என்ற ரீதியில் இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றோம். வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் உள்ளிட்ட இணைத் தலைவர்கள் தலைமையில் மேற்படி நிகழ்வு முன்னெடுக்கப்படும் பட்சத்தில் உணர்வு பூர்வமாக நடத்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தன்னை அர்ப்பணித்துச் செயற்படும்.
மாகாண சபை முறையை ஏற்கமறுத்து மேற்கொள்ளப்பட்ட ஓர் போரட்டத்தில் ஏற்பட்ட இழப்புக்களையும் தியாகங்களையும் நினைவுகூருகின்ற நினைவேந்தல் நிகழ்வை அந்தப் போராட்டம் அழிக் கப்பட்ட பின்னர் உருவாக்கப்பட்ட வடக்கு மாகாண சபையூடாக மேற்கொள்வது என்பது இதுவரை காலமும் தமிழ் மக்கள் செய்த தியாகங்களையும், சந்தித்த இழப்புக்களையும் கொச்சைப்படுத்தும் என்பதால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வடமாகாண சபை முன்னெடுக்கும் எத்தகைய நினைவேந்தல் நிகழ்வுகளிலிருந்தும் தவிர்க்க முடியாதவாறு விலகியே நிற்கும்.
தமிழ் மக்கள் பேரவையால் இதனை தலைமையேற்று ஏற்பாடு செய்ய முடியாத சூழ்நிலைகள் இருப்பின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மேற்படி நினை வேந்தல் நிகழ்வை தனித்து முன்னெடுக்கும் என்றுள்ளது. (வ-5)



# பீஜிங் மாநாட்டில் பங்கேற்க சீனா பயணமானார் ரணில்

பீஜிங், மே 14
முப்பதுக்கும் அதிகமான நாடுகளின் தலைவர்கள் பங்குபற்றும் பீஜிங் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தனது பாரியார் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்கவுடன் சீனாவுக்கு நேற்றுப் பயணமானார்.
தலைமை அமைச்சருடன், சிறப்புத் திட்டங்களுக்கான அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, நகரத் திட்டமிடல் மற்றும் நீர்முகாமைத்துவ அமைச்சர் ரவூப் ஹக்கீம், சட்டம் மற்றும் ஒழுங்குகள் அமைச்சர் சாகல ரத்நாயக்க, அபிவிருத்தி தந்திரோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஆகியோரும் பீஜிங் சென்றுள்ளனர் என்று தலைமை அமைச்சர் செயலகத்தின் பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# 30 வருட குத்தகைக்கு தனியாரிடம் சிறுத்தீவு

யாழ்ப்பாணம், மே 14
யாழ்ப்பாணம், மண்டைதீவுக்கு அண்மையாகவுள்ள சீறுத்தீவு 30 வருட குத்தகைக்கு தனியார் நிறுவனம் ஒன்றுக்கு யாழ்ப்பாண பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம், மண்டைதீவுக்கு அருகே உள்ள சிறுத்தீவில் வர்த்தக நோக்கம் ஒன்றுக்காக 15 ஏக்கர் நிலம் 30 ஆண்டுகால குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. 2013ஆம் ஆண்டில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் காலத்துக்கு முன்பாகவே குறித்த நிலப்பரப்பு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தனியார் நிறுவன வர்த்தகர் ஒருவருக்கு வழங்குமாறு அறிவுறுத்தியதற்கு அமைவாகவே இந்த அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
வடக்கு மாகாண முன்னாள் ஆளுநரின் பணிப்பில் குறித்த நிலம் வழங்கப்பட்டுள்ளது.
இது தொடர்பாக மகிந்த ராஜபக்சவால் வழங்கப்பட்ட அனுமதிக் கடிதத்தின் 4 பக்கம் கொண்ட ஆவணம் தற்போது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.
15 ஏக்கர் நிலமும் ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது என்று குத்தகை அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இது குறித்த விடயம் நேற்றைய தினம் வடக்கு முதலமைச் சரின் அலுவலகத்தில் இடம்பெற்ற உள்ளுராட்சி அமைச்சு தொடர்பான கூட்டத்திலும் பேசப்பட்டது. (வ-8-101)

# புலனாய்வறிக்கையில்லாமல் இனி ஒன்றும் நடக்காதுபோல.....



## அம்பலத்தாடி அப்புச்சி

வெக்கை தாங்கேலாமல் கிடக்கு. பின்ன, கோடிக்க கிடந்த சாக்குக்கட்டில எடுத்து தூசு தட்டி புதுச்சாக்கொன்று வைச்சு அடிச்சு வீட்டு முற்றத்தில கிடந்த வேப்பமரத்தடியில போட்டு அதிலதான் இப்ப சீவிக்கிறன் பாருங்கோ.
அதில காத்தாடக் கிடக்கைக்குள்ள வீட்டை வந்த சொந்தமொன்று வந்ததும் வராதது மாய் கேட்குது, "அப்புச்சி நீ சிங்கராசியோ?" என்று. "என்னத்துக்குக் கேட்கிறாய்?" என்று கேட்டன். அதுக்கு அவன் சொல்லுறான் "போனமாசம்தான் வீட்டுக்கு மாபிள் எல்லாம் போட்டு பாத்ரூம் கட்டி கொமேட்டும் போட்டு மினுக்கினாய்! இப்ப என்னடா வென்றா வேப்பமரத்தடியில் தவம் கிடக்கிறாய். சிங்கராசிக்காரருக்குத்தான் என்னத்தைச் செய்தாலும் வீட்டுக்க இருக்க விடாதாம். அதுதான் கேட்டனான்" என்றான்.
"காண்டாவனம் ஒருத்தரையும் வீட்டுக்குள்ள இருக்க விடுகுதில்லை அப்ப எல்லாரும் சிங்கராசிக்காரரே? உனக்கு எப்பவும் நக்கலும் நளினமும்தான்" என்று நான் சொல்லிப்போட்டு, "நாட்டில இரண்டு சிங்கமும் சேர்ந்து வெசாக் கொண்டாடுதுகள். அதுக்கு என்ன சொல்லுறாய்?" என்று நான் கேட்டன். "அதென்ன இரண்டு சிங்கம்?"; என்றான். "பக்கத்து வீட்டுக்காரர் மோடியைக் கூப்பிட்டு ரணில் வெசாக் கொண்டாடுறார்:. அதைச் சொன்னனான்" என்றன்.
"மோடியைக் கூப்பிட்டு வெசாக் கொண்டாட வேண்டிய தேவை என்ன வந்ததெண்டு விளங்கேல்லை. இந்த முறை மலையகப் பக்கமாகவும் காற்று வீசுது. தமிழரைப் பிரிச்சு வைச்சு கையாளுறதில எல்லாரும் கவனமா இருக்கினம் பாருங்கோ. மலையகத் தமிழர், கிழக்குத் தமிழர் வடக்குத் தமிழர், மேல்மாகாணத் தமிழர் என்று எப்பவும் பிரிச்சு வைச்சிட்டா தேவையான போது தேவையானதைச் செய்யலாமெல்லே!" என்று நான் புலம்ப, "இப்ப கிட்டடியிலதான் கேள்விப்பட்டன் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு என்று எல்லா இடத்திலயும் இருக்கிற மலையகத் தமிழரைத் தனி அடையாளமாகக் கொண்டு வந்து அவையள சேர்த்து கட்சியொன்று உருவாக்கிற முயற்சியில சிலர் இறங்கியிருக்கினமாம். அவங்கள் ஒன்றாச் சேர்ந்து இருக்கிற சமூகங்களோட முரண்பாட்டை உருவாக்கிற முயற்சிகளில்லையும் சில அரசியல்வாதிகள் ஈடுபட்டிருக்கினம் என்று கேள்விப்பட்டன்" என்றான் என்ர சொந்தக்காரன்.
"இந்தப் பின்னணியில மோடி மலையகப் பக்கமா திசை திரும்பினதப் பார்த்தா யோசினையாத்தான் இருக்கு. எங்கட அரசியல் பழங்கள், காய்கள், குஞ்சு குருமான்கள் இதுக்காக என்னத்தை யோசிக்குதுகளோ. அல்லது செத்தேன் சிவனே என்று இருந்திட்டு எலெக்சன் வரேக்க மட்டும் மண் தோன்றிக் கல் தோன்றாக் காலத்துக்கு முன் கையில் வாளுடன் முன்தோன்றிய மூத்த குடி அடங்கிக்கிடப்பதோ என்று வீர வசனம் கதைச்சு சீற்றுகளைப் பிடிக்கலாமென்று இருக்குதுகளோ யாருக்குத் தெரியும்!" என்று நான் புலம்பினன். வேற என்னத்தைச் செய்ய நானும்!
இப்படிப் பலதும் பத்தையும் கதைச்சுக் கொண்டு இருக்க என்ர பேரப்பிள்ளை என்ர ரெலிபோனைக் கொண்டோடி வந்தாள். யாரோ உங்களோட கதைக்க வேணுமாம் என்று சொல்லிப் போட்டு ரெலிபோனைத் தந்திட்டு போனாள். அதில சினேகிதர், பழமும் தின்று கொட்டைபோட்ட பேராசிரியர் கதைச்சார். "அப்புச்சி பேப்பர் பார்த்தனியே! ஆயர் பல்கலைக்கழகத் தின்ர துணைவேந்தர் தெரிவைப் பற்றி கடுமையா விமர்சிச்சவராமென்று அதுக்கு புதுத்துணை வேந்தர் பதில் சொல்லியிருக்கிறார். அதிலயென்னவென்டா, துணை வேந்தர் தெரிவு புலனாய்வுத்துறை யின் கையில இருக்கென்ற மாதிரி போட்டிருக்கு. அதுதான் எனக்கு ஒன்றும் விளங்கேல்லை! உனக்கேதும் தெரியுமோ?" என்று அந்தாள் என்ர வாயைக் கிளறிச்சுது.
"கல்விக்கூடத்தின்ர உயர் பதவிக்கும் புலாய்வுத் துறைக்கும் என்ன தொடர்பென்று விளங்கேல்லை? இராணுவ விசயங்களுக்கு ஆளை நியமிக்கிற மாதிரியெல்லோ கிடக்கு அது மெய்யா இருக்குமோ?" என்று கேட்டன். உடன பேராசிரியர் சொன்னார் "ஆயருக்கு தேவையில்லாத வேலை! முன்னம் இவர் நாலு தரத்துக்கு மேல பல்கலைக்கழகப் பேரவையில அங்கத்தவரா இருந்தவர். அப்ப டக்கிளஸ் குடுக்கிற பெயருகளுக்குத் தானே பேரவைப் பதவி கொடுக்கிறது வழமை. அந்தக் காலத்தில டக்கிளஸ் கம்ப சில ஆடின கூத்தெல்லாத்துக்கும் தலையாட்டிக் கொண்டுதானே இருந்தவையள், போதாக்குறைக்கு மாதா மாதம் சிறீதர் தியேட்டரில நடக்கிற முன்னோடி பேரவைக் கூட்டத்துக்கும் போய் அமைச்சர் சொன்னதை அப்பிடியே அச்சொட்டாமல் செய்தவையள். அதையெல்லாம் மறக்கேலுமே!" என்று பேராசிரியர் மூச்சுவிடாமல் தொடர்ந்தார்.
"அந்தக் காலத்தில பேரவையில இருந்த சைவ சமயப் பெரியார் ஒருத்தர் டக்கிளசின்ர தியேட்டர் கூட்டத்துக்கு போகேல்லை என்று அடுத்தமுறை அவருக்கு அந்தப் பதவி குடுபடேல்லை" என்றும் நானும் பக்கப் பாட்டுப் பாடினன்.
"டக்கிளசின்ர பேரவையைக் கலைச்சுப் போட்டு நல்லாட்சி அரசு நல்ல கவுன்சிலப் போடுதென்று பார்த்தா, தமிழரற்ற கட்சியின்ர மூத்த தலைவர், இப்ப பேரவையின்ர முக்கிய தூணுமா இருக்கிற முந்தின பேராசிரியரையும் இன்னொரு ஓய்வு பெற்ற பேராசிரியரையும் கவுன்சில் மெம்பராப் போட்டதில இழுவாணி சப்பாணி கவுன்சிலாக்கிப் போட்டாங்களென்றும் சொல்லுகினம். உண்மைதானோ?" என்று நான் கேட்ட்ன்.
"அது கிடக்கட்டும்! அப்ப இனி எல்லாப் பதவிகளுக்கும் ஆக்களை நியமிக்கேக்க புலனாய்வு அறிக்கை கேட்பாங்கள் போல!" என்றார் பேராசிரியர். "ஏன் நீங்களும் ஏதும் பதவிக்கு யாரிட்டயும் போகப் போறியளே!" என்று நான் கேட்டவுடனும் பெரிய சிரிப்பொண்டோட போனைக் கட் பண்ணிப் போட்டுது மனுசன்.

# பொருளாதாரக் கூட்டுறவுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்

*மோடியிடம் உறுதியளித்தாராம் மகிந்த*

கொழும்பு, மே 14

இந்தியாவுடனான பொருளாதார கூட்டுறவுக்காக அனைத்து ஒத்துழைப்பும் வழங்கப்படும் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடிக்கு உறுதியளித்துள்ளார்.

பன்னாட்டு வெசாக் தினத்தை சிறப்பிக்கும் வகையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இந்திய் தலைமை அமைச்சரை கடந்த வியாழக்கிழமை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச சந்தித்துக் கலந்துரையாடினார். அந்தச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு உறுதியளித்தார் என்று நியூஸ்இன்.ஆசியா ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது

இந்தச் சந்திப்பு ராஜபக்சவின் கோரிக்கையின்பேரில் இடம்பெற்றது என்று இந்திய தூதுவர் தரன்ஜித் சிங் சந்து தெரிவித்தார். நரேந்திர மோடி அறைக்குள் பிரவேசித்ததும் அவர் மாலை வந்தது முதல் தொடர் நிகழ்ச்சிகளில் பங்கேற்றதால் களைப்படைந்துள்ளாரா? என்று அவரிடம் ராஜபக்ச வினவினார். அதற்கு மோடி புன்னகைத்தபடி உங்களைச் சந்தித்தபோது களைப்பு காணாமல் போய்விட்டது என பதிலளித்தார்.

இலங்கைக்கு தீங்கு பயக்கக்கூடிய எந்தத் திட்டத்தையும் இந்தியா ஆரம்பிக்காது என இந்திய தலைமை அமைச்சர் நரேந்திமோடி உறுதியளித்தார். சீனாவின் வகிபாகம் குறித்து அறிய விருப்பம் கொண்ட நரேந்திரமோடி, அம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற சீனாவால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களில் சூழ்ந்துள்ள சர்ச்சைகள் குறித்து சீனாவுக்கு நெருக்கமாக செயற்பட்டவர் என அறியப்படுபவர் யார் என ராஜபக்சவிடம் வினவினரா்.

மகிந்த ராஜபக்ச மீண்டும் அதிகாரத்துக்கு வந்தால் அவருடன் பணியாற்றுவதை சாத்தியமாக்கும் வகையில் அவருடனான நட்புறவைப் பேண மோடி விரும்புகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுடனான அண்மைய பொருளாதார உடன்படிக்கைகள் குறித்து மகிந்த ராஜபக்ச எந்தவொரு கவலையையும் வெளியிடவில்லை. அதற்கு மாறாக மைத்திரிபால சிறிசேன அரசின் பொருளாதாரக் கொள்கையிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக உரையாடியதுடன் அரசால் ஆரம்பிக்கப்பட்ட, நிறுத்தப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பில் கவலை வெளியிட்டுள்ளார். என்றுள்ளது.

அதேவேளை, இந்திய தலைமை அமைச்சர் நரேந்திமோடி மற்றும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் சந்திப்ப தொடர்பில் முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் ஜி.எல் பீரிஸ் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியுடனான சந்திப்பானது மிகவும் ஆரோக்கியமான வகையில் நடைபெற்றது. எமது ஆட்சியில் இந்தியா பல்வேறு ஒத்துழைப்புக்களை வழங்கிய நட்புறவு நாடாகும். இப்போதும் அவர்களது உறவு முறையில் மாற்றங்கள் ஏற்படவில்லை. நாம் கடந்த ஆட்சியில் கையாண்ட நட்புறவை தக்கவைக்கும் வகையில் இந்த சந்திப்புகளை கோரியிருந்தோம். அதற்கமைய கடந்த வியாழக்கிழமை எமக்கான சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கையின் அபிவிருத்தியில் இந்தியாவின் முதலீடுகள் மற்றும் பங்களிப்புகள் வரவேற்கத்தக்கன. முன்னைய ஆட்சியில் இந்தியாவின் நிதி உதவியில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் இப்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மிகவும் நெருக்கடியான கால சூழலில் எமக்கு இந்த சந்திப்புகளை இந்திய தூதரகம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இந்தச் சந்திப்பு மிகவும் ஆரோக்கியமான வகையில் அமைந்தது. என்றார். (ற-10)

# சமய சொற்பொழிவாளர் தசிதரன் காலமானார்

யாழ்ப்பாணம், மே 14



பிரபல சமயச் சொற்பொழிவாளரும்-ஆசிரியருமான சைவப் புலவர் நித்தியானந்தம் தசிதரன் (வயது - 42) நேற்று உயிரிழந்தார். உயர் குருதி அழுத்தம் காரணமாக அவர் உயிரிழந்தார் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

செல்வச் சந்நிதி ஆலயத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் பங்கு கொண்டுவிட்டு மதிய உணவு உட்கொண்டுள்ளார். அதன்போது இருமல் ஏற்பட்டு உடல் சோர்ந்தார். அங்கு நோயாளர் காவு வண்டி வரவழைக்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். அங்கு சிகிச்சை பயனளிக்காது நேற்றுக்காலை உயிரிழந்தார். தரன் சேர் என்று அழைக்கப்படும் தெல்லிப்பழை பன்னாலையைச் சேர்ந்த தசிதரன் 2 பிள்ளைகளின் தந்தையாவார். இவர் சிறந்த ஆன்மீகப் பேச்சாளர்களுள் ஒருவராவார். (ற-4-8)



கேற்வே நிறுவனத்தால் ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் ஆங்கிலப் புலமைப் பரிசில் திட்டத்தில் வழங்கப்பட்ட பயிற்சி நெறியின் இறுதி நாள் நிகழ்வுகள் உதயன் பணிமனையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. உதயன் குழுமத்தின் தலைவரும் யாழ்., கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன், ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற-ரி)

## மலையகம் மற்றும் வடக்குக்கு

# காலத்தை இழுத்தடிக்காது உடன் வீடுகளை வழங்குக

*மோடியிடம் கோருகின்றார் நாமல்*

கொழும்பு, மே 14

மலையகத்துக்கும், வடக்குக்கும் வழங்கப்படும் என்று இந்திய அரசு வாக்குறுதியத்த வீடுகள் இன்னமும் வழங்கப்படவில்லை. வருடக் கணக்கில் காலத்தை இழுத்தடிக்காது அவற்றை உடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட அவர் ஊடகவியலாளர்களுக்குக் கருததுத் தெரிவித்த போதே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது

மோடி இலங்கைக்கு வந்து சென்றமை சந்தோசமான விடயம்தான். அவர் பன்னாட்டு வெசாக் தினத்தை ஆரம்பித்து வைத்ததுடன், வைத்தியசாலை ஒன்றையும் திறந்தார். ஆனால் அந்த வைத்தியசாலைக்கு நிதி கிடைத்தது மகிந்தவின் காலத்தில். இப்போது இரண்டாவது தடவையாக அந்த வைத்தியசாலை திறக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் மோடிக்குத் தெரியாது என்று நினைக்கின்றேன்.

அவர் மலையகத்துக்குச் சென்றார். மகிழ்ச்சியான விடயம். அவர் திருகோணமலை எண்ணெய் தாங்கிகளையும், துறைமுகத்தையும் எடுத்துச் செல்லாமல் வெறுங்கையுடன் செல்ல வேண்டும் என்பதே எமது விருப்பம். ஆனால் என்ன நடந்தது என்று தெரியாது.

மலையகத்துக்கும், வடக்குக்கும் வழங்கப்படும் என்று இந்திய அரசு உறுதியளித்த வீடுகள் இன்னமும் வழங்கப்படவில்லை. காலத்தை இழுத்தடிக்காது அவற்றை வழங்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடியிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

இரு வாரங்களில் ஜிஎஸ்பி பிளஸ் கிடைக்கும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன 6 மாதங்களுக்கு முன்னர் கூறினார். அந்த இரு வாரங்கள் இன்னமும் வரவில்லை போலும்.

வரிச் சலுகை இலங்கைக்குக் கிடைக்கும் என்று நாங்கள் நம்பவில்லை. அரசு தனது லாபம் கருதி நாட்டு மக்களை ஏமாற்றுகின்றது. மகிந்த ராஜபக்ச நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தினார். இந்த அரசால் அவ்வாறு செய்ய முடியாது என்றார். (ற-3)

# இராணுவ உதவிகளை நிறுத்துவாராம் கோர்பின்!

கொழும்பு, மே 14

இலங்கைக்கான இராணுவ உதவிகள் இடைநிறுத்தப்படும் என பிரிட்டன் தொழிற்கட்சியின் தலைவர் ஜெரோமி கோர்பின் கூறியுள்ளார் என்று கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

பிரிட்டனில் விரைவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையிலேயே இந்த வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது.

ஜெரோமி கோர்பின் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் சமூகத்துடன் நெருங்கிய தொடர்பு பேணி வருகின்றார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த நெருங்கிய தொடர்பு காரணமாக இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் இராணுவ உதவிகளை தாம் ஆட்சிக்கு வந்தால் இடைநிறுத்துவேன் என்று கோர்பிக் உறுதியளித்துள்ளார்.

இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு சுயாட்சி அதிகாரங்களை வழங்க பிரிட்டன் செயற்படும் என தெரிவித்துள்ளார் என்றுள்ளது. (ற-10)

## நூதனமாகப் பணம் திருடிய

# கில்லாடிப் பெண் சிக்கினார்

சாவகச்சேரி பொதுச் சந்தையில் நூதனத் திருட்டில் ஈடுபட்டு வந்த இளம் பெண் நேற்று நகர சபை ஊழியர்களால் பிடிக்கப்பட்டார். இனிமேல் திருட்டில் ஈடுபடமாட்டேன் என்று அந்தப் பெண் வாக்குறுதி வழங்கியதால் அவரை விடுவித்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

"சந்தையின் கடலுணவு விற்பனைப் பகுதிக்கு வருவோரின் கூடைகளில் வைக்கப்படும் கைப்பைகளை இலாவகமாக எடுத்து அதனுள் காணப்படும் பணத்தை அந்தப் பெண் திருடி வந்தார். பணத்தைக் களவாடிவிட்டு கைப்பையை மீளவும் உரியவரின் கூடைக்குள் அவர் போட்டுவிடுவார். கடலுணவைக் கொள்வனவு செய்ய வரும் பெண்கள் உட்பட கடலுணவு வியாபாரிகள் பலர் தமது பணத்தை அவரிடம் பறிகொடுத்தனர்.

கைப்பைகளில் வைக்கப்படும் பணம் திருட்டுப் போவது தொடர்பாக சந்தையில் வரி அறவிடுவோரிடம் பொதுமக்களால் முறையிடப்பட்டது. சந்தை நிர்வாகிகள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர். வழமைபோல் அந்தப் பெண் நேற்றும் சந்தைக்கு வந்தார். அவரின் செயற்பாடுகளை வரி அறவிடும் ஊழியர் உன்னிப்பாக அவதானித்தார். ரிக்கற் போடுவது போல ஊழியர் அந்தப் பெண்ணைப் பின் தொடர்ந்துள்ளார்.

கடலுணவு கொள்வனவு செய்யவந்த பெண்ஒருவரின் கூடைக்குள்காணப்பட்டகைப் பையை கில்லாடிப் பெண் எடுத்த போது, வரி அறவிடுபவர் கையும் மெய்யுமாக அவரைப் பிடித்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. கைப்பையைத் தான் எடுக்கவில்லையெனக் கூறிய பெண், பொலிஸார் அங்கு வரவே குற்றத்தை ஒப்புக் கொண்டார். பொலிஸாரைக் கண்டதும் இனிமேல் எடுக்கமாட்டேன் என்றும் தன்னை ம்ன்னிக்குமாறும் கில்லாடிப் பெண் அழுது குழறினார். பொலிஸார் அழைத்துச் சென்று சந்தைப் பக்கம் இனிமேல் காணக்கூடாது என எச்சரிக்கை செய்து விடுவித்தனர்" என்று சாவகச்சேரி நகர சபையினரால் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# தாதியர் சேவையை மேம்படுத்த அர்ப்பணிப்புடன் உள்ளது அரசு

*அரச தலைவர் தெரிவிப்பு*

கொழும்பு, மே 14

தாதியர் சேவையின் தரத்தை மேம்படுத்தி அதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுக்கவும், தாதியர் சேவைக் காக வழங்கப்படவேண்டிய உயர்ந்த பெறுமானத்தைப் பெற்றுக் கொடுக்கவும் தற்போதைய அரசு அர்ப்பணிப்புடன் உள்ளது. இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற பன்னாட்டுத் தாதியர் தின நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அவரது ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது

விலை மதிக்க முடியாத சிறந்த சேவையான தாதியர் சேவையில் உள்ளவர்களின் நியாயமான அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்ற அரசு தயாராக உள்ளது.

தாதியர் சேவை மற்றும் வைத்திய சேவை வீழ்ச்சியடைந்துள்ளது என சிலர் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். அந்தச் சேவையில் உள்ள பெரும்பாலானவர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். மிகவும் சொற்பமான எண்ணிக்கையினரே தமது பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றாது உள்ளனர். இந்தச் சேவையின் தரம் சேவையில் உள்ளவர்களின் மனங்களிலேயே தங்கியுள்ளது.

சுகாதாரத் துறையில் நிலவும் சில பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தொழிற் சங்கங்கள் வழங்கும் ஒத்துழைப்பு பாராட் டத்தக்கதாகும். தாதியர் சேவை யில் உள்ளவர்கள் பெருமளவில் நாட்டை விட்டுச்செல்வ தால் அந்தத் துறையில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று அரச தலைவர் தெரிவித்தார்.

ஓய்வுபெற்ற தாதியர்களுக்கு நினைவுச் சின்னங்களும் ஜனாதிபதியால் வழங்கப்பட்டன. நிகழ்வில் சங்கைக்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரர், அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, வஜிர அபேவர்தன, பிரதி அமைச்சர் லசந்த அழகியவண்ண மற்றும் மருத் துவர் அநுருத்த பாதெனிய ஆகியோர் கலந்துகொண்டனர். என்றுள்ளது. (ற-10)

பொருளியற் கல்லூரி பாரதி கல்வி நிறுவனங்களின்

## கண்ணீர்ப் பூக்களின் காணிக்கை



13.05.2017 அன்று இறைபதம் அடைந்த எமது கல்வி நிலைய இந்துசமய, இந்து நாகரிக பாட **ஆசிரியர் சைவப்புலவர், சமயச் சொற்பொழிவாளர், நேர்முக வர்ணனையாளர்**


**N.T.தரன் (M.A)**

அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கை செய்கின்றோம். இவரின் பிரிவின் துயரில் நாமும் பங்கெடுத்து குடும்பத்தினருக்கு எம் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பொருளியற் கல்லூரி - பாரதி கல்வி நிறுவனம்.**

## மரண அறிவித்தல்

## செல்லப்பா சுப்பிரமணியம் (வேலணை)



அன்னை மடியில் 05.04.1932
மண்ணின் மடியில் 12.05.2017

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், வேலணை மேற்கு, முடிப்பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா சுப்பிரமணியம் 12.05.2017 வேலணையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - தையல்முத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - தங்கம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற அருளம்மாவின் அன்புக் கணவரும், தவமலர், ஐங்கரன், தவராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீரங்கன், உதயகுமாரி, மகிந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்பு சகோதரனும், காலஞ்சென்றவர்களான நடராசா, துரைராசா, விநாயகமூர்த்தி மற்றும் கமலாம்பிகை ஆகியோரின் மைத்துனரும், ஸ்ரீபிரியா, விமலன், ஸ்ரீநதி, சுதாகரன், கோபிகன், துளசிகன்,ஜஸ்நவி, வேளானன், காலஞ்சென்ற வேளாயினி கஜநாந், மயூராஜினி ஆகியோரின் பேரனும், அகஸ்திகன், ஆதீசன் கிருசிகன், அனிஸ்னா, அகிஸ் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக வேலணை அம்பலவி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(cs/3945)(11)

**தகவல்: மக்கள், மருமக்கள்**

## நீங்கா நினைவலைகளில்

ஒன்பதாம் ஆண்டு

ஏழாம் ஆண்டு





செல்வன்
**சண்முகநாதன் சஞ்சீவன்**
(மாணவன் - கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி, திருவையாறு மகா வித்தியாலயம்)
துளிராய் 14.02.1986
விதையாய் 14.05.2008

செல்வன்
**சண்முகநாதன் சுஜீவன்**
(பொறியியல் பீட மாணவன், பேராதனைப் பல்கலைக்கழகம்)
துளிராய் 17.01.1989
விதையாய் 27.05.2010

**வசந்தம் வீசும் வாழ்வுப் பாதையிலே
சுகந்தம் வீசும் உறவுகள் சூழ்ந்து
செல்லப்பிள்ளைகளாக வாழ்ந்தவேளை
இளமையிலே முடிவெழுதி கவர்ந்ததேனோ?
மாறாத சோகமுடன் மனமுருகிப் புலம்புகின்றோம்
கனத்த இதயமுடன் கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம்.**

**முருகன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.**

(ஏ.ஜே.ஏ.3857) (13)

**குடும்பத்தினர்.
66/2,திருவையாறு,
கிளிநொச்சி.**

## கண்ணீர் அஞ்சலி

சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர்

**நித்தியானந்தன் தசிதரன்**



அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயலாளர் சைவப்புலவர் நித்தியதசிதரன் அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளோம். தசிதரன் அவர்கள் சங்கத்தின் நீண்டகால உறுப்பினராக விளங்கி சங்கத்தின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி இப்போது சங்கச் செயலாளராக விளங்கியவர். அவரின் இழப்புக்கு எமது சங்கத்திற்கு மிகுந்த தாக்கத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

அவரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து எமது சங்கத்தினரின் கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்.

**153, கே.கே.எஸ்வீதி,
கொக்குவில்.**

**சங்கத்தின் சார்பாக
மு.திருஞானசம்பந்தபிள்ளை
தலைவர்.**

## 8 ஆம் ஆண்டு நினைவலைகள்......



அமரர்

**இராமலிங்கம் பிரபாகரன்**

மண்ணில் 02.02.1978

விண்ணில் 13.05.2009

காலங்கள் கடந்து செல்லச் செல்ல
உன் இருப்பின் தேவை உணர்ந்து
உள்ளூர உடைந்து ஈர்நான்கு
ஆண்டுகள் சென்றாலும் எம்மை
விட்டகலாது உம் நினைவுகள்.

**கோயில் ஒழுங்கை,
தும்பளை பருத்தித்துறை.**

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
தாய், தந்தை, உறவினர்.

(ஏ.என்.ஈ) 00164)

## விபத்தில் ஒருவர் சாவு

திருகோணமலை, மே 14


திருகோணமலை, நிலாவெளி பிரதான வீதியில் நேற்று பி.ப. 5.30 மணியளவில் துவிச்சக்கர வண்டியுடன் வானொன்று மோதி விபத்துக்குள்ளா னது. அதில் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் நிலாவெளி, கோணேஷபுரி சுனாமி வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் பீ,கமல் ராஜ் (வயது - 36) எனத் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவரின் உடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், விபத்து தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படு கின்றன என்றும் நிலா வெளிப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-45)

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 03 . 1936



மறைவு 11 . 05 . 2017

## திருமதி நவமணி நடராஜா

வன்னிச்சி கோயிலடி, கம்பர்மலை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவமணி நடராஜா 11.05.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும், ஆனந்தி (சுவிஸ்), கௌரி (சுவிஸ்), நடனசிகாமணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், சுரேன் (சுவிஸ்), கமலேந்திரன் (சுவிஸ்), ரஞ்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், ஆதித்தன், ஆதின்ஜா, அகலியா, அஸ்வின், அனிஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற இராசமணி மற்றும் ருக்குமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊரிக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வன்னிச்சி அம்மன் கோயிலடி,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.**

(ஏ.என்.ஈ 00166)

**தகவல்:
குடும்பத்தினர்.**

021 205 5116/ 076 723 3570

# தமிழரசுக் கட்சி தனித்து நின்று பிரச்சினையைத் தீர்க்க முடியாது

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. சுட்டிக்காட்டு

வவுனியா, மே 14

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மட்டும் தனித்து நின்று தமிழ் மக்களுடைய பிரச்சினை களைத் தீர்க்க முடியாது. கூட்டமைப்பிலுள்ள ஏனைய கட்சிகளுடனும் இணைந்துதான் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியா ஓமந்தை மருதங்குளம் கலைமகள் முன்பள்ளியின் (தந்தை செல்வா முன்பள்ளி) விளையாட்டுப் போட்டி முன்பள்ளியின் பாடசாலை அதிபர் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது;

முன்னர் தந்தை செல்வா, தமிழரசுக்கட்சியை மட்டும் முன்னிலைப்படுத்தாது, அதனுடன் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்ற கட்சிகளையும் இணைத்து தமிழர் விடுதலைக்கூட்டணியாகச் செயற்பட்டார். அவ்வாறு செயற்பட்டால்தான் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்று அவர் கூறியிருந்தார்.

அப்படிப்பட்ட ஒரு தீர்க்கதரிசி போன்ற தலைவர்கள் இன்று எமக்குள் இல்லை என்பது எங்களுக்குள் ஒரு பெரிய கவலை. தந்தை செல்வநாயகத்தினுடைய நற்பண்புகளை எதிர்காலத்திலே பின்பற்ற வேண்டும்.

தமிழ் மக்களுடைய அடுத்த கட்டமானது இளைஞர்களுடைய கையிலேதான் இந்த பிரச்சினை முன்னெடுத்துச் செல்லப்படும். இளைஞர்கள் தங்களுடைய கைகளிலே இந்தப்பிரச்சினையை எடுக்கும்போது, இந்த நாடும் தெற்கிலே இருக்கக்கூடிய அரசும் இதைத்தாக்குப் பிடிக்க மாட்டாது.

அல்லது பெரும் பின்விளைவுகளைச் சந்திக்கவேண்டி வரும் என்ற தந்தை செல்வா வார்த்தைக்கு அமைய இந்த ஆயுதப் போராட்டத்துக்கான ஒரு பிள்ளையார் சுழியைப் போட்டுச் சென்றவர் - என்றார்.

நிகழ்வில் விருந்தினர்களாக முன்பள்ளி கல்விப்பணிப்பாளர் இராஜேஸ்வரன், ஓமந்தை மத்திய கல்லூரி அதிபர் திருஞான சம்பந்தமூர்த்தி மற்றும் கிராம அலுவலர்களும் மற்றும் பலரும் கலந்துகொண்டனர். (ற-4)

## சங்காபிசேகம்

யாழ்ப்பாணம், மே 14

ஏழாலை புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த சங்காபிசேகம் நாளை திங்கட்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. சங்காபிசேக நிகழ்வாக புவனேஸ்வரி அம்மன் ஆலய சிறப்பு மலர் வெளியிடப்படவுள்ளது.

நூலின் முதற் பிரதியை யாழ்ப்பான மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் பெற்றுக் கொள்வார். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சித்தார்த்தன் ஆகியோர் கலந்துகொள்வர். (ற-8)

+++++++++++++++

நல்லூர் தெற்கு சிறி பத்திநாச்சி அம்பாள் ஆலய வருடாந்த மணவாளக் கோலம் சங்காபிசேகம் இன்று காலை 7 மணிக்கு இடம் பெறவுள்ளது. சங்காபிசேக சிறப்பு நிகழ்வாக யாழ்ப்பான பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் என்.சண்முகலிங்கத்தின் சொற்பொழிவு நடைபெறும். (ற-8)

## விருதுக்கு விண்ணப்பம் செய்யலாம்

யாழ்ப்பாணம், மே 14

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வழங்கப்படும் முதலமைச்சர் விருது 2017க்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அதன் விண்ணப்பத் திகதி நாளை திங்கட்கிழமை முடிவடைய உள்ளதால், அறுபது வயதுக்கு மேற்பட்ட துறைசார் கலைஞர்கள் நாளைய தினத்துக்குள் வலி தென்மேற்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ள முடியும் என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலர் உ.யசோதா தெரிவித்தார். (ற-ரி)

**அமெரிக்க கிரீன்கார்ட் லொத்தர் 2018**

அமெரிக்க கிரீன்கார்ட் லொத்தர் 2018 ஆம் ஆண்டுக்கு தெரிவானோரின் விபரங்கள் வெளியாகியுள்ளன. இதில் தெரிவாகும் அதிர்ஷ்டசாலிகள் நிரப்பவேண்டிய படிவங்களை 2005 ஆம் ஆண்டு தொடக்கம் அமெரிக்க கிரீன்கார்ட் லொத்தர் விண்ணப்பிப்பதில் அனுபவம் வாய்ந்த எமக்கூடாக பூர்த்தி செய்துகொள்வதுடன் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளத் தொடர்புகொள்ளவும்.

முறைப்படி படிவங்கள் பூர்த்திசெய்யாமை அல்லது தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை போன்ற காரணங்களால் அமெரிக்க தூதரகத்தினால் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சையில் உங்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

எமது நிறுவனத்திற்கு கிளை அலுவலகமோ அல்லது பிரதிநிதிகளோ இலங்கையின் எந்தவொரு பாகத்திலும் இல்லை என்பதை அறியத்தருகிறோம்.

Bristolvisa CONSULTATIONS
8/3/4, Bristol Street, Colombo-01.
0112 393 919, 077 427 6579
www.bristolvisa.com

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பழை Cancer Hospital இற்கு முன்பாக மேல்மாடிக் கட்டடத்துடன் 5 பரப்பு காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்

**077 346 4756**

**பதவி வெற்றிடம்**

நிறுவனம் ஒன்றிற்கு பிரதேசவாரியாக பணியாற்றுவதற்கு பிரதேச இணைப்பாளர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**முடிவுத்திகதி - 28.05.2017**

**இல.167, 155 ஆம் கட்டை, கிளிநொச்சி.**

**மணமகள் தேவை**

யாழ். இந்து வேளாளர் (தற்போது ஹற்றனில் வசிக்கும்) 1984 ஆடி. பரணி. 5'5" உயரமுள்ள A/L Maths, Software Engineering முடித்து சொந்த வியாபாரம் செய்யும் மணமகனுக்கு (மூன்றுசுற்று கிரகபாவம் 30 இற்குள், செவ்வாய் குற்றமற்ற) பொருத்தமான மணமகளை பெற்றோர் அண்மைய புகைப்படத்துடனும் சகல விவரங்களுடனும் எதிர்பார்க்கின்றனர்.

**பத்தானை வீதி, தாவடி தெற்கு, கொக்குவில்.**

**021 222 5316**

**Wanted Medical (Sales) Representative**

- மருந்துவகைகள், மருந்துக்கருவிகள் இறக்குமதி செய்து விநியோகிக்கும் Medcon pvt Ltd நிறுவனத்துக்கு மேற்காணும் பதவிக்குத் தொழில் அனுபவம் மிக்க தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம்.

*** 19.05.2017 இற்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும்.**

**தொலைபேசி: 077 012 4415, 021 492 3587**
**மின்னஞ்சல்: Medconjeeva@gmail.com**

**வீடு வாடகைக்கு**

உக்கிளாங்குளம் வவுனியாவில் உள்ள வீடு வாடகைக்கு. குட்டிப்பிள்ளையார் கோயிலடியில் மெயின் வீதியில் புதிதாக வடிவமைக்கப்பட்ட அற்றாஜ் பாத்துறூம் வசதியுடன் உள்ள வீடு வாடகைக்கு உண்டு. வாகனத் தரிப்பிட வசதியும் உண்டு. விருந்தினர் விடுதியாகவும் ஆக்கலாம்.

**077 936 1390**

**மரண அறிவித்தல்**



**நடராசா திருநாவுக்கரசு**

தோற்றம்.25.01.1934

மறைவு.13.05.2017

கிளிநொச்சி திருவையாறைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசாதிருநாவுக்கரசு நேற்று (13.05.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2017) ஞாயிற்றுக்கிழமை 150/3 திருவையாறு கிளி நொச்சி என்னும் முகவரியில் உள்ள அவரின் இல்லத்தில் இடம் பெற்று பி.ப 3.00 மணியளவில் இரணைமடு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
எழில் ஸ்ரூடியோ

**077 240 5165**

திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு

**IELTS Life Skills A1 B1**

ஒரே தடவையில் மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்

BRITISH COLLEGE of Education
More information 0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124

British College of Educatin - IELTS பரீட்சை நிலையம்

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மற்றும் மன்னாரில்

**AUTO CAD**

Civil / MEP / HVAC / Plumbing 2D & 3D

Computerized **Accounting**

AccPack + Quick book + M.Y.O.B. + Tally

**Hot Line : 0777-596148**

BRITISH COLLEGE OF EDUCATION
23, Kachcheri nallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Mullaithivu. Tel : 021-4927497
Mannar. Tel : 023-4924124

15 வது நிறைவை முன்னிட்டு 50% விசேட கட்டணக்கழிவு Only 50 Students

**Diploma in Spoken English**

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன், பகுதிநேர வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களிலும் நடைபெறும்.

Spoken English - Course Fee : ~~15250/=~~ Offer Fee : 7625/=
Diploma in English - Course Fee : ~~21000/=~~ Offer Fee : 10500/=

BRITISH COLLEGE of Education
More information 0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124

IELTS கற்பதுடன் எங்களது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றுங்கள்

கல்வி கற்க மற்றும் குடியேற

Now prepare for your Academic / General

**IELTS**

Full time / Part time

இலங்கையில் IELTS பரீட்சை நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரே ஒரு தனியார் கல்வி நிறுவனம்

சர்வதேச மொழிக் கற்கைநெறிகள்

ஜேர்மன், சுவிஸ் மொழிப் பாடநெறி - **Deutsch**
நெதர்லாந்து மொழிப் பாடநெறி - **Dutch**
பிரான்ஸ் மொழிப் பாடநெறி - **French**

BRITISH COLLEGE of Education
More information 0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124

# விளம்பரங்கள்




**அறை வாடகைக்கு**

பல்கலைக்கழகத்தில் இருந்து 100m தொலைவில் மாணவர்களுக்கு அறை வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு.0771326600

**வீடு வாடகைக்கு**

ஈச்சமோட்டையில் வீடு வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு.0779280421

**மணமகன் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983 இல் பிறந்த உத்தராடம் நட்சத்திரம் சூரியன் செவ்வாய் (குற்றமற்ற )உள்ள பட்டதாரி, அரச தொழில் புரியும் பெண்ணுக்கு தகுதியான மணமகன் தேவை.

தொடர்பு.0772543121

**காணி விற்பனைக்கு**

மல்லாகம் நீலியம்பனை பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையிலுள்ள நிலப்பரப்பு 1 குளி 06 உம் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு.0772553220

**மணமக்கள் தேவை**

1983 யாழ். இந்து கௌரவ குடும்பம் 12 இல் செவ்வாய் 33 கிரக பாவம் அரச தொழில்புரியும் ஆணுக்கும் 1988 யாழ். இந்து கொளரவ குடும்பம் பட்டதாரி பெண் 58 கிரக பாவம் பொருத்தமான மணமக்கள் தேவை. (சைவ போசனம் விரும்பத்தக்கது).

தொடர்பு.0766397906

**மில் தொழிலாளர் தேவை**

நவாலி வீதி, ஆனைக்கோட்டையில் அமைந்த அரைக்கும் ஆலைக்கு தொழிலாளர் ஒருவர் தேவையாக உள்ளது மில் வேலையில் முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு.0759113535


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



பிறப்பு 20 . 01 . 1964

இறப்பு 14 . 04 . 2017

## நாகலிங்கம் குமாரலிங்கம் (செல்லா)

14.04.2017 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எமது அன்புத்தெய்வம்நாகலிங்கம் குமாரலிங்கம் அவர்களின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் தொலைபேசி மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் இத்தருணத்தில் நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று 14.05.2017 மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி,
சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.
(லிங்கம் கபே)


1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....

யாழ் **கலாலயா** பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**



*கேக் ஜசிங்* - பட்டர், றோயல், Parchment, Frosting, Fondant, Water Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள் (Sugar Flowers).

*உணவு தயாரித்தல்* - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா சிற்றுண்டிகள் குளிர் பானங்கள், ஐஸ் கிறீம், புடிங், சுப் தயாரித்தல்

*கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்*
40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டு தல், Hair Colouring, முடி வெட்டுதல்,





FACIALS *(முக அழகுக்கலை)*
Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)



BRIDAL DRESSINGS *(மணப்பெண் அலங்காரங்கள்)* இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப்பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகளும் பயிற்றுவிக்கப்படும்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**



**பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார்,** ஂதைக்கும் சான்றிதழ் அற்ற கிழமைநாள் தையல் பயிற்சிகள்.

கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 24-05-2017
புதன் காலை 10.00 மணி
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 27-05-2017
சனி காலை 10.00 மணி

**மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.**

-இயக்குநர்-



# ஆத்ம சாந்தி அழைப்பு

கடந்த 11.04.2017 அன்று இறைபதமெய்திய
எங்கள் அன்புத் தெய்வம்

**அமரர்**

## கந்தையா
## இரத்தினபூபாலன்
## (பெரியண்ணை)

அவர்களின் ஆத்ம சாந்தி நிகழ்வு
இன்று (14.05.2017) ஞாயிற்றுக்கிழமை
அன்னாரின்
இல்லத்தில் நடைபெறும்.
இந் நிகழ்வில் தாங்கள் அனைவரும்
தவறாது கலந்து கொண்டு தொடர்ந்து
நடைபெறும் மதியபோசனத்திலும்
கலந்துகொள்ளுமாறு தாழ்மையுடன்
வேண்டுகின்றோம்.



**அருள் முருகன் வாசம்**
**இணுவில் மேற்கு, இணுவில்.**

**குடும்பத்தினர்.**

## ஓமந்தை மைதானத்தின் இன்றைய நிலை என்ன?

வவுனியா, மே 14

வவுனியா தெற்கு பிரதேச சபையால் திறந்து வைக்கப்பட்ட பொது விளையாட்டு மைதானம் பற்றைக்காடாகக் காட்சியளிப்பதாக விளையாட்டு ஆர்வலர்கள் கவலை தெரிவித்தனர்.

வவுனியா தெற்கு பிரதேச சபையின் ஒழுங்கமைப்பில் கடந்த இரண்டாண்டுக்கு முன்னர் ஓமந்தை பகுதியில் பொது விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டது. ஆனால் அந்தப் பகுதி தற்போது பற்றைக்காடாகக் காட்சியளிக்கிறது.

விளையாட்டு மைதானத்தை உரிய வகையில் பயன்படுத்துவதற்கான ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட வேண்டும். வவுனியா தெற்கு பிரதேச சபையினர் அக்கறையுடன் செயற்பட்டு இந்த மைதானத்தில் பற்றைகளை அகற்றி வீரர்கள் பயன்பாட்டுக்கு அதனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஓமந்தையில் உள்ள விளையாட்டு வீரர்கள் கேட்டுள்ளனர்.

(வ-402)



## தளராத துணிவோடு போராடும் காணாமற்போனோரின் உறவுகள்

கிளிநொச்சி, மே 12

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான தெளிவான வெளிப்படுத்தலை வலியுறுத்தி அவர்களது உறவினர்கள் வடக்கு கிழக்கில் முன்னெடுத்து வரும் போராட்டங்கள் 2 மாதங்களைக் கடந்தும் உறுதியுடன் தொடர்கின்றன.

கடத்தப்பட்டவர்கள், அரசியல் கைதிகள் மற்றும் இராணுவத்திடம் ஒப்படைக்கப் பட்டவர்களின் விடுதலை மற்றும் தெளிவான வெளிப்படுதலை வலியுறுத்தி அவர்களது உறவினர்களால் இரவு பகல் பாராது வடக்கு, கிழக்கில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி உறவினர்களின் போராட்டம் நேற்று 83ஆவது நாளை எட்டியது. வவுனியாவில் 79ஆவது நாளாகவும், முல்லைத்தீவில் 67ஆவது நாளாகவும், யாழ்ப்பாணம் மருதங்கேணியில் 61 ஆவது நாளாகவும், கிழக்கில் திருகோணமலையில் 71ஆவது நாளாகவும் நேற்றைய தினம் போராட்டங்கள் தொடர்ந்தன.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலைப்பாடு பற்றிய உண்மை நிலையை அரசு தெரியப்படுத்தப்படும் வரை போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்று அனைத்து மாவட்டங்களிலும் போராட்டங்களில் ஈடுபட்டுள்ள உறவினர்கள் உறுதியுடன் தெரிவித்துள்ளனர்.

அவர்களுடைய போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து தினமும் பல அமைப்புக்கள் போராட்டக் களங்களுக்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடி வருகின்றன.

(வ-21)

## மின்னல் தாக்கத்தால் கோபுரத்தில் சேதம்

வவுனியா, மே 14

வவுனியா கோவில்குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தில் அமைக்கப்பட்டு வரும் இராஜகோபுரத்தின் மீது மின்னல் தாக்கியதில் அதன் உச்சியில் அமைக்கப்பட்டிருந்த பொம்மைக்கு சிறு சேதம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில், நேற்று முந்தினம் வெள்ளிகிழமை பிற்பகல் 4.30 மணியளவில் இடி மின்னலுடன் கூடிய கடும் மழை பெய்தது. இதன்போது ஆலய கோபுரத்தின் உச்சியில் மின்னல் தாக்கியது . அதனால் உச்சியில் அமைக்கப்பட்டிருந்த பொம்மை ஒன்றுக்கு சிறு சேதம் ஏற்பட்டது. கிராம மக்களை இடி மின்னல் தாக்கத்தில் இருந்து பாதுகாப்பதற்கே கோவில் கோபுரங்களை அமைத்து அதன்மீது இடிதாங்கும் சக்திபடைத்த கலசங்கள் வைக்கப்படுவது வழமை. எனினும் தற்போது புதிதாக இந்தக் கோபுரம் அமைக்கப்பட்டு வருவதால் மின்னல் தாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது: (வ-21)



## இயல்,இசை நாடக அரங்கம் 3ஆவது நாளாகவும் சிறப்பு



யாழ்ப்பாணம், மே.14

இலங்கை வேந்தன் இசைக் கல்லூரியில் நடைபெற்று வரும் இயல், இசை நாடக அரங்கின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருத்துவ நிபுணர் த.பேரானந்தராஜா கலந்து கொண்டார்.

நிகழ்வில் நீர்வையூர் பொன் சக்தி கலாகேந்திரா மாணவிகளின் நாட்டியாஞ்சலி, சுவாமி விபுலானந்த அழகியற்கற்கைகள் நிறுவனத்தின் மாணவிகளின் வள்ளி திருமணம் நாட்டிய நாடகம், கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கத்தின் யாரோடு நோகேன் நாடகம் உள்ளிட்ட கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

(வ-ஐ-12)

### மருத்துவ சபை வளாகத்தில் கைக்குண்டு

மருதானையில் உள்ள இலங்கை மருத்துவ சபை வளாகத்திலிருந்து நேற்று முன்தினம் கைக்குண்டு மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. மருத்துவ சபையை இலக்கு வைத்து தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. எனினும் கைக்குண்டு வெடிக்கவில்லை என்று மருத்துவ சபையின் உறுப்பினர் தெரிவித்தார். (வ-5)

## வடக்கு - கிழக்கு இளையோரை பொலிஸில் இணைய அழைப்பு

### சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தக் கோருகிறார் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் அரசரெட்ணம்

யாழ்ப்பாணம், மே 14



"வடக்கு - கிழக்கில் தமிழ் பேசும் இளையோர் பொலிஸ் சேவைக்குள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். வழங்கப்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்த வேண்டும்"

இவ்வாறு சிவில் பொலிஸ் இணைப்பகத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கே. அரசரெட்ணம் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் பத்திரிகையாளர்களிடம் அவர் நேற்றுத் தெரிவித்ததாவது:

வடக்கு - கிழக்கில் தமிழ் மொழி பேசும் பொலிஸார் மிகவும் குறைவானோரே உள்ளனர். தமிழ் பேசும் பெண் பொலிஸாரின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். கடந்த கால நிலமைகள் காரணமாக பொலிஸ் சேவையில் தமிழ் பேசும் இளையோர்கள் இணைவது மிகவும் குறைவான நிலையிலேயே இருந்து வருகின்றது. இதனால் வடக்கு கிழக்கில் பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழியை நடைமுறைப்படுத்துவதில் பல சவால்கள் இருந்து வருகின்றன.

வடக்கு - கிழக்கில் உள்ள இளையோர் பொலிஸ் சேவைக்குள் இணைவதன் ஊடாக சிறந்த தொழில் வாய்ப்பைப் பெறும் சந்தர்ப்பத்துடன் தமது பகுதியைப் பாதுகாக்கும் சந்தர்ப்பமும் அவர்களுக்குக் கிடைக்கின்றது. வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் பொலிஸ் நிலையங்களில் தமிழில் கடமைகளை நிறைவேற்றுவதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்தக் குறைகளை நிவர்த்திசெய்ய வேண்டுமானால் தமிழ் பேசும் இளையோர்கள் பொலிஸ் திணைக்களத்தில் இணைய வேண்டும்.

அரச சேவையை எதிர்பார்த்துக் கொண்டுள்ளவர்களுக்கும் சிறந்த சந்தர்ப்பமாக இது அமையும். சாதாரண தரச் சித்தியுடன் அரச சேவையில் இணையும் சந்தர்ப்பமாக பொலிஸ் சேவை இருந்து வருகின்றது. இதனை வடக்கு - கிழக்கில் உள்ள இளையோர்கள் பயன்படுத்தி பெருவாரியாக இணைந்து கொள்ள வேண்டும் - என்றார். (வ-21)

## வவு. ஆயுள்வேத வைத்தியசாலையில் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு

### தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்கள் தெரிவிப்பு

வவுனியா, மே 14

"வவுனியா சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களுக்கு மருந்துகள் போதியளவில் வழங்கப்படுவதில்லை. சில மருந்துகளை வெளியிடங்களுக்குச் சென்றுதான் பெற்றுக்கொள்ள வேண்டும்"

இவ்வாறு அங்கு தங்கியிருந்து சிகிச்சை பெற்று வரும் நோயாளர்கள் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்துக்குட்பட்ட வவுனியா சித்த ஆயுள்வேத வைத்தியசாலை இருபாலருக்கும் தனித்தனியே விடுதிகளைக்கொண்டு இயங்கிவருகின்றது. தற்போது 21 ஆண்களும் 19 பெண்களும் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். வைத்தியசாலையின் வைத்தியர்கள் தரமான சேவையை வழங்கி வருகின்றனர். தாதிய உத்தியோகத்தர்கள் நோயாளர்களுக்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றனர்.

வைத்தியர்கள் ஒரு நோயாளரை 15 நிமிடத்துக்கு மேல் பார்வையிடுகின்றனர். அதனால் அவர்கள் நோய்களைப் புரிந்துகொண்டு மருந்துகளை வழங்கி வருகின்றனர். அவர்களால் வழங்கப்படும் சிட்டைகளுக்கு மருந்துகள் எடுக்கச் சென்றால், வைத்தியசாலையில் மருந்து இல்லை. வேளியே எடுங்கள் என்று மருந்தாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகளிடம் முறையிட்டால் மருந்துகள் தாராளமாக கையிருப்பில் உள்ளது. ஒரு மாதத்துக்கு கட்டுப்படுத்தி வழங்கவேண்டியுள்ளது என்று அவர்கள் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக வைத்தியர் 5 மருந்துகள் எழுதிக்கொடுத்ததால் இரண்டு மருந்துகள் வழங்கப்பட்டுவருகின்றன. மற்றைய மூன்றையும் வெளியே பெற்றுக்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றது.

ஆயுள் வேத வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகச்சை பெற்று வருபவர்கள் அனேகமானவர்கள் வறுமைக் கோட்டுக்குட்பட்டவர்கள். எனவே அவர்களிடம் வெளியே சென்று மருந்தைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்தால் பணத்துக்கு என்ன செய்ய முடியும். இதனால் பல நாட்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறவேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

நோயாளர்களுக்கு மதிய நேர உணவுக்கு அவித்த முட்டை வழங்கப்பட்டு வருகின்றது. அதை உடைத்து வழங்குவதில்லை. சிலருக்கு முட்டை உடைப்பதற்கு முடியாமலும் உள்ளது. இதை அவர்களிடம் தெரிவித்தால், உறவினரை அழைத்துவந்து உடைத்துக்கொள்ளுமாறு தெரிவிக்கின்றனர். கடந்த வருடம் அங்கு நோயாளராகச் சென்ற ஒருவர் நுளம்புக்கடியால் நோயாளர்கள் பெரும்



அவதிப்படுவதைப் பார்த்து ஒரு தொகுதி நுளம்பு வலைகளைப் பெற்றுக் கொடுத்தார். அது இன்று வரையில் சுத்தப்படுத்திக்கொள்ளாமல் அப்படியே கட்டித் தொங்கவிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, கிளிநொச்சி, மன்னார் போன்ற பகுதிகளிலிருந்து சிகிச்சைக்காக பெருமளவு நோயாளர்கள் வந்து செல்கின்றனர். மருந்துகள் வழங்குவதில் ஏற்பட்டுள்ள சிக்கலையடுத்து நோயாளர்களின் வரவில் சரிவு ஏற்பட்டுள்ளது. திறமையான வைத்தியர்களைக் கொண்ட ஆயுள்வேத வைத்தியசாலையில் இவ்வாறு காணப்படும் சில குறைபாடுகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும். இதற்கு பணிப்பாளர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர்.

(வ-21)

### சிறையிலிருந்த வயோதிபர் நேற்று உயிரிழப்பு

வவுனியா, மே 14

பிணையில் வெளிவர உறவினர்கள் இன்றி சிறையிலிருந்த வயோதிபர் சுகவீனம் காரணமாக உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

"மகனைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் வயோதிபர் ஒருவர் வவுனியா விளக்கமறியல் சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார். மன்னார் உயிலங்குளத்தைச் சேர்ந்த சில்வஸ்ரார் சாமுவேல் (வயது 66) என்ற வயோதிபர் உயிரிழந்தார். விசாரணைகளின் பின்னர் அவரை கடந்த 4ஆம் திகதி பிணையில் செல்ல மன்னார் நீதிவான் மன்று அனுமதி வழங்கியது. எனினும் அவரை பிணையில் எடுக்க உறவினர்கள் யாரும் முன்வரவில்லை. திடீர் சுகவீனம் காராணமாக அவர் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் நேற்றுக் காலை சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார்" என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-21)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# ஏன் இந்த நிலை? சிந்திப்பாரா முதல்வர்!

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர் மீது கழிவிரக்கம் வரத்தக்கதான கருத்து ஒன்றை நேற்றுமுன்தினம் வெளியிட்டிருக்கிறார். இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியை வெள்ளிக் கிழமை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் சந்தித்துப் பேசினர். அந்தச் சந்திப்பில் கலந்துகொள்ள முதலமைச்சருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவில்லை. அதையொட்டிக் கருத்துத் தெரிவிக்கும்போதே கழிவிரக்கத்தை வரவழைக்கக்கூடிய வகையில் கருத்துப் பகிர்ந்தார் முதலமைச்சர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தா ன்வேண்டத்தகாதவன் ஆகிவிட்டார் என்றும் அதனால் தன்னை மோடியுடனான சந்திப்புக்கு அழைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நான் வேண்டத்தகாத ஆள் என்பதால் மோடியுடனான சந்திப்புக்கு என்னை அழைக்கவில்லை. இந்தச் சந்திப்புத் தொடர்பான தகவல்களை அதில் பங்குகொள்பவர்களிடம்தான் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். நான் அவர்களுக்கு வேண்டத்தகாத ஆள் தானே!'' என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் அரசியலுக்குக் கொண்டு வரப்பட்டவர் சி.வி.விக்னேஸ்வரன். நீதியரசராகப் பதவி வகித்தவர், கொழும்புக்கம்பன்கழகம் போனற்வற்றில் நல்ல சொற்பொழிவாளராக இருந்தவர், அரசியல் கருத்துக்களை காத்திரமாக வெளிப்படுத்தக்கூடியவர் என்றே அதுவரையில் மக்களால் அறியப்பட்டிருந்தவர். கூட்டமைப்பே அவரை முதலமைச்சர் வேட்பாளராக மக்கள் முன்நிறுத்தியது. அவரது வெற்றிகாக உழைத்தது. முதலமைச்சர் ஆக்கியும் அழகு பார்த்தது.

அவரது அமைச்சரவையை அவரே தெரிவு செய்வது முதற்கொண்டு எல்லாச் சுதந்திரங்களையும் அவருக்கு வழங்கியிருந்தது. அதற்குப் பதிலீடாக, தமிழ்மக்களுக்கு ஒருதீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்று தாம் நம்பிப் பயணிக்கும் அரசியல் பாதையில் தம்மோடு அவரும் சேர்ந்து பயணித்து அதனைப் பலப்படுத்த வேண்டும் என்று கூட்டமைப்பு எதிர்பார்த்தது. ஆனால் அது நடக்கவில்லை.

முதலமைச்சர் ஆகிய சில காலங்களிலேயே தன்னை அரசியலுக்கு இழுத்துவந்த கூட்டமைப்பின் தலைமையுடன் முரண்படும் போக்கைக் கடைப்பிடிக்கத் தொடங்கினார். இதனால் அவருக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலான விரிசல் அதிகமாகத் தொடங்கியது. கூட்டமைப்புக்கு மேலும் சவால்விடும் வகையில் தமிழ் மக்கள் பேரவையை ஆரம்பித்து அதற்கூடாகக் கூட்டமைப்பு எதிர் அரசியலை கூட்டமைப்புக்கு எதிரான அரசியல் அல்ல அது என்று சொல்லிக் கொண்டாலும்கூட செய்ய ஆரம்பித்தார்.

இவையெல்லாமும் சேர்ந்துதான் இன்றைய நிலைக்கு அவரையும் கூட்டமைப்பையும் கொண்டு வந்துள்ளன.

சி.வி.விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக்கிய காலங்களில் நடந்த அரசியல் விமர்சனங்கள், விவாதங்களின் போது, வடக்குக்கு வரும் வெளிநாட்டுத் தலைவர்களுடன் ஆங்கிலத்தில் பேசவும் அவர்களுக்குப் பிரச்சினையை விளங்கப்படுத்தவும்கூடிய ஒரு நபரைத்தான் தேடுகிறேன் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறினார் என்று சொல்லப்படுவதுண்டு.

அதை உணர்த்துவதைப் போன்று, பிரிட்டிஷ் பிரதமராக இருந்தவரான டேவிட் கமரூன் யாழ்ப்பாணம் வந்தபோது நடந்த சந்திப்பில் முதலமைச்சருக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டது. மிகத்தெளிவாக, அலட்டல் இல்லாமல், தேவையான அளவோடு அப்போது முதலமைச்சர் டேவிட் கமரூனிடம் எல்லாவற்றையும் எடுத்துக்கூறினார் என்று கூட்டமைப்புத்தரப்பினராலேயே மெச்சப்படவும் செய்தார்.

அப்படிப்பட்ட ஒருவர் மூன்று வருட காலங்களில் கூட்டமைப்புக்குத் தான் வேண்டப்படாத நபர் என்று பச்சாதாபம் கொள்ளும் நிலையை எட்டியிருக்கிறார் என்றால் அது யாரின் தவறு? தன்னை அரசியலுக்குக் கொண்டு வந்து மகுடம் சூட்டிய கட்சியே தன்னை வெறுத்து ஒதுக்கும் நிலைக் குத் தள்ளிவிட்டமைக்கான காரணம் என்ன என்பதை முதலமைச்சர் உணர்வாரா? உணர்ந்து திருந்திச் செயற்படுவாரா? ஒற்றுமையுடன் இருப்பதன் பலத்தை உணர்வாரா?




## மக்கள் குடியிருப்புகளுக்கு அருகே உள்ள

# மயானங்களை அகற்றக் கோரி யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், மே 14

மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கு அண்மையில் உள்ள மயானங்களை அகற்றக் கோரி யாழ்ப்பாண நகர மையப் பேருந்து நிலையம் முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

புத்தூர் மேற்கு, உரும்பிராய் மற்றும் திருநெல்வேலி ஆகிய பிரதேச மக்களுடன் இணைந்து சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு இணைந்து இந்தப் போராட்டத்தை நடத்தினர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்கள் நெருக்கமாக வாழ்ந்து வரும் குடியிருப்புகளுக்கு மத்தியில் உடலங்களை எரியூட்டும் மயானங்கள் உள்ளன. இந்த மயானங்களில் உடலங்கள் எரியூட்டப்படும் போது உருவாகும் புகையானது அவற்றுக்கு அருகே வசிக்கும் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், நோயாளர் உள்ளிட்ட மக்களால் சுவாசிக்கப்படுகின்றன. அதனால் நோய்கள் ஏற்படுவதுடன், தாங்கமுடியாத துர்நாற்றத்தையும் அனுபவிக்கவேண்டிய அவல நிலை ஏற்படுகின்றது. சிலவேளைகளில் அரைகுறையாக எரிந்த உடற்பாகங்கள், எலும்புப் பகுதிகள் நாய்கள் போன்ற விலங்குகளால் இழுத்துச் செல்லப்பட்டு குடியிருப்புகளில் விடப்படு கின்றன. இதனால் சுகாதாரச் சீர்கேடும், சூழல் மாசடைவும், உளவியல் ரீதியான தாக்கங்களும் ஏற்படுகின்றன.

முன்னைய காலங்களில் மக்களின் குடியிருப்புகள் இல்லாத இடங்களில் இருந்துவந்த மயானங்களைச் சுற்றி குடித்தொகை அதிகரிப்புக் காரணமானவும், உழைக்கின்ற ஏழைத் தொழிலாளர்களின் காணி மற்றும் வீட்டுத் தேவையின் காரணமாகவும் குடியிருப்புகள் தோன்றியுள்ளன. இந்த மக்கள் கடந்த கால கொடிய போரால் தமது காணிகளை இழந்து இடம்பெயர்ந்தவர்களும், அன்றாடம் உழைத்து வாழ்கின்ற கூலித் தொழிலாளர்களும், விவசாயிகளுமாவர். எனவே, அவர்களின் வாழ்வுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற மயானங்கள் அகற்றப்படவேண்டியது மிகவும் அவசியமான தொன்றாகும். இத்தகைய மயானப் பிரச்சினையானது உரும்பிராய் மேற்கு, ஈவினை வடக்கு - திடற்புலம், புத்தூர் மேற்கு - கிந்துசிட்டி, திருநெல்வேலி - பாற்பண்ணை, மல்லாகம் போன்ற பல இடங்களில் நிலவுகின்றது.

இந்தப் பிரச்சினையை வடக்கு மாகாண சபை கவனத்திலெடுத்து விரைவானதொரு தீர்வை முன்வைக்கவேண்டும்" என்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டோரால் கோரப்பட்டது.

(வ -ரி)

## மீள் நியமனம் கோருகின்றனர் ஓய்வுநிலை கிராம அலுவலர்கள்

வவுனியா, மே 14

வவுனியா பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றி ஓய்வு பெற்ற கிராம அலுவலகர்கள் தமக்கு மீள் நியமனம் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசால் அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் ஓய்வுநிலை அலுவலகர்களுக்கு மீள் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் பிரகாரம் வவுனியா மாவட்டத்தில் உள்ள நெடுங்கேணி, செட்டி குளம், வவுனியா தெற்கு ஆகிய மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஓய்வு பெற்ற கிராம அலுவலர்கள் தம்க்கு மீள் நியமனம் வழங்குமாறு விண்ணப்பித்தவர்களுக்கு மீள் நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே வவுனியா பிரதேசசெயலாளர் பிரிவில் உள்ள ஓய்வு நிலை கிராம அலுவலர்கள் தமக்கு மீள் நியமனம் வழங்குமாறு கோரிக்கைவிடுத்துள்ளனர்.

"வவுனியா மாவட்ட பிரதேச செயலகங்களில் இன்று வரை கிராம அலுவலர்களுக்கு மீள் நியமனம் வழங்கப்படவில்லை. வவுனியா பிரதேச செயலகத்தில் சேவையிலுள்ள கிராம அலுவலர்கள் தாங்கள் கடமையாற்றுவதாகத் தெரிவித்துள்ள காரணத்தால் வவுனியா பிரதேச செயலக பிரிவில் ஓய்வு நிலை கிராம அலுவலர்களுக்கு மீள் நியமனம் வழங்கப்படவில்லை" வவுனியா பிரதேச செயலாளர் . கா. உதயராசா தெரிவித்தார். (வ-402)

## தென்பகுதி இளையோர் முல்லை. செயலகத்தில் சாரதிகளாக நியமனம்

### பொது அமைப்புக்கள் அதிருப்தி

யாழ்ப்பாணம், மே 14

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு தென்னிலங்கையைச் சேர்ந்த இருவர் சாரதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் , கிளிநொச்சியைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கும் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டமை தொடர்பில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்குட்பட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றிய 2 சாரதிகள் அண்மையில் ஓய்வு பெற்றனர். அவர்களுடன் சேர்ந்து முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் கீழ் 4 சாரதிகளுக்கு வெற்றிடங்கள் ஏற்பட்டன. இந்த வெற்றிடங்களில் தற்போது காலி மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் மாந்தைக் கிழக்கு பிரதேச செயலகத்தில் கடமையாற்றுவதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரால் பணிக்கப்பட்ட போது, அவர் அதனை ஏற்காது முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திலேயே கடமையாற்றி வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

"முல்லைத்தீவு மாவட்டத்தில் பல இளைஞர்கள் தொழில் வாய்ப்பின்றி வறுமையுடன் போராடி வருகின்றனர். அரசின் வறுமை நிலை கணக்கெடுப்பின் போது முல்லைத்தீவு மாவட்டம் முதலிடத்தில் உள்ளது. இங்குள்ள அரச திணைக்களங்களுக்கு தென் பகுதியைச் சேர்ந்தவர்களே அலுவலக உதவியாளர், சாரதிகள் உள்ளிட்ட சிற்றூழியர்களாக நியமிக்கப்படுகின்றனர்" என்று பொது அமைப்புக்கள் அதிருப்தி வெளியிட்டன.

இந்த விடயங்கள் தொடர்பில் மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபையின் உறுப்பினர்கள் கவனத்தில் எடுத்து இந்த நடவடிக்கையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் தென்னிலங்கையைச் சேர்ந்த 11பேர் சிற்றூழியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (வ-101)

# வெங்காயத்தின் விலை யாழ்.குடாநாட்டில் உச்சம்

## ஒரு அந்தர் ரூபா 10 ஆயிரம் வரை விற்பனை



வடமராட்சி,மே 14
யாழ்ப்பாணக் குடாநாட்டில் வெங்காயத்தின் விலை வெகுவாக உயர்ந்துள்ளது. பல வருடகால இடைவெளிக்குப் பின்னர் ஒரு அந்தர் வெங்காயம் 10 ஆயிரம் ரூபாவாக விற்கப்படுகின்றது.

வடமராட்சி கம்பர்மலை, புலோலி, அல்வாய் கெருடாவில், திக்கம் ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகளிடமிருந்து விதை வெங்காயத்துக்காக வலிகாமம் பிரதேச விவசாயிகளும், புத்தளம் பகுதி விவசாயிகளுக்கு வழங்கவென அந்தப் பகுதியைச் சேர்ந்த வெங்காய வியாபாரிகளும் போட்டி போட்டு வெங்காயத்தைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

காலபோக வெங்காயச் செய்கையின்போது கடும் மழை பெய்தது. அதனால் பெரும் எண்ணிக்கையான பரப்பளவில் வெங்காயப் பயிர்ச்செய்கை முற்றாக அழிவடைந்தது. தப்பிப்பிழைத்த வெங்காயம் அறுவடையின் பின்னர் மிக உச்ச விலையை எட்டிப் பிடித்துள்ளது.

இருந்த போதும் மழையால் அழிவுற்ற வெங்காயப் பயிர்களுக்கு எந்த விதமான இழப்பீடும் வழங்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (வ-173)

### தாண்டிக்குளத்தில் கார்-கூலர் வான் மோதுண்டு விபத்து

சாரதிப் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கார் மீது கூலர் வாகனம் மோதி ஏற்பட்ட விபத்தால் இரு வாகனங்களும் சேதமடைந்தன.

வவுனியா ஏ-9 சாலையில் தாண்டிக்குளம் பகுதியில் நேற்றுக் காலை சம்பவம் இடம்பெற்றது. லேனர்ஸ் நிறுவனத்தின் காரை சாரதி பயிலுனர் செலுத்திக்கொண்டிருந்தவேளை, அதன் பின்னே சென்ற கூலர் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். விபத்தால் 2 வாகனங்களும் சேதமடைந்தன.

இதேவேளை, கார் சாரதி காயமின்றித் தப்பித்தார். சம்பவத்தை யடுத்து அங்கு வந்த வீதி போக்குவரத்துப் பொலிஸார் விபத்துத் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டனர். (வ-21)

# வரைபடத்திலிருந்த தவறால் இரண்டாகப் பிரிந்த கிராமம்

## மக்களிடையே ஏற்பட்ட குழப்பத்தை நேற்றுச் சீர்செய்தார் உத்தியோகத்தர்



வவுனியா, மே 14
"வவுனியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட தமிழ்க் கிராமமான ஆச்சிபுரம், வவுனியா தெற்குப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சிங்களக் கிராமமான மயிலங்குளத்துடன் இணைக்கப்படவில்லை. வீடமைப்பு அதிகார சபையின் வரைபடத்தில் காணப்பட்ட தவறு காரணமாகத்தான் கடந்த வாரம் பிழையாகத் தெரிவித்துவிட்டேன்"

இவ்வாறு ஆச்சிபுரம் கிராம மக்களுக்கு விளக்க மளித்தார் வவுனியா பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.அருள்குமார்.

வவுனியா சமணங்குளம் கிராம அலுவலகர் பிரிவுக்குட்பட்ட ஆச்சிபுரம்கிராமம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒருபகுதி மயிலங்குளம் கிராம அலுவலகர் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளதாக கடந்த புதன் கிழமை அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். அருள்குமார் தெரிவித்தார். இதனால் ஆச்சிபுரம் கிராம மக்கள் இடையே பதற்றம் ஏற்பட்டிருந்தது.

2000ஆம் ஆண்டு ஆச்சிபுரம் கிராமத்தில் மக்கள் மீள்குடியமர்ந்தனர். அங்கு மீள்குடியமர்ந்த 365 குடும்பங்களும் வவுனியா பிரதேச செயலகத்தால் பதிவு செய்யப்பட்டனர். அவர்களுக்கு வவுனியா பிரதேச செயலத்தால் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

வீட்டுத் திட்டம் தொடர்பில் மக்களுடன் கலந்துரையாடுவதற்காக ஆச்சிபுரம் கிராமத்துக்குக் கடந்த புதன்கிழமை சென்றிருந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். அருள்குமார், கிராமம் இரண்டாக பிரிக்கப்பட்டதாக அவர்களிடம் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் ஆச்சிபுரம் கிராம மக்களை நேற்று மீண்டும் சந்தித்த குறித்த அபிவிருத்தி உத்தியோகத்தர், வீடமைப்பு அதிகார சபையின் வரைபடத்தில் ஏற்பட்ட தவறு காரணமாகவேதான் அவ்வாறு தெரிவித்ததாக விளக்கமளித்தார். எனினும் கிராமம் பிரிக்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, தமது கிராமத்திலுள்ள அனைவருக்கும் வீட்டுத்திட்டம் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும், இனிமேல் எந்தவாரு பிரச்சினையும் ஏற்படாது என்று நம்புவதாகவும் ஆச்சிபுர கிராம மக்கள் தெரிவித்தனர். (வ-21)

### முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வவுனியாவில் இன்று

வவுனியாவில் நாளை மாலை 6 மணிக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

வவுனியா மன்னார் வீதியிலுள்ள பண்டார வன்னியன் நினைவுத் தூபிக்கு முன்பாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தலைமையில் நினைவேந்தல் இடம்பெறும். தமிழ் உணர்வாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (வ-21)

# இளைஞர் சேவைகள் மன்றத்தால் பத்திரிகையாளர்களுக்கு விளக்கம்

## மன்னாரில் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் குறித்து

மன்னார், மே 14
மன்னார் மாவட்டத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பில் மன்றத்தால் பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வருடாந்த பத்திரிகையாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் மன்னார் தலைமன்னார்முதன்மைவீதியில் அமைந்துள்ள அதன் அலுவலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ரி.பூலோகராஜா தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வன்னிப் பிராந்தியப் பணிப்பாளர் என்.எம்.முனவ்பா கலந்து கொண்டார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் மன்னாரிலுள்ள 5 பிரதேசசெயலாளர் பிரிவுகளில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

"மன்னார் மாவட்டத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் மற்றும் நிகழ்வுகள் தொடர்பில் பிராந்திய செய்தியாளர்களுக்கு உரிய நேரத்தில் தெரியப்படுத்துவதில்லை. எல்லா நிகழ்வுகளையும் தொகுத்து அறிக்கையாக முன்வைக்கப்படுகின்றபோது அவற்றை வெளியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது" என்று பத்திரிகையாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

பத்திரிகையாளர்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினை எதிர்வரும் காலங்களில் ஏற்படாது என்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வன்னிப் பிராந்திய பணிப்பாளர் என்.எம்.முனவ்பா தெரிவித்தார். (வ-56)

### இரு கண்களையுமிழந்த முன்னாள் போராளி சாவு

யாழ்ப்பாணம், மே 14
26ஆண்டுகள் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து போராட்டத்தின்போது இரு கண்ணையும் இழந்த முன்னாள் போராளி கடந்த வியாழக்கிழமை உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சியைச் சேர்ந்த தியாகலிங்கம் குமாரதாஸ் (வயது46) என்ற முன்னாள் போராளியே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம், தாவடியில் 1972 ஆம் ஆண்டில் பிறந்து கல்வி கற்ற வேளையில் 2ஆம் கட்ட ஈழப் போர் 1990ஆம் ஆண்டு 6ஆம் மாதம் ஆரம்பித்தது. அப்போது அவர் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டார். 1991ஆம் ஆண்டு மணலாறு போர் முனையில் செயல்ப்பட்ட காலத்தில் அவர் இரு கண்களிலும் காயமடைந்தார். சிறிது காலத்தில் அவரது இரு கண்களுமே அகற்றப்பட்டன.

விடுதலைப் புலிகளின் நவம் அறிவுக் கூடத்தில் பராமரிக்கப்பட்டு வந்த போராளியை, சக போராளி ஒருவர் அன்பு கொண்டு அவருடன் இல்லற வாழ்வில் இணைந்தார். 2009 மே மாதம் வரையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பால் அவருக்கு மருத்துவ வசதிகள் வழங்கப்பட்டன.

இந்த நிலையில் போர் நிறைவடைந்த பின்னர் குறித்த போராளி மனைவி பிள்ளைகளுடன் கிளிநொச்சியில் வசித்தார். போராளியின் கண் நரம்புகள் மேலும் பாதிப்புக்குள்ளாகிய நிலையில் அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்" என்று உறவினர்கள் தெரிவித்தனர். (வ-101)

## சுகாதாரத் தொண்டர்களை உள்ளீர்க்க

# வடக்கு சுகாதார அமைச்சுக்கு சிவமோகன் எம்.பி. யோசனை



வவுனியா, மே 14
"வடக்கு மாகாண சுகாதார அமைச்சு நியதிச் சட்டத்தை உருவாக்கி சுகாதாரத் தொண்டர்களின் நிரந்தர நியமனத்தில் இருக்கும் தடைகளை நீக்கலாம். கல்வித் தகைமையை மட்டும் வைத்துக்கொண்டு அவர்களை நீக்குவது நியாயமற்றது"

இவ்வாறு வலியுறுத்தினார் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன்.

வவுனியாவில் முன்னெடுக்கப்படும் சுகாதாரத் தொண்டர்களின் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று 10ஆவது நாளாகவும் தொடர்ந்தது. போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் நேற்றுக் காலை 9 மணியளவில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

சுகாதார தொண்டர்களின் பிரச்சினைகளை அவர் கேட்டறிந்தார். சுகாதார தொண்டர்கள் தங்களது கோரிக்கை அடங்கிய மனு ஒன்றையும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கையளித்தனர்.

இதையடுத்து செய்தியாளர்களிடம் கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் மேலும் தெரிவித்ததாவது:
சுகாதாரத் தொண்டர்களின் கவனவீர்ப்புப் போராட்டம் நியாயமானது. இவர்களை நம்பித்தான் ஒரு காலத்தில் சுகாதார நிறுவனங்கள், வைத்தியசாலைகள் இயக்கிக்கொண்டிருந்தன. போர்க் காலத்தில் இவர்களுடைய சேவையை பெற்றுக்கொண்ட திணைக்களம் இப்போது அவர்களை ஒதுக்கிவிட்டு வேறு நடைமுறைகளின் கீழ் புதியவர்களை உள்வாங்கியதை நியாயமாகச் சொல்ல முடியாது.

இன்று இவர்களுக்கு கல்வித் தகைமை தேவை என்று சொல்லப்படுகின்றது. 2015ஆம் ஆண்டு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவால் கொண்டுவரப்பட்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் சுகாதாரத் தொண்டர்களை உள்வாங்கும் போது, இந்தக் கல்வித் தகைமை கணக்கிலெடுக்கப்படவில்லை.

எனவே தற்சமயம் இந்தக் கல்வித் தகைமையைப் பின்பற்றத் தேவையில்லை என்றுதான் நான் கருதுகின்றேன். அதற்கு வடக்கு மாகாண சபைக்கு அதிகாரம் உள்ளது. வடக்கு மாகாண சுகாதார அமைச்சு ஒரு நியதிச் சட்டத்தை உருவாக்கி இவர்களது நிரந்தர நியமனத்தில் இருக்கும் தடைகளை நீக்கலாம். இப்படியான தடைகளை நீக்கி பல மாகாணங்களில் சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கியுள்ளனர்.

கொழும்பு அரசுக்கு என்று ஒரு பொது நடைமுறை இருந்தாலும் மாகாணங்கள் தங்களுக்கேற்றபடி இந்த நியதிச்சட்டத்தில் உள்வாங்கல்களைச் செய்யலாம். எனவே இவர்களின் கல்வித் தகைமைகளை வைத்துக்கொண்டு அவர்களை நீக்குவது நியாயமற்றது. இது தொடர்பாக முதலமைச்சருக்கு நானும் ஒரு கடிதத்தை எழுத இருக்கின்றேன்.

வடக்கு மாகாணத்தில் வேறு மாகாணங்களைச் சேர்ந்த சிற்றூழியர்கள் பெருந்தொகையானவர்கள் கடமையாற்றுகிறார்கள். சுகாதாரத் தொண்டர்களாகக் கடமையாற்றுபவர்களும் சிற்றூழியர் நியமனத்தையே கோரி நிக்கின்றனர். எனவே வெளி மாகாணங்களிலிருந்து வந்தவர்களை அவர்களது இடங்களுக்கு அனுப்பிவிட்டு, அந்த வெற்றிடங்களுக்கு சுகாதாரத் தொண்டர்களை நியமிக்க வடக்கு மாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (வ-21,402)

# மலையக மக்களுக்கான உரிமைகளை விரைவில் பெற்றுக் கொடுப்போம்

## அமைச்சர் மனோ கணேசன் உறுதி





கொழும்பு,மே 14

“வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழர்கள்,முஸ்லிம்களுக்கு நிகராக, அரசியல் அங்கீகாரத்துடனும், சுயமரியாதையுடனும் வாழ்வதற்கான அங்கீகாரத்தை மலையக மக்களுக்கும் விரைவில் பெற்றுக்கொடும்போம்.”

இவ்வாறு அரச கரும மொழிகள் மற்றும் தேசிய சகவாழ்வு அமைச்சரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெறும் பன்னாட்டு வெசாக் தின நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக இலங்கை வருகை தந்த இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, இந்திய அரசின் நிதியொதுக்கீட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட டிக்கோயா கிளங்கன் மாவட்ட மருத்துவமனையை நேற்றுத் திறந்து வைத்தார். அதன் பின்னர் மலையக மக்களுக்காக நோர்வூட் மைதானத்தில் உரையாற்றினார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

“அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் நல்லாட்சி அரசின் கீழ் தமிழ் முற்போக்குக் கூட்டணி புதிய ஓர் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. இந்தக் காலம் கடந்த காலங்களை விடச் சிறப்பாகவுள்ளது. மலையகத் தமிழர்கள் அனைவரும் 1800 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் வாழ்கின்றோம். இதன் காரணமாகவே இன்று இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இலங்கை வந்திருக்கின்றார்.

அவரை அனைத்துத் தமிழ் பேசும் மக்கள், மலையக இளைஞர்கள், அரசியல் கட்சிகள், நல்லாட்சி அரசு சார்பில் ஒன்றிணைந்து வரவேற்கின்றோம். இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான உறவு நீண்ட வரலாற்றைக் கொண்டது. இந்திய வம்சாவளியினரான நாம் இந்த நாட்டில் இரண்டு நூற்றாண்டுகளைக் கடந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

ஏனைய மக்கள் போன்று நாங்களும் இந்த நாட்டில் சுயமரியாதையுடன் வாழவேண்டும். அதற்கானவழியை ஏற்படுத்துவதில் நாங்கள் அரசுடன் இணைந்துப் பயணிக்கின்றோம். இந்தியஅரசுஎமக்குஉறுதுணையாக இருக்க வேண்டும்”-என்றார். (ஐ)

# விளையாட்டு பொருள்களால் புற்றுநோய் ஏற்படும் அபாயம்

## நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, மே 14

தரச் சான்றிதழ் அற்ற விளையாட்டுப் பொருள்களால் புற்றுநோய் ஏற்படும் அபாயம் உள்ளது என்று நுகர்வோர் உரிமைகள் பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

“தரப்படுத்தப்படாத, கட்டுப்படுத்தப்படாத நச்சுப் பிளாஸ்ரிக் விளையாட்டுப் பொருள்களால் புற்றுநோய் ஏற்படும் அபாயம் உள்ளது. பெற்றோர் இது குறித்து அவதானமாக இருக்க வேண்டும். தற்போது வெளிநாடுகளில் இருந்து பிளாஸ்ரிக் விளையாட்டுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. இறக்குமதி செய்யப்படும் விளையாட்டுப் பொருள்கள், எந்தவொரு தரக்கட்டுபாடும் அற்ற விதத்தில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றது. அவ்வாறான விளையாட்டுப் பொருள்களால் புற்றுநோய் ஏற்படும் அபாயம் ஏற்படுகின்றது. வெளிநாட்டு நிறுவனங்கள், எந்தவிதமான இடையூறுகளும் இன்றி, இலங்கைக்கு இவ்வாறான பொருள்களை இறக்குமதி செய்கின்றன. இவ்வாறான பொருள்களில் உடல் நலத்துக்குத் தீங்கான பொருள்கள் கலப்படம் செய்து இறக்குமதி செய்யப்படுகின்றன” என்றார். “இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு பல நாடுகள் பல்வேறு சான்றிதழ்களைக் கோருகின்றன. இலங்கையானது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் இவ்வாறான பொருள்களுக்கு எந்தவிதமான தரச் சான்றிதழ்களையும் கோருவதில்லை” என்று ஆடைத் தொழிற்சாலைகள் சங்கத்தின் முன்னாள் பொதுச்செயலாளர் ரொகான் மாசக்கோரள சுட்டிக்காட்டினார். (ஐ - 10)

# அமைச்சரவையில் விரைவில் மாற்றம்

## அரச தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, மே 14

இலங்கை அமைச்சரவையில் விரைவில் மாற்றத்தை ஏற்படுத்த எடுத்திருக்கும் தீர்மானத்தில் எந்தவித மாற்றமும் இல்லை. அமைச்சரவை மாற்றத்துக்குத் தற்போதுள்ள எந்த அமைச்சர்களும் எதிர்ப்பு வெளியிடவில்லை. இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வெகுவிரைவில் இடம்பெறவிருக்கும் அமைச்சரவை மாற்றத்தில், முதன்மை அமைச்சுப் பதவி ஒன்றில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அரச தலைவரும், தலைமை அமைச்சரும் இணங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளராக சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் ஒருவர் விரைவில் நியமிக்கப்படவுள்ள போதிலும், அந்தப் பதவிக்காக முன்மொழிவு செய்யப்பட்டுள்ள பெயர்களை அரச தலைவர் இன்னும் உறுதிப்படுத்தவில்லை என்றும் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ -10)

# ஆஸிக்கான நுழைவு விசைவு கட்டணம் அதிகரிப்பு

கொழும்பு, மே 14

ஆஸ்திரேலியாவுக்கான நுழைவு விசைவுக் கட்டணம் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்திரேலியக் குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்புத் திணைக்களத்தால் புதிய நுழைவு விசைவுக் கட்டணம் தொடர்பான பட்டியல் அறிவிக்கப்படவுள்ளது. கடந்த 2017ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி அறிவிக்கப்பட்ட 2017/18 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் இந்த கட்டண அதிகரிப்புக்கான தீர்மானம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ஐ -10)

# தியவன்னா வெசாக் வலயம் மைத்திரியால் திறந்து வைப்பு

கொழும்பு,மே 14

ஐக்கிய நாடுகள் சபையின் பன்னாட்டு வெசாக் தின நிகழ்வை முன்னிட்டு நடைபெறும் தியவன்னா வெசாக் வலயத்தின் வெசாக் நிகழ்வுளை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

இவ்வாறு அரச தலைவரின் ஊடகப் பிரிவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

பௌத்த நாடுகளால் முன் வைக்கப்பட்டிருந்த கண்காட்சிக் கூடங்களைப் பார்வையிட்ட அரச தலைவருக்கு நினைவுச் சின்னம் கையளிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் பன்னாட்டு வெசாக் தின நிகழ்வை முன்னிட்டு நடைபெறும் தியவன்னா வெசாக் வலயம் பத்தரமுல்லை சோகம் மைதானத்தில் மே மாதம் 14 ஆம் திகதி வரை திறந்திருக்கும்.

இந்த நிகழ்வில் சபாநாயகர் கரு ஜயசூரிய, அமைச்சர்களான விஜயதாச ராஜபக்ச, பாட்டலிசம்பிக்கரணவக்க, தயா கமகே, மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள் கலந்து கொண்டனர் - என்றுள்ளது. (ஐ - 10)

# சைட்டத்தைப் பாதுகாக்கும் திட்டத்தால் நாட்டுக்கு அழிவு

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 14

இலங்கையில் தற்போது அதிகமாகக் காணப்படும் பிரச்சினைகளில் டெங்குத் தாக்கமும் ஒன்றாகும். அதனை ஒழிக்கும் நடவடிக்கைகளில் தீவிரம் காட்டாமல் சைட்டம் நிறுவனத்தைப் பாதுகாப்பதற்கு சுகாதார அமைச்சர் மேற்கொள்ளும் திட்டங்கள் நாட்டின் அழிவு நிலையைத் தோற்றியுள்ளது. இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கருத்து வெளியிட்ட போதே அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இதனைத் தெரிவித்தது.

அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

இலங்கை மருத்துவச் சபையின் ஒழுங்குமுறைக்கு அடிபணியாமல் செயற்படும் சைட்டம் நிறுவனத்தைக் காப்பாற்றுவதற்கு, சுகாதார அமைச்சர் முயற்சிக்கும் செயல் வெட்கப்பட வேண்டியது.

சைட்டம் நிறுவனத்தைப் பாதுகாப்பதற்காக சுகாதார அமைச்சரின் தலையீடு தற்போது நாட்டு மக்கள் முன்னிலையில் நிரூபணமாகியுள்ளது. தனிப்பட்ட நலன் காரணமாகவே சுகாதார அமைச்சர் அதனைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

நாட்டில் டெங்கு பரவும் அளவு அதிகரித்துள்ளதுடன், அதனைத் தடுப்பதற்கு சுகாதார அமைச்சு முன்னெடுத்த நடவடிக்கைகள் தோல்வியடைந்துள்ளது. சைட்டம் நிறுவனத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளைத் தற்காலிகமாகத்தானும் நிறுத்திவிட்டு, டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் அதிக பங்களிப்புச் செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ - 10)

# மகிந்தவுக்கு ராசியானது தாமரைப்பூ

கொழும்பு, மே 14

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு ராசியான பூ தாமரைப்பூ என்று அவரது சோதிடர்கள் தெரிவித்துள்ளனர்.

எந்தச் செயல் ஒன்றை ஆரம்பிப்பதற்கு முன்னரும், மகிந்த தாமரைப்பூவைச் சின்னமாகப் பயன்படுத்துகின்றார் என தெரிவிக்கப்படுகின்றது. அரசால் மகிந்தவுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் அவர் தாமரைப்பூவை வளர்த்து வருகின்றார்.

இந்த நிலையில் தனது வீட்டில் மலர்ந்த தாமரைப்பூவைப் பார்த்து மகிந்த ரசித்த புகைப்படங்கள் சில ஊடகங்களில் வெளியாகியுள்ளன. (ஐ -10)

# இணுவில் ஆஞ்சனேயர் கோயில் மருதனார்மடம்

## ஸ்ரீ சுந்தரராமர் பட்டாபிஷேக சிறப்புமலர்

## 14.05.2017





கணபதிதுணை

### ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர் கோயிலில் நடைபெறும் சுந்தர காண்ட மங்கல யாகம் 08.05.2017 - 14.05.2017 வரை

சுந்தரகாண்ட நாயகனே சுகநலங்காத்து அருள்வாயே
எங்களின் நிலைக்கு மனமிரங்கி அருளாசி தந்து அருள்வாயே

சுந்தர காண்டம் தனை ஓதி ஆகுதி செய்து கையெடுத்தால்
அடியவர் வாழ்விலே பதினாறும் தப்பாமல் சேரும் என்பதனால்

குருநாதன் துணிந்து மனம்விரும்பி அதிஉயர் சிறப்பாய் நடத்துவதற்கு
வேண்டிய திரவியம் எல்லாமே நிறைவாகச் சேர்ந்ததன் பின்னாக

தாய்நாட்டில் இருந்து குருமாரை அன்போடு இங்கே அழைத்துவந்து
முறையாகச் செய்யும் யாகத்தினால் திண்ணம் அருள்நிலை சிறப்பாகும்

காலையும். மாலையும் பெருயாகம் சிறப்பாக நடந்து நிறைவேற
அடியவர் அனைவரும் மனமடங்கி தியானத்திலிருந்து கையெடுக்க

கலியுகக் கொடுமைகள் அத்தனையும் நீறாகி எம்மை விட்டகலும்
நினைந்து நினைந்து மனமுருகி அனைவரும் ஒன்றாய் கையெடுப்போம்.

ஸ்ரீராமஜெயம்



படைப்பு: ஆஞ்சநேயர் அடியவன்
திரு.வ.சிவநேசன் (ஆசிரியர்)
உடுவில்



ஸ்ரீராமஜெயகி

### ஆசியுரை (சுந்தர காண்ட பாராயண ஹோமம்)

"அறத்து ஆங்கு ஒரு தனித்துணை
ஆகிநின்ற அனுமன்" (கம்பர்)

ஆஞ்சநேயப் பெருமான் அடியார்களே.

யாழ்ப்பாணம், இணுவில் மருதனார் மடத்தில் எழுந்தருளி அருளாட்சி நல்கி கொண்டிருக்கும் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயப் பெருமானது திரு ஆலயத்தில் இம்முறை அதாவது இந்த ஹேவிளம்பி வருடத்தில் முதன்முதலாக ஸ்ரீ சுந்தர காண்ட மங்கல மஹாயக்ஞும் கடந்த 08.05.2017 முதல் நடைபெற்று வருகின்றது. அஞ்சனை மைந்தன் தனிப்பெரும் கருண்ணயினால் நிகழ்த்தப்பட்டு வரும் இந்த மங்கல மஹாயக்ஞும்.... எமது மக்களின் நிம்மதிப் பெருவாழ்விற்காகவும் லோகக்ஷேமத்திற்காகவும் நடைபெறுவது பெருமைக்கு உரியது.

இடையறாத பெருந்துன்பத்தில் அல்லல் படுபவர்கள் அதிலிருந்து விடுபட சுந்தரகாண்ட பாராயணம் செய்வதும் அதனை செவிமடுப்பதும் சிறந்த நல்வழிகள் என்று எங்களது சனாதன தர்மத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. அத்தகைய சிறப்புக்குரிய ஆஞ்சநேயப் பெருமானின் வீர. தீர. அருட்பிரவாகங்களை உள்ளடங்கிய இந்த சுந்தர காண்டம் எமது ஆலயத்தில் முதன்முறையாக பாராணயம் செய்யப்படுவதும் ஹோமங்கள் செய்யப்படுவதும் அந்த அனுமன் அருளன்றி வேறில்லை.

இந்த மங்கல மஹாயக்ஞத்திற்காக துணை நிற்கும் அனைத்து அடியார் பெருமக்களுக்கும் குறிப்பாக புலம்பெயர்ந்த நாடுகளில் (சுவிஸ், கொலண்ட்) வாழும் அடியவர்களுக்கும் மற்றும் இந்த திருநிகழ்வில் கலந்து கொள்ளும் அடியவர்கள் அனைவருக்கும் சகல நல்வரங்களையும் நல்கும் அதிவீர பராக்கிரம ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய பெருமானின் திருவருள் சித்திக்க பிரார்த்தித்து இந்த மஹாயக்ஞத்தில் எமது அழைப்பையேற்று கலந்து சிறப்பித்து கொண்டிருக்கும் இந்தியா தமிழகத்தில் இருந்து வருகை தந்துள்ள அந்தண விபீரஸ்ரேக்ஷ்டர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அனுமன் அருள் அவனியெல்லாம் பரவட்டும்.

**சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்**
**ஆதீனகர்த்தாவும் சிவாச்சாரியாரும்**
**ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்**
**மருதனார்மடம், சுன்னாகம், இலங்கை.**



## திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்


### ஸ்ரீ முதல்வன்
SRI MUTHALVAN
மொத்த, சில்லறை விற்பனை நிலையம்



இல.17/1.
கே.கே.எஸ் றோட்
மருதனார்மடம்.
T.P: 077 749 5075
075 771 3432

### ஸ்ரீ லக்ஷ்மி பிளாசா



Sri Lakshmi Plaza
திருமணம்,
கொண்டாட்டங்கள்
பெருநிறுவன நிகழ்வுகள்பிறந்தநாள்
விழா பூப்புனித நீராட்டு
விழா விசேட நிகழ்வுகள்
இன்னும் பல..
இல.84, ஐயனார் கோயில் வீதி,
தட்டாதெரு சந்தி.(அருகில்)
யாழ்ப்பாணம்.
E-mail :- jaffnasrilakshmiplaza@gmail.com
http://www.facebook.com/jaffnasrilakshmiplaza
021 222 9296, 075 783 6550, / 0044 746 657 8511

ஓம் விராட் விஸ்வபிரம்மனே நமஹ
### ஸ்ரீ காளிகா சிற்பாலயம்



ஆலயங்களுக குரிய சிற்பத்தேர். மஞ்சம். கைலாய வாகனம்.
ஆலய சிற்பங்கள், சிற்பமாதிரி சாஸ்திர முறைப்படி செய்து கொடுக்கப்படும்.



செல்லையா பாலச்சந்திரன்
பூநாறி மரத்தடி,
K.K.S. Road,
யாழ்ப்பாணம்.

### அண்ணா தொழிலகம்
அண்ணா நிறுவனத்தின் புதியதோர் உற்பத்தி அண்ணா நூடில்ஸ் உடனடித் தயாரிப்பு உண்ணச் சுவையான உணவு அண்ணா உற்பத்தி விற்பனை நிலையங்கள் எல்லா இடமும் பெற்றுக்கொள்ளலாம்.



துரை வீதி, இணுவில்.
021 224 1565

### சிறிநதியா நகை மாளிகை
சிறிநதியா நகைமாளிகை
இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2709
சிறிநதியா நகைமாளிகை
இல.56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6744
சிறிநதியா ஸ்ரூடியோ
NSR &
நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபம்
Wedding Hall
No.01, Stanley Road Junction, Jaffna - Tel: 021 222 4452
No.465/26, Point Pedro Road, Nallur, Jaffna. - Tel: 021 320 5694 / 021 222 1662



### நல்லூர்க் கந்தன் திருமண சேவை
எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு. உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.



இல.303,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
வி.ஜெயந்தி
தொ.பே. 077 973 3183,
021 227 1468

(ஆரம்பம் 1970)
### ஹரன் ஜுவல்லர்ஸ்
நகை-வைர வியாபாரிகள்



217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6083 / 071 418 2480
email:haranjewellers@gmail.com
www.haranjewellers.com

### பெஷன் ஹவுஸ்
Wholesale & Retail Dealers in Eversilver, Aluminium, enamelware, Glassware, Ceramicware, Plastic Items, Rubber Products & Hotel Equipments etc..



No.203. K.K.S. Road, Jaffna.
Tel: 021 222 8713, 076 717 7185
Fax : 021 222 3034

### திருமுருகன் கொம் நெற்



27A, கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
021 222 7835

### ஆனந்தி
Prop - Siva
Ananthi Fancy House
No.179,NEW MARKET, JAFFNA.
021 222 7626 / 077 729 2760.

**தேவை**

சிறிய விடுதி ஒன்றிக்கு அறை பராமரிப்பாளர் (பெண்கள்) தேவை.
யாழ்நகரை அண்மித்துள்ளது.

**தொடர்பு: 077 993 8348**

**வீடு வாடகைக்குண்டு**

உரும்பிராய், பலாலி வீதி, கற்பகப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 3 அறை வீடு உடன் வாடகைக்கு உண்டு. குடும்பமாக வசிப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். தரகர் வேண்டாம்.

**077 435 7506** (CS/5497) (22.17)

**காணி விற்பனைக்கு**

உடுவில் கிழக்கு சபாபதிப்பிள்ளை வீதியில் வாழ்வகத்துக்கு அண்மித்ததாக 12 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு.
வீடு கட்டவும் உகந்தது.

**076 390 9732** (AJA 3893) (14)

**விற்பனைக்கு**

U.K இல் இருந்து கொண்டுவரப்பட்ட பாவித்த மற்றும் புதிய குஞ்சு பொரிக்கும் இயந்திரம், கமராக்கள்(Handycam), CD Players, Jigsaw, பலகைகீறும் இயந்திரம் Driller, மெக்கானிக் உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு.

**076 615 1837**

**கார் வாடகைக்கு**

Car Diesel Tata Indigo
3000 per day. 100Km

தொடர்பு:
**077 152 3899/ 077 185 3748**

**பணிப்பெண் தேவை**

யாழ். நகரில் உள்ள வீடு ஒன்றிற்கு வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் தேவை.

**077 437 2004**

**ஜேர்மன் (Deutsch) மொழி**

**பிரத்தியேக வகுப்புகள் ஆரம்பம்**
**Level - A1, A2 இற்கானது**
மாலைநேரம்-கிழமை நாள்களிலும்
பகல்நேரம்-சனி மற்றும் ஞாயிறு
ஆசிரியர்
திருமதி வ. சிவன்யா
(Qualified German Teacher by Goethe institude)

**தொடர்பு இல. 077 318 4463**
**முகவரி இல.15, நொத்தாரிஸ் லேன், அரியாலை, யாழ்ப்பாணம்.**

**விஷேட பல் வைத்திய சேவை**

- **பல் முக சீராக்கல்** (Consultant Orthodontist)
- **முக சத்திரசிகிச்சை** (Consultant Facio Maxillary Surgeon)

**மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்**

- **மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)**
- **ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்**
- **நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல்** (Crown & Bridges, Implants)
- **வேர்முறை சிகிச்சை** (Root Canal Filling)
- **நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்**
- **பற்களை வெண்மையாக்குதல்** (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
**388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொடர்பு: 077 934 7687 (லதா)**

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
**454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொடர்பு: 077 654 4731 (தர்சினி)**

**நெடுந்தீவில் வீடு வாடகைக்கு**

நெடுந்தீவு மத்தி மகா வித்தியாலயத்துக்கு முன்பாக 4 அறைகள், சமையலறை, இணைந்த குளியலறை, மலசலகூடம், மின்சாரவசதி, நன்னீர் வசதி கிணற்றுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

**071 315 5100** (CS 3926) (14)

**மணமகள் தேவை**

நீர்கொழும்பு - யாழ்ப்பாணம் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோர் 1973 இல் பிறந்த கன்னிராசி - உத்தர நட்சத்திர லண்டன் சிற்றிசன் மகனுக்கு நற்குடும்பத்தைச் சேர்ந்த படித்த, அழகிய (32 -39 வயதிற்குட்பட்ட) மணமகளை எதிர்பார்க்கின்றனர். (மணமகன் ஆகஸ்டில் இலங்கை வரவுள்ளார்.)

தொடர்பு:
**077 815 4858/ 031 222 7552**

**வேலை வாய்ப்பு**

வவுனியா நகரில் கட்டட ஒப்பந்தகார நிறுவனம் ஒன்றிற்கு அலுவலக உதவியாளர்கள் தேவை.
(பெண்கள்)
**இல:- 179A, புகையிரதநிலைய வீதி, வைரவப்புளியங்குளம், வவுனியா.**

**077 649 6776**

**உடன் விற்பனைக்கு**

CATERPILLAR DOZER D4D
CATERPILLAR EXCAVATOR E120
MITSUBISHI EXCAVATOR MS 180
என்பன அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நிலையில் உடனடி விற்பனைக்கு உண்டு.

**077 634 1545**

**காணி விற்பனைக்குண்டு**

சந்தை வீதி, ஆவரங்கால் என்னும் இடத்தில் உள்ள 4 பரப்பு 1/8 குழி கொண்ட காணி பழைய வீட்டுடன் விற்பனைக்குண்டு.

**076 612 6440** (CS/1697) (22.17)

**கணக்காளர் தேவை (ஆண்,பெண்)**

எமது நிறுவனத்தில் கணக்குகள், சிட்டைகள் (Bill) எழுதுவதற்கு ஆங்கில அறிவுள்ள ஊழியர் தேவை. முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

- **சுயவிவரக் கோவையுடனும் கிராமசேவகரின் சிபாரிசுக் கடிதத்துடன் நேரில் வரவும்.**
- **காலம் – திங்கள் முதல் சனி வரை**
- **பிற்பகல் 2.00 மணி முதல் 6.00 மணிவரை**

**சிவா நறுமணப்பூங்கா**
**இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**[சத்திரத்துச் சந்தி அருகில்]**

**MAJESTIC CINEPLEX**
A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்



மஜெஸ்டிக் ப்ளாட்டினம / சில்வர்
10.30 / 2.30 / 6.30
வெள்ளி/சனி 10.30 PM




ப்ரொன்ஸ் 10.30 / 1.30 / 4.30 / 7.30
வெள்ளி/சனி 9.30 PM

விசாரணை ☏ 021- 2227712
Find us on facebook. MajesticCineplexSL
www.ceylontheatres.lk

# குமுதினி படுகொலை நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே 14

குமுதினி படுகொலையின் 32 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் நீலக்கடலலையின் நினைவுகள் கவிதை நூல் வெளியீடும் நாளை திங்கட்கிழமை நெடுந்தீவில் அமைந்துள்ள குமுதினி நினைவுத்தூபி துறைமுகவாயிலில் முற்பகல் 10.45 மணியளவில் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-8)

**தேவை**

விருந்தினர் விடுதிக்கு வேலையாள்கள் தேவை.
1. வரவேற்பாளர் 2. சுத்திகரிப்பாளர்

**076 879 9089**

**உடன் விற்பனைக்குண்டு**

Honda pleasure மோட்டார் சைக்கிள் தனிப்பாவனை 17000Km ஓடியது.

**077 727 1645**

**வீடு வாடகைக்கு**

நல்லூருக்கும் முடமாவடி சந்திக்கும் இடையில் சகல வசதியும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

**076 697 2287**

**வாடகைக்குண்டு**

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு மிக அண்மையில் CARPET வீதி முகப்புடன் 789, 785 பேருந்து மார்க்கத்தில் 6 அறை வசதியான வீடு தளபாடங்களுடனும் பயன்தரு மரங்களுடனும் வாடகைக்கு உண்டு.
01.06.2017 இல் குடிபுகலாம்.

**077 203 5419**

**வேலைவாய்ப்பு**

வேலை செய்யக்கூடிய மேசன்ஸ், கார்பெண்டேர்ஸ், பார்பெண்டேர்ஸ், ரைலேர்ஸ், எலக்ரீசியன்ஸ் தேவை.

**களுத்துறை: 077 740 9953, பம்பலப்பிட்டி: 077 961 6232, அநுராதபுரம்: 077 961 6232, கொம்பனி வீதி: 077 945 7953 கொழும்பு: 077 863 2183, 071 269 8585,**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், நல்லூர் கோயிலுக்கு 3 நிமிடம் வாகன தூரத்தில் 90 பர்ச்சர்சில் அமைந்துள்ள இரு வீடுகளும், கராச்சும் கொண்ட காணியொன்று உடனடியாக விற்பனைக்குண்டு. வியாபாரஸ்தலமாகவும் பாவனைப்படுத்தலாம்.
**235/2, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**

**077 237 9347** (CS/5497) (22.17)

**வேலை ஆள்தேவை**

தெல்லிப்பழையில் இயங்கும் பிரபல வெதுப்பகத்திற்கு கேக் வகைகள், ஐசிங் கேக் வகைகள் , பிஸ்கட் வகைகள் நன்கு செய்யத் தெரிந்த வேலை ஆள் தேவை.

**077 348 5856** (CS 3926) (14)

**LAPTOP SALE & REPAIR**



சகலவிதமான Laptop களும் DeskTop Pc களும் பழுது பார்க்கப்படுவதுடன் அதன் உதிரிப்பாகங்களும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**ST.ANTHONY'S**
187, K.K.S Road, Jaffna Town.
021 222 4865/ 075 069 8608

**கணினிக் கல்வி**

◇ MS OFFICE
◇ TAMIL TYPING
◇ ENGLISH TYPING

ஒரு மாதத்தில் குறைந்த கட்டணத்தில் பயிற்று விக்கப்படும்.

**SKY**
**89, கண்டி வீதி, யாழ்.கச்சேரி.**
021 222 1417

**வீடு வாடகைக்கு**

சாவகச்சேரி, கனகம்புளியடி சந்தியில் சகல வசதிகளுடன் வீடு குறைந்த வாடகைக்கு விடப்படும்.

**077 325 8984**

**வகுப்புக்கள் நடைபெறும்**

சாவகச்சேரியில் தரம் 10, தரம் 11 மாணவர்களிற்கு வணிகமும் கணக்கீடும், உயர்தர மாணவர்களுக்கு கணக்கீடு பாடமும் சிறப்பான முறையில் கற்பிக்கப்படும்.

**077 357 3074** (AJA CS 30125) (14)

**கட்டடம் வாடகைக்கு**

யாழ்.போதனா வைத்தியசாலை வீதியில் வைத்தியசாலைக்கு முன்னால் காகிள்ஸ் பூட் சிற்றிக்கு அருகில் உள்ள கட்டடத் தொகுதி வாடகைக்கு விடப்படவுள்ளது.

**தொடர்பு: 077 101 1111**

# மாவடி இந்து இளைஞர் நடத்தும் பாரம்பரிய விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மே 14

சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றம் நடத்தும் பாரம்பரிய விளையாட்டு விழா கடந்த புதன்கிழமை ஆரம்பமானது. அதன் தொடர் நிகழ்வுகள் இன்று மாவடி ஞான வைரவ ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளன.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக மாவடி ஞான வைரவர் பரிபாலன சபையின் தலைவர் த. சிவசுப்பிரமணியம் கலந்து கொள்வார்.

காலை 6 மணிக்கு வீதியோட்டப் போட்டி இடம்பெற்று பிற்பகல் 2 மணிக்கு வினோத உடைப்போட்டி, மெதுவான சைக்கிள் ஓட்டம், சங்கீதக் கதிரை, திருமணமானவர்களுக்கான போட்டி, தலையணைச் சண்டை, கயிறு இழுத்தல் போர்த் தேங்காய் அடித்தல் என்பன இடம்பெறவுள்ளன என நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (த-21)

# ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழுவால் 5 வருடங்களில் 392 வழக்குகள் பதிவு

கொழும்பு, மே 14

5 வருடங்களில் ஊழல் மற்றும் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவால் 392 வழக்குகள் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

நீதிவான் மன்றம் மற்றும் மேல் நீதிமன்றங்களில் குறித்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 2012ஆம் ஆண்டு தொடக்கம் 2016ஆம் ஆண்டு வரை வழக்குப் பதிவுகள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றின் அடிப்படையில் 106 பேர் குற்றவாளி களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று ஊழல் மற்றும் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அடிப்படையில் ட்ரான்பேரன்ஷி இன்டர்நேஷனல் நிறுவனம் மேற்கொண்ட கோரிக்கையின் போது ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழு இந்தத் தகவலை வெளியிடப்பட்டது. (வ)

# விசுவமடு வர்த்தகரின் மறியல் நீடிப்பு

கிளிநொச்சி, மே 14

கிளிநொச்சி விசுவமடு பிரதேசத்தில் காசோலை மூலம் நிதிமோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்ட வர்த்தகரின் விளக்கமறியலை நாளை வரை நீடித்து கிளிநொச்சி நீதிமன்ற பதில் நீதிவான் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

வவுனியா சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் கிளிநொச்சி நீதிவான் மன்றில் நேற்றுமன்தினம் முற்படுத்தப்பட்டார். அவர் தொடர்பான விசாரணைகள் முடிவடையவில்லை என்று குற்றப்புலனாய்வு அதிகாரிகள் மன்றில் தெரிவித்தனர். விசாரணைகளை துரிதப்படுத்துமாறு அறிவுறுத்திய நீதிமன்று, சந்தேகநபரின் விளக்கமறியலை நாளை வரை நீடித்து உத்தரவிட்டது.

சந்தேகநபர் சக வர்த்தகர் ஒருவரிடம் வட்டிக்குப் பணம் பெற்றதாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பில் கடந்தமாதம் 3ஆம் திகதி அதிகாலை கொழும்பிலிருந்து வந்த குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளால் அவரது வீட்டில் வைத்து கைதுசெய்யப்பட்டார். (வ-ய)

## மரண அறிவித்தல்

### சைவப்புலவர் நித்தியானந்தன் தசிதரன்

(சைவசித்தாந்த முதுகலைமாணி ஆசிரியர் பிரபல இந்துநாகரிக. இந்துசமய பாட ஆசிரியர்)



பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சைவப்புலவர் நித்தியானந்தன் தசிதரன்(நித்திய தசிதரன்) 13.05.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நித்தியானந்தன் - பராசத்தி தம்பதியரின் அன்பு மகனும் அறிவழகன் - கமலராணி தம்பதியரின் பாசமிகு மருமகனும் துசியந்தியின் அன்புக் கணவரும் தணிகையன். சாருகாசினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரவிதரன்(தரன் மணப்பந்தல்). சுகிதரன் (கட்டார்). றகுதரன்(தேசிய சேமிப்பு வங்கி - சுன்னா கம்). தனுஷா(பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் - தெல்லிப்பழை). பகீரதன் (கட்டார்). கஜிதரன்(ஆசிரியர் யா/யூனியன் கல்லூரி) பாபுதரன் (ஆசிரியர் - யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கவிதா (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - கல்வித்திணைக்களம். வேலணை). புஸ்பன் (அபிவிருத்தி உத்திகயோகத்தர் - ஒட்டுசுட்டான் பிரதேசசெயலகம்). மரீன்ஷங்கா (ஆசிரியை - வேலணை மத்திய கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும் தசானிகா. வர்மிதா ஆகியோரின் பெரியதந்தையும் பிரசன்யாவின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2017) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பன்னாலை கேணிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பன்னாலை,**
**தெல்லிப்பழை.**

தகவல்: **குடும்பத்தினர்.**
**0759160431**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சசிகலா செல்வராஜா



தையிட்டி கலைமகள் வீதியை பிறப்பிடமாகவும், குளப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சசிகலா செல்வராஜா (12.05.2017) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - கண்மணி தம்பதியரின் புதல்வியும் காலஞ் சென்ற வர்களான கந்தப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் செல்வராஜா (அற்புதா றேடேர்ஸ் - யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் அபிநயா (சித்த மருத்துவத்துறை 26 ஆம் அணி)வின் அன்புத்தாயும் ரவீந்திரன் (ஹொலண்ட்). மோகன் (பிரான்ஸ்). விஜிகலா (அஞ்சல் திணைக்களம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரியும் சிவகுமார் (துர்க்கா றேடேர்ஸ் கொக்குவில்) ஆகியோரின் மைத்துனியும் சித்தார்த்தனன். றம்மிலா ஆகியோரின் அன்பு மாமியும் ராகவி. நதுமிதன் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.05.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**த க வ ல் :**

**ஆனைக்கோட்டை வீதி, குளப்பிட்டிசந்தி.** **குடும்பத்தினர்**

### வடிவேலு கனகசபை



பிறப்பு 1932.11.16 இறப்பு 2017.05.11

அராலி செட்டியார் மடத்தைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பு அம்மன்வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு கனகசபை 11.05.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வடிவேலு அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு, தெய்வானை மற்றும் பொன்னம்மா (மலேசியா) ஆறுமுகம் ஆகியோரின் ஆசை சகோதர னும் தழிழ்ச்செல்வி (ஜேர்மனி). தமிழ்ச் செல்வன்(ஜேர்மனி). திருச்செல்வன் (ஜேர்மனி). அருட்செல்வன்(கம்பளை). பன்னீர்செல்வன்(ஜேர்மனி). ஜெயசெல்வி (லண்டன்). உதயசெல்வன்(கொலண்ட்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருளானந்தம். குலவதனி. பிரபாகினி. திலகவதி. செல்வி. ரவீந்திரன் ஆகியோரின் அருமைமாமனாரும் சதீஸ். சஜந்தா. ஜீவிதா. ஜெரூயா. லதுயன்.ஹரிஸ். ரூபிகா. பிரவீனா. டிலக் ஷனா. அஜிந்த். அபினா. அகிலாஷ். அபிலாஷ். ஜொஷ்வா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(15.05.2017) திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அம்மன் வீதி,**
**பண்டத்தரிப்பு.**

**தகவல்: மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
**0774977600**

## மரண அறிவித்தல்

மலர்வு 03 . 01 . 1930



மறைவு 11 . 05 . 2017

### திருமதி அன்னம்மா நடராசா

யாழ்.ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா நடராசா 11.05.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி - மூத்தபிள்ளை தம்பதிகளின் புதல்வியும். காலஞ்சென்றவர்களான வைரமுத்து - தங்கம் தம்பதிகளின் மருமகளும். காலஞ்சென்ற மட்டுவில் நடராசா அவர்களின் அன்பு மனைவியும். காலஞ்சென்ற சின்னையா. சின்னத்தங்கம் மற்றும் ஆனந்தகிஷ்ணர் (வலி.கி.வ.ப.பல.நோ.கூட்டுறவுச் சங்க இளைப்பாறிய பொதுமுகாமையாளர்) ஆகியோரின் சகோதரியும். அன்னபூரணம். நாகபூரணம். நாகேஸ்வரி. புவனேஸ்வரி. எழுமலைநாதன் (சுவிஸ்). கண்ணகைமணி. தவமலர். புஸ்பமலர் (பிரான்ஸ்). காலஞ்சென்ற ஆனந்தகதிரமலை மற்றும் சிவலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆவரங்கால் கரதடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல்: பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

**வன்னியசிங்கம் வீதி.**
**ஆவரங்கால் மேற்கு.**

**0213200517, 0776138111**

## மரண அறிவித்தல்

### இராசநாயகம் ஞானசேகரம்



யாழ்.தாவடியைப்பிறப்பிடமாகவும். ஜேர்மனி Siegen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராசநாயகம் ஞானசேகரம் 05.05.2017 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் சிவபாக்கியம் தம்பதிகளின் பாசமிகு புதல்வரும். காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும். புஸ்பமாலாவின் அன்புக் கணவரும். மேனகா. சுஜித்கண்ணா. அனோஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும். பரராசசேகரம் சந்திரசேகரம் (ஜேர்மனி). காலஞ்சென்ற குணசேகரம் (கனடா) மற்றும் இராசசேகரம் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும். பிரத்தீபன். நதியா. கிருஷிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும். ஜெயமலர்தேவி. குமுதா (ஜேர்மனி). விஜயலஷ்மி (கனடா). பத்மநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும். பிரிமிகா. றித்திக். மிலினா. தீபிகா(கனடா). அஜிந்அஜே (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2017) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை Krematorium Siegen Frank Forter Strabe 201 (Richtung Hotel Prefferonuhle) 57074 இல் இடம் பெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சோதி வேம்படி வீதி.**
**மானிப்பாய்.**

தகவல்: **திருமதி றதிபவனி செல்வராஜா (மருமகள்)**

**சுஜித் (மகன் - ஜேர்மனி- 004917327 51464)**

# மணி விழா வாழ்த்து




**யா/இளவாலை மெய்கண்டான் ம.வி**
**இல் 27 ஆண்டுகள் ஆங்கில ஆசிரியையாக சேவை**
**மாண்புற ஆற்றி 14.05.2017 இல் மணிவிழா**
**காணும் ஆசிரியமணி**
**திருமதி வசந்தா குமாரலிங்கம்**
**ஓய்வு காலத்திலும் சீரும் சிறப்புமாக**
**குடும்பத்தினருடன் இன்புற்று வாழ**
**வாழ்த்துகின்றோம்.**

(சி.எஸ். 3907) (13) பாடசாலைச்சமூகம்

## இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி
## நடத்தும்
## இயல் இசை நாடக அரங்கு - 2017

**ஐந்தாம் நாள் ஞாயிற்றுக்கிழமை (14.05.2017)**
**பிற்பகல் 4.30 மணி**

| தலைவர் | பிரதம விருந்தினர் |
|---|---|
| திரு.கு.பாலஷண்முகன் | வைத்திய கலாநிதி வை.யோகேஸ்வரன் |
| (விரிவுரையாளர் - கோப்பாய் ஆசிரிய கலாசாலை) | (பழைய மாணவர் சங்க தலைவர் - யாழ்.இந்துக்கல்லூரி) |

* நாச்சிமார் கோயிலடி சபேசன் குழுவினர் வழங்கும்

மங்கல இசை

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| திரு. M. சபேசன் | திரு K. பாபு , |
| திரு.S. பிரசாந் | திரு S.கிருஷ்ணா |

மங்கல விளக்கேற்றல்

* திருமுறை ஓதுதல் : செல்வி அ.ஆரபி.ரா.தாரணி
* ஆசியுரை : வண கலைமாணி மீகஹஜந்துரே சிறி விமலதேரர் (ஸ்ரீ நாக விகாரை - யாழ்ப்பாணம்)
* வாழ்த்துரை : திரு.சோ.தேவராஜா சட்டத்தரணி (தேசிய கலை இலக்கிய பேரவை)
* தலைமையுரை : தலைவர்

* சைவ வித்தியா விருத்திச் சங்க "சைவ சிறுவர்" மாணவிகள் வழங்கும்

குழு நடனம்

நட்டுவாங்கம் : திருமதி யாழினி ரதீஸ்வரன்
பாட்டு : திருமதி வத்சலா கருணாகரன்
வயலின் : திருமதி இந்துமதி தயாபரன்
மிருதங்கம் : திரு.T.சிவகுமார்.

* துரலிசை

பாட்டு : கலாபூசணம் S.பத்மலிங்கம்
வயலின் : திரு.சு.கோபிதாஸ்
மிருதங்கம் : திரு.S.துரைராஜா
கடம் : திரு.S. ரவிசங்கர்

* 'நல்லை கலா மந்திர்' மன்ற மாணவிகள் வழங்கும்

நாட்டிய அர்ப்பணம்

நட்டுவாங்கம் : திருமதி அனுஷாந்தி சுகிர்தராஜ்
பாட்டு : திரு.S.அமிர்தசிந்துஜன்
வயலின் : திரு.அ.ஜெயராமன்
மிருதங்கம் : திரு.S.துரைராஜா

* கலைஞர்கள் கௌரவிப்பு
* பிரதம விருந்தினர் உரை
* 'செம்முகம்' ஆற்றுகை குழுவினர் வழங்கும் எண்ணித்துணி (சிந்து நடைக்கூத்து)

* நன்றியுரை

அனுசரணை: புதிய நதியா நகைமாடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**வேலைவாய்ப்பு**

யாழ். நகரில் அமைந்துள்ள சட்டத்தரணியின் அலுவலகத்தில் வேலை செய்வதற்கு அலுவலக பெண் உதவியாளர் தேவை. கணினி அறிவு, ஆங்கில அறிவு அவசியம்.

**077 636 2004**

(CS3885)(22.12)

**நிறுவனத்துக்கு ஏற்ற வீடு வாடகைக்கு உண்டு**

நாவலர் வீதி,NSB இற்கு முன்பாக, மேல் மாடியுடன் வாகனம் விடக்கூடிய வசதியும், சகலவசதிகளும் உண்டு.

(cs/3879) **T.P. 077 309 0907**

**இந்திய விபூதி விற்பனைக்கு**

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1Kg) மொத்தமாகவும் (ரூபா. 100), சில்லறையாகவும் (ரூபா.110) பெற்றுக்கொள்ளலாம்.

**சிவா நறுமணப் பூங்கா**
**இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**(சத்திரச் சந்திக்கு அருகில்)**

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

**af பிரெஞ்சு மொழி**




* பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
* அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
* யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

**ஆரம்பம் -** 27.05.2017 உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்

**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் இணுவை மைந்தன்
பேராசிரியர்
**இரத்தினம் விக்கினேஸ்வரன்**
அவர்களுக்கான
## பாராட்டு விழா




இடம் : இணுவில் கந்தசுவாமி கோயில்
காலம் : 14.05.2017 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணி
தலைமை : பேராசிரியர் வ.மகேஸ்வரன் (தமிழ்துறைத் தலைவர்பேராதனைப் பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இணுவில் கந்தசுவாமி கோயில் தர்மகத்தா சபையும், இணுவில் மக்களும்.**

(சி.எஸ். 3890) (13.17)

### தாயாரை வீதியில் விட்ட பிள்ளைகள்

கொழும்பு, மே 14

வெசாக் பார்க்க வந்த இடத்தில் தாய் ஒருவரைப் பிள்ளைகள் அனாதரவாக விட்டுச் சென்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் ரதவானப் பகுதியில் இடம்பெற்றது. பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில், பாதையில் அனாதரவாக நின்று கொண்டிருந்த அவரை, பிரதேச மக்கள் ஒன்று சேர்ந்து மருத்துவமனையில் சேர்த்தனர். "நான் கெரகலவின் வெலிக்கெட்டிய பகுதியைச் சேர்ந்தவர். வெசாக் பார்ப்பதற்கு போவோம் என்று கூறி, என்னைப் பிள்ளைகள் முச்சக்கரவண்டியொன்றில் ஏற்றிக்கொண்டு வந்தனர். நடு வீதியில் இறக்கி விட்டு அவர்கள் சென்று விட்டனர்" என்று அவர் பொலிஸாரிடம் தெரிவித்தார். "அனாதரவாக விடப்பட்ட அவர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். அவரின் உடலில் சில காயங்கள் ஏற்பட்டுள்ளன. மேலதிக சிகிச்சைகளை வழங்குவதற்காக அவர் வத்துபிட்டிவல ஆதார மருத்துவமனைக்கு மாற்றப் பட்டுள்ளார்" என்று மருத்துவமனைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். தன்னுடைய பிள்ளைகளது விவரங்கள் தொடர்பில் தெரிவிப்பதற்கு, தாய் மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

# GREAT OPPORTUNITY!
**A Hong - Kong Based Marketing Company**

# ARE YOU AFTER A/L's ??

**NO EXPERIENCE NEEDED**
Management Trainee
Marketing Trainee

**Earn 50,000/= Per Month**

CALL NOW TO SCHEDULE AN INTERVIEW

**CONTACT US NOW**
**No. 1-100 ½, 2nd floor, Manipay Road, Jaffna.**
077 356 6835

(CS/3886)

# இலங்கைக்கு வந்தார் நேபாள அரச தலைவர்

கொழும்பு, மே 14
நேபாளத்தின் முதல் பெண் அரச தலைவரான பித்யா தேவி பந்தாரி இலங்கைக்கு





நேற்றுப் பயணம் மேற்கொண்டார். ஐந்து நாள்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்ட நேபாள அரச தலைவர் . 14 ஆவது ஐக்கிய நாடுகள் பன்னாட்டு வெசாக் தின நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ளார். பன்னாட்டு வெசாக் தினத்தின் நிறைவு நிகழ்வுகள், கண்டி தலதா மாளிகையின் மகாமடுவ மண்டபத்தில் இன்று நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நேபாள அரச தலைவர் பித்யா தேவி பந்தாரி முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். பன்னாட்டு வெசாக் தினத்தை முன்னிட்டு இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்து நேற்றுமுன்தினம் மாலை நாடு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

NOVA IVI FERTILITY
INDIA'S No1 FERTILITY CHAIN COMES TO SRI LANKA
"இல்லை ஒரு பிள்ளை" என்ற குறையா?
குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு ஓர் நற்செய்தி
★ யாழில் உள்ள குழந்தை இல்லா தம்பதியர்களுக்காக இதோ வருகின்றது NOVA IVI Fertility India சர்வதேச அளவில் புகழ் பெற்ற IVF நிலையம்
★ NOVA IVI Fertility 13500 IVF கர்பங்களுக்கு மேல் சாத்தியமாகியுள்ளது.
★ மிக சிறந்த கருவியல் வல்லுனர்கள் அடங்கிய அனுபவம் மிக்க குழுவுடன் இலவச ஆலோசனை வழங்கப்படும்.
★ எங்களின் நவீன அறிவியல் ஈடு இணையற்ற நிபுணத்துவம் மற்றும் பயனாளிகளின் நம்பிக்கை ஆகியவை தான் நாங்கள் இந்த மைல்கல்லை அடைவதற்கான காரணம்.
இலவச
திகதி 19th, 20th & 21st மே 2017
நேரம் 9 AM to 5 PM
இடம் Vembadi Girls High School 1st Cross st, Jaffna, Sri Lanka
19 CENTERS IN 14 CITIES IN INDIA
NOVA IVI FERTILITY
Visit - www.novaivifertility.com
SRILANKAN INFORMATION CENTRE
UniHealth MDC
266, Galle Road, Bambalapitiya
077 414 3434 / 011 208 1969

MedExpo Jaffna 2017 International Healthcare and Medical exhibition
உங்கள் 'வம்சம் தழைக்க' வாருங்கள்...
வம்சம் கருவுருவாக்கல் மையம்
(ISO - 9001-2008) உலக தர சான்றிதழ் டெஸ்டியூப் பேபி மையம்)
தமிழ்நாடு, இந்தியா
குழந்தையில்லா தம்பதிகளுக்கான இலவச கருத்தரிப்பு ஆலோசனை
MAY 19 20 21
வேம்படி பெண்கள் உயர்நிலைப்பள்ளி யாழ்ப்பாணம்
காலை 9.00 மணி முதல் 7.00 மணி வரை
Stall No. 7 & 8
ஒவ்வொரு நாளும் இலவச IVF தேர்வு கூப்பன் LUCKY DRAW மூலம் தேர்வு செய்யும் தம்பதியருக்கு இலவச கருத்தரிப்பு சிகிச்சை (IVF)
இலவச ஆலோசனைக்கு முன்பதிவு செய்ய தொடர்பு கொள்ள
Cell : 0772966067, 0750291270 ( Colombo )
முகாமின் சிறப்பம்சங்கள்
❖ அனுமதி இலவசம் ❖ இலவச மருத்துவ ஆலோசனை ❖ லேப்ராஸ்கோப்பி
❖ ஹிஸ்ட்ராஸ் கோப்பி அறுவை சிகிச்சைகள், செயற்கை கருத்தரித்தல் (IUI, IVF, ICSI )சிகிச்சைகளுக்கு சிறப்பு கட்டண சலுகை
மருத்துவ குழுவினர்
Dr. D. சிலம்பு செல்வி M.D., DGO., DNB (O&G)
மகளிர் நலம், பேறுகால சிக்கிச்சை மற்றும் செயற்கை கருத்தரித்தல் சிறப்பு நிபுணர்
Dr. S. சுமப்பிரியா MBBS., DGO

MedExpo Jaffna 2017 International Healthcare and Medical exhibition
வடக்கின் மாபெரும் சுகாதாரக் கண்காட்சி
இந் நிகழ்வில் கலந்து கொண்டு அனைவரும் பயன்களை பெறலாம்
மே 19 20 21 ஆகிய திகதிகளில்
10.00 am - 6.30 pm
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்
+வைத்தியசாலைகள் +மருத்துவ உபகரணங்கள் +மருந்து வகைகள்
+ஆயுர்வேதம் - சித்தமருத்துவம் +ஒப்பனையும் அழகுசாதனமும் +FMCG
+உணவு மற்றும் போசாக்கு +ஆயுட் காப்புறுதி +மருத்துவக் கல்வி
பிரசித்தி பெற்ற இந்திய மருத்துவர்களினால் மகப்பேறு இல்லாத தம்பதியர்களுக்கு இலவச ஆலோசனைகள் வழங்கப்படுகின்றது
வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் ஏற்பாட்டில் உயிரியல் கண்காட்சி
பதிவுகளுக்கு : 0773436927
www.evolutionecs.com
Platinum Sponsor | Official Cosmeceutical Partner | Official Healthcare Partner | Official Event Partner
Official Print Media Partner | Official Electronic Media Partner | Official Digital Media Partner
Event Organized by Evolution Events and Corporate Services
Supported by Provincial Department of Education Northern Province, Jaffna Municipal Council

1717 FOLLOW US www.mobitel.lk
12GB சலுகை
சகல புதிய சிம்களிலும் கிடைக்கும்
2GB
4G
Sri Lanka Telecom Mobitel

SURVEY OF FERTILITY CLINICS

THE TIMES OF INDIA

NO. 1 FERTILITY CENTRE IN CHENNAI

NO. 6 @ NATIONAL LEVEL IN INDIA




DR. GEETHA HARIPRIYA AND
PRASHANTH FERTILITY RESEARCH CENTRE (PFRC)
FOR BEING AWARDED THE INDIA'S FASTEST GROWING HEALTHCARE BRANDS & LEADERS 2016
At the Asiaone Healthcare Awards, Singapore on 24 January 2017

முன்பதிவிற்கு: Sri Lanka Cell No.:
075 400 0012
075 492 7575

PFRC

# பிரசாந்த்

குழந்தையின்மை சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம்

35 years MEDICARE FOR WOMEN

- ★ பல ஆண்டுகளாக இலங்கை மக்களின் நம்பிக்கையைப் பெற்ற பிரசாந்த் மருத்துவமனையில் இதுவரை ஆயிரக்கணக்கான யாழ் தம்பதியினருக்கு குழந்தை கிடைத்து மகிழ்ச்சியாக இருக்கின்றனர்...!
- ★ உங்களுக்கும் குழந்தை நிச்சயம் உண்டு!
- ★ புதிய அணுகுமுறைகளில் நவீன சிகிச்சைகள்!
- ★ உங்கள் குழந்தை பிறப்பை உறுதிபடுத்திக் கொள்ள வாங்க சந்திக்கலாம்.. யாழ்ப்பாணத்தில்...!

**MedExPo Jaffna 2017**
International Healthcare and Medical Exhibition
May 19, 20, 21 - 2017 Stall No. 1, 2, 3, 4, 5, 6 | at Vembadi Girls High School, Jaffna, Sri Lanka

## சிறப்புச் சலுகைகள்!

IVF Centre of International Excellence by IMTC

- ★ பதிவு செய்யும் முதல் 250 பேருக்கு...
- ★ ஐ.வி.எஃப் சிகிச்சைக் கட்டணம் 7,00,000 LKR!
- ★ சிறப்பு சலுகையாக இதில் தேர்வு செய்யப்படும் 3-பேருக்கு ஐ.வி.எஃப் முற்றிலும் இலவசம்!
- ★ தம்பதியினருக்கான இருவழி விமானச் சீட்டுகள் இலவசம்!
- ★ முதற்கட்ட சிகிச்சைக்கான 5 நாட்கள் தங்குமிடம் இலவசம்!
- ★ விமான நிலையம் ⟷ மருத்துவமனை போக்குவரத்து இலவசம்!

NO. 77, HARRINGTON ROAD, CHETPET,
CHENNAI-31, TAMIL NADU, INDIA.
0091-98410-30388 | 0091-44-422-77777
pfrcivf.com haripriyageetha@gmail.com



குழந்தை கிடைத்த தம்பதிகளும் Dr. கீதா ஹரிப்பரியா அவர்களை யாழ்ப்பாணத்தில் நேரில் சந்திக்கலாம்.

அவர் வழங்கவிருக்கும் குழந்தைகளுக்கான சிறப்பு பரிசை பெற்றுக் கொள்ளலாம்.

### உலகத்தரமான உயர் மருத்துவ தொழில்நுட்பம்

# உங்கள் நலன் காத்திட அர்ப்பணம்

விமான நிலையத்தில் வரவேற்பது முதல் நலமுடன் நாடு திரும்புவது வரை
சிகிச்சை பெறுபவருக்கு தேவையான அனைத்து பிரத்யேக சேவைகளுடன்...

இந்தியாவின் முன்னணி பல்துறை மருத்துவமனைகளில் ஒன்றான கேஎம்சிஎச், தென்னிந்தியாவின் மான்செஸ்டர் எனப் புகழ்பெற்ற கோயமுத்தூர் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு கால் நூற்றாண்டுக்கும் மேலாக உலகத்தரமான மருத்துவ சேவைகள் அளிப்பதில் தனிமுத்திரை பதித்து வருகிறது.

அனுபவம் மிக்க மருத்துவர்கள். அதிநவீன மருத்துவ தொழில்நுட்பம். உலகத்தரமான சிகிச்சை முறைகள். சிகிச்சை பெறும் ஒவ்வொருவரும் பூரண குணம் பெற்றிட வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் கூடிய ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்பு. உங்கள் எதிர்பார்ப்பு கேஎம்சிஎச் சேவையின் பிரதிபலிப்பு...

**MedExPo**
May 19, 20, 21 - Jaffna 2017, SRI LANKA.

இடம்:
வேம்பாடி பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
யாழ்ப்பாணம், இலங்கை.
Stall Nos : 35, 36, 37.

### கேஎம்சிஎச் அளிக்கும் சிறப்பு மருத்துவ சேவைகள்

- முழுமையான புற்றுநோய் மருத்துவ மையம்
- தீவிர சிகிச்சைப் பிரிவு
- குடல்நோய் மருத்துவம் மற்றும் கல்லீரலியல்
- இருதய மருத்துவ மையம் மற்றும் எலக்ட்ரோ பிசியாலஜி
- ஆழ்ந்த மூளை தூண்டுதல் - நரம்பியல் மருத்துவம்
- சிறுநீரக சிகிச்சைப் பிரிவு
- இண்டர்வென்ஷனல் கதிர்வீச்சியல் சிகிச்சைப் பிரிவு
- அணுக்கதிர் மருத்துவம் மற்றும் PET CT
- கல்லீரல் சிகிச்சைப் பிரிவு
- எலும்புமுறிவு மற்றும் மூட்டுமாற்று அறுவை சிகிச்சைப் பிரிவு



- 1000 படுக்கை வசதி
- அனுபவமிக்க மருத்துவர்கள்
- 24 ஆபரேஷன் தியேட்டர்கள்

தென்னிந்தியாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமான
**உடல் உறுப்பு மாற்று மருத்துவ மையம்**
இருதயம் மற்றும் நுரையீரல் | கல்லீரல் | சிறுநீரகம் | எலும்பு மஜ்ஜை
அதிநவீன மற்றும் அதிதுல்லியமான ரோபோட்டிக் அறுவை சிகிச்சை

AWARD WINING PERFORMANCE
- Best Private Hospital 2016 by the Government of Tamil Nadu and Indian Chamber of Commerce & Industries (FICCI)
- Green Hospital AHPI Award 2016
- Healthcare Excellence in Nursing
- Best Non-metro Multi-Specialty Hospital

சிறப்பு ஆலோசனைகளுக்காக வருகைதரும் எமது சிறப்பு மருத்துவர்கள்

**Dr. S. Vivekanandan**
MRCS (Edin), FRCS (Intercollegiate)
Consultant Hepatobiliary Surgeon & Head of Liver Transplant Sergery



**Dr. Vignesh Kanda Kumar**
MD, DM (Medical Oncology
Consultant Medical Oncologist



**Dr. Anbukkani Subbian**
DGO, DNB, MRCOG (UK), Fellow in Gynecologic Oncology,
Consultant Gynec Oncologist



**Dr. Ajit S. Shinto**
DRM, DNB (Nuclear Medicine), MNAMS, PGDHA/HM
Consultant Nuclear Medicine Services, PET & Radionuclide Therapy



For Appointment, Call: Sri Lanka Helpline +91 755 811 2333 (Whatsapp)

**Kovai Medical Center and Hospital**
Avanashi Road, Coimbatore - 641 014. | Ph: +91 422 4323 800 - 802, 3083 800.
www.kmchhospitals.com

MAKING THE IMPOSSIBLE, POSSIBLE

# நாட்டைத்துண்டாட இடமளியோம்

## தேசிய அமைப்புக்கள் ஒன்றியம் தெரிவிப்பு

கொழும்பு, மே 14

“மைத்திரி அரசு சில சந்தர்ப்பங்களில் இந்தியா நோக்கியும், சில சந்தர்ப்பங்களில் சீனா, அமெரிக்கா நோக்கியும் சாய்கின்றது. இந்த நாட்டைத் துண்டாடவோ அல்லது நாட்டின் சொத்துக்களைவிற்பனைசெய்யவோ அனுமதிக்க முடியாது”.

இவ்வாறு தேசிய அமைப்புக்கள் ஒன்றியத்தின் உறுப்பினர் எல்லே குணவன்ச தேரர் தெரிவித்தார்.

“ஒரு இன சமூகத்துக்கு மட்டுமே இந்தியத் தலைமை அமைச்சர் உரையாற்றியுள்ளார். இது பௌத்த மதத்தை இழிவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளது. இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திரமோடி மீதோ அல்லது இந்திய அரசு மீதோ எந்தவித எதிர்ப்பும் எமக்குக் கிடையாது.

இலங்கை அரசின் நடவடிக்கைகள் குறித்து திருப்தி அடைய முடியாது.

நாட்டின் குடிமகன் என்ற ரீதியில் சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டியது அவசியமானதாகும். எட்கா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டால், சிங்கள பௌத்தர்கள் மட்டுமன்றி இந்திய வம்சாவளித் தமிழர்களும் பாதிக்கப்படுவர்'' என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-10)

ஐஸ்வர்யா மகளிர் மருத்துவமனை
எமது யாழ்நகரில்
குழந்தையின்மை சிகிச்சை
உலகத்தில் முதல் முறையாக IVF சிகிச்சை இலவசம்
மாபெரும் இலவச மருத்துவ ஆலோசனை முகாம்

எதிர்வரும் மே மாதம் 19,20 மற்றும் 21 ஆம் திகதிகளில்
வேம்படி மகளிர் கல்லூரியில்.
0777820337


arc
International Fertility & Research Centre
experience the miracle
17வது வருட சேவையில்
குழந்தையின்மைக்கு முழுமையான தீர்வு
உலக சாதனை
1,50,00,000+ பார்வைகள் YouTube ARC FERTILITY

FOUNDER DIRECTORS
இலவச மருத்துவ ஆலோசனை
MedExpo Jaffna 2017
வேம்படி மகளிர் மகாவித்தியாலயம் யாழ்ப்பாணம்.
மே மாதம் 19, 20, 21
காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை
கீழ்கண்ட அலைவரிசைகளில் எங்கள் மருத்துவர்களின் இலவச மருத்துவ ஆலோசனைகளை கண்டு பயன்றெுங்கள்
VASANTH TV Mon to Fri 10.30 a.m. CAPTAIN TV Sun to Sat 05.00 p.m.
பொதிகை Mon to Fri 01.05 p.m. மாலை முரசு Sun to Sat 06.30 p.m.
வேந்தர் Mon to Fri 04.00 p.m.
தமிழகத்தில் முதல் கருத்தரிப்பு மருத்துவமனை
1. 6 பிரம்மாண்ட மருத்துவமனைகள்
2. வருடத்திற்கு 3000+ Laparascopies மற்றும் 2000+ IVF Procedures
3. வருடத்திற்கு 30,000 தம்பதிகள் சிகிச்சை பெற்று பயன் அடைகிறார்கள்
முன்பதிவுகளுக்கு
0757 333 666 0091 7811 999 999
சென்னை- பெரம்பூர், எழும்பூர், பெருங்குடி | மிக விரைவில் திருச்சி, மதுரை
திருநெல்வேலி | கோயம்புத்தூர் | வேலூர்
www.arcfertility.in www.ivf-clinics-india.com

விண்ணப்ப விநியோகம் ஆரம்பம்
VISION CARE
OPTICAL SERVICES
விஷன் கெயார்
விழிக்கு ஒளி கொடுப்போம்
25
விஷன் கெயார் நிறுவனத்தின் 25 வருடப்பூர்த்திக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக நாம் 25,000 மூக்குக்கண்ணாடிகளை இலவசமாக இலங்கை முழுவதிலும் தேவையுள்ள மக்களுக்கு விநியோகிக்கவுள்ளோம்.
விண்ணப்படிவங்களை கீழே தரப்பட்டுள்ள எமது கிளைகளிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
திங்கள் முதல் சனி வரை காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை திறந்திருக்கும்.
இரண்டாம் கட்டம் - வடக்கு, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்கள்

| | | |
|---|---|---|
| குருநாகலை | இல. 9அ, தெற்கு சுற்றுவட்டப்பாதை, குருநாகலை. | 077 383 0589 |
| தம்புள்ள | இல. 25, குருநாகலை வீதி, தம்புள்ள. | 076 344 2231 |
| வென்னப்புவ | லைட்ம் கெயார் ஹொஸ்பிட்டல், இல.199, கொழும்பு வீதி, வென்னப்புவ. | 077 769 3947 |
| குளியாப்பிட்டிய | யூனியன் ஆர்கேட், இல. 93, மாதம்பே வீதி, குளியாப்பிட்டிய. | 077 295 8806 |
| யாழ்ப்பாணம் | இல. 108, பிரவுன் வீதி, யாழ்ப்பாணம். | 077 342 6515 |
| திருகோணமலை | இல. 290, டொக்யார்ட் ரோட், திருகோணமலை. | 077 478 2956 |
| மட்டக்களப்பு | இல. 75, முனை வீதி, மட்டக்களப்பு. | 077 478 2957 |
| வவுனியா | அரிஷா கொன்சல்ட்டன்ட் ஸ்பெஷலிட்டி யுனிட், இல. 21, வைத்தியசாலை சுற்றுவட்டப்பாதை, குடியிருப்பு, வவுனியா. | 077 478 2947 |

விண்ணப்ப முடிவுத்திகதி : 23 மே 2017
கட்டாயமாக நீங்கள் கொண்டுவர வேண்டிய ஆவணங்கள்:
கிராமசேவகர், உங்கள் பிரதேச மதகுரு அல்லது அதிபரின் பரிந்துரைக்கடிதம்
உங்களது அடையாள அட்டைப்பிரதி
“முதலில் வருபவருக்கே முன்னுரிமை” என்பதன் அடிப்படையில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
விண்ணப்பதாரி ஒருவரிடமிருந்து ஒரு விண்ணப்படிவம் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.
25 YEARS
Endorsed by VISION 2020


ashok STEEL
நீடித்த வலிமை
அசோக் TMT
அதிகூடிய பலம் வாய்ந்த இரும்புக் கம்பிகள்
யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும், ஸசந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT இரும்புக் கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.
ஒரு மெட்ரிக் தொன் தலா ரூ.100,000 + VAT
SLS 375
வட கிழக்கு மாகாணம் - 077 3781397/ 076 6084369, மத்திய மாகாணம் - 077 3825832,
வட மேல் மாகாணம் - 077 3455128, தென் மாகாணம் - 076 6773659, உடனடி அழைப்புகளுக்கு - 011 7388940-3






# மக்களின் பாதுகாப்பு சட்டத்தின் கைகளிலேயே

மு.ஈழத்தமிழ்மணி

வித்தாகிப் போன வித்தியா என்ற புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவி காமுகர்களின் பிடியில் அகப்பட்டு, கூட்டு வன்புணர்வுக்குப்பின்னர் கொலைசெய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. 18 வயது மாணவியான சிவலோகநாதன் வித்தியா படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக ஈழத்தமிழர்கள் மத்தியிலிருந்து மட்டுமன்றி வெளிநாடுகளில் உள்ள தமிழ் மக்கள் மத்தியிலிருந்தும் கண்டனங்களும் எதிர்ப்புக்களும் வெளிக் கிளம்பியிருந்தன.

வித்தியாவின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் மீது இணையத்தளங்கள் மற்றும் முகநூல்களும் பலவிதமான விமர்சனங்களையும் வதந்திகளையும் அவ்வப்போது பரப்பி வந்திருந்ததோடு, இந்தப் படுகொலையைக் கண்டித்து கண்டனப் பேரணிகளும் கடையடைப்புகளும் தமிழ்ப்பிரதேசங்களில் இடம்பெற்றிருந்தன.

யாழ்.குடாநாட்டு மக்களை அதிர்ச்சியடையச் செய்த இந்தக் கொடிய சம்பவம் இடம்பெற்று 2 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், கைது செய்யப்பட்ட 12 சந்தேக நபர்களும் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்தனர். குறித்த வழக்கின் சந்தேக நபர்களில் இருவர்களான பத்தாவது மற்றும் பன்னிரண்டாவது சந்தேக நபர்கள் நீதிமன்றால் அண்மையில் வழக்கில்இருந்துவிடுவிக்கப்பட்டிருந்தனர். பத்துப் பேரின் மீதான கொலைக் குற்றச்சாட்டு விசாரணைகள் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் நிறைவடைந்து அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்தி டம் மேலதிக நடவடிக்கைக்காகப் பாரப்படுத்தப்பட்டுள்ளது. கொலைக் குற்றசாட்டில் கைது செய்யப்பட்ட 9 பேரும்யாழ்ப்பாணம்மேல்நீதிமன்றின் உத்தரவின்பேரில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களுக்கு எதிரான குற்றப்பகர்வுப் பத்திரம்ஒரு வாரகாலத்துக்குள் முன்வைக்கப்ப டும் என்று சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதியால் அறிவிக்கப்பட்டது. மாணவியான வித்தியா மீதான படுகொலை வழக்கு விசாரணையை, மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூன்று பேரடங்கிய "ட்ரயல் அட்பார்" தீர்மான மொன்று விரைவில் முன்னெடுக்கவுள்ளது.

தீர்ப்பாயத்தை நியமிக்குமாறு சட்டமா அதிபரால் கோரப்படுமிடத்து தலைமை நீதியரசரால் அதற்கான மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் நியமிக்கப்படுவர். இந்த வழக்கு விசாரணை கொழும்பில் நடைபெறலாமெனவும் எதிர்பார்க்கப் படுகின்றது.

### இரண்டாண்டுகளாக முடிவின்றித் தொடரும் வழக்கு விசாரணைகள்

வித்தியா படுகொலை சம்பந்தமான விசாரணைகள் பொலிஸாரால் இழுத்தடிக்கப்பட்டுவந்த நிலையில், இரண்டாண்டுகளின் பின்னரும் வழக்கு விசாரணை தொடர்கிறது. இந்தப் படுகொலையைப் பொலிஸார் வேறு திசையில் திருப்புவதற்கு முயன்றனர். வித்தியா வழக்குத் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கூட்டுக் கொள்ளைப் பிரிவின் பொறுப்பதிகாரியான ஜ.பி.நிசாந்த சில்வா, தனது முதற்கட்ட விசாரணை அறிக்கையை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

குறித்த மாணவி வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாகவே ஒன்பது சந்தேகநபர்கள் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த வழக்கு விசாரணை கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவுக்கு மாற்றப்பட்டிருந்தது. 2015 நவம்பர் மாதத்தில் பத்தாவது சந்தேகநபரும் கைது செய்யப்பட்டு அவரோடு சேர்த்து மூவர் மீது கொழும்பு மகசின் சிறைச்சாலையில் வைத்துக் குற்றப்புல னாய்வு பிரிவினரால்விசாரணை கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### குற்றப் புலனாய்வுத் திணைக்கள பொறுப்பதிகாரியின் அறிக்கை சமர்ப்பிப்பு

04.03.2016 வெள்ளியன்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்ட இடத்திலிருந்து மீட்கப்பட்ட குருதிக் கறைகள் தொடர்பான பரிசோதனை அறிக்கை, வித்தியாவின் கண்ணில் இருந்து எடுக்கப்பட்ட விந்துவின் பரிசோதனை அறிக்கை, உடற்கூட்டுப் பரிசோதனை அறிக்கை, வித்தியா வின் தாயின் குருதிப்பரிசோதனை மாதிரி அறிக்கை எதுவும் அப்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் நீதிமன்றில் மார்ச் மாதம் 4ஆம் திகதி நடைபெற்ற விசாரணைக்கு முன்பு நடைபெற்ற வழக்கு விசாரணை யின் போது, நீதிவான் வித்தியாவின் படுகொலை தொடர்பாகவும், சந்தேக நபர்கள் தொடர்பாகவும் குற்றப்புல னாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்கும்படி உத்தரவிட்டிருந்தார். அந்த உத்தரவுக்கமையவே மார்ச் மாதம் 4ஆம் திகதி நீதிமன்றில் வழக்கு விசாரணை எடுத்துக் கொள்ளப்பட்ட போது குற்றப்புலனாய்வுத் திணைக்களக் கூட்டுக் கொள்ளைப் பிரிவுப் பொறுப்பதிகாரி ஜ.பி.நிசாந்த சில்வா முதற்கட்ட விசாரணை அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தார்.

இதன்படி இந்தக் கொலைக்கு ஒரு தலைப் பட்சக் காதலில் ஏற்பட்ட ஏமாற்றமும், வித்தியாவின் தாயைப் பழிவாங்க வேண்டும் என்று எதிர்பார்த்திருந்தவர்களின் வெறித்தனமுமே காரணமென அறிக்கையிட்டிருந்தார்.

குறித்த மாணவியை ஆறாவது சந்தேகநபர் ஒரு தலைப்பட்சமாக காதலித்து வந்துள்ளார். இதேவேளை வித்தியாவின் தாயார் இரண்டாவது சந்தேகநபர் மீதான திருட்டுக் குற்ற வழக்கொன்றில் அவருக்கு எதிராகச் சாட்சியளித்திருந்தார். இந்த நிலையில் ஒருதலைப் பட்சக் காதலால் ஏமாற்றமடைந்திருந்த ஆறாவது சந்தேகநபரும், பழிவாங்கக் காத்திருந்த இரண்டாவது சந்தேக நபரும் வித்தியாவைக் கடத்தி வன்புணர்வுக்குட்படுத்த வேண்டுமெனத் திட்டமிட்டுள்ளனர். இதனை நடைமுறைப்படுத்துவதற்காக முழுமையான திட்டத்தை 9ஆவது சந்தேக நபரான

> 18வயதுமாணவியான சிவலோகநாதன் வித்தியா படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக ஈழத்தமிழர்கள் மத்தியிலிருந்து மட்டுமன்றி வெளிநாடுகளில் உள்ள தமிழ் மக்கள் மத்தியிலிருந்தும் கண்டனங்களும் எதிர்ப்புக்களும் வெளிக்கிளம்பியிருந்தன.

சுவிஸ்குமாரே தீட்டியுள்ளார்.
அதற்கமைய இரண்டாவது சந்தேகநபருடைய சகோதரரான மூன்றாவது சந்தேகநபர், ஐந்தாவது சந்தேகநபர் மற்றும் ஒன்பதாவதான சுவிஸ்குமார் இணைந்து வித்தியாவைக் கடத்திப் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திப் படுகொலை செய்யத் திட்டமிட்டிருந்தனர். அத்துடன் மேற்குறித்த நபர்கள் தமது திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான உதவியாளனாகவும், தமக்கான போதைப்பொருள்களை வழங்குவதற்காகவும் மார்ச் மாதம் 3ஆம் திகதி வியாழன்று கைது செய்யப்பட்ட 11ஆவது சந்தேக நபரையும் சேர்த்துக் கொண்டனர்.
கொலை எப்படி நடந்துள்ளது என்பதையும் அந்த அதிகாரி மேலும் விவரித்திருந்தார். படுகொலை இடம்பெற்ற சம்பவ தினமான காலை, 11 ஆவது சந்தேகநபர் மூலம் பெற்றுக் கொண்ட சாராயத்தை முதலில் இருவரும் அருந்திய பின்னர் கஞ்சாவைப் பீடிக்குள் வைத்துப் புகைத்துள்ளனர். இதன்பின்னர் போதையேற்பட்ட நிலையில் பாடசாலை சென்று கொண்டிருந்த வித்தியாவை 2ஆம், 3ஆம் சந்தேகநபர்கள் வழிமறித்துக் கடத்திச் சென்றுள்ளனர்.
கடத்திச் செல்லப்பட்ட வித்தியாவை ஆள்நடமாட்டம் இல்லாத பற்றைப்பகுதிக்குள் வைத்து 6ஆவது, 3ஆவது, 5ஆவது, 2ஆவது சந்தேகநபர்கள் கூட்டு வன்புணர்வு மேற்கொண்டிருந்தனர். இந்தக் குற்றச் செயல்கள் அரங்கேறும் வரை 11ஆவது சந்தேகநபர் காவல் காத்துக் கொண்டிருந்திருக்கின்றார்.
இந்த நிலையில் வன்புணர்வின் பின்னர் வித்தியாவைப் படுகொலை செய்ய வேண்டுமென சந்தேகநபர்களான இரு சகோதரர்களும் அங்கு நின்றவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கியிருந்தனர். இதன் பின்னரே வித்தியா படுகொலை செய்யப்பட்டிருந்தார். இதனையடுத்து குறித்த படுகொலையைக் கடற்படையினர் மீது திசை திருப்பும் முகமாக வித்தியாவின் கை கால்களை மரத்துடன் கட்டி வைத்துள்ளனர்.
மேற்குறித்த அறுவர் தவிர்ந்த தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்ட ஐவரில் நால்வர், குறித்த வன்புணர்வும்படுகொலையும்அரங்கேறப்போவது குறித்து முன்னரே தெரிந்திருந்தும், அதனை மறைத்ததுடன் கொலைக்கு ஆதரவாகவும் செயற்பட்டு இருந்துள்ளனர் என குற்றப்புலனாய்வுப் பிரிவினரின்அறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளது.
வித்தியாவின் படுகொலையை நேரில் பார்த்தவர்களும் அதனைவிடப் படுகொலை தொடர்பான மேலதிக தகவல் தெரிந்தவர்களும் வெளியில் உள்ளார்கள் என்பது எமக்குத் தெரியும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்திருந்தார்.
அன்றைய வழக்கு விசாரணையின் போது நீதிமன்ற நீதிவான் எம்.எம். றியாஸ் வித்தியா படுகொலைச் சம்பவமானது, சகித்துக்கொள்ளமுடியாத துன்பகரமான நிகழ்வு எனவும் இதற்கு கடவுளின் துணையோடு நீதி கண்டறியப்படும் எனவும், கூறியிருந்தார். வித்தியா படுகொலை செய்யப்பட்ட மிருகத்தனமான நிகழ்வு பொதுமக்கள், இளையோர்கள், மாணவர்களின் மத்தியில் கண்டனம், எதிர்ப்பு, கோபவேசம் என்பவற்றை ஏற்படுத்தியிருந்தன என்று ஊர்காவற்றுறை நீதி மன்றில் கூறப்பட்டது. வித்தியாவைப் படுகொலை செய்தவர்கள் எட்டுப் பேரும் அதே ஊரைச் சேர்ந்தவர்களே.

### படுகொலை தொடர்பாக கிளர்ந்தெழுந்த பொதுமக்கள்


மக்களின் கடுமையான எதிர்ப்பிலும் கோபத்திலும் அன்று போதியளவு நியாயமிருந்தது. இந்த ஈனச் செயலில் ஈடுபட்ட எவரையும் தப்பிக்க விடக் கூடாது என்பதில் மக்கள் அன்று உறுதியாக இருந்தபடியால் சந்தேக நபர்க்ளாக 12 பேர் கைது செய்யப்பட்டனர். இருவர் விடுவிக்கப்பட்டு 9பேர் மீது வழக்கு விசாரணை நடைபெற இருக்கின்றது. 11ஆவது சந்தேகநபர் அரச சாட்சியாக மாறியுள்ளார்.





புங்குடுதீவில் வல்லன் கிராமத்துப் பெண்கள் ஓர்மமானவர்கள், நெஞ்சுரமிக்கவர்கள் என்றதோர் அபிப்பிராயம் அந்தப் பகுதியில் நீண்டகாலமாக நிலவி வந்ததுண்டு. வல்லன் கிராமத்துப் பெண்ணில் கை வைப்பதற்கு மற்றவர்கள் அச்சப்படும் ஒரு காலமும் இருந்தது. ஆனால் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த கல்வி கற்கின்ற உயர்தர வகுப்பைச் சேர்ந்த 18 வயதுடைய மாணவியை அதே கிராமத்தைச் சேர்ந்த எண்மர் இந்தவிதம் கொலை செய்துள்ளனர். இவர்களில் இருவர் மாணவிக்கு சகோதர முறையானவர்கள் என்பதும் குறிப்பி டத்தக்கது.
மூன்று பத்தாண்டு காலமாக தமிழ்மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருந்த போர்க்காலச் சூழல் முதல் இன்று வரை, பெண்கள், மாணவிகள், சிறுமிகள் ஆகியோர் மீதான பாலியல் துன்புறுத்தல்கள், வன்புணர்வு, படுகொலை செய்தல் போன்ற செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. போர் இடம்பெற்ற வேளையில் படையினராலும் அவர்களுடன் சேர்ந்த துணைப்படையினராலும் பெண்கள் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட ஏராள சம்பவங்கள் தமிழ் மக்களால் மறக்க முடியாதவை.
புங்குடுதீவுப் பகுதியில் சாரதாம்பாள், தர்சினி ஆகியோரின் படுகொலைகளுக்கான நீதி விசாரணை கள் எதுவும் இன்று வரையில் மேற்கொள்ளப்படவில்லை. படுகொலைகளைப் புரிந்தவர்கள் நிம்மதியாக நாட்டில் நடமாடுகின்றனர். விசாரணை கோரி மக்கள் பல போராட்டங்களை மேற்கொண்டும் எது வித பலனும் கிடைக்கவில்லை.
வித்தியாவின் படுகொலையும் கூட்டுவன்புணர்வும் தமிழ் மக்களால் இன்றும் கூட மறக்கமுடியாததொரு சம்பவமாக ஆகியுள்ளது. சந்தேகநபர்கள் எந்தவகையிலும் மன்னிக்க முடியாத வர்களாகவும் ஆகியுள்ளனர்.
ட்ரயல் அட்பார் என்ற நீதி ஆயத்தின் மூலம் வித்தியா படுகொலை வழக்கு விசாரணை விரைவில் நடக்கும் என்ற செய்தி மக்கள் மத்தியில்சட்டம்தனதுகடமையை செய்யப் போகின்றது; நீதியை வழங்கப் போகின்றது, என்ற எண்ணத்தை ஏற்படுத்தியுள்ளது.
வித்தியாவின் படுகொலையிலீடுபட்ட சந்தேகநபர்கள் 9 பேர் மீதும் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடைபெறவுள்ளது.
வித்தியாவின் படுகொலைக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பது, நாட்டிலுள்ள பல்லாயிரக்கணக்கான மாணவிகள் உட்பட பெண்களுக்கு இத்தகைய அவலங்கள் தொடர்ந்தும் ஏற்படாமல் தடுப்பதற்கு சிறிதளவிலாவது உதவக் கூடும்.
தாயாக, சகோதரியாக, மனைவியாக, மகளாக, உறவுகளாக விளங்கும் பெண்களை சமுதாயத்தில் உள்ள வக்கிரபுத்தி கொண்ட ஒருபகுதி ஆண்கள் போகப் பொருளாக நினைத்து நடப்பது சாதாரணமானதொன்றாகி விட்டுள்ளது. அந்த வகையில் சில ஆண்கள் போதைப் பொருள்கள் மற்றும் மதுவுக்கும் அடிமையாகி தீயவழிகளிலீடுபட்டு வருகின்றனர். இப்படிப்பட்ட மிருக குணம் கொண்ட கும்பல்களே வித்தியா என்ற மாணவியை நுகர்வுப் பொருளாகக் கருதி வன்புணர்வுக்குட்படுத்திக் கொலை செய்யத் துணிந்தனர்.
வித்தியா படுகொலை செய்யப்பட்டு இரண்டாண்டு முடிவடைந்துள்ள இந்த வேளையில், குறித்த படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை தொடங்கவில்லையே என்ற ஆதங்கம் மக்களுக்கு இருந்தது என்பதையும் மறுக்க முடியாது. வித்தியாவின் ஆத்மா சந்தியடைய வேண்டுமானால், கொலைக்குற்றவாளிகளுக்கான தண்டனைகளும் மக்கள் எதிர்பார்ப்பது போல் அமைய வேண்டும்.





## ஆசிரியருக்கான கடிதம்

# நோயாளர்களது உயிர்களுடன் விளையாட வேண்டாம்

மாலபேயில் தனியார் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடந்த 5ஆம் திகதி நடத்திய பணிப்புறக்கணிப்பால் அன்றைய தினம் அரச வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறச் சென்ற பல நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதேவேளை அரசு எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் குறித்த தனியார் மருத்துவக் கல்லூரி (சைட்டம்) பிரச்சினைக்கு உரிய தீர்வை முன்வைக்காதுவிட்டால், தமது சங்க உறுப்பினர்கள் மீண்டும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.
உலகின் எந்தவொரு நாட்டிலும் மருத்துவ சேவை அத்தியாவசிய சேவையொன்றாகக் கணிக்கப்பட்டு, குறித்த துறைப் பணியாளர்களது அர்ப்பணிப்பான சேவைக்கு அந்தந்த நாட்டு மக்கள் கௌரவம் வழங்கி வருகின்றமை கண்கூடு. இதனாற்றான் நோயாளிகள் கடவுளுக்கு அடுத்ததாக மருத்துவர்களையே நம்பியாக வேண்டுமென்ற கருத்துப் பரவலாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.
இன்றைய உலக நடப்பில் தொழிலாள வர்க்கம் முதல் அதிகாரிகள் தரப்புக்கள் வரை தொழில் ரீதியில் மறுக்கப்படும் தத்தமது உரிமைகளை ஜனநாயக ரீதியில் பெற்றுக் கொள்ள இத்தகைய பணிப்புறக்கணிப்புப் போராட்டங்களை முன்னெடுப்பது வழமையேயாயினும், நோயாளர்களது உயிர்காக்கும் உன்னத பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ள மருத்துவர்கள், உரிமைகளைப் பெறும் நோக்கில் இருந்திருந்தாற் போல் இத்தகைய பணிப்புறக்கணிப்பு என்ற ஆயுதத்தைக் கையில் எடுத்து நோயாளிகளது உயிர்களுடன் விளையாடும் போக்கை நியாயமானதொன்றாகக் கொள்ள இயலவில்லை. இத்தனைக்கும் எமது நாட்டைப் பொறுத்தவரை இவர்களெல்லாம் இலவசக் கல்வி வாய்ப்பைப் பயன்படுத்தி மருத்துவர்களானவர்கள். நாட்டு மக்கள் அரசுக்குச் செலுத்தும் வரிப்பணத்தில் தாம் இலவசக்கல்வி வாய்ப்பைப் பெற்று மருத்துவர்களானோம் என்ற நன்றியுணர்வுடன் இவர்கள் உயிர்காக்கும் தமது உன்னத பணியை முன்னெடுத்தல் அவசியமாகும். அதேவேளை அரசும் கூட இந்த நாட்டின் நோயாளர்களது நலன்கருதி இத்தகைய அத்தியாவசிய சேவைகள் பாதிப்புறாத விதத்தில் பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வு கண்டு, நாட்டு மக்களது நலனில் அக்கறை செலுத்துதல் அவசியமே. அந்த வகையில் இருதரப்புக்களுமே தத்தமது பொறுப்புணர்ந்து செயற்படல் அத்தியாவசியமாகும்.

ப.மாணிக்கவாசகர்,
புலோலி.

# இன்றைய

# உணவு முறைகளும் எதிர்கால இன்னல்களும்



மருத்துவர் பொ.ஜெசிதரன்

ஆரோக்கியமான ஆளுமைவிருத்தி, உடல் உளவளர்ச்சி மற்றும் சுறுசுறுப்பான வாழ்வுக்கு போதியளவு போசணை மிக்க உணவு அவசியமாகிறது. வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் இதன் தேவைப்பாடு என்பதும் முக்கியத்துவமானதாக உணரப்படுகிறது.

**பதப்படுத்திய உணவுகள்**

அதிகளவு கிடைக்கக் கூடிய தன்மை, துரிதநகரமயமாக்கல், வாழ்க்கைமுறை மாற்றம், விரும்பத்தகாத சந்தைப்படுத்தல் செயன்முறைகள் என்பவையும் ஆரோக்கிய உணவுப் பழக்கங்களை முற்றாகவே மாற்றிவிட்டன. மக்கள் தற்போது உண்ணும் உணவுகள் கூடிய சக்திப்பெறுமானமுள்ளதாகவும் அதிகளவு கொழும்பு, சீனி மற்றும் உப்புக் கொண்டவையாகவுமே உள்ளன. இவை காரணமாக நிறை அதிகரிப்பு, அதிகூடிய நிறை போன்ற நோய்த்தாக்கத்துக்கான அபாய நிலைகள் ஏற்படுவதுடன் தொற்றா நோய்களான நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், உயர் கொலஸ்ரோல், புற்றுநோய் மற்றும் இதயநோய்கள் என்பனவும் ஏற்படுகின்றன. குருதிச் சோகை நோயானது இலங்கையில் வயது வித்தியாசம் இன்றிய பாதிப்பை ஏற்படுத்தும் போசணைக் குறைபாடாக இன்றும் காணப்படுகின்றது. போசணைக் குறைபாடு பலகாரணங்களால் ஏற்படுவதனால் போசணைத்தரத்தினை உயர்த்துவதற்கு பல படிகளைக் கொண்டதும், பல தரப்பினருடனானதுமான அணுகுமுறை களைப் பின்பற்ற வேண்டிய தேவைகளை ஏற்படுத்தியுள்ளது. அதாவது பல தரப்பினரையும் முழுமையாக உள்வாங்கக் கூடிய அணுகுமுறையே தேவையாகவுள்ளது.

ஆரோக்கியமான உணவு என்பது ஆறுவகையான உணவுக் கூறுகளையும் பரிந்துரை செய்யப்பட்ட அளவுப் பிரமாணப்படி கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறான பல தரப்பட்ட உணவுவகைகளைக் கொண்ட கலப்புணவே உடல் வளர்ச்சிக்கான சக்தி மற்றும் நோயிலிருந்து உடலைப் பாதுகாக்கும் நிர்ப்பீடனம் என்பவற்றை வழங்கும். தானியங்களும், கிழங்கு வகைகளும், மரக்கறி வகைகளும் (பச்சை இலைகள், பழமரக்கறிகள்) பழங்களும், மீன், பருப்பு, இறைச்சி, முட்டை எனும் புரதஉணவுகளும் பாலும் பாற்பொருள்களும், எண்ணெயும் எண்ணெய் விதைகளும் மற்றும் சுத்தமான குடிதண்ணீர் என்பவையுமே இந்த ஆறு போசணைக் கூறுகளாக சொல்லப்படுகிறது.

பலதரப்பட்டதான ஆரோக்கியமான சமநிலை உணவானது தனியாள் தேவைகளிலும் வயது, பால், உடற்செயற்பாடு, ஆரோக்கியநிலை, பண்பாடு என்பவற்றிலும் மற்றும் உள்ளூரில் கிடைக்கும் உணவு வகைகள் என்பவற்றிலும் தங்கியுள்ளது.

ஆரோக்கிய உணவைத் தயார்ப் படுத்தும் போது கீழ்வரும் உண்மைகளைக் கருத்தில் கொள்ளுதல் நன்று.

1. ஒருநாள் உணவில் குறைந்தது மூன்றுவகையான மரக்கறிவகைகளையும் இருவகையான பழங்களையும் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.
2. முடியுமானவரை சீனி சேர்க்கப்பட்ட உணவுகளை உள்ளெடுப்பதனைத் தவிர்த்தல். ஒருநாளைக்கு ஒருவருக்கு ஆறு தேக்கரண்டிகளுக்குக் குறைவான சீனியின் அளவை தேவைக்குட்படுத்தல். உணவு தயாரிப்பின் போதே (கடை சிற்றுண்டிகள்) சீனி சேர்க்கப்பட்ட உணவுகளையும் நாம் உண்கின்றோம் என்பதை மறுதலிக்காதிருத்தல் என்பவற்றுடன் தேனீருக்காக ஒரு நாளைக்கு இரண்டு தேக்கரண்டி சீனி அளவு மட்டுமே பாவித்தல் வேண்டும்.
3. ஒருநாளைக்கு ஒரு ஆளுக்குத் தேவையான உப்பை ஒரு தேக்கரண்டியாக (5கிராம்) மட்டுப்படுத்திக் கொள்ளுதல் நன்று.
4. ஒருநாளைக்குத் தேவையான சக்தியளவில் 30 வீதத்துக்குக் குறைவான சக்தியையே கொழுப்புணவுகளிலிருந்து பெற்றுக் கொள்ளும் வகையில் அவற்றை உள்ளெடுத்துக் கொள்ளுதல் வேண்டும். நிரம்பிய கொழுப்பமிலங்களைக் கொண்டுள்ள இறைச்சி, பட்டர், தேங்காய், பாம் எண்ணெய், கேக், பிஸ்கட் போன்றவற்றை இயலுமானவரை குறைத்து நிரம்பாத கொழுப்பமிலங்களைக் கொண்டுள்ள மீன் வகைகள், விதைகள், அவகாடோ போன்றவற்றை எடுத்துக் கொள்ளுதல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.
5. ராண்ஸ் ஆரோக்கிய உணவுப் பழக்கங்கள், சுறுசுறுப்பான உற்சாகமான வாழ்க்கை முறை உடல்நிறையை அதிகரிக்காது கட்டுக்குள் பேணிக்கொள்ளல் என்பன ஆரோக்கிய வாழ்க்கைக்கான தூண்களாகும். உயரத்துக்கு ஏற்ப நிறையைப் பேணிவந்தால், போசணைக்குறைபாட்டையும் தொற்றாநோய்கள் ஏற்படுவதற்கான ஆபத்துக்களையும் குறைத்துக் கொள்ளமுடியும். உடற்திணிவுச் சுட்டி (BMI), இடுப்புச் சுற்றளவு, நாரி இடுப்புச் சுற்றளவு ஒப்பீடு என்பனபோசணை நிலையை அளவிடும் அடிப்படை அளவீடுகளாகும்.

> தானியங்களும், கிழங்கு வகைகளும், மரக்கறி வகைகளும் (பச்சை இலைகள், பழ மரக்கறிகள்) பழங்களும், மீன், பருப்பு, இறைச்சி, முட்டை எனும் புரத உணவுகள் பாலும் பாற்பொருள்களும் எண்ணெயும், எண்ணெய் விதைகளும் மற்றும் சுத்தமான குடிதண்ணீர் என்பவையே இந்த ஆறு போசனைக்கூறுகளாகும்.



உடற் திணிவுச் சுட்டியினை 18.5 தொடக்கம் 24.9 எனும் அளவிடைகளுள் பேணுவதே ஆரோக்கியமானது. அதனை 24.9 தொடக்கம் 29.9 எனும் அளவீடுகளுள் பேணுவீர்களானால் நிறைஅதிகரிப்பு உள்ளவராக இருப்பீர்கள். உடற் திணிவுச் சுட்டியினை 30இற்கும் மேல் பேணுவீர்களானால் அதிகூடிய நிறை உள்ளவராகவும் கொள்ளப்படுவீர்கள்.

உடலிலுள்ள மொத்தக் கொழுப்புக்களின் அளவைத் தெரிவிக்கும் அளவீடாக வயிற்றறையிலுள்ள கொழுப்பைக் கொள்ளலாம். இதற்காக இடுப்புச் சுற்றளவானது அளக்கப்படுகிறது. ஆண்களில் இது 90சென்ரிமீற்றர்களுக்கு (36") அதிகமாகவும் பெண்களில் இவை 80சென்ரி மீற்றர்களுக்கு (32") அதிகமாகவும் இருப்பின் இவர்களைத் தொற்றாநோய்கள் தாக்கும் அபாய நிலை (Risk) உள்ளவர்களாகக் கருதலாம்.

நாரி இடுப்புச் சுற்றளவு ஒப்பீடானது (Whr) அதிக உடல் நிறை அதிகரிப்பை அளந்து கொள்ள உதவிடும் முறையாகும். உலக சுகாதார நிறுவனத்தின் கூற்றுப்படி அதிக வயிற்றுப்பருமனைக் (Abdominal obesity) கொண்டவர்களும் அபாயநிலையில் உள்ளவர்களே. நாரி இடுப்புச் சுற்றளவு ஒப்பீடானது 0.9இற்கும் அதிகமான ஆண்களையும் 0.85இற்கும் அதிகமான பெண்களையும் அதிக உடல் நிறை கொண்டவர்களாகக் கணிப்பீடு செய்யலாம். இவர்களுக்குத் தொற்றாநோய்கள் தாக்கும் அபாயநிலை அதிகமாகும்.

உடலில் கொழுப்புப்படிவதால் ஏற்படும் உருவமாறுதல்களைக் கொண்டு இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அப்பிள்ப் பழத்தைப் போன்ற உடலமைப்பை உடையவர்கள் அதிக கொழுப்பைநாரிப் பகுதியில் கொண்டிருப்பர். பியர்ஸ் பழத்தைப் போன்ற உடலமைப்பை உடையவர்கள் கூடுதலான கொழுப்பை இடுப்புப் (Hips) பகுதியில் கொண்டிருப்பர். ஒப்பீட்டளவில் அப்பிள் பழத்தை ஒத்த உடலமைப்பை உடையவர்களுக்கே தொற்றாநோய் நிலைகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம்.

உடற்பருமனைக் குறைத்திடவும், தொற்றாநோய் அபாயத்திலிருந்து மீண்டிடவும் உணவுவகைகளைத் தேர்வு செய்து உண்ணுதல் தவிர்க்க முடியாததாகி வருகிறது. உணவுவகைகளின் தேர்வுபல காரணிகளால் தீர்மானிக்கப்படுகிறது. கிடைக்கும் தன்மை, பொருளாதார நிலை, தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் பண்பாட்டுக் கோலங்கள், சமூக பொருளாதாரத்தன்மை மற்றும் சூழல்காரணிகள் என்பவையே அவையாகும். எது எவ்வாறு இருப்பினும் ஆரோக்கியமான உணவு வகைகளைத் தேர்வு செய்யும் திறனை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். இது எமது எதிர்காலச் சமுதாயம் நோயின்றி வாழ்ந்திட உதவிடும். ஆரோக்கிய உணவுக் கலாசாரத்தைத் தோற்றுவித்து அவை தொடர்ந்தும் நிலைத்திருப்பதைக் கண்காணித்து ஆரோக்கிய உணவுச் சூழலை ஏற்படுத்தல் வேண்டும். மக்களும் அதற்கு இயை பாக்கமடைந்து ஆரோக்கிய உணவுப்பழக்கத்தை நடைமுறைப்படுத்திப் பேணுவதே இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது. ஆரோக்கிய உணவுச் சூழலை மேம்படுத்துவதற்குப் பலதரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியமாகிறது.

"வளமாக வாழ்வதற்கு உகந்த உணவுப் பழக்கங்களைக் கற்றுக் கொள்வோம்
வருத்தங்கள் அகல உடல்நிறையைக் கட்டுக்குள் வைத்துக் கொள்வோம்"

சுகாதார வைத்திய அதிகாரி,
யாழ்.மாநகர சபை.




சூரியகாந்தி
உதயன்
14.05.2017

# விழுதுவிட்ட பெரு ஆலமரமாய்...







தி.சிதம்பரநடராஜன்

"ஒவ்வொரு வீட்டு வாசலிலும்
ஒப்பாரி கேட்கிறது
இத்தனையையும் மீறிக்கொண்டு
சின்ன அலகால் சுள்ளி பொறுக்கி
எங்கள் மரங்களில் குருவிகள்
கூடு கட்டுகின்றன.
மேய்ச்சலுக்குப் போகும் மாடுகள்
கன்றீன்று பால் சுரக்கின்றன
வாழும் வழி இதுதான் நிமிர்ந்துகொள்
மேகம் உன் தலை தடவி விளையாடட்டும்
-கவிஞர் புதுவை இரத்தினதுரை



போர் நடந்த பகுதியில் அந்த ஆலமரம் இருந்தது. தோளில் சுமைகளோடு அலைந்து திரியும் முதுமைக் கிழவர் போல கிளை விரித்து, விழுது பரப்பித் தனித்திருந்தது.

மக்களின் இடப்பெயர்வின்போது அதன் அடிமடியில் பாதுகாப்புத் தேடினார்கள்பலர். சிலர்எந்தநேரமும், வேறுசிலர்கொண்டுவரும்சுமைகளைஇறக்கி வைத்துச்சிறிது ஆறஅமர்ந்து சிரம பரிகாரம் செய்துகொள்ளவும் எனப் பயன்படுத்திக் கொண்டனர்.

விமானங்கள் குண்டுகள் வீசும் போதும், நாற் திசைகளின் வழியே மூசிக் கொண்டு வரும் செல்களில் இருந்தும் மக்களைப் பாதுகாக்க முடிவெடுத்துஅந்தஆலமரம்செயற்பட்டிருக்க வேண்டும்.

விமானக் குண்டுவீச்சுக்கள், செல் தாக்குதல்கள், துப்பாக்கிக் குண்டுகள்எனஅத்தனையையும்தாங்கித் தன் கிளைகளையும் விழுதுகளையும் பலி கொடுத்து இயன்றவரை மக்களைப் பாதுகாத்துக் கொண்டது.

இத்தனைக்கும் காரணம் என்ன? அகலக் கிளை நீட்டி விஸ்தீரமான பரப்பெடுத்துதினவெடுக்கும்விழுதுகளுடன்நிற்பதுதான்காரணம்என்பதை யாரும் அறியலாம்.

அகன்று நிமிர்ந்து நிற்கும் ஆலமரமாக எங்கள் இனமும் மாறவேண்டும். ஒற்றுமையாகஒன்றுதிரண்டு சடைத்த பெரு விருட்சமான ஆலமரமாக விழுது விட்டெறிந்து தலை நிமிர்ந்தால்எதிரேவரும்அத்தனை துன்பங்களையும் எதிர்கொள்ள முடியாதோ?

— — — — —

நெடுங்கேணி-ஒலுமடுவில்பூபாலசிங்கம் ஐயா ஒரு முன்னோடி விவசாயி. இளவயதில்தனித்த ஆளாகக் குடியேறி, விவசாயம்செய்துமேலும் பலரைவிவசாயத்தில்ஈடுபட ஊக்குவித்துஇன்றுவரை அந்தமண்ணில் போராடிக் கொண்டிருக்கின்றார்.

எத்தனை தடவை வயல்வெளிகளையும் தோட்ட நிலங்களையும் பட்டி மாடுகளையும் கைவிட்டுக் கைவிட்டுஇடம்பெயர்ந்திருப்பார்...!

என்றாலும் சற்றேனும் மனம் தளராத விக்கிரமாதித்தனாக அவர் இப்போதும் அங்கே விவசாயம் செய்துகொண்டு இருக்கின்றார். எப்போதும் போலவே அவருக்குத் துணையாக அவரின் மனைவி தங்கமணி அவர்கள்.

— — — — —

தேவிபுரம் தென்னஞ்சோலை மேவி நின்று அழகுகாட்டும் நீண்ட நிலப்பரப்பு. போர்முடிக்கப்பட்டபின்னர் சுடுகாடாய்ப் போய்க்கிடந்த அந்த இடத்தைப் பார்த்து வெகுநேரம் விம்மித் தணிந்தார் வீரசிங்கத்தார்.

பூமியிலிருந்துபெருநெருப்புவெளியேறியதுபேல நிலப்பரப்பு வெடித்துச் சிதறியிருந்தது. இளமையும் முதுமையுமாய்க் குலைகள் தாங்கி நின்ற தென்னைமரங்கள் இருந்த அடையாளமே இல்லை.

வீசும்காற்றில்அலைந்தாடிய அந்தமரங்களின்பச்சோலைகளின்பசுமை எங்கே போனது என்றே தெரியவில்லை.

தலைசாய்ந்து கலங்கி அழுதார் வீரசிங்கத்தார். சில நாள்கள் கழித்து வளவின் வேலியில் கை வைத்தார். காலை வந்து மாலைவரை வெறுமையாய்ப்போன தென்னைமர வளவின் அடியளந்தார்.

இப்போது அச்சறுக்கையான வேலியும் பசும்முகம்காட்டும்தென்னம்பிள்ளைகளுமாகஅழகுவிடத்தொடங்கியுள்ளதுகாணி. இருந்தது எவ்வளவு உண்மையோ அதேபோல் அழிந்ததும் உண்மைதான். வேதனைகளைத் தாங்கிக் கொண்டு மீண்டும் செயற்படத் தொடங்கி விட்டார்.

— — — — —









ஆனந்தபுரத்தில்கிருஷ்ணர்கோயிலுக்குப்போகும் பாதையில் இந்திரா அம்மம்மாவின் குடிசை இருந்தது. அவர் வடமராட்சியைச் சேர்ந்தவர். தென்னஞ்சோலையான வளவில் சிறு கூடாரம்போல சின்னஞ்சிறு குந்துகள் பூசி, மெழுகி பளபளப்பாகக் காட்சிதர மிக அழகாக இருக்கும்.

கிடுகு பின்னுவதுதான் அவர் தொழில். தொழில் அல்ல அது கலை. பார்த்துக் கொண்டு இருக்கும் போதே தென்னோலைகள் கிடுகுகளாக மாறும் காட்சி வியப்பைத்தரும்.

வலைப்பாட்டில்இருந்தமூத்தமகள்கமலம்நான்கு பிள்ளைகளுடன் வந்துசேர்ந்தாள். மீன்பிடிக்கச் சென்ற அவளின் கணவன் கடற்படைத் தாக்குதலில்பலியாகிப்போனான்.

போக்கற்றகமலம்10, 8, 6, 4வயதுப்பிள்ளைகளுடன் வந்துசேர்ந்தாள். தன் சிறு குடிலுக்குப் பக்கத்தில் இன்னுமொரு கொட்டிலைப்போட்டு மகளையும் பேரப்பிள்ளைகளையும் குடியமர்த்தினார் அம்மம்மா. வளவுக்காரரின் சம்மதத்துடன்.

எல்லாம் கொஞ்சக் காலம்தான். இந்திரா அம்மம்மா, கமலம், பேரப்பிள்ளைகள் எல்லோரும் இடம்பெயர வேண்டியதாயிற்று.

சமீப காலத்தில் ஒருநாள் நாங்கள் இருந்த இடத்தைப் பார்க்கப் போனபோது அந்த இடத்தில் மீண்டும் இருந்தார் அம்மம்மா.

அதே வளவு. ஆனால் பழையசெழிப்பு அவர் இருந்தவளவிலும்இல்லை. பிள்ளைகள்வளர்ந்திருந்தார்கள் மிகப் பெரிதாக.

இந்திரா அம்மம்மா முன்பைவிட அதிகமான தளர்வுடன் விழிகளைக் குறுக்கி மிக நெருங்கி வந்து என்னைக் கண்டுகொண்டார்.

இடப்பெயர்வின்போது கமலம் செல்தாக்குதலில் காலமாக நான்கு பேரப்பிள்ளைகளுக்கும் தாயாகித் தகப்பனாக மாறவேண்டியதாயிற்று இந்திரா அம்மம்மாவுக்கு.

"என்ன தம்பி செய்யிறது? பிள்ளைகள் எல்லாம் படிக்குதுகள். அதுகளைநல்லாப்படிப்பிச்சுப்பெரிய ஆள்களாக்கவேணும். நான் உயிரோட இருக்கிற வரைக்கும்அதுகளைக்கவனிச்சுக்கொள்ளுவன்" என்றார் உறுதியாக.

— — — — —

கேப்பாப்புலவு சொந்தக் காணிகளை விடுவிக்க வேண்டும் எனப் பெருமெடுப்பில் மக்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தார்கள்.

இரவும் பகலும் பகலும் இரவும் என அங்கே பாய் விரித்துப்படுத்துக்கொண்டு தங்கள்செயற்பாடுகளைமுன்னெடுத்தார்கள். எத்தகைய இடையூறுகள்வந்தாலும்அவர்கள்ஒன்றைக்கைவிடவில்லை. தங்கள்பிள்ளைகளின் படிப்பு. அந்தச்சூழலிலும் பிள்ளைகளின்படிப்பைக் கவனிக்க வேண்டுமெனத் தூண்டியது எது?

நாளை என்பது நம்பிக்கையானது. யார் உதவினால் என்ன? உதவாவிட்டால்என்ன? யார்வந்தால்என்ன? யார்போனால்என்ன? ஒவ்வொருவரும் தங்களை நம்ப வேண்டும். நாளைய நம்பிக்கைதான் எல்லாமே.

# தொடரும் சாட்சிகள்




போர் நடந்த பிரதேசத்தில் எட்டு வருடங்கள் கழித்துத் தேடியபோது இப்பொழுது கிடைத்துள்ள இவை அந்தப்பகுதிக்குள் நசுக்கப்பட்டு குண்டுகளாலும் குரூரங்களாலும் அழித்தொழிக்கப்பட்ட மக்களின் அவலத்துக்கான தொடரும் சாட்சிகள் வாழ்க்கையைப் புடம்போட்டபடி அங்கேயே கிடந்து சிதைந்துபோய்க்கொண்டிருக்கின்றன. செல் வீச்சுக்களாலும் குண்டுச் சிதறல்களாலும் அழிந்தவைபோக தீப் பற்றி எரிந்த நிலையிலும் இவை எச்சங்களாக முள்ளிவாய்க்கால் எங்கும் புதைந்து கிடக்கின்றன. நீங்கள் மண்ணுக்குள் புதைந்தும் மழைக்குள் நனைந்தும் அங்கே கிடக்கும் இவற்றை மீட்கலாம், அல்லது இவற்றின் அனுபவங்களை மீட்கலாம்.





செல் வீச்சுக்களில் இருந்தும் விமானத்தாக்குதல்களில் இருந்தும் எம்மைப் பாதுகாத்துக் கொள்ளக் கடைசிக் கட்டத்தில் எங்களிடம் எவையுமே இருக்கவில்லை. எமது அம்மா, அக்காவின் சேலைகளைக் கிழித்துப் பைகளாகத் தைத்து அதற்குள் மண்ணை நிரப்பி எங்களைச் சுற்றிலும் அவற்றை அடுக்கி அதற்குள் பதுங்கியிருந்துதான் எங்களைக் காத்துக்கொண்டோம். குண்டுகள் நேரடியாக எம்மீது விழுந்தால் எங்களுக்குச் சாவே முடிவு. அருகருகே விழுந்தால் மாத்திரமே சன்னங்களில் இருந்து தப்பிக் கொள்ளலாம்.











உணவும் இன்றி உறக்கமும் இன்றிக் கடைசிவரையும் கொண்டு திரிந்த உடமைகள்தான் இவை. கொண்டாட்டங்களை ஒளிப்படங்களில் பதிவுசெய்து வைத்த அல்பங்கள், வீடியோக் கொப்பிகள், எங்களுக்கு அடுத்து என்ன நடக்கப்போகின்றதோ என்ற செய்தியை அறிந்துகொள்ள றேடியோ. கடைசி வரைக் கைவிடாமலேயே காவித்திரிந்த பின்னர் உயிரை மாத்திரமே இனிச் சுமக்கலாம் என்ற தருணத்தில் கைவிடப்பட்டவை தான் இவை.



கடற்கரைக்கு அண்மையாகப் பரந்திருந்த மணல்தரையில் கிடங்கு வெட்டித் தண்ணீர் கண்டு தாகம் தீர்த்த அவலத்தின் எச்சம் இது. சனத்திரளுக்குக் குடிநீர் வழங்கியிருந்த ஏராளம் ஏராளம் இதுபோன்ற கிடங்குகளுக்கு மத்தியில் இன்றைக்கு 8வருடங்களாகியும் இது மாத்திரம் நிலைத்திருக்கின்றது.





பள்ளிக்கூடப் படிப்பைத் தொலைத்த பிஞ்சுகள் பலரும் உயிரைப்பற்றிப் பிடித்து ஓடிக்கொண்டிருந்த போதும் கல்வியைக் கைவிடாதிருந்தார்கள். தமது புத்தகப் பைகளையும் சப்பாத்துக்கள், கணிதஉபகரணப் பெட்டிகள் என அனைத்தையும் தம்மோடு சேர்த்தே காவித்திருந்தனர். உடலை மட்டுமே இனிக் காவ முடியும் என்ற நிலையில் இவற்றைக் கைவிட்டனர்.






வெள்ளாம் முள்ளிவாய்க்காலை அண்மிக்க அண்மிக்க மணல் குறைந்து களித் தறையும் விடத்தல் காடுகளுமாய் இடம் மாறிவிடும். இங்கே பங்கர் வெட்டுவது மணலில் பங்கர் வெட்டுவதுபோல இலகுவானதல்ல. எனினும் இந்தக் கடினமான தறையிலும் பங்கர்கள் நிறையவே வெட்டப்பட்டன. அவை இலகுவில் தூர்ந்துபோகாமல் இன்றுவரை நிலைத்திருந்து தம்மை ஞாபகமூட்டிக் கொண்டிருக்கின்றன. அவற்றை மழை நீர் காலத்துக்குக் காலம் மூடிக்கொண்டுவர உள்ளே புதைந்துள்ள உடமைகளில் சில அதன்மேலாக மிதந்து இன்னும் அதற்குள் ஏராளம் பொருள்கள் புதைந்துள்ளதைக் கட்டியம் கூறியபடியிருக்கின்றன.



# நான் பார்த்த முள்ளிவாய்க்கால்



■ தவபாரதி

## தரிசிப்பு



முதல்முதலாகமுள்ளிவாய்க்காலுக்குப்போகப்போகின்றேன். கடைசிச் சண்டை நடந்த இடமென்றும் ஏராளம் அப்பாவிகளின் மூச்சடங்கிய தேசம் என்றும் முல்லைத்தீவின் முடிவென்றும்தான் இதுவரை முள்ளிவாய்க்காலைப்பற்றிஎனக்குத்தெரிந்திருக்கின்றது. இறுதிப்போருக்குள்ளிருந்து மீண்டுவந்தஎனதுஉறவுகள்சிலர்கூறிய அவர்களுடையபயங்கரஅனுபவங்களில் இருந்தும்முள்ளிவாய்க்கால்எப்படியிருக்கும் என்று சிறிதளவு ஊகித்துக் கொண்டவன்நான். என்னுடைய கட்புலனில்கற்பனையாக முகிழ்த்திருந்த அந்த முள்ளிவாய்க்கால் இப்போது என் கண்முன்னே நிஜமாகிவிட்டிருக்கின்றது.

ஆம் இப்போதுதான், கிட்டத்தட்ட மூன்று மணித்தியாலயங்களின் பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்துஆரம்பித்தஎனதுமோட்டார்சைக்கிள்பயணம்முள்ளிவாய்க்காலுடன் முற்றுப்பெற்றிருக்கின்றது. வெயில் இன்னும் வேகம் எடுத்துக் கொண்டிருக்கின்றபடியால் ஒரு மரநிழலுக்குள் ஒதுங்கிக் கொண்டேன் மோட்டார் சைக்கிளுடன். நேரம்10ஐயும்தாண்டிவிட்டிருக்கின்றது.

“ஆ... ஊ...”

இதுவரை ஓடிக்கொண்டுவந்த மோட்டார் சைக்கிளின்எஞ்சின்மிகவும்சூடாகிப்போய் எனது கால்களைப் பதம்பார்த்து விட்டது போலும்...!

இல்லை. இல்லை நான் அவதானமாகத்தான் தரையிறங்கியுள்ளேன். நான் இறங்கிநிற்கின்றஇந்தத்தரைதான்எனது கால்களுக்குச் சுட்டுவிட்டிருக்கின்றது. வெம்மைபீறிடும்மணல்தரைக்குள்கால்கள்புதைந்ததால் தான் இந்தநிலை.

\- - - - - -

மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு கடலைநோக்கி நீண்டிருக்கும் குறுக்கு வீதி ஒன்றுக்குள் இறங்கி நடக்கத் தொடங்கினேன். கிரவல் வீதியும் ஆங்காங்கே உடைந்து சிதறியிருக்கும் கட்டடங்கள் சிலவும் இன்னுமிருந்தன. ஆனால் புதிதாகஎழுப்பப்பட்டவீடுகள்பலவும்வெள்ளை வெளீரென்றுவெயிலில்ஒளிபரப்பியவாறு அவற்றைச் சூழ்ந்து மறைத்துக்கொண்டிருந்தன. அங்கு கிறிஸ்தவ ஆலயம் ஒன்றைக்கட்டியெழுப்புப்வேலைகள்நடக்கின்றன. வயதானவர்ஒருவர்அங்குவேலை செய்துகொண்டிருக்கும் வேலையாட்களுக்குத் தேநீர் வழங்கிக் கொண்டிருக்கின்றார்.

“இந்தக்கோயில்ஆரம்பத்திலசின்னனாக இருந்தது. சன்டைக்குள்ளஇதிலவைச்சும் ஏராளம்சனத்துக்குக்கஞ்சிகாய்ச்சிஊத்தினவங்கள். முதல் இருந்த அந்தச் சின்னக்கோயில் நாங்கள் ஓடிப்போட்டுத் திரும்பி வரேக்குள்ள முழுசா அழிஞ்சு போயிற்று. இப்ப திரும்பவும் அதைக் கட்டிக்கொண்டிருக்கிறம்” என்பதாய்த் தனது கதையை நீட்டிக் கொண்டே போனார் அவர்.

வேலிகளால் எல்லையிடப்பட்ட புதிய வீடுகள்இப்போதுஅந்தப்பகுதியில்பரவலடையத்தொடங்கியுள்ளன. அந்தவீதிவளைந்து செல்லும்இடத்திலுள்ளஅந்தக்கல்வீட்டுக்காரர்வேலிஅடைப்பில்ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். உட்புறமாகச்ஒருசிலபெண்கள் நின்று கொண்டிருக்க வெளியில் நின்றிருந்த இரண்டு ஐயாமார் வேலியடைப்பைவெயில்காரணமாகஒத்திவைக்கும்பேச்சுக்களில்ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

அங்கு பரந்துள்ள குடிகளுக்கான கோவிலாகவே இந்தக்கிறிஸ்தவ ஆலயம் இருக்கின்றது. அந்தக் கிளைவீதியிலிருந்து மீண்டு வந்தபோதுதான் கவனித்தேன் பிரதான வீதியருகே இருந்த பெயர்ப்பலகையில் அது கோவில் வீதி என்பதாகப் பெயரிடப்பட்டிருந்தது.

\- - - - - -

மற்றொரு குறுக்கு வீதியூடாகக் கடற்கரை நோக்கி நடந்தேன். இரண்டு மூன்று வீடுகள்தள்ளிவீதிஅருகேயிருந்தஒருவீட்டிலிருந்து ‘பிள்ள சொல்வழி கேட்கமாட்டியோ...? எத்தின தரம் சொல்லிக் கொண்டிருக்கிறன். புத்தகத்தை எடுத்துப் படி என்டு...’ஒருதாயின்குரல்ஓங்கிஒலித்தது. அந்த இளம் தாய் வீட்டு முற்றத்திலுள்ள மரநிழலில் அமர்ந்திருந்து கடகம், பெட்டி இழைத்துக் கொண்டிருந்தார்.

இரண்டு ‘லெடிஸ்’ சைக்கிள்கள் அந்த வீட்டின் முன் கொட்டகைக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. போரின் பின்னர் தனது கணவனைஇழந்துபிள்ளையுடன்தனித்துவிட்டபெண்களில்அவரும்ஒருவர்என்று பின்னர்அவருடன்உரையாடியதிலிருந்து நான்புரிந்துகொண்டேன். தானும்தனது மகளும் வாழவேண்டி அவர் தன்னைக் கட்டமைத்திருக்கின்றார். நிறைந்த போராட்டங்களுக்கு மத்தியில் அவருக்கு மறுமணமும் ஆகியிருக்கின்றது. அந்தக் கதையையும் அவர் நிதானமாகவே சொல்லிமுடித்தார். பெண்கள் புறமொதுக்கப்படுவதற்குப் பிரதான காரணம் அவர்கள் பொருளாதாரத்தில் பின்னிற்பதுதானே. அதனால்தான் இவர் இப்போதும் தன்னால் முடிந்த சிறு சிறு உழைப்புகளைச் சாத்தியப்படுத்திக் கொண்டிருக்கின்றார்.

கூலி வேலைக்குப் போயிருந்த அவருடையகணவனும்மதியச்சாப்பாட்டுக்காக அங்குவந்துசேர்ந்தார். அவருடன்உரையாட எனக்கு ஒரு சில நிமிடங்களையே அவர் ஒதுக்கியிருந்தார். உணவருந்தி வேலைக்குத்திரும்ப அவர் வேகமெடுத்ததுவே அதற்குக் காரணம். அமைதியும் நிதானமுமாக என்னோடு பேசிய அவருடைய வார்த்தைகளில் போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் அநாதரவாக்கப்பட்டமை வெகுவாக அவரைப் பாதித்திருந்தமை தொனித்தது. கணவனை இழந்துதவித்த அந்தப் பெண்ணுக்கு மறுபடியும் வாழ்வளித்திருக்கும்இவர்எனக்குப்பெரிதாகவே பட்டார். இல்லாவிடில் அந்த இரண்டு பெண்களின் வாழ்க்கையும் போரட்டங்களாகவே நீண்டு சென்றிருக்கும் என்பதில் என்ன சந்தேகம்?

\- - - - - -

இப்போது மதியத்தைக் கடந்த வெயில் இன்னும் கொழுந்து விட்டெரிந்தது. பிரதான வீதியின் ஒரு புறத்தில் இராணுவத்தினரின்இருப்பைஉணர்த்தும்மிகப்பெரிய பெயர்ப்பலகைஒன்றுநிறுவப்பட்டிருந்தது. அதுஅந்தக்குறுக்குவீதிக்குள்இராணுவம் நிலை கொண்டுள்ளதை உணர்த்தியது. அந்த வீதிக்குள்ளும் ஒருதடவை சென்று பார்க்கலாம்...

நவீன ரக மோட்டார் சைக்கிள் ஒன்று அந்தக் குறுக்கு வீதிக்குள்ளிருந்து முறுக்கிக் கொண்டு வந்து பிரதான வீதியில் ஏறி மிதந்து சென்றது. அதில் முன்பாக அமர்ந்திருந்த அந்தக் குட்டிச் சிறுவன் எனக்குக் கையசைத்து விடைகொடுத்திருந்ததை அது சென்ற நான் வேகத்தின் காரணமாகப் பின்னர்தான் கவனித்தேன்.

இராணுவத்தின் முகாம் அமைந்திருப்பது அந்தக் குறுக்கு வீதியின் முடிவில் என்பது தெரிந்தது. அதற்கு முன்னால் பல வண்ணங்களில்குளிர்பானங்களைவிளம்பரப்படுத்தும் பதாகைகள் நிலைகொண்டிருந்தன. அங்கே கடை ஒன்று சகல பொருட்களும் தாங்கியதாய் நிறைந்திருந்தது. சற்றுத் தள்ளி இன்னொரு கடையும் தென்பட்டது. எனது உடலுக்குக் குளிர்பானம் ஏற்றதல்லஆகையால்குளிரூட்டப்படாதநிலையிலிருக்கும் பழரசம் தரும்படி கேட்டேன். கடைக்காரர் அதன்படியே செய்தார்.

“எவ்வளவு...?” என்றேன்.

“அடிச்ச விலைதான்” என்றார்.

அதில் 45ரூபா என்று பெறிக்கப்பட்டிருந்தது.

இதே இடத்தில். 2009இல், தேநீர் குடிப்பதற்கு உள்ளங்கையில் ஏந்தித் தொட்டுநக்கிக் கொள்ளக்கிடைத்த சிறிதளவு சீனியை 1500ரூபா கொடுத்து வாங்கியதாக எனது உறவினர் ஒருவர் சொன்னது இப்போது எனது ஞாபகத்துக்கு வருகின்றது.

> இந்தக் கோயில் ஆரம்பத்தில சின்னனாக இருந்தது. சன்டைக்குள்ள இதில வைச்சும் ஏராளம் சனத்துக்குக் கஞ்சி காய்ச்சி ஊத்தினவங்கள். முதல் இருந்த அந்தச் சின்னக் கோயில் நாங்கள் ஓடிப்போட்டுத் திரும்பி வரேக்குள்ள முழுசா அழிஞ்சு போயிற்று. இப்ப திரும்பவும் அதைக் கட்டிக்கொண்டிருக்கிறம்

தமிழ்ச்செல்வி



குண்டுகளை ஏவும் அரக்கர்கள் விழித்து விட்டதை வானைப்பிளந்து கொண்டு வந்த செல்கள் நினைவு படுத்தின. பாவம் கடற்கரையில் இடம் கிடைக்கக் காத்திருந்த எத்தனையேபேர் அந்த ரித்தவர்களாய்ப் பதறி ஓடினர். கடற் கரை வெட்டைவெளி என்பதால் அவ்வி டத்தில் நிற்பதற்கு எல்லோரும் அச்ச பட் டார்கள். அழுகுரல்களின் ஓலம் ஆரம்பித்தது.

அனுபவம்



# நண்பியின் அப்பா...

**மே18.**

**அதிகாலை 4மணி**

நிசப்தமான பொழுது. குண்டு மழைகளும் கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டன. அடுத்த மணி நேரம் என்ன நடக்குமோ?யாரைஇழக்கப்போகின்றோமோ என்ற மனப்பயத்துடன் அன்றைய நிமிடங்கள் கடந்து கொண்டிருந்தன. அவரவர் தமக்குப் பிடித்தமான கடவுளரை மனதாரப் பிரார்த்திக்க மட்டுமே முடிந்தது. கடவுளும் பாவம் எத்தனை எத்தனை அழுகுரல்களைத்தான் கேட்பது. எத்தனை உயிர்களின் சாவுகளை அவர் தவிர்ப்பது.

அன்றைய பொழுது விடியத் தொடங்கியது. அன்று அழுவதைத் தவிர யாருக்கும் வேறெந்த எண்ணமும் இருக்கவில்லை. விடிவதற்கு முன்னர் அனைவருக்கும் காலைக் கடன்களை முடிக்க வேண்டிய கட்டாயம் அதற்கு முதலிடத்தில் இருந்தது.

**நேரம் அதிகாலை 4.30**

நண்பியின் அப்பாவைப் பாதுகாப்புக்கு அழைத்துக் கொண்டு கடற்கரை நோக்கிச் சென்றோம். நண்பி தம்பியின் கைகளை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டாள். முள்ளிவாய்க்கால் கடற்கரை வெளி. அதுதான் அனைவருக்கும் கழிவகற்றும் இடம். தண்ணீருக்கு அலைய வேண்டியதில்லை. கடலன்னை தாராளமாக வந்து வந்து போவாள். அங்கு வெட்கம் என்ற சொல்லுக்கே இடமில்லாமல் போனது. ஒருவாறு எங்களுக்குள் உபாதைகளாகவிருந்த அவற்றை அகற்றிவிட்டுமீளஎங்கள் கூடாரத்துக்குத் திரும்பினோம்.

**அதிகாலை 5.15**

குண்டுகளை ஏவும் அரக்கர்கள் விழித்து விட்டதை வானைப் பிளந்து கொண்டு வந்த செல்கள் நினைவு படுத்தின. பாவம் கடற்கரையில் இடம் கிடைக்கக் காத்திருந்த எத்தனையேபேர் அந்தரித்தவர்களாய்ப் பதறி ஓடினர். கடற்கரை வெட்டை வெளி என்பதால் அவ்விடத்தில் நிற்பதற்கு எல்லோரும் அச்சப்பட்டார்கள். அழுகுரல்களின் ஓலம் ஆரம்பித்தது. "அம்மா... அப்பா.. அக்கா..." எனக் குண்டுகள் காவிச் சென்ற உறவுகளைக் கூக்குரலிட்டு அழைத்தார்கள்.

கடற்கரையிலிருந்து சிறிது தூரம் தான் அனைவரும் இருந்த தறப்பாள் கொட்டகைகள். கடற்கரை மண்ணுக்குள் கட்டிய பதுங்குக் குழிகளும் எவ்வளவு நேரம் தான் தாக்குப் பிடிக்கும். குண்டுகளின் அதிர்வால் அவை தானாகவே மூடிக் கொண்டன.

"பிள்ளையல் கெதியா வாங்கோ. இஞ்சாலிப்பக்கம் தான் அடிக்கிறாங்கள். கொம்மா தனியா இருக்கிறாள். கெதியா வாங்கோ.." அப்பா பதற்றத்துடன் எங்களை இழுத்துக் கொண்டு போய் ஒருவாறு பதுங்குக்குழிக்குள் விட்டு விட்டார். எனக்கென அழுவதற்கு எனது தாய் இல்லாதுபோனாலும் எனது நண்பியின் தாய் எனக்கும் தாயாக மாறினார்.

"பிள்ள வெளில தலை காட்டதையும். நாங்கள் இருக்கிறம். என்ர பிள்ளையளுக்கு ஒண்டு நடந்தாலும் பரவாயில்லை. நான் உம்மளைக் காப்பாத்தாம விடமாட்டன். நீர் பயப்பிடாதையும்..."

அம்மா கூறிய வார்த்தைகள் எனக்கு ஆறுதலாக இருந்தன. அவரது பிள்ளைகளுக்கு ஈடாக அவர் என்னில் அந்த இக்கட்டான தருணத்திலும் அக்கறை கொண்டதில் அவரது நல்ல மனதை நினைத்து எனது தாயின் பாசத்தை உணர்ந்து கொண்டேன்.

'வெளியில வெளிக்கிடேலாது. இன்டைக்கும் சாப்பாடு இல்லப்போல கிடக்கு..." என்றார் அப்பா.

"நீங்கள் வெளியில போகாதேங்க வந்து பங்கருக்க இருங்கோ..." அம்மா, அப்பா மீதும் அக்கறை எடுத்துக் கொண்டார். அப்பா தான் எங்கள் அனைவருக்கும் உணவு தரும் கடவுள். எந்தக் குண்டுச் சத்தத்துக்கும் அவர் பயப்படாதவர். "நீங்கள் பங்கருக்க இருங்கோ... நான் எப்பிடியாவது, எங்க போயாவது உங்களுக்குச் சாப்பிட எதையாவது கொண்டு வருவன். அந்தப் பிள்ளை பாவம் நல்லா பயந்து போய் இருக்கு'

அப்பா அவ்வப்போது என்மேல் எடுத்துக் கொண்ட கரிசனை நண்பியின் குடும்பத்தின் மீது எனக்கிருந்த அன்பை இன்னும் நீடிக்கச் செய்தது. அவர்கள் ஏற்கனவே முகமாலைச் சண்டையில் மூத்த மகனை இழந்த மாவீரர் குடும்பம். நண்பி என்னோட தான் படிச்சவள். அவளைப் போலவே என்னையும் தங்களது மகளாகத் தத்தெடுத்தார்கள் அவர்கள்.

மனைவியிடம் பக்குவமாகக் கூறிக் கொண்டு, அப்பா பதுங்குக் குழியிலிருந்து இருந்து வெளியில வெளிக்கிட்டார். நாங்கள் 4 பேரும் குகைக்குள் மாட்டிக் கொண்டோம். வெளியில ஒரே குண்டுச் சத்தம். பாவம் அப்பா எங்கட வயித்த நிரப் புறத்துக்கு தன்ர உயிரப் பணயம் வச்சு வெளியில போயிற்றார். கையில காசு இருந்தாலும், சாப்பிடுறதுக்கு எண்டு ஒன்டும் இல்ல. எங்கையாவது போய் எதாவது இதுகலுக்கு வாங்கிக் கொடுக்க வேணும் என்ட பரிகாசத்தோட அவர் வெளியில போயிற்றார்.

"அம்மா.. அப்பாவை இன்னும்காணேல. பயமா இருக்கு. யாரையும் விட்டும் பார்க்கேலாது. அவர் போன பக்கம் தான் குண்டுச் சத்தம் கேட்குது. பய்மா இருக்கம்மா.. அப்பா பாவம் .." நண்பி புலம்ப ஆரம்பித்தாள்.

"ஐயோ கடவுளே இந்த மனுசன் சொன்னலும் கேக்காது. நான் எங்கையெண்டு தேடிப் போறது.."

அம்மாவும் ஒப்பாரியைத் தொடங்கீற்றா.

வெளியில செல் சத்தம் காதைப் பிளந்து கொண்டிருந்தது.

**காலை 7 மணி**

சூரியனுக்கும் அன்று நடக்கப்போவது புரிந்திருக்கும் போல பூமிக்கு வெளிச்சத்தைக் கொடுக்க அவன் சற்றுத் தாமதமாகவே வந்தான்.

இரவு முழுக்கச் சாப்பிடாததால சரியான பசி. அப்பா எதாவது கொண்டு வருவார் என்ற எதிர்பார்ப்போட இருந்தம். அப்பாவையும் காணெல்ல". பக்கத்து பங்கரைக்கூட எட்டிப் பார்க்க முடியாத அளவுக்குச் சண்டை உக்கிரமானது. ஒவ்வாரு தறப்பாள்களையும் பிய்த்துக் கொண்டு பொறிபறக்க வந்து விழுந்து கொண்டிருந்தன குண்டுகள்.

'அம்மா...அப்பா... அப்பா..' நண்பி கதற ஆரம்பித்தாள்.

"எங்க போட்டாரே தெரியேல... எங்க நான் தேடிப் போறது பிள்ளை." அம்மா பதில் கொடுத்தா.

"ராசண்ணை றோட்டுப்பக்கமாப் போனவர்.. அங்க கணபேர் விழுந்து கிடக்கினமாம். சன நடமாட்டமும் இல்லலையாம். ஏன் அந்தால விட்டனீங்கள்..." பக்கத்துப் பதுங்கு குழிக்க இருந்த கிளியக்கா சொன்னதைக் கேட்டு, அம்மா கதறியழுதா.

'ஐயோ நான் அப்பவும் சென்னான் தானே போகதேங்கோ எண்டு கேட்டிங்களே நீங்கள்.... நான் என்ன செய்ய..' அம்மாவின் அழுகுரலைக் கேட்டு நாங்களும் கதறியழ ஆரம்பித்தோம்.

அப்பா வருவார் என்ற நம்பிக்கை இருந்தது. பக்கத்தில கதை சொன்னவர்களின் குரல்களும் ஓய்ந்தன. எங்கிருந்தோ வந்த குண்டுகள் அவர்களது குடும்பத்தையே கொன்று போட்டன.

"பிள்ளையல் இதுக்க இருக்கேலாது வாங்கோ.. சனம் இருக்கிற இடம் பார்த்துப் போவம்."

அம்மா எங்களைப் பாதுகாக்கத் துடித்தார்.

**மதியம் 12 மணியையும் கடந்தது**

அப்பாவை நாங்கள் தவற விட்டு விட்டோம். அவருக்கு என்ன நடந்தது என்றே தெரியாது... சனம் இருக்கிற பக்கமா நாங்களும் போய்க் கொண்டு இருந்தம்.. பதுங்கு குழி வெட்டி வெட்டி, எல்லா இடமும் குண்டும் குழியுமாக இருந்தது. மணல் தரையில் எல்லோரும் விழுந்து படுத்துக் கொண்டோம். தலைநிமிர்த்தினால் அவ்வளவுதான். எங்களுக்கு எதிர் எதிரே உடலங்கள் அங்கும் இங்குமாகப் பரவிக் கிடந்தன. அரை உயிர். உயிர்போன பாதி. உயிர் போகாத பாதி. அவலக்குரல்கள் ஓயவில்லை.

"புதுமாத்தளன் கப்பல் கட்டுற இடத்துக்குப் போற போர்ட்டில போகலமாம். நீங்களும் வாறிங்களோ அக்கா..."

பக்கத்தில் இருந்தவர் தனக்குப் பாதுகாப்புக்குக் கொஞ்சம் ஆட்களைச் சேர்த்தார். அம்மாவும் இந்தப் பிள்ளையல எண்டாலும் காப்பாத்திப் போடலாம் எண்டு ஓம் எண்டு தலையாட்டினா.

"படகுக்குக் காசு கட்ட வேணுமாம் அவர் இழுத்தார்..." காசெல்லாம் அப்பா தான் வச்சிருந்தாவர்.. அம்மா யோசிச்சா.. தன்ர கையில கழுத்தில கிடந்ததுகள மளமளவெண்டு கழட்டிக் கொடுத்தா.. எங்கள எப்பிடியாவது காப்பாற்ற வேண்டும் என்ற நினைப்புடன்..

"இரவு 9 மணிக்குப்பிறகு தான் போகலாம். நீங்கள் ரெடியா இருங்கோ.." அவர் நகைகளை வாங்கிக்கொண்டு போர்ட் பக்கம் போனார். எங்களுக்குக் கொஞ்சம் பயம் தெளிஞ்சுது. அழுகுரல்களும், குண்டுச் சத்தங்களும் ஓயவில்லை. இரண்டு நாள்கள் சாப்பிடாதால எங்களால எழும்பி நடக்கக்கூட முடியேல பசி மயக்கம். எப்ப 9மணி வரும் எண்டு அம்மா எதிர்பார்ப்போட இருந்தா.. நகை வேண்டிக் கொண்டு போனவற்ற குடும்பம் எங்களோட தான் இருக்குது. படகில போறதுக்கு 30பேர் சேர்ந்திருப்பம். படகு தேடிப் போனவரைக் காணேல்ல.

**நேரம் இரவு 11 மணி**

அந்த அண்ணேன்ர மனிசி கத்த ஆரம்பிச்சா..

"ஐயோ பேர்ட்டப் பாக்கப் போன மனுசனைக் காணேல்லையே. என்ன நடந்துதோ தெரியேலையே"


படகுக்காகக் காத்திருந்து நேரமும் கடந்தது. கொஞ்சப்பேர் சேர்ந்திருந்து கதைச்சினம்.

"12 மணிக்குப் பிறகு றோட்டக் கடந்தா அங்காலை போகலாம்" ஆமிக்காரன் எலேவுன்ஸ் பண்ணும் சத்தம் தெளிவாக் கேட்டது. "உங்களுக்கு நாங்கள் இருக்கிறம். எங்களிடம் வாருங்கள்.. உங்களுக்கு உதவுவோம்.."

எல்லாரும் லைன்கட்டிப் போக ஆரம்பிச்சினம்...

26








# தோற்றது யார்?

## குணா கவியழகனுடனான தமிழ்நதி அவர்களின் நேர்காணலின் ஒருபகுதி ...

தி. இராஜநாயகி

### கலை இலக்கியத்தில் கொய்தலும் கொழித்தலும்



**தமிழ்நதி** - அரச பயங்கரவாதம் மற்றும் அரசுத்தரப்பிலான போர்க்குற்றம் குறித்த இலக்கியப் பதிவுகளாக உங்கள் எழுத்து அமைந்தது. ஆனால் 2009 மே மாத முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையின் பிற்பாடு சில படைப்பாளிகளால் எழுதப்பட்ட கட்டுரைகளிலும் கதைகளிலும், இறுதி நாட்களில் விடுதலைப் புலிகளால் பொதுமக்கள் மீது இழைக்கப்பட்ட மீறல்கள் முதன்மைப் படுத்தப்பட்டிருந்தன. அவர்களிற் சிலர் உங்களைப் போலவே இறுதிப்போரின் சாட்சியங்களும்கூட. அந்த வகையில், எதிரெதிர் நிலைகளில் நிற்கும் எழுத்துச் சாட்சியங்களை எப்படிப் பார்க்கின்றீர்கள்?

**குணா கவியழகன்** - போரிலக்கியத்தின் புதுமையே அதன் சாட்சித் தளந்தான். நானோ ஏற்கெனவே சொன்னதுபோல படைப்பிற்கும் அனுபவத்திற்கும் பந்தம் இருக்கவேண்டும் என எண்ணுபவன். அப்படிப் பார்த்தால் போரிலக்கியமே சாட்சியத்தின் கால வடிவமன்றி வேறென்ன? அவர்களும் சாட்சிதான். ஆனால், அவ்வாறான ஒரு சாட்சியம் முழு உண்மையின் பகுதியாக அமையாலமேயன்றி, பகுதி உண்மைக்குள் முழு நிதர்சனம் சாகடிக்கப்படுவதாக இருக்கக் கூடாது. முழுமைக்குள்தான் பகுதி இருக்கிறதே அன்றி, பகுதிக்குள் முழுமை உள்ளடங்காது. அவ்வாறு செய்தால் அது திரிபு. அதன் ஜீவனில் மெய் இல்லை. எனவே அது சாட்சியமும் இல்லை என்று ஆகிவிடும். திரிபு என்று வந்தால் அதற்கு அரசியல் உள்நோக்கம் இருக்க வேண்டும். உள்நோக்கம்கொள்ளும் படைப்பு கலை என்று ஆகிவிட முடியுமா?

ஆயினும் பகுதி உண்மைக்குள் உளச்சலுறும் அவர்களது மனநிலையின் வெளிப்பாடுகள் ஆகவும் அவை அமைந்திருக்க வாய்ப்புண்டு.

**தமிழ்நதி** - விடமெறிய கனவு நாவலானது இறுதிப்போரின் பிற்பாடு சிறைப் பிடிக்கப்பட்ட போராளிகளுக்கு, இலங்கை அரசின் புணர்வாழ்வு முகாம்களில் என்ன நேர்ந்தது என்பதைக் குறித்துப் பேசுகின்றது. அத்தனை உடல், உள சித்திரவதைகளுக்குப் பிறகும்கூட சில போராளிகள் தங்கள் போராட்டக்குணத்தை, சுதர்மத்தை, உறுதியை, விடுதலைசார் பெருமிதத்தை இழக்காதிருந்தார்கள் என்று எழுதியிருந்தீர்கள் அஃது உண்மை எனின் அந்த ஓர்மத்தை சாத்தியப்படுத்திய காரணங்களைப் பற்றிக்கூற இயலுமா?

**குணா கவியழகன்** - ஒருத்தி அல்லது ஒருவன் தான் செய்யும் தொழிலால் மட்டும் போராளியாக உருவெடுப்பதில்லை என் எண்ணுகிறேன். அது அவரவர் குணத்தாலும் உருவாவது. அத்தகைய போராளிக்குணவியல்பு கொண்டவர்கள் மீது அதிகாரங்களால் இழைக்கப்படும் உடல், உள சித்திரவதைகள் அவர்களது அடிப்படையான குணவியல்பை மாற்றிவிடாது. இவைபற்றி எனது நாவலின் பல்வேறு பாத்திரங்களினூடு பேசியிருக்கிறேன். அவமானந்தான் போராளிக்குணத்தின் ஓர்மத்திற்கான ஊற்றுமுகம் என நம்புகின்றேன். போர்க் கைதியாகிய வாழ்வில் கிடைக்கக்கூடிய அவமானம் தர்மத்திற்கும் விடுதலை உணர்வுக்குமான சுனையாகவே இருக்கக்கூடியது.

**தமிழ்நதி** - விடமெறிய கனவு நாவல் வழியாக புணர்வாழ்வு முகாம் என்ற பெயரிலான வதைமுகாம் பற்றிய கூர்ந்த அவதானத்துடன்கூடிய துல்லியமானதொரு சித்திரம் வாசகர்களுக்குக் கிடைத்தது நிசிகளில் கொதிக்கும் இரத்தம் கால்களில் வழிந்து கதையாகிப்போனது என்று நீங்கள் முன்னுரையில் குறிப்பிட்டிருக்கின்றபடி கொதித்துக் கொண்டிருந்த ஞாபகங்களை எழுதிய பிற்பாடு பதைப்புத் தணிந்திருப்பதாக உணர்கிறீர்களா?

**குணா கவியழகன்** - அப்படி என்னால் உணர முடியவில்லையே! அனுபவித்த வாதைகளை எல்லாம் எழுத்து அழித்து விடுமா என்ன?

**தமிழ்நதி** - புனர்வாழ்வு முகாம்களில் மனச்சிதைவுக்கு ஆளானவர்கள் பற்றி எழுதியிருந்தீர்கள் அது பற்றி விரிவாகப் பகிர்ந்து கொள்ளமுடியுமா?

**குணா கவியழகன்** - விரிவாகப் பகிர்ந்து கொள்ள இந்தப்பேட்டி பொதுமானதல்ல. விகிதங்கள் வேறுபட்டாலும் அங்கிருந்த அனைவர் மனச்சிதைவுக்கு ஆளானவர்கள் தான். அப்படிப்பட்டதாகத்தான் இருந்தது அந்தப் புணர்வாழ்வு என்று சொல்லப்பட்ட பழிதீர்க்கும் பொறிமுறை. இது நலன்புரி முகாம்கள் என்ற பெயர்களில் கண்காணிப்பு மிகுந்த தடுப்புமுகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருந்த பொது மக்களுக்கும் பொருந்தும்.

அது ஒரு அம்புப் படுக்கை. ஆனால் பீஷ்மருக்கு வாய்த்ததுபோல அவருடைய பிரியத்துக்குரிய அர்ச்சுனனால் ஏவப்பட்ட அம்புகள் அல்ல அவை. எதிரியின் அனைத்து அஸ்திரங்களையும் காலத்தின் சாபத்தையும் ஒரே சமயத்தில் தாங்க நேர்ந்த வாழ்வு அது.

> போரிலக்கியத்தின் புதுமையே அதன் சாட்சித் தளந்தான். நானோ ஏற்கெனவே சொன்னதுபோல படைப்பிற்கும் அனுபவத்திற்கும் பந்தம் இருக்கவேண்டும் என எண்ணுபவன். அப்படிப் பார்த்தால் போரிலக்கியமே சாட்சி யத்தின் கால வடிவமன்றி வேறென்ன? அவர்களும் சாட்சிதான்

**தமிழ்நதி** - நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் பற்றி ஒரு அரசியல் விமர்சகராக...?

**குண கவியழகன்**- என்ன சொல்ல... இலங்கையில் நடந்த பொதுத் தேர்தலில் மேற்குலக நாடுகள் வெற்றி பெற்றுள்ளன. கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் அவையே வெற்றி பெற்றன. இனிவரும் பத்து ஆண்டுகளுக்காகவே அவற்றால் இந்த வெற்றியைத் தொடர முடியும். ஆசிய மறுசீராக்கக் கொள்கையின் நிகழ்ச்சி நிரலை முழுமைப்படுத்துவ தற்கான 'மாற்றுநிலம்' (alternative land) அவர்களுக்கு இப்போது கிடைத்துவிட்டது. இனி நிகழ்ச்சிகள் வேகமாக நகரும்.

மகிந்தவாலும் விடுதலைப்புலிகளாலும் தேற்கடிக்கப்பட்ட மேற்குலகம் தன் மீள் வெற்றிக்காகப் போரில் மகிந்தவுக்கு உதவி புலிகளைத் தோற்கடித்தது.

பின் தமிழருக்கு உதவுவதாய்க்கூறி போர்க்குற்ற விசாரணை என்ற ஆயுதம் தாங்கி மகிந்தவைத் தோற்கடித்தது. தன் வெற்றிக்காகச் சிங்கள வெகுஜனம் எப்போதும் பாதிப்புக்கு உள்ளாகாதவாறும் பார்த்துக்கொண்டது.

சிங்கள வெகுஜன சக்தியும் மேற்குலகத்தைப் பயன்படுத்தித் தமிழர் ஆயுதப் போராட்டத்தை அழித்தது. இப்போது அதனையே பயன்படுத்தி மகிந்தவின் ஏதேச்சதிகாரத்தை அழித்துவிட்டது.

மேற்குலகமும் என்றுமே வெல்வதற்குக் கடினமான தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை தீவிர சிங்கள இனவாதத் துணையோடு வென்றது. மறுவளமாக வெல்வதற்குக் கடினமான சிங்கள இனவாதத்தை தமிழர்களின் தேசிய இன உணர்வின் துணையோடு வென்றது.

*தோற்றது யார்?*
*நன்றி - தீராநதி 2015, செப்ரெம்பர்*

## நண்பியின் அப்பா...

(25ஆம் பக்கத் தொடர்ச்சி)

எங்களுக்குப்போற வழி தெரியேல. சனத்தோட சனமான நாங்களும் சேர்ந்து போனம்..

றோட்டைக் கடக்கிறத்துக்கு தாயார ஒரு கூடாரத்துக்குக் கீழ போய் இருந்தம். குண்டுகளின் சத்தம் அப்பவும் ஓயவில்லை. ஒருவாறு றோட்டைக் கடந்தம். அப்பதான் தெரிஞ்சுது அது நந்திக்கடல் எண்டு. சனம் அலைமாதிரி லைன் கட்டிப் போய்க் கொண்டிருந்தது. எங்கட கையில எதுவும் இருக்கேல. உயிர் தப்பினால்போதும் எண்டு நாங்கள் கடலுக்குள்ளால போனம். எங்களை அரைவாசிக்கு மூடும் அளவுக்குத் தண்ணீர். சின்னப்பிள்ளையல. சிலர் தோளில தூக்கிக் கொண்டு வந்தினம். கடலைக் கடந்து ஒரு மாதிரி ஆமீன்ர கட்டுப்பாட்டுக்குள்ள வந்திட்டம். எங்களுக்கு முதல் போனவை எல்லாம். அங்க லைன் கட்டி நிற்கினம். பச்சை உடையோட சிங்கள மொழியில உரையாடிக் கொண்டு சனத்தைக் கட்டுப்படுத்திறதில அவங்கள் குறியாய் இருந்தாங்கள். அவங்கட குகைக்குள் மாட்டீற்றம். என்ன தான் செய்ய. குண்டுகளின் சத்தம் மட்டும் ஓய்தது. எல்லோரும் உயிர் தப்பிய சந்தோசத்துடன் நின்று கொண்டிருந்தார்கள்..

ஆமிக்காரன் பெம்பிளையல வேறையா.. ஆம்பிளையல வேறையா 'செக்' பண்ணினாங்கள். எங்களிட்ட ஒண்டும் இல்லையே.. ஒரு தண்ணீப் போத்தலும் கிறீம் கிறேக்கர் பிஸ்கற்றும் தந்து உள்ளுக்க ஒரு வெட்டைக்கு அனுப்பினாங்கள்.. களைச்சுப்போன சனம் கொஞ்சம் ஆறுதலா ஒவ்வொரு மரங்களுக்குக் கீழையும் இருந்துதுகள். எங்களுக்குத் தந்த பிஸ்கற்றையும், தண்ணீரையும் குடிச்சு ஒருவாறு பசி ஆறினம். அடுத்து என்ன நடக்குமோ என்ட பயம். ஆமிக்காரண்கள் தடியல் பொல்லுகளோட எங்கள வேவு பார்த்துக் கொண்டிருந்தாங்கள். அவங்களிட்ட போற நேரம் பொழுதும் விடிஞ்சு போச்சு. சனம் வந்து கொண்டே இருந்துது.

மதியம் 12 மணியைக் கடந்தது.

வாகனத்தில சாப்பாடு கொண்டு வந்து எங்களைநோக்கி எறிஞ்சாங்கள். பசி.. ஏதோ கிடைச்சதை ஏந்திப்பிடிச்சம்.

'சாப்பிட்டு ரெடியா இருங்கோ.. வாகனம் வரப்போகுது...' அரைகுறைத் தமிழில் ஆமிக்காரன் சொல்லி முடிச்சான்.

எங்க கொண்டு போப்போறங்களோ என்ட பயம்.. நாங்கள் 4பேரும் அப்பாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தம். அவர் வரேல.. இரவு 9மணி இருக்கும். எங்கள ஒரு காட்டுப் பாதையால பெரிய பஸ்சில ஏத்திக் கொண்டு போனாங்கள். எங்க எண்டே இடம் தெரியேல. கொஞ்ச நேரத்தில ஒர வெளியில கொண்டுபோய் இறக்கி விட்டாங்கள்.. அது செட்டிக்குளம்.

இரவே எல்லாருக்கும் தறப்பாள் தந்தாங்கள் கொட்டில் போடச் சொல்லி. அம்மாவால் துப்புரவாக முடியவில்லை. எங்களுக்குத் தெரிந்ச மாதிரி ஒரு கொட்டில இழுத்துக் கட்டினம். அம்மா பாவம் அவவுக்கு மாமாட நினைப்பு. என்ன நடந்திச்சோ தெரியேல . அவர் உயிரோட இருக்கிறாரே இல்லையோ யாரிடம் கேட்பது.

அவர் எங்களிடம் வருவார் என்ற நம்பிக்கையுடன் அவ இருந்தா. தறப்பாள் கொட்டில்கள் வெளியை நிரப்பியது. சனம் வந்து கொண்டிருந்தது.

ஒவ்வொரு குடும்பங்களும் ஏதோ ஒன்றை இழந்து விட்ட சோகங்களுடன் உயிரிரைக் கையில் பிடித்துக் கொண்டு கரைசேர்ந்தன. அன்று தொலைத்த அப்பாவை இன்றுவரை எனது நண்பியின் குடும்பம் கண்டு கொள்ளவில்லை. அவர் உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? என்பதும் தெரியாது. காலங்கள் உருண்டோடிக் கொண்டிருக்கின்றன.

தொல்புரம் சி.கதிர்காமநாதன்

கட்டுரை



# தாய்மொழி தமிழ் தானே...?



சமீப காலமாகப் பேச்சுவழக்கில் இந்த விடயம் அதிகம் அலசுப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அவ்வப்போது மூத்த அறிஞர்கள், ஆய்வாளர்கள் இந்த விடயம் தொடர்பாகத் தமது எச்சரிக்கைத் தகவல்களைச் சொல்லி வருகின்றனர். அது அப்படி என்னதான் விசயம்?
உலகம் மறுபடியும் அழியப் போகின்றது என ஏதாவது நாள் காட்டி சொல்கின்றதா? அல்லது பாகுபலி 2 பற்றிய தகவல்களா? இல்லை இது அதைவிடப் பிரமாண்டமான விடயம். அது பலி இது வலி.
உலகின் அழிந்து கொண்டிருக்கும் மொழிகளில் தமிழ்மொழியும் ஒன்று. இனிவரும் சுமார் ஐம்பது வருடங்களுக்குள் இந்த மொழி அழிந்து விடுமாம்...!
இந்த உலகில் தோற்றம் பெற்ற பலமொழிகள் அழிந்துபோனதை ஆதாரத்துடன் நிரூபித்து உள்ளார்கள் ஆய்வாளர்கள். அந்த நிலை எமது தமிழ்மொழிக்கும் ஏற்பட்டுவிடுமென எச்சரிக்கை மணி அடித்துள்ளனர் அவர்கள்.
நினைக்கும்போத எமக்கு ஏற்படும் உணவுர்வுகள் எம்மைப் பதைபதைக்க வைக்கின்றன.
ஒரு மொழி, மக்களால் இப்போதும் பேசப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த மொழி எவ்வாறு அழிய முடியும்?
தொற்று நோய்களால் மொழிகள் அழியுமா? இல்லை. ஆனால் தொற்று மொழிகளால் அது சாத்தியப்படும். அவ்வாறாயின் எமது மொழி அழிவதற்கு என்னென்ன காரணங்களுண்டு.
அவற்றை நாம் ஆராயமுடியும். நீங்களும் யோசித்துப் பார்க்கலாம். ஒரு மொழி பேசும் இனம் அழிந்துபோனால் அந்த மொழி அழிந்து போகும் சந்தர்ப்பமும் நிறைய உண்டு. அப்படி இனமொன்று பூண்டோடு அழியும்வாய்ப்பு உண்டா? அல்லது வேறொரு இனத்தால் அழிந்து போகக்கூடிய வாய்ப்பு உள்ளதா?
இல்லாவிடில் அந்த மொழி பேசும் இனம் அழியாமல், அந்த இனமே தனது தாய் மொழியை மறந்து தனது வாழ்வின் எதிர்கால சுய இலாபத்துக்காகத் வசிக்கும் இடங்களில் வழக்கில் உள்ள மொழிகளைக் கற்றுத் தேர்ந்து எழுதவும் பேசவும் ஆரம்பித்து விடுவதால் தாய்மொழி அழிந்து போகும் நிலைக்குத்தள்ளப்படுகிறதா?
'இதெல்லாம் சும்மா நம்ப முடியாத கதை உதை விட்டுப் போட்டு வேற அலுவலைப் பாருங்கோ' என்று புறம் தள்ள முடியாத விடயமாக இந்தக் கட்டுரையைப் படிக்க வேண்டிய தேவை உங்களுக்குள்ளது.
இங்கே, யாழ்ப்பாணத்தில் எத்தனை பிள்ளைகள் ஆங்கிலத்தில் பாடங்களைக் கற்க தொடங்கி விட்டார் கள். இங்கே தனியார் கல்வி நிலையங்கள் அதுவும் ஆங்கிலத்தைப் போதிக்கும் கல்வி நிலையங்கள் முன் பள்ளிகள் எவ்வளவு பல்கிப் பெருகிவிட்டன.
பன்னாட்டுத் தரத்தில் ஆங்கிலத்தில் கற்பிக்கப்படுமென்ற விளம்பரங்களை எங்கும் நாம் பார்க்கின்றோம். ஒவ்வொரு முன்பள்ளிகளும் தமக்கு அடையாளமாக வர்ணமயமாய் அமைந்த உடைகள் மூலம் மாணவர்களை அலங்கரிக்கின்றன. இவர்களா? இந்தப் பிள்ளைகளா? தாம் வாழும் காலத்தில் தமிழ் மொழியைப் பேசப் போகின்றார்கள். இதைவிட ஜேர்மன், பிரெஞ்சு மொழிகளும் புழக்கத்துக்கு வந்துவிட்டன.
கைபேசியில் பதிந்துள்ள தமது பேரப்பிள்ளைகளின் படங்களைக் காட்டி முதியவர்கள்கூட என்ன சொல்கின்றார்கள்.
"இவை மகளின்ர பிள்ளைகள் நிறத்தைப் பாத்தீங்களே,
தமிழ் கதைக்க மாட்டினம்"
இவை எதனை உணர்த்தி நிற்கின்றன?
மொழிகள் கற்றுக்கொள்வது அறிவு வளர்ச்சிக்கு மிகவும் நல்லது. அது மறுக்க முடியாதது. ஆனால் நாங்கள் எவ்வாறு அவற்றைக் கையாளப்போகிறோம்?
இங்கே, தமிழ்பேசும் பகுதியில் உள்ள மக்கள் என்ன மனநிலையில் உள்ளார்கள். ஒருபக்கம் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. மறுபக்கம் மீதி உள்ள முக்கால் வாசிப்பேர் இங்கே வாழ்ந்தாலும் அவர்களின் கனவு முழுக்க வெளிநாடுதான்.
'அவன்ர பிளான் வெளிநாடுதான். இப்ப சும்மா இராமல் வேலை செய்து கொண்டு இருக்கிறான். அடுத்த வருசம் எப்பிடியும் போயிருவன்'
'மகன் ஏ.எல். எடுத்துப் போட்டு கொம்பியூட்டர் கோர்ஸ் படிக்கிறான். படிச்சு முடிய ஏதாவது குட்டி நாட்டுக்கு அனுப்ப வேண்டியது தான்'
(இலங்கையும் ஒரு குட்டி நாடுதானே யாருக்கும் தெரியாதோ)
இப்படி எல்லோரும் வெளிநாடுகளுக்குப் பறந்துபோனால், இராணுவம் பறிச்சு வைச்சிருக்கிற நிலத்தை மீட்டெடுத்துப் போட்டு பிறகு அதை என்ன செய்யிறது? ஆஸ்திரேலியாவில் வசிக்கும் எமது தமிழ் மாணவர்கள் இருவர் ஒரு செவ்வியில் கீழ்க் கண்டவாறு சொன்னார்கள்.
"வெளிநாட்டில தமிழைப் படிச்சு என்ன செய்யுறது? எங்களுக்குள்ளே தமிழ் மொழியை வீட்டில நிக்கிற சனி , ஞாயிறு விடுமுறை நாள்களிலேதான் கதைக்கிறம். வெறும் ரெண்டே ரெண்டு நாள்கள் மாத்திரம் பேசித் தமிழைக் காப்பாற்ற முடியுமா?" எனது மகள் ஒருவிடயத்தைச் சொன்னார்.
'அம்மாவின்ரை சகோதரர்களின்ரை பிள்ளைகளோட நாங்கள் எட்டுப் பேர். இதில் இங்கயிருக்கிற நாலு பேர்தான் தமிழ் கதைக்கினம். மற்ற நாலுபேரும் வெளிநாடுகளில அந்தநாட்டு மொழிகள் கதைப்பினம். எங்களுக்குள்ளயே சரிக்கு அரைவாசிப் பேருக்கு எங்கட மொழி மறந்து போகுது... இப்பிடித் தானே தமிழ்ச்சனம் அரைவாசியுமிருக்கும்...!"
"யோசிக்க வேண்டிய விசயம் தான்" என்றேன்.
தமிழகத் தொலைக்காட்சியில் இனிய குரல் தேடலுக்கான நிகழ்ச்சியில் ஒரு சிறுவன் இனிமையாகப் பாடினான். நடுவராக வந்தவர் அவனைப் பாராட்டினார்
"தம்பி உங்கட தாய் மொழி தமிழ்தானே?"
"இல்லை மலையாளம்"
"மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்டிருந்து நம்ம தமிழ்மொழியைச் சுத்தமாகப் பாடியது போற்றத்தக்க விடயம் தான்" என்பதாய்ப் பலர் சொல்லுகினம். ஆனால் இவராலும் தமிழ் மொழி புறக்கணிக்கப்படும் என்று நான் சொல்லுறன். இப்படி மற்றவர்கள் பாடுவதால் எமது மொழி அழியாது. சுற்றியிருந்த ரசிகர்கள் எல்லோரும் கையைத் தட்டினார்கள். நான் கை தட்டவில்லை. சிலவேளை இந்த மலையாளச் சிறுவன் பாட்டுப் போட்டியில் வெற்றிபெற்று நாற்பது இலட்சம் பெறுமதியான வீட்டையும் ஏராளம் பரிசுகளையும் பெற்றதன்பின்னர் எந்த மொழியில் பாடுவான் தமிழிலா? மலையாளத்திலா?

> தொற்று நோய்களால் மொழிகள் அழியுமா? இல்லை. ஆனால் தொற்று மொழிகளால் அது சாத்தியப்படும். அவ்வாறாயின் எமது மொழி அழிவதற்கு என்னென்ன காரணங் களுண்டு. அவற்றை நாம் ஆராய முடியும். நீங்களும் யோசித்துப் பார்க்கலாம். ஒரு மொழி பேசும் இனம் அழிந்து போனால் அந்த மொழி அழிந்துபோகும் சந்தர்ப்பமும் நிறைய உண்டு.



## தீர்வு

பிள்ளைகள் அதிகம் கேட்டவை
அப்பா எப்போது வருவார்...?

அம்மாக்கள் அதிகம் கேட்டவை
பிள்ளைகள் உயிருடன் இருக்கவேண்டும்...?

ஏதிலிகள் அதிகம் கேட்பவை
சொந்தக்காணிகள் எப்போது விடுவிக்கப்படும்...?

பட்டதாரிகள் அதிகம் கேட்டவை
எங்களுக்கு எப்போது அரச உத்தியோகம்...?


தமிழர்கள் அதிகம் கேட்டவை
அடுத்த தேர்தலில் எங்களுக்குத் தீர்வு...?

வன்னிமண் அதிகம் கேட்டது
ஒப்பாரியும் ஓலமும் குண்டுச்சத்தமும்

களமுனைகள் அதிகம் கேட்டவை
வெற்றி அல்லது வீரச்சாவு.

செரோன்

இனுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்



# புதையல்

## சிறுகதை



அடிவானத்தில் இருள் இன்னும் கலையவில்லை. பனி கலந்த ஈரக்காற்று வெற்றுடம்பைத் தஞுவிப் பரந்தது. வானமும் கருமையும் இல்லாமல், நீலமாக மாறாமல் முடங்கிப்போய்.

வயல்வெளி எங்கும் கதிர் சாய்ந்து புது மணப்பெண் போல் முயங்கிக் கிடந்த காட்சியை இரசிக்கக் கூடிய நிலையில் மனம் இல்லை. கந்தசாமியின் மனம் வேறு ஒரு நினைப்பில் தவித்துக்கொண்டு இருந்தது. பிரியா அம்மன் கோயிலுக்கு வந்திருப்பாளா? என்பதுதான் அந்தக் கேள்வி. ஆட்களற்ற அமைதி தழுவும் அதிகாலைப் பொழுதில் அவளைக் காண்பதென்பது அற்புதமானது. வயல் வெளிக்கு அப்பால் அம்மன் கோயிலின் அருகே யான பிரமாண்டமான ஆலமரமும் கோயிலின் சிறு கோபுரமும் ஒளிர்வில்லாமல் தெரிந்தன. மனம் அந்தரப்படத் தொடங்க விரைவாகப் பிரியாவைச் சந்திக்க வேண்டும் என்ற கிளர்ச்சி எழுந்தது. வரம்பு வழியாக நடக்காமல் எதிரே தென்பட்ட வாய்க்கால் ஊடாகச் சிறிது தூரம் நடந்து குறுக்காகப் பாய கோயிலை அடைந்து விடலாம்.

கோரைப் புற்களை விலத்தியபடி வாய்க்காலின் கறுத்த மண்ணில் கால் வைத்தான். சளுக் கென்ற சத்தத்துடன் அது அவனை இழுத்துக்கொண்டது. சில் என வாய்க்கால் தண்ணீர் முழங்காலை மேவி நின்றது. விரைவாக நடப்பது சிரமமாகப் பட்டது. மடித்துக் கட்டிய சாரத்தைச் சற்றே தூக்கிக் கொண்டு விரையலானான். சற்றுத் தூரம்வரை கரையேற தோதான இடம் வாய்க்கவில்லை. வளைவொன்றில் அன்பு மனம்போல விசாலமான கிளைகளுடன் மருத மரம்.

அதன் வேர்கள் வாய்க்கால் ஓரமாகப் படர்ந்திருந்தன. சருகாகிப்போன மரத்தின் இதழ்கள் வரையப்பட்ட சித்திரங்களாகப் பரவிக்கிடந்தன. மீண்டும் கோரைகளை விலத்தியபடி கரையேறக் கால் வைக்கச் சங்கடமாக இருந்தது. கொட்டிக் கிடந்த மர இதழ்களின் அழகை அழிப்பதற்கு அவனுக்கு மனமில்லாமலும் போனது என்றாலும்... தரையில் வேகம் கொண்டன கால்கள். சுற்றாடலில் மாற்றம் தெரிந்தது. இருள் முன்பைவிடக் கனதியானதுபோலக் காணப்பட்டது.

"அண்ண..."

என்ற அலறல் சத்தம் கேட்ட கந்தசாமி திடுக்கிட்டு சுயத்துக்கு வந்தான்.

"அண்ண... அண்ண..." கதறியபடி ஓடி வந்தான் கந்தசாமியின் தம்பி சிவராசா.

"என்னடா?"

"அண்ண வீட்டுக்குமேல செல் விழுந்து அம்மாவும் தங்கச்சியும்..." என்று சொல்லி முடிக்காமல் மருதமர இதழ்களுக்கு மேல் விழுந்து புரண்டு அழுதான்.

- - - - - -

06.05.2009

இரட்டை வாய்க்காலில் சுரேசின் இடம் கந்தசாமி வந்தபோது இருள் கனத்திருந்தது. சுரேசின் மனைவி, கைக்குழந்தை இரண்டுபேரும் தவன்று சென்று உள்ளே இருக்கக் கூடியவாறான சிறிய இடம் பனங்குத்திகளால் வரையப்பட்ட தரையின் மேலான பாதுகாப்பரண். அதன் முன்னால் ஒரு தறப்பாள் கொட்டகை. மனைவியையும் பிள்ளையையும் உள்ளே இருத்தி விட்டு சுரேஷ் அதன் வாசலில் குந்திக் கொண்டிருப்பான். படுக்க வேண்டும் என்றால் தலையை மாத்திரம் அந்தப் பனங்குத்தித் தடுப்புக்குள் வைத்துக்கொண்டு உடம்பு முழுக்க வெளியில்தான்.

கந்தசாமி கொண்டுபோன தேயிலையில் சிறிது சாயம் குடித்தார்கள். ஒரு பானையும் இரண்டொரு பாத்திரங்களையும் தவிர வேறு எதுவும் அங்கில்லை. "கொஞ்ச வெள்ளைப் பச்சையரிசியும் பருப்பும் இருக்கு" என்றான் சுரேஷ். பிள்ளைக்குப் பால் பிரச்சினை என்று அங்கர்மா இருந்தது கொண்டுவந்த 'பாக்' அ இடையில தவறவிட்டுட்டன் என்றான் கந்தசாமி.

"பிரச்சி னையில்ல நான் என்ர பிள்ளைக்கு நேற்றொரு அங்கர்மாப் பைக்கெற் வாங்கினானான் அதில குடுக்கலாம்தானே" சுரேஷ் பதில் சொன்னான்.

"சரியான விலையாயிருக்கும்" கந்தசாமி கேட்டான்.

"கொஞ்சக்காசுதான் ஒரு பைக்கெற் ரெண்டாயிரத்தி ஐஞ்நூறு ரூபா" என்று சொல்லிச் சிரித்தான் சுரேஷ். சுரேசின் மனைவியும் பிரியாவும் பச்சையரிசியில் சோறு காய்ச்சி பச்சைத்தண்ணியில் பருப்பையும் அவித்துக் கறியாக்கினார்கள். முதல் நாள் முழுக்கச் சாப்பிடாதபடியால் பசியோடு சாப்பிட்டு முடித்தபோது வெயில் பெருநெருப்பைப்போல கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. தேசைக்கல்லில் தோசை வார்த்தபின் எழும் புகையாகப் பரந்த மணலில் இருந்து வெயிலின் அகோரத்தால் புகை கிளம்பிக் கொண்டிருந்தது.

சிங்கள இராணுவத்தின் வெடிச் சத்தங்களும் அதனால் வானத்திலும் தரையிலும் எழும் அதிர்வுகளும் நித்தமும் இடம்பெற்றுவந்ததால் வெயிலைவிட அது பழக்கப்பட்டு விட்டிருந்தது.

> 'ஐயோ எங்கட பங்கருக்க யாரோ போட்டினமே நாங்கள் என்ன செய்வதென்று' இரண்டு பெண் பிள்ளைகள் கண்ணீர் வடித்தனர். ஏராளமான ஆள்கள் செத்துப் போக அதைவிட அதிகமானோர் காயப்பட ரெத்த வாடையும் கந்தக மணமும் கலந்து அந்தப்பகுதி கொடூரமான களமாக மாறியது. செல் சத்தங்கள் இப்போது சற்றுத் தள்ளிச் செல்ல சிறிது அமைதி கிடைத்தது.

இரவு கதைத்துக்கொண்டு எல்லோரும் படுத்தார்கள். கண் சென்ற திசைவரை இடைக்கிடை இருந்த நாலைந்து கல்வீடுகளைத்தவிர மிகுதி எல்லாமே தறப்பாள் கொட்டகைகளும் அவற்றில் மின்னும் விளக்குகளும். சிலரிடம் சோளர் மின்விளக்குகள் இருந்தபடியால் அவை மாத்திரம் சற்றுத்தூக்கலாக. நள்ளிரவில் வழக்கத்தைவிட உறைப்பான வெடிச்சத்தங்கள் கேட்க எல்லோரும் அந்தரப்பட்டு எழும்பினார்கள். மிகச் சமீபமாக வெடித்துச் சிதறும் சத்தங்களும் வெளிச்சமும் வானத்தையும் தரையையும் சல்லடைக் கண்களாகத் துளைத்துக் கொண்டிருந்தன. குண்டுச் சிதறல்களும் குண்டுகளும் சமீபமாக, மிகச் சமீபமாக விழத் தொடங்கின. சுரேசின் தறப்பாள் மீதும் சில விழுந்தன. தறப்பாளின் சில பகுதிகள் எரிந்துபோயின.

வெடிமருந்துக் கிடங்கு வெடித்து எரிபொருள் இருப்பும் எரிவதாகப் பேசிக் கொண்டார்கள்.

பொழுது புலர்ந்தபோதும் வெடிச்சத்தம் குறைந்தபாடில்லை. அந்த இடத்துக்கு அண்மையாக வெடித்த இடத்தின் வெம்மை சுட்டுக்கொண்டிருந்தது. வெம்மைக் காற்று வீசு காற்றாக மாறியிருந்தது. இன்னும் வெடிக்காமல் வேறு பொருட்கள் இருப்பதாகவும் அந்த இடத்தில் இருப்பது அவ்வளவு உசிதமான செயல் அல்ல எனவும் முடிவு காணப்பட்டது. வெயில் தணிந்து மணல் சூடு குறையும் பொழுது வேறிடம் போவதாக இருந்தது. மாலையில் முன்னிருட்டுக்கு முன்னர் சைக்கிளில் கட்டிய உரப்பைகள், ஆண்களின் தோள்களில் உடுப்பு பாக்குகள், பெண்களின் கைகளில் குழந்தைகளுமாகக் கந்தசாமி குடும்பமும் சுரேஷ்" குடும்பமும் புறப்பட்டார்கள்.

வளைந்து வளைந்து சென்ற மண் தெருவில் அவர்களைப்போல பல குடும்பங்கள் சைக்கிள்களை உருட்டிக்கொண்டு நடந்து கொண்டிருந்தார்கள்.

"ரக்ரர்களில் சாமான்களை ஏத்திக் கொண்டு மூன்று நேரமும் சாப்பிட்டபடி இடம்பெரத் தொடங்கின நாங்கள் ஒவ்வென்றாய் இழந்து இழந்து குறைத்துக் குறைத்து இப்ப ஒரு உடுப்புப் பையோட வெளிக்கிட்டு இருக்கிறம் எங்களுக்கு முடிவு கிட்டுதா? அல்லது முடிவை நோக்கி நாங்கள் போறமா எனத் தெரியேல்ல" எனச் சுரேஷ் சொன்னான்.

- - - - - -

இரட்டை வாய்க்காலில் இருந்து முள்ளிவாய்க்கால் நோக்கி நடக்கும் போது கந்தசாமி புதிதாகப் பார்ப்பது போல பிரியாவைப் பார்த்தான்.

ஒருவயதுப் பிள்ளையான சங்கரனைச் சுமந்தபடி தளிர் நடை பயின்றுகொண்டிருந்தாள். வெளிறிக் கசங்கிய சேலை. பறட்டையாய் வெடித்துச் சிலுப்பிய தலைமயிர் என அவளின் அழகு இளமையைக் கேள்விக்குட்படுத்தும் கோலத்தில் அவள் காணப்பட்டாள். என்றாலும் அவளின் இயல்பான வனப்பு சுடர்விட்டுப் பிராகாசிப்பதைக் கந்தசாமி கண்டான்.

அவளைச் சந்திப்பதற்காக அன்று அம்மன் கோவிலுக்குப் போய்க்கொண்டிருந்தபோது வீட்டின்மேல் செல் விழுந்ததாகத் தம்பி சிவராசா அழைத்ததும் மின்னல் வேகத்தில் கந்தசாமி ஓடியதும் நேற்றுப்போல இருந்தாலும் இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன.

தாயையும் சகோதரியையும் வாழ்வு தந்த வயலையும் வனப்புறு வாழ்க்கையையும் இழந்து அவனும் அவனது தகப்பனும் தம்பி

எல்லோரும் கிராமத்தை விட்டுப் புறப்பட வேண்டியதாயிற்று. உரிய கருமங்களை மேற்கொண்டு அத்தனை மனவேதனைகளுக் கும் இடையில் பிரியாவைத்தேடிக் கண்டுபி டித்து நிலமையை விளக்கி எல்லோரும் இடம்பெயர ஆயத்தமானார்கள்.

இருள் அடிவானத்திலிருந்து அசுர வேகத்துடன் புறப்படும் வேளையில் ஊரில் இருந்த ரக்ரர்கள், வண்டில் மாடுகள், பசு மாடுகள், நெல் மூட்டைகள் என எறும்பு வரிசையாக ஊர் புறப்பட்டது.

ஊரின் ஒரு புறத்தினூடாக வயலையும் வயல்காவி நின்ற ஊரையும் அத்தனை வளங்கள் வனப்புக்கள் எல்லாவற்றையும் தின்று தினவெடுத்துக்கொண்டு சிங்கள இராணுவத்தின் யுத்த டாங்கிகளும் கவச வாகனங்களும் பசியடங்காப் படையினரும் வந்துகொண்டிருப் பதாகச் சத்தங்கள் சொல்லிப் போயின.

■ ■ ■ ■ ■

15.5.2009

வட்டுவாகல் சனங்களாலும் வாகனங்களாலும் இறுகிப் போய்க்கிடந்தது. தெருக் கரையோரம் முழுக்க வாகனங்கள் வாகனங்கள். ஒருகாலமும் சனங்களைக் காணாத அந்த வெளி சனக்கூட்டத்தால் அதிர்ந்து மூச்சடங்கிப் போனது. முன்னரே வந்தவர்கள் தறப்பாள் கூடாரமும் கட்டிப் பக்கத்திலே பங்கரும் அமைத்து உரப்பை மண்மூட்டைகள் அணைத்திருந்தனர். உரப்பைகள் தட்டுப்பாடாக நைலெக்ஸ் சாறிகளில் பாக்குகள் தைத்தும் மண்மூட்டை அடித்தனர். பின்னர் வந்தவர்கள் தறப்பாள் கட்ட, பங்கர் அணைக்க இடமில்லாமல் பனை வடலிகளுக்குக் கீழும் இரண்டு தறப்பாள் இடைவெளிகளுக்கு இடை யிலும் படங்கு விரித்துத் தலை சாய்த்தார்கள்.

குடிக்கத் தண்ணீர் இல்லாத சூழல். மணல் நிலத்தில் கிடங்கு வெட்ட மஞ்சள் மண் பிறந்து கக்கியது மஞ்சள் தண்ணீர். ஒரு போத்தலை எடுத்தார். கடும் மஞ்சள் களி கலந்த நிறத்தில் தண்ணீர் முக்கால் போத்தலும் அதன் மேல் மஞ்சள் பூசினால்போல் கொஞ்சம் நன்னீரும் தெரியும்.

வட்டுவாகலுக்கு கந்தசாமி மாறன் குடும்பத்து டன் தான் போனான். மாறனுக்கு மூன்று வயதில் ஒரு மகன். அது தவிர இப்பொது அவன் மனைவி வயிற்றில் பிள்ளை சுமந்துகொண்டிருக்கின்றாள். இரண்டு தறப்பாள் கொட்டகைகளுக்கு இடையில் இருந்த இடத்தில் எதுவும் விரிக்காமலே மணலில் எல் லோரும் கவிழ்ந்தார்கள். இரவு முழுக்க நடை தான் அதிக தூரம் இல்லாவிடினும் வேக மாக நடக்க யாருக்கும் திராணி இல்லை. தண்ணீர் விடாய் வேறு.

எங்கோ திரிந்து மாறன் ஒரு போத்தல் மஞ்சள் களித்தண்ணீர் கொண்டு வந்தான். வடித்துப் பார்க்கத் துணியில்லை. பொறுமையுமில்லை. ஆளுக்கொரு முறடு குடித்துத் தொண்டையை நனைத்தார்கள்.

'திடுப் திடுப்' எனப் பரவலாகச் செல்கள் வீழுந்து வெடித்தன. ஏக காலத்தில் கும்பல் கும்பலாகச் சனங்கள் குளறியளும் பெருங்குரல் கள் கேட்டன. பதறித் துடித்த பலர் அந்தரப்பட்டு அகப்பட்ட பங்கர்களுக் குள் புகுந்து கொண்டனர். மாறன் குடும்பம் கந்தசாமி குடும்பம்போல பலர் மணல் தரையில் குப்புறச் சரிந் தார்கள்.

சொந்தமாக பங்கர் வெட்டியிருந்த குடும்பங்களின் பங்கர்களுக்குள் பின்னர் புதிதாக வந்த பலர் நுழைந்துவிட்ட படியால், பங்க ருக்கு உரியவர்கள் அழுது புலம்பினர்.

"ஐயோ எங்கட பங்கருக்க யாரோ போட்டினமே நாங்கள் என்ன செய்வதென்று" இரண்டு பெண் பிள்ளைகள் கண்ணீர் வடித்தனர். ஏராளமான ஆள்கள் செத்துப்போக அதைவிட அதிகமானோர் காயப்பட

ரெத்த வாடையும் கந்தக மணமும் கலந்து அந்தப்பகுதி கொடூரமான களமாக மாறியது. செல் சத்தங்கள் இப்போது சற்றுத் தள்ளிச் செல்ல சிறிது அமைதி கிடைத்தது. என்றாலும் துப்பாக்கிச் சத்தங்களுக்குக் குறைவில்லை.

"இஞ்சரப்பா" என்றாள் பிரியா.

"என்ன?" என்றான் கந்தசாமி.

"இவனை ஒருக்கால் பிடியுங்கோ. நான் ஒருக்காப் பின்னுக்குப்போட்டு வாறன். வயிறு குழப்பமாயிருக்கு. ரெண்டு மூண்டு நாளாய்ப் போகேல்லத்தானே" அவள் சொன்னாள்.

கந்தசாமி பதறிப் போனான். அந்த நேரத்தில் அந்தக் கடனைக் கழிப்பது என்பது எத்துணை சிரமமானது என்பது புதினமானதல்ல.

இரவு வரும்போது அவன் சிறுநீர் கழிக்க இடந்தேடி எவ்வளவோ சிரமப்பட்டு நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறியின் சில்லுக்குப் பக்கத்தில் சிறுநீர் கழித்த அவலத்தை நினைவு கூர்ந்தான்.

"எங்கயப்பா போகப் போறாய்? இங்க ஒரிடமும் வசதியாய் இல்லையே" என்றான் கவலை யோடு.

'வேற ரெண்டு பேரும் வாறதென்டவ. உதால போய்ப் பார்ப்பம். உங்கால நெருக்கமான வடலி தெரியுது' எனப் பிரியா பதில் சொன்னாள்.

மனமில்லாமல் சங்கரனை வாங்கிக் கொண்டு அவளைப் போகச் சொன்னான். சற்றே முகம் குனிந்த அவள் விழிகளில் ஒருவகை ஒளிர்வு பீறிட்டது. அதில் கலங்கிய கந்தசாமிக்குக் குப்பென வேதனை பிறந்து, நெஞ்சை அடைத்து, "கொம்மா" என்றான் பிரியாவைப் பார்த்து. அன்பு பொங்கிப் பெருகும்போது அவன் இப்படித்தான் அவளை அழைப்பான்.

"இஞ்சேரப்பா நான் கெதியாய் வந்திடுவன். நீங்கள் கவனமாய் இருங்கே" என்றபடி புறப்பட்டாள். அவளுடன் வேறு இரண்டு பெண்களும். மணல்வெளி எங்கும் சனங்களின் தலைகளோடு போட்டி போட்டுக் கொண்டிருந்த வடலிகளூடாகப் பிரியாவும் மற்றவர்களும் போவது தெரிந்தது. திரும்பிப் பார்த்துக்

கொண்டுபோன பிரியா சட்டென்று மறைந்து போனாள். மடியில் கிடத்திய சங்கரனைத் தடவிக் கொண்டு பிரியா போன திசையையே பார்த்துக்கொண்டான். அந்தப் பகுதி யாருமற்ற சூனியப் பிரதேசமாக மாறியதுபோல இருந் தது. செல் சத்தங்கள் மீண்டும் தீவிரமாகின. அண்மையாக, மிக அண்மையாக. கந்தசாமி யின் நெஞ்சம் கிளஸ்ரர் குண்டாய் வெடித்துச் சிதறி யது. பிரியாவை இன்னும் காண வில்லை.

"மாறன் இவனை ஒருக்காப் பார்த்துக்கொள். நான் பிரியாவைப் பார்த்துக்கொண்டு வாறன்" என்றான் மாறனைப் பார்த்து.

"பொறு கந்தசாமி. செல்லடி அமளியாய் இருக்கு பிரியா வருவாள் தானே" எனச் சமாதானப்படுத்தினான் மாறான்.

நேரம் கரைந்தது. பிரியாவைக் காணவில்லை. மறுபடியும் செல் சத்தங்கள் அகோரமாயின. இவர்களுக்கு அருகிலும் வீழ்ந்தன. சிதறல்கள் இவர்கள் பக்கமும் சிதறின. கந்தசாமி நடுக்கத்துடன் எழுந்தான்.

"இல்ல மாறன் பார்த்துக்கொண்டு வாறன்" என்றபடி சங்கரனை மாறனிடம் திணித்தான். பதிலேதும் கேட்காமலே பிரியா நடந்துபோன பக்கம் நடக்கத் தொடங்கினான்.

நடக்க நடக்க பனை வடலிகள் அதைவிஞ்சிய சனங்கள் எங்கும் அவலம், அலறல்.

மனம் பதைபதைக்க காலடிகளை வைக்க வைக்க அந்தப் பாதை முடிவற்ற அத்துவான வெளியாக விரிந்துகொண்டுபோனது.

இன்னும் தூரம் கழிய சன அமளி குறைந்து வடலிகளின் நெருக்கமும் முள்ளு மரங்களும் தென்பட்டன. ஆங்காங்கே செல்கள் வீழ்ந்ததால் பனை வடலிகள் சிதறிச் சிதறிப் பயம் காட்டின.

> பிரியாவின் வெறுங்கழுத்து அவன் நினைவில் புகுந்தது. குளித்துத் புத்தம் புதுப் பூவாய் அவள் வரும் போது செம்மஞ்சள் நிறத்தில் அவள் கழுத்து மின்னும். மின்னலில் கிளம்பும் கவர்ச்சி அவனை மயக்கும்.

முன்பைவிட மணல் அதிகமாகத் தென்பட்டது. சில இடங்களில் குவியலாக. கந்தசாமி தரையைப் பார்வையால் துலாவியபடி போய்க்கொண்டிருந்தான். மணலில் ஒரு மின்னல் கந்தசாமியின் பார்வையைச் சுண்டி இழுத்தது. விரைந்து குனிந்த கந்தசாமி மணலில் மின்னிய அதனை எடுத்தான்.

அது ஒரு சங்கிலி. மஞ்சள் நெருப்பாய் பளீரென்று இருந்தது. சின்னஞ்சிறு பதக்கத்து டன். வெந்து தணியும் அந்தச் சூழ்நிலையிலும் சங்கிலி எடுத்ததை யாராவது பார்த்தார்களா? எனப் பார்த்தான். சற்றுத் தொலைவில் ஆட்கள்

தென்பட்டனர். அவனைப்போல யாரையாவது தேடி வந்தவர்களாக இருக்கலாம். சங்கிலியை எடுத்துக் கைகளுக்குள் அமுக்கிக் கொண்டான்.

பிரியாவின் வெறுங்கழுத்து அவன் நினைவில் புகுந்தது. குளித்துப் புத்தம் புதுப் பூவாய் அவள் வரும்போது செம்மஞ்சள் நிறத்தில் அவள் கழுத்து மின்னும். மின்னலில் கிளம்பும் கவர்ச்சி அவனை மயக்கும். அவளிடம் நகை ஏதும் இருக்கவில்லை. அவள் பிறந்து முப்பத்து ஓராம் நாளின்போது அவள் தகப்பன்போட்ட சிறு சங்கிலி ஒன்றுதான் அவளிடமிருந்தது. சூரிய காந்திப் பூப்போன்ற சிறிய பதக்கம். பூவின் மத்தியில் செம்மஞ்சள் சிவப்பு நிறம் அம்சமாக. அதை ஆசையாகப் போட்டிருந்தாள். அந்தச் சங்கிலி பற்றிய கதை வந்தால், சிறுவயது முதல் அதைப் பாதுகாக்கப் போராடியது முதல் கதை கதையாகச் சொல்லுவாள்.

இடம் பெயர்ந்து விசுவமடுவில் சங்கரன் பிறந்த நேரம் அவளின் மருத்துவச் செலவுக்காகச் சங்கிலியை விற்க வேண்டியதாயிற்று.

கவலையேதும் இல்லாமல் சங்கிலி விற்ப தற்குப் பிரியா சம்மதம் தந்திருந்தாலும் கந்த சாமிக்கு மனம் ஒப்பவில்லை. உழைப்பு பிழைத்த சூழல் அவனுக்கும் வழி தெரியவில்லை. அதன் பின்னர் அவள் வெறுங்கழுத்தைப் பார்க்கும்போதெல்லாம் வேதனை பொங்கிச் சரியும். என்றாலும் என்ன செய்வது.

இந்தச் சங்கிலியை அவள் போடச் சம்மதிப் பாளா என்ற எண்ணமும் கூடவே இருந்தது. அந்த நினைப்புடன் விரைவாக நடக்கத் தொடங்கி னான். செல்கள் மீண்டும் விழத்தொடங்கின. அவை ஒன்றும் அவனைக் கலவரப்படச் செய்ய வில்லை. பார்வையால் துலாவியபடி நடந்தான். கால் தடங்களின் பதிவுகள் மணல் வெளியில் கிடந்தன. அதனைப் பின் தொடர்ந்தான். கண்கள் சென்ற வழியில் அடுக்கடுக் காய்ச் செல்கள் வீந்து சிறிய பிரதேசம் சின்னாபின்னமாய்க் கிடந்தது. வடலி ஓலைகள் எரிந்து புகைந்தபடி இருந்தன. உடல் நடுங்க அதனை நோக்கி நடந் தான். செல்கள் விழுந்த இடத்தில் கிடங்குகள் தான் காணப்பட்டன. ஆட்கள் யாரும் இல்லை. மனம் ஆறுதலைடைய. அப்பால் பார்வை செல்ல அங்கும் சிறு சிறு பள்ளங்கள். வடலிகள் பிரிந்து சிதறிக் கிடந்தன. சில வர்ணங்கள் மின்னின. அவை துணிகள். ஓடிச் சென்றான். மணலில் கறுப்புக் கறுப்பாய் ஏதோ பரவிக்கிடந்தது. பச்சை நாற்றம் மூக்கைத் தொலைத்தது.

நாலைந்து உருவங்கள் வடலிப்பனைக ளோடு சரிந்துபோய்க் கிடந்தன.

மணலில் வழிந்த இரத்தம் நிறம் மாறிப்போய். அவர்கள் யார்? பிரியா எங்கே? அவர்களில் பிரியாவைக் காணவில்லை. சற்றுத்தள்ளி மணல் மூடி ஒரு உடல் கிடந்தது. முதல் தெரிந்தது அதன் கால்தான். குதிக்காலுக்கு மேல் ஒரு கறுத்த மச்சம். அது பிரியா தான். "ஐயோ பிரியா" என்று குளறியபடி மணலில் புதைந்து கிடந்த அவளுடலை மீட்க முனைந் தான் கந்தசாமி. அவன் கையிலுள்ள சங்கிலி மீண்டும் மணலுக்குள் மறைந்து போனது.




ப்ரியமதா பயஸ்

# செல்லும் வழியின் தூரம்...

I

தொடர்



**2008** இன் ஆரம்பமாதங்கள். எப்போதுமே கிபிரும், புக்காரவும் எம்மைப் பதம்பார்க்கும் காலங்கள் அவை. பங்கர் என்பது எமது மொழியில் தாய்மடி. நான் அப்போது உடையார்கட்டு சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியில் பணியாற்றி கொண்டு இருந்தேன். என்னோடு இன்னும் ஐந்துபேர். எமது வங்கிக் கிளைக்கும் ஒரு தாய்மடி இருந்தது. அந்தத் தாய்மடி எப்போதுமே பசிய இலைகளால் நிறைந்து கஞ்சல் காடாக இருக்கும். ஒவ்வொரு நாளும் ஐயா கூட்டிக் கூட்டி குப்பை அள்ளித் துப்புரவாக வைத்திருப்பார். பெரும்பாலும் ஒரு நாளில் ஒருதடவையாவது தாய்மடியைத் தஞ்சமடையாமல் நாங்கள் இருந்ததில்லை.

அந்தப் பதுங்குக் குழி அனுபவங்கள் மறக்கமுடியாதவை. 2006ஆம் ஆண்டு எமது திருமண வைபவத்தில் அன்றும் வீட்டில் பதுங்குகுழி ஒன்று தயார் நிலையிலேயே இருந்தது. அதற்குள் பயஸ் பெரிய பனர்களுக்கு அடிக்கும் 'பெயின்ட்' வகைகள் எப்போதும் இருக்கும். காரணம் அவற்றை வெளியில் வைத்து எடுக்கக்கூடியதான இடவசதிகள் இல்லை. சமாதான காலத்தில் இந்தப் பதுங்குக் குழிகள் பழைய பொருள்களைப் போட்டுவைக்கும் இடமாகவும் தேங்காய்களைப் போடும் இடமாகவும் இருந்தன. இங்கே அந்த சுவாரசியமான விடயத்தையும் சொல்லாமல் விடமுடியாது. நான் பயஸ் அவர்களைக் கண்டது முதல்கொண்டு, அவரோடு பேசிப் பழகியது தொடக்கம் எல்லாமே போர்க்காலம்தான். பயசுக்கு எப்போதுமே அந்தக் கிபிருக்குத்தான் பயம் அதிகம்.

எங்கோ, தொலைவில் அதன் இரைச்சல் கேட்டாலும் தனது பையைத் தூக்கிக்கொண்டு பதுங்குக்குழி நோக்கி ஓடிவிடுவார். கடைசி வரை அவரது வாழ்க்கை பதுங்குக் குழிகளோடு முடிந்தமையும் மிக வேதனையே.

ஒரு போர்ச்சூழலில் நம் சந்திப்பு நிகழ்ந்தமையால் போரே எல்லாவற்றையும் தீர்மானித்து விட்டது. ஆரம்பகாலங்களில் (1999) காலப் பகுதி அப்போது தெருக்கூத்துகள் என்று சொல்லப்படும் வீதி நாடகங்களைக் கலை பண்பாட்டுக் கழகத்தினர் கிராமம் கிராமமாக மேடையேற்றுவர். அப்படித்தான் அன்றும் பரப்புரைக்கூட்டம் ஒன்று வள்ளிபுனம் கிராமத்தில் இடம்பெற்றுக்கொண்டிருந்தது. இசை நிகழ்வு ஒன்றின் இடையிடையே முக்கிய உறுப்பினர்கள் அந்தமேடையில் உரையாற்றிக் கொண்டு இருக்கின்றார்கள். எந்தத் திசையிலிருந்து வந்தது என்று இனங்காண முடியாத வகையில் திடீர் என வந்த ஒரு குண்டு வீச்சு விமானம் தலைக்கு மேலே குண்டுகளைப் போடுவதுபோல் தாழ்ந்து பறந்து பின்னர் மேல் எழுந்து சென்றது. அந்த அந்தரித்த சந்தர்ப்பத்திலேயே நான் பயஸ் அவர்களை முதன் முதலில் கண்டேன். எங்கள் முதல் சந்திப்பில் அன்றே கிபிர் புகுந்துகொண்டது.

போர்க்காலத்திலும் வாழ்வியல் ஒழுங்குநிலை சிறப்பாக இருந்தது. ஒவ்வொருவரும் போரோடு இணைந்த வாழ்வைச் சங்ககால வாழ்க்கையாகவே வாழ்ந்துகொண்டிருந்தனர்.

அன்றும் அப்படித்தான் எங்கோ சுற்றிவந்த கிபிர் தேராவில் பக்கமாகக் குண்டுகளைப் பொழிந்துவிட்டு எழுந்தது. உண்மையில் நாம் பல அனுபவங்களை அப்போது பெற்றிருந்தோம். கிபிர் எங்கே பதிகின்றது, அது அங்கே பதிந்து குண்டு தள்ளினால் எங்கே விழும், அந்த குண்டின் தாக்கம் எவ்வளவு பரப்பளவைத் தாக்கும் என்பதெல்லாம் அதிலிருந்து தப்பியோடிக் கொண்டிருக்கும் எமக்கு அனுபவப் படிப்பினையும் அதுவே வாழ்க்கையுமாகிவிட்ட எமக்கு அது ஒரு கலையாகவும் போய்விட்டது. அதனால் தான் அன்று தேராவில் பக்கமாகக் குண்டுகள் போடப்பட்டதை நான் உறுதி செய்தேன். எனது அருகிருந்தவர்களும் அதை உறுதிப் படுத்தினர். நாமிருக்கும் இடத்திலிருந்து ஐந்து கிலோ மீற்றர்களுக்கு உள்ளேதான் தேராவில் கிராமம் அமைந்துள்ளது. குண்டுகள் விழுந்ததும் ஓங்கி எழுந்த புகைமண்டலம் குறிப்பாக அந்த இடத்தையும் காட்டியது. வீதி எங்கும் மக்கள் அல்லோல கல்லோலப் பட்டு ஓடிக்கொண்டு இருந்தனர். போனவர், வந்தவர் எல்லாம்

"தேராவில் பக்கம் போட்டுட்டான் ஆரார் செத்துதுகளோ..."

என அங்கலாய்த்தனர் மக்கள் குடிமனையில் குண்டுகள் விழுந்ததால் கண்டிப்பாக உயிர்ச் சேதம் அதிகம் ஏற்பட்டிருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

எல்லோரும் குண்டுவிழுந்த கிராமத்துக்கு ஓடுகின்றனர். என் சக பணியாளனும் அன்று தேராவில் பக்கமே அறவீடு செய்யச் சென்றிருந்தான். அவன் வரும்வரை எமது இதயத் துடிப்பு அதிகமாகவே இருந்தது. குண்டுகள் போடப்பட்டுப் பத்து நிமிடங்களில் அவன் அலுவலகத்தில் நின்றான். பயமும், மீண்டும் கிபிர் வந்துவிடும் என்ற எதிர்பார்ப்பும் அவனை வேகமாக அலுவலகத்துக்கு வரவைத்தன என்பது உண்மை. வந்தவனை நாம் மொய்த்துப் பிடித்துக்கொண்டோம்.

"எங்கயடா கிபிர் அடிச்சது? ஆட்கள் செத்தவையா? நீ அப்ப எங்க இருந்தாய்?" அவனுக்கு நாம் தொடுத்த கேள்விகள் காதில் விழுவதாய் இல்லை. தண்ணீர் கேட்டுப் பருகிக்கொண்டு இருந்தான். அவன் மன நிலை ஆறட்டும் என்று பொறுமையோடு இருக்க எம்மால் முடியவில்லை. அவனை குடைந்து எடுத்தோம்.

"எங்கயட வங்கிக்கு வரும் வெண்மதி அக்காவின் கணவர் அந்த இடத்திலேயே சரி' அவன் சொல்லி முடிக்கும்போது என் இதயம் ஒருமுறை துடிப்பை இழந்து நின்றது. வெண்மதி அக்காவுக்குத் திருமணமாகி நான்கு மாதங்களே ஆகியிருந்தன. அவள் இரண்டு, மூன்று வார கருவை தன் வயிற்றில் சுமந்திருந்தாள்.....

இடி விழுந்ததாய் இருந்தது அந்தச் செய்தி. அவன் தொடர்ந்தான்.

"கிபிர் வந்து குண்டு போடும்போது அண்ணன் றோட்டுப் பாலத்துக்குள்ள போய்ப் புகுந்தவராம். பக்கத்தால ஓடின சனம் சொன்னது. குண்டடிபடவில்லை. ஆனால் குண்டின் அதிர்வும் அமுக்க மும் அவற்றை உயிரைப் பறித்து விட்டது" அவன் சொல்லி மூச்செடுத்து, உமிழ்நீர் விழுங்கிச் சுவாசிக்கச் சிரமப்பட டான். சரி விடு நடந்து முடிஞ்சிட்டுது அவனை அப்போது தேற்ற அதுவே சிறந்த வார்த்தையாக இருந்தது எனக்கு.

ஒரு மாதம் கழித்து வெண்மதி அக்கா வங்கிக்கு வந்தார். காய்ந்து வறண்ட சருமம். கண்கள் ஒளியிழந்த முகம். மனம் முழுவதும் வலி. தலையைக் கோதி ஒரு கொண்டை போட்டிருந்தார். அவரைப் பார்த்ததும் வாய் ஏதோ சொல்ல முயல்கின்றது ஆனால் வார்த்தைகள் வர மறுத்துவிட்டன. கர்ப்பிணிகள் அணியும் முளுச்சட்டை ஒன்றைப் போட்டிருந்த வெண்மதியின் வயிறு மேடுகண்டிருந்தது. சோர்ந்திருந்த அவளது முகமும், அடுத்தகட்டம் பற்றி ஏங்கும் அவளது விழிகளும் மனதில் பெரும் துன்பத்தைத் தந்தன. வழமையாக வந்தால் எம்மோடு அதிகமாக அளவளாவும் ஒரு வாடிக்கையாளர் அவள். அன்று அவளது வாய் மௌனத்தையும், கண்கள் வேதனையையும் பிரதிபலித்துக் கொண்டு இருந்தன. அன்று நான் நினைக்கவில்லை எனக்கும் அந்த நிலைதான் ஏற்படும் என்று. அந்த இடத்தில் உயிரைக் காப்பாற்றி வந்தவனும் நினைக்கவில்லை அதுபோல் ஒரு நிலை தனக்கும் வரும் வரப்போகின்றது என்று. அப்போது என்னோடு பணிபுரிந்திருந்த மற்றவர்களும் நினைக்கவில்லை தங்களுக்கும் அதுவே நிலை என்று. இப்போது இந்த இடத்தில் உயிரோடு நின்றுகொண்டிருக்கும் மூவரை அடுத்த சில மாதங்களில் நான் இழந்துவிடுவேன் என்றும் நான் நினைக்கவில்லை. அவர்களின் சாவுகள் என்னை இன்றுவரைத் துடிக்கவைக்கின்றன. அடுத்த பொழுதுகளை எமது உயிர் பிரியும் நாட்களாக எண்ணிக் கழித்த கொடிய காலம் அது. அவர்களை நான் எப்படி இழந்தேன்...?

(தொடரும்)

> அவன் சொல்லி முடிக்கும்போது என் இதயம் ஒருமுறை துடிப்பை இழந்து நின்றது. வெண்மதி திருமணமாகி நான்கு மாதங்களே ஆகியிருந்தன. அவள் இரண்டு, மூன்று வார கருவை தன் வயிற்றில் சுமந்திருந்தாள்.....



## கற்பனைவ கற்றேன்...

ஏசிக்குள் இருந்து கொண்டு
தூசைக் கண்டு தும்மும்
உங்களைக் காண
எனக்குச் சிரிப்பு வருகின்றது.

பங்கர்களுக்குள் பதுங்கியிருந்து
புழுதிப் படலங்களைச்
சுமந்தபடி குண்டுச் சன்னங்களுக்கும்
நச்சுப் புகைகளுக்கும் இடையாக
நான் ஓடிப் பிழைத்தது
அதற்குக்
காரணமாயிருக்கலாம்!

பீசாவும் கோலாவுமாய்
உணுவுண்ணும் நீங்கள்
அதில் பாதியைக்
குப்பையில் போடுவதைப்
பார்த்தும் நான் ஏளனிக்கின்றேன்.
ஐந்தாறு வாரங்கள் கழித்து
ஐந்தாயிரம் ரூபாவென்று
அப்பா வாங்கிவந்த
பாதித்தோங்காயில் வைத்த
காறியை
'செல்'லுக்குப் பயந்து,
பதறி ஓடிக்
கவிழ்த்துக் கொட்டியது
அதற்குக் காரணமாயிருக்கலாம்!

வெளிச்சக்கூடுகளை வியந்து
பார்க்கும் இப்படியான
உங்களுக்கெல்லாம்
முள்ளிவாய்க்காலில்
நினைவுகூர
எப்படி நேரமிருக்கும்...?

நகுலன்

குணசேகரன் சக்தீனா

கட்டுரை



# குற்றமும் தண்டனையும்



# சித்திரவதை




"என்னவொரு சோடிப்பு! சுமணன் தமது பாதுகாப்பில் இருந்து தப்பி ஓடினான் என்பதும் அந்த நேரம் குளத்தில் மூழ்கி உயிரிழந்தான் என்பதும் என்ன ஒரு புனைவு. ஐயமார் நினைச்சிச்சினம்போல காசு கொடுத்தால், எல்லாம் சுலபமாக முடியும் என்று இப்ப அவையே நினைப்பினம் நாசமாப்போனதுகள் எங்களிட்ட காசும் வாங்கிப்போட்டு விசயத்தக் கிளறியும் போட்டுதுகள் என்று" அவரது வயதை மதிக்கத் தெரியவில்லை எனக்கு. "யாழ்ப்பாணப் பெடியன் ஒருத்தன மிகக் கொடுமையான முறையில சித்திரவதை செய்து அடிச்சுச் சாக்கொண்டிருக்கிறாங்கள் பொலிஸ்காரர். அதற்குள் தமிழனும் இருக்கிறான். இது இன்னொரு பக்கமிருக்க கேவலம் என்னவென்றால், குற்றவாளிகள் சார்பில வாதிட்ட இஞ்சத்தேய சட்டத்தரணிகள்! என்னடா இது காசுக்காகப் போற கூட்டமாய் இருக்குதுகளே" தீர்ப்பைப் பார்த்து விட்டுத் தீர்ப்பிட்ட ஐயா தனது மோட்டார்ச்சைக்கிளை உதைத்து இயக்க ஆரம்பித்த வேகம் அவரின் கோபத்தின் தார்ப்பரியத்தைக் காட்டியது.

சித்திரவதை என்பது போர்க்குற்றம் எனவும் அது மனிதவுரிமை மீறல் குற்றமெனவும் இதன்போது குறிப்பிட்ட நீதிபதி குறித்த சித்திரவதை வழக்கைப் பாதிக்கப்பட்டவரது உறவினர், பாதுகாவலர் ஆகியோரது முறைப்பாடுகளின் அடிப்படையிலும் நடாத்த முடியும் என்றார். சித்திரவதைக்கு உள்ளான நபர் உயிருடன் இல்லாவிட்டால் வழக்கை நடாத்த முடியாதெனின் சித்திரவதைக்கு உள்ளான நபரைக் கொலை செய்து வழக்கில்லாமல் தண்டனையிலிருந்து தப்பித்துவிடலாம் என்ற நிலை ஏற்பட்டுவிடும் என்ற உயர் நீதிமன்ற நீதிபதியின் தீர்ப்பையும் சுட்டிக் காட்டி இந்த வழக்கைத் தொடர்ந்து நடாத்துவதற்கு நீதிபதி அன்று முடிவு எடுத்தார்.

"சுமணனை முட்டுக்காலில் அமர்த்தி, கால்களுக்குள் கைகளை விட்டுக் கட்டி, இரண்டு மேசைகளுக்கு இடையில் தொங்கவிட்டு அடித்தார்கள். அதன்போது அவர் சாவடைந்தார். அவர் இறந்த பின்பும் தொடர்ந்து அவருக்கு அடித்தார்கள்" எனவும் சுமணனை இவ்வாறு சித்திரவதை செய்து கொன்ற குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்களது பெயர்களைக் குறிப்பிட்டும் அவர்களை அடையாளம் காட்டியும் அந்தச் சாட்சியின் பதிவு இடம்பெற்றிருந்தது.

அன்று தீர்ப்பிடுதலுக்கான நாளாக அறிவிக்கப்பட்டிருந்தது. நீதிபதி தீர்ப்புக்கு முன்னர் கருத்துரைத்தபோது, எட்டு சந்தேகநபர்களுக்கும் எதிராகச் சித்திரவதைகள் சட்டத்தின் கீழ் சுமணனைச் சித்திவதை செய்யப்பட்ட வழக்கின் தொகுப்புரைகள் நிறைவுபெற்றன. சாட்சியங்களும் நிறைவு பெற்றன. இவற்றுக்குள் முக்கியமான சாட்சியம் ராஜதுரை சுரேஸ்குமாருடையது.

பெலிசாரால் சுமணன் கைது செய்யப்பட்ட களவு வழக்கில் இவரும் இன்னொரு சந்தேக நபராகக் கைது செய்யப்பட்டவர். பின்பு சுமணனுடன் ஒரே அறைக்குள் இவரும் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அடுத்ததாகச் சாட்சியமளித்த லோகேஸ்வரனின் சாட்சியத்தில் தான் கைது செய்யப்பட்டுக் கூண்டில் நிற்கும்போது சுமணனைக் கைது செய்து வந்ததைத் தான் கண்டதாகவும் அப்பொழுது சுமணனின் நெற்றியில் குருதி வழிந்து கொண்டு இருந்ததாகவும் கூறினார். அடுத்தது வைத்தியரின் சாட்சியம் சாவடைந்த சுமணனுக்கு 6வெளிக்காயங்களும், 16உட்காயங்களும் காணப்பட்டதாகவும், அவை புதுக்காயங்கள், இரண்டு நாள்களுக்கு முற்பட்ட காயங்கள் எனவும் கூறியிருந்தார்.

சுமணன் கைது செய்யப்பட்டு 24மணித்தியாலங்களுக்குள் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தியிருக்க வேண்டும். அதுதான் சட்டம். ஆனால் பெலிஸார் அவ்வாறு செய்யவில்லை. அன்றைய தினம் 10.30 மணிக்கு நீதிமன்றில் அவரை முன்னிலைப் படுத்தியிருக்க வேண்டும். மதியத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் சுமணனின் சடலம் எடுக்கப்பட்டிருக்கின்றது. இவற்றை வைத்துப் பார்க்கும்போது சுமணன் சட்டத்துக்கு முரணாகப் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது புலனாகின்றது.

கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தாமல் வெளியில் அழைத்துச் செல்வதற்கு உரிய அனுமதி பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு அனுமதி பெற்றிருக்கவில்லை என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. சுமணனைக் கைது செய்தது தொடர்பில் நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தியிருக்க வேண்டும் குறித்த பெலிஸார் இவற்றைப் பின்பற்றவில்லை.

சுமணன் கைது செய்யப்பட்டமை, பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டமை, வட்டக்கச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டமை, அங்கு சாவடைந்தமை தொடர்பான எந்தவொரு தகவலும் மல்லாகம் நீதவான் மன்ற அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

சுமணன் கைது செய்யப்பட்ட 25ஆம் திகதியிலிருந்து சாவடைந்த 26ஆம் திகதி வரையிலும் சுமணனைக் கொண்டு சென்ற பெலிஸார் 'பி' அறிக்கையில்' குறிப்பிடவில்லை. இவை எழுத்துமூல ஆவணங்களின் மூலம் நிரூபணமாகின்றது.

24மணித்தியாலங்கள்வரை கைது செய்யப்பட்டுப் பொலிஸ் காவலில் இருந்த சுமணனுக்கு 6வெளிக்காயங்களும் 16உட்காயங்களும் ஏற்பட்டிருக்கின்றன. எவ்வாறு இந்தக் காயங்கள் ஏற்பட்டன என்பதை சுரேஸ் கூறினார். அவர் சுமணனுடன் ஒன்றாக இருந்தவர். பொலிசாரும் தமது சாட்சியத்தில் சுமணனும் சுரேசும் ஒன்றாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள் என்று கூறியுள்ளார்கள். இவ்வாறான செயலைப் புரிந்தவர்கள் யார், யார்? என்பதைக் கூண்டில் வைத்து அவர் அடையாளம் காட்டியிருந்தார். இதன் மூலம் 3ஆம் சந்தேக நபர் இந்தக் குற்றத்துடன் தொடர்புபடாதமை உறுதியாகியது. முக்கிய சாட்சியான சுரேசும் இந்த 3ஆம் எதிரியைக் காணவில்லை என்றே கூறினார். ஆகவே அவர் குற்றவாளி இல்லை என்று கூறி மன்று அவரை விடுதலை செய்தது.

8ஆவது சந்தேகநபர் தொடர்பிலும் சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவர் பொல்லுகள் கம்புகளை அந்த இடத்துக்குக் கொண்டு வந்தார் என்று கூறப்பட்டது. ஆனால் இவர் சுமணனை எப்பொழுதும் தாக்கவில்லை. இவர் வட்டக்கச்சிக்குச் செல்லவில்லை எனவே இவரும் குற்றவாளி இல்லை என்று கூறி மன்று அவரையும் விடுதலை செய்தது.

இந்த வழக்கு பொலிஸ் காவலில் இருக்கும் போது சாவடைந்தமை தொடர்பானது. சந்தேக நபர்கள் தரப்பு வாக்குமூலத்தில் அவர்கள் தாம் செய்த தவறை மறுத்தது. அந்தக் கூண்டு வாக்குமூலம் நம்பகத்தன்மையற்றது என்று மன்று எண்பிக்கின்றது.

இந்தக் குற்றம் செய்பவர்களுக்கு எந்த மன்னிப்பும் கிடையாது. பொலிஸ் மக்களைப் பாதுகாக்க வேண்டுமே தவிர இவ்வாறான செயல் களில் ஈடுபடக்கூடாது ஆகவே இதற்குப் பொலிஸார் என்றும் விதிவிலக்கல்ல, குற்றம் செய்பவர்கள் தண்டிக்கப்படவேண்டும்.

அவசரகாலத்தில், போரில், அமைதியான காலத்தில்கூட சித்திரவதை செய்ய முடியாது. சித்திரவதை செய்வது பாரிய குற்றம். 1994ஆம் ஆண்டு சித்திரவதைச் சட்டம் உருவாக்கப்பட்டது இதனாலேயே. எனவே இவர்கள் செய்த கொடூரமான செயலை மன்னிக்க முடியாது. இவர்கள் குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இவர்களை மன்று குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கின்றது.

> கைது செய்யப்பட்டு 24மணித்தியாலங்கள் வரை பொலிஸ் காவலில் இருந்த சுமணனுக்கு 6வெளிக்காயங்களும் 16உட்காயங்களும் ஏற்பட்டிருக்கின்றன. எவ்வாறு இந்தக் காயங்கள் ஏற்பட்டன என்பதை சுரேஸ் கூறினார். அவர் சுமணனுடன் ஒன்றாக இருந்தவர்.

இவர்கள் ஒவ்வொருவருக்கும் 10ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனையும், ஒவ்வொருவருக்கும் தலா 25ஆயிரம் ரூபா தண்டப்பணமும் தண்டப்பணம் கட்டத்தவறின் ஓராண்டு காலம் கடூழியச் சிறைத்தண்டனையும், ஒவ்வொருவருக்கும் 2இலட்சம் ரூபா நஷ்ட ஈடும் கட்டத்தவறின் 1ஆண்டு கால கடூழியச் சிறைத்தண்டனையும் இந்த நஷ்ர ஈட்டைச் சுமணனின் நெருங்கிய உறவினர் ஒருவருக்கும் வழங்க வேண்டும் என்றும் கூறி தீர்ப்பளித்தார்.

இவ்வாறுதான் இந்த வழக்கின் தீர்ப்பு அமைந்தது. சட்டத்தின் தண்டனை இவ்வாறு இருந்தது. மன்றின் செயற்பாடுகளும் முடிவுக்கு வர அன்று மாலையாகி விட்டது. 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி 35இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடியதாகக் குற்றஞ்சாட்டப் பட்டு ஐந்து இளைஞர்களைச் சுன்னாகம் பொலிஸார் கைதுசெய்திருந்தனர். இதன்போது பொலிஸாரின் தடுப்பில் இருந்த சுமணன் பொலிஸாரால் சித்திரவதை செய்து கொல்லப்பட்டார்.





## ஓரெழுத்துப் புதிர்கள்

சிரிக்கும் எழுத்து - ஈ
அழைக்கும் எழுத்து - வா
கேட்கும் எழுத்து - தா
துரத்தும் எழுத்து - போ
வெறுக்கும் எழுத்து - சீ
உதவும் எழுத்து - கை
பூசும் எழுத்து - மை
வலிக்கும் எழுத்து - ஆ
சுடும் எழுத்து - தீ
மலரும் எழுத்து - பூ

ந.கவிப்பிரியா,
வட்டு. இந்து கல்லூரி.

## கலையுருக்காட்டி





இது கண்ணாடிகளை உட்பக்கம் கொண்டதுடன், அதற்கு நடுவில் உள்ள நிறம் கொண்ட அழகிய பொருட்கள் மூலம் விந்தையான உருவங்களைத் தோற்றுவிக்கும் ஒரு கருவியாகும். இதன் ஒரு முடிவிலிருந்து பார்வையாளர் நோக்கும் போது, எதிர்ப்பக்கத்தில் இருந்து வரும் ஒளி சமச்சீர் அமைப்புடைய வடிவியல் சார்ந்த உருவங்களை ஒளித்தெறிப்பு மூலம் உருவாக்கும். கலையுருக்காட்டியைப் பார்த்துக் கொண்டே உருளச் செய்வதன் மூலம் முடிவற்ற சமச்சீரான வடிவமைப்புக்கள் தோன்றும். இது 1817 இல் கண்டுபிடிப்பாளர் டேவிட் பிரூச்டர் ஆல் கண்டுபிடிக்கப்பட்டது. இது பன்னுருக்காட்டி என்றும் அழைக்கப்படும்.

ஞா.கார்த்திகா,
வட்டு. மத்திய கல்லூரி.



## நேரில் வந்த தெய்வம்!

■ டி.அதிசயா

பாடசாலையிலிருந்து பரபரப்புடன் வீட்டுக்கு வந்த இலக்கியாவின் வட்டக் கரிய விழிகள், சுற்று முற்றும் அம்மாவைத் தேடின. அந்தப் பிஞ்சு இதயத்தின் மொழிகளை உணர்ந்துகொண்ட அம்மா, அன்று விரைவாக வீட்டுக்கு வந்தார். அம்மாவைக் கண்ட இலக்கியா, தாய்ப்பசுவை நோக்கி ஓடும் கன்றுக்குட்டியாய்த் துள்ளிக்குதித்து அவரைக் கட்டியணைத்தாள். அம்மாவும் அவளுக்குப் பரிவோடு முத்தமிட்டவாறு, "என்ன இண்டைக்கு என் செல்லம் மிகவும் சந்தோசமாக இருக்கிற மாதிரித் தெரியுது...?" என்று வினவினாள். புன்னகை மாறாத வதனத்துடன், "அம்மா, அன்னையர் தினத்தை முன்னிட்டு நாளைக்குப் பாடசாலையில் நடைபெறவுள்ள பேச்சுப்போட்டியில் நானும் தெரிவாகியுள்ளேன். நீங்களும் அந்த நிகழ்வில் கலந்துகொண்டு, உங்கள் செல்ல மகளின் பேச்சைக் கேட்கவேண்டும்" என்று கூறினாள் இலக்கியா.

வன்னிப்போரில் இலக்கியாவின் அப்பா சாவடைந்த பின்னர், அவளுக்கு அப்பாவாகவும் இருப்பவர் அவளின் அம்மா தான். தன் மகளைப் படிப்பித்துப் பெரிய ஆளாக்கவேண்டும் எனும் தீராக்கனவுடன் இலக்கியாவின் அம்மா வீட்டு வேலைக்குச் சென்றுகொண்டிருக்கிறார். தான் வேலை செய்யும் வீட்டுக்காரரிடம் நாளைக்கு என்ன சொல்லி லீவு கேட்பது என்று அவர் மனம் யோசித்துக்கொண்டிருக்கையில், "அம்மா... என்ன யோசிக்கிறிங்க? நாளைக்கு வருவிங்க தானே?" என்று அம்மாவின் வரவை உறுதிப்படுத்திக் கொண்டாள் இலக்கியா. மகளின் விருப்புக்கு அம்மாவால் மறுப்புச் சொல்ல முடியவில்லை.

இரவு முடிந்து, பொழுது விடிந்தது. கடமைகள் அத்தனையும் முடித்து, இலக்கியாவையும் அழைத்துக்கொண்டு பாடசாலைக்குச் சென்றார் அம்மா. அங்கே அத்தனை அம்மாக்களுக்கும் பிரமாண்ட வரவேற்பு இடம்பெற்றது. சிறந்த கௌரவிப்பு அளிக்கப்பட்டது. விழா மேடையில், தன் மதுரக்குரலால் பேசிக்கொண்டிருக்கிறாள் இலக்கியா. பேச்சுத் தலைப்பு நேரில் வந்த தெய்வம். "உயிரும் மெய்யும் உயிர் மெய்யும் கலந்த மூன்றெழுத்துக் கவிதை அம்மா. தியாகம் என்ற சொல்லின் வடிவம், அம்மா. பிள்ளைகளை இரட்சிக்க நேரில் வந்த தெய்வம், அம்மா. எந்த உறவுக்கும் ஈடிணையற்ற ஜீவன், அம்மா. தம் மேனி கிழித்து, பிள்ளைகளின் பாதம் பூமி மிதிக்க வைக்கின்ற ஒவ்வொரு அம்மாவும் தெய்வம்தான் அழகிய வரம் தான்" என்று முடிவுற்றது அவளது பேச்சு. அவளுக்கு வானளாவிய கரகோசம். ஆனந்தக்கண்ணீரில் நனைந்துகொண்டிருந்தார் இலக்கியாவின் அம்மா. பேச்சுப்போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டன. முதலிடம் பெற்றாள் இலக்கியா. அவளுக்குத் பதக்கம் அணிவிக்க அவளை மேடைக்கு அழைத்தனர் விழா ஏற்பாட்டாளர்கள். அம்மாவுடன் மேடையில் தோன்றிய இலக்கியா, "இந்தப் பதக்கத்தை நான் பெறுவதற்குக் காரணமானவர், அம்மா தான். ஆதலால், அவருக்கே இதனை அணிவியுங்கள். அன்னையர் தினத்தில், என் அம்மாவுக்கு நான் கொடுக்கும் பரிசு இது" என்றாள். "பத்து வயதில் இப்படிச் சிந்திக்கும் ஒரு பிள்ளையா?" என்று மூக்கில் விரலை வைத்தது சபை.

**நீதி : பெற்ற தாயைத் தெய்வமாகப் போற்றும் எந்தப் பிள்ளையும், வாழ்வில் தோற்றதாகச் சரித்திரம் இல்லை.**



## சிரி சிரி

ஆசிரியர்: கோழி ஏன் முட்டை போடுது?
மாணவன்: ஏனென்றால் அதுக்கு 1, 2, 3 போடத் தெரியாது சேர்!!
ஆசிரியர் : !!!

## சிந்தனை

அம்மாக்கள் மகிழும் ஒவ்வொரு தருணத்திலும், பிள்ளைகளுக்கான ஆசீர்வாதங்கள் கிடைக்கப்பெறுகின்றன...

## கண்டுபிடியுங்கள்

மணி சில பூக்களை வாங்கிக்கொண்டு கோவிலுக்குச் சென்றான். ஒவ்வொரு கோவிலுக்குள்ளும் செல்வதற்கு முன்னால், குளத்தில் முழுகி எழுந்தான். என்ன ஆச்சரியம்! அவன் கையில் இருந்த பூக்கள் இருமடங்காயின. ஒவ்வொரு கோவிலிலும் 8 பூக்களைச் சமர்ப்பித்தான். மூன்றாம் கோவிலை விட்டு வெளி வரும் போது, அவன் கையில் பூக்கள் இல்லை. அப்படியாயின், மணி வாங்கிய பூக்கள் எத்தனை?

**விடை** :7 பூக்கள்

## நெருப்புக்கோழி



உலகிலேயே மிகப்பெரிய பறவை நெருப்புக்கோழி. இது ஒட்டகப்பறவை, தீக்கோழி என்றும் அழைக்கப்படும். இந்தப் பறவையினங்கள், எட்டு அடி வரை வளரக்கூடியவை. பறக்க முடியாதவை. நெருப்புக்கோழிகள் நீண்ட கழுத்தையும், கால்களையும் கொண்டவை. மணிக்கு 70 கிலோமீற்றர் வேகத்தில் ஓடக்கூடியவை.

ஆபிரிக்கப் பாலைவனங்களிலும், சவானா புல்வெளிகளிலும் இவை காணப்படுகின்றன. நெருப்புக்கோழி இடும் முட்டைகள், அளவில் பெரியவை. பகலில் பெண் பறவையும், இரவில் ஆண் பறவையும் முட்டைகளை அடை காக்கும்.



## அருமையான அம்மா

ஆனா சொல்லித்
தந்தார்
எங்கள் அருமையான
அம்மா
பேனா பென்சில்
புத்தகங்கள்
வாங்கித் தந்தார்
அப்பா
பழைய நல்ல
கதைகளெல்லாம்
பாட்டி சொல்லித்
தந்தார்
உழைக்க வேண்டும்
எறும்புபோல
தாத்தா நீதி
சொன்னார்
பட்டம் பலூன்
வாங்கித் தந்தார்
எங்கள் பாலு மாமா
விட்டேனா பார்
இந்தா மிட்டாய்
என்று தந்தார் மாமி




றெ.றக்ஷனா,
தரம் - 3 பு,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.



அன்றியா சுரேந்திரன்,
தரம் 1
புனித ஜோண் பொஸ்கோ வித்தி.

யாதுமாகி

தரிசிப்பு



# இப்போது... போர் பாதித்த இரண்டுபேர்

போர் பலரைப் பண்படுத்தியிருக்கின்றது. இன்னும் பலரை அது என்னவோ எல்லாம் செய்திருக்கின்றது. ஆனால் இந்த அதிசயிக்கத்தக்க மனிதர்களையும் அதுதான் உருவாக்கிவிட்டிருக்கின்றது. இவர்கள் இப்போதும் இங்கேயேதான் இருக்கின்றார்கள்.

"இந்த இடத்தில இதோட மூன்றாவது வீடுகட்டியாச்சு. ஒண்டழிய ஒண்டுஎண்டு... என்னதான் நடந்திருந்தாலும் தொடர்ந்து வாழத்தானே வேணும். அழிஞ்சு போச்சு, அவமானமாப் போச்சு, அநாதரவாப் போனம் எண்டு பிசத்திக்கொண்டும் கவலைப்பட்டுக்கொண்டும் இருந்தா என்ன செய்யமுடியும்...? என்னால இன்டைக்கு இப்பிடியிருக்க முடியுமா சொல்லுங்க...?"

இவர் மரியதுரை. ஒரு கடற்றொழிலாளி. இவருடைய நீண்ட கதையின் ஒருபகுதியையே என்னால் இங்கு தரமுடியும். முடிவுற்ற போர் எமது மக்களைப் பாதம்பார்த்திருந்தமை காவியத்திலும் நீண்டது என்று நான் உங்களுக்குச் சொல்லித் தெரிய வேண்டியதில்லையே. இவர் 50களைத் தொட்டுக் கொண்டிருக்கும் ஒரு மனிதர். உடலும் மனமும் இன்னும் வலுவாகத்தான் இருக்கின்றன.





"என்ர சொந்த இடம் முல்லைத்தீவுதான். ஆனால் முள்ளிவாய்க்கால் இல்ல முல்லைத்தீவு - மணல்குடியிருப்புத்தான் பிறப்பு, வளப்பு எல்லாமே. கடற்தொழிலாளி என்டுறதால கடற்கரையோரமாத்தான் வாழ்க்கை. மனிசி, 3பிள்ளைகள், தொழில் என்டு அது போய்க்கொண்டிருந்துது. ஒருநாள் நான் தொழிலுக்குப் போயிற்று வந்துகொண்டிருந்தன். கரையைக் கண்டுபிடிக்கக் கஸ்ரமாக்கிடந்துது. கரையில இருந்த மரந்[illegible]கள் ஒன்டையும் காணேல்ல. போர[illegible]களையும் காணேல்ல. என்ர வீட்[illegible]யும் காணேல்ல. சனமெல்லாம் கு[illegible]ரியடிச்சு ஓடித் திரிஞ்சுகொண்டிருந்த[illegible]ள். கடல் உள்ளுக்குள் வந்து ஆக்க[illegible]யும் எல்லாத்தையும் அடிச்சுக்கொண்டு போயிற்றுதாம்...! மனிசியும் ரெண்டு பிள்ளையளும் கடலோடபோக ஒரு பிள்ளை மாத்திரம் மிஞ்சீச்சுது. பிறகு மணல்குடியிருப்பு, செல்வபுரம், கோயில் குடியிருப்புக் கிராமங்களிலயிருந்த சனங்களோட முள்ளிவாய்க்காலுக்க குடியேறினம். வீடுகள் கட்டிச் சந்தோசமா இருந்தம். சுனாமி அடிச்சுக் கொஞ்சம் ஓய்ஞ்சிருக்க பிறகு ஆமி அடிக்கத் தொடங்கீற்றான்"

2004களில் ஏற்பட்ட சுனாமிப் பேரலைகளால் தன்னுடைய குடும்பத்தின் பெரும்பகுதியை இழந்து விட்டிருக்கின்றார் இவர். எஞ்சிய தனது பெண் பிள்ளையுடன் தனித்துவிட்டிருந்த சமயம், சுனாமியின் பிற்பகுதிகளில் முள்ளிவாய்க்காலுக்குள் குடியேறியி ருக்கின்றார். வன்னிப் பெருநிலப்பரப்புக்குள் பரந்துவாழ்ந்து போரின் இறுதியில் முள்ளிவாய்க்காலுக்குள் சென்று தஞ்சம் அடைந்தவர்கள் போலல்லாமல் ஆரம்பத்திலிருந்தே முள்ளிவாய்க்காலில் வசித்து வருபவர் இவர் என்ப புரிந்தது. இறுதியில் ஏராளம் மக்களுக்கு முள்ளிவாய்க்கால் அடைக்கலம் கொடுத் திருந்தாலும் ஆரம்பத்திலிருந்து அங்கு வாழ்ந்து வரும் இவர் போன்றவர்களை முள்ளிவாய்க்காலும் அலைக்கழிக்கவே செய்திருக்கின்றது.

"அங்காலிப் பக்கம் நந்திக்கடல் இஞ்சாலப் பக்கம் பெருங்கடல். நடுவில நாங்கள். கடைசியா எங்கட ஊரிலதான் சன்டை முடியும் எண்டு நான் நினைச்சிருக்கவில்லை. ஆமி அடிச்சுக் கொண்டு வந்து நந்திக்கடலுக்கு அங்காலிப்பக்கமும் முல்லைத்தீவையும் பிடிச்சிட்டான். முள்ளிவாய்க்காலில இருந்த நாங்கள் வலைஞர்மடம், பொக்கணை நோக்கி ஓடத் தொடங்கினம். பிறகு இடைக்காடு வந்து பனையடி வந்து கரையாம் முள்ளிவாய்க்கால். எங்கட முள்ளிவாய்க்கால் கிழக்கு(மத்திய பகுதி). அப்பிடியே கொஞ்சம் கொஞ்சமா திரும்பவும் எங்கட இடத்துக்கே வந்திட்டம். வீடு அரைமட்டமாகியிருந்தது. வீடு முழுக்கச் சனங்கள். நாங்க காணிக்க ஒரு ஓரமா இருந்தம்.. பிறகென்ன சனங்களோட சனங்களாச் சேர்ந்து வெள்ளாம் முள்ளிவாய்க்கால், வட்டுவாகல் கடைசியா ஆமீற்ற மாட்டுப் பட்டம். பிறகு முகாம் முகாமாக அலைச்சு வாட்டி எடுத்து எங்களுக்கு வேறொரு இடத்தில கணித்துண்டும் தற்காலிக வீடும் தந்தாங்கள். கொஞ்சக்காலம் போக, 2012இலதான் திரும்பவும் இஞ்சால எங்கள விட்டாங்கள்"

இப்போது தனது காணிக்குள் இன்னொரு வீடு கட்டியிருக்கின்றார். தனியார் நிறுவனம் ஒன்று அதற்கு உதவியதாகவும் கூறுகின்றார். ஆனால் மரியதுரையும் சளைத்தவரல்ல ஆடுவளர்ப்பு, மற்றும் பெருங்கடல் தொழில்கள்(வலைகள்) சிறுகடல் தொழில்கள்(நந்திக்கடல்) எனக் காலத்துக்கு ஏற்ப பிழைத்துக் கொள்ளவேண்டிய தொழில் உபகரணங்களையும் தன்னுடைய உழைப்பால், திடமான மனஉறுதியால் தனக்குச் சொந்தமாக்கியிருக்கின்றார். இப்போது அவருடைய இலக்கென்பது ஆரம்பத்தில், மணல்குடியிருப்பில் தான் வைத்திருந்த பெருங்கடல் சென்று தொழில் செய்துவந்த போர்ட் மற்றும் எஞ்சின் என்பவற்றைச் சொந்தப்படுத்தும் கடுமையான உழைப்பாகவே நீள்கின்றது. சுனாமியாலும் போராலும் பாதிக்கப்பட்ட இந்த மரியதுரை, 1993இல் மாத்தளன் சந்தியில் இடம்பெற்ற புக்காராத்தாக்குதலில் தன்னுடைய வலதுகண்ணை இழந்தவர் என்ற உண்மையும் உங்களைப் புல்லரிக்க வைக்கலாம்.

---

நடந்து முடிந்த உயர்தரப் பரீட்சையில் கணிதப்பிரிவில் சித்தியடைந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் 45ஆவது நிலையைத் தனதாக்கியிருக்கின்றான் சிவரதன். பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான இவன் தனது உயர்கல்விக்காகக் காத்திருக்கிறான். அவன் வீட்டுக்கு முன்பாகக் கிளைபரப்பிப் பரந்திருந்த நாவல் மரம் ஒன்றின்கீழ் அமர்ந்திருந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்தான். இவனும் முள்ளிவாய்க்காலைப் பூர்விகமாகக் கொண்டவன் தான். சிறுவயதில் குண்டுச் சத்தங்களாலும் குடும்ப வறுமையாலும் வாட்டி எடுக்கப்பட்டிருக்கின்றான் என்பதை அவனுடைய உடல்வாகு உணர்த்தி நின்றது.

"நான் அப்ப சின்னப்பெடியன். 11,12 வயசுதான் வரும். புதுக்குடியிருப்புப் பள்ளிக்கூடத்தில ஆறாம் ஆண்டு படிச்சுக் கொண்டு இருந்தனான். அப்பா ஒரு விவசாயி. மிசின், கலப்பையள் எல்லாம் வைச்சிருந்தவர். குடும்பத்தில எல்லாம ஆறுபேர். நந்திக்கடலுக்கு அந்தப்பக்கத்துக்கும் வட்டுவாகல் பாலத்துக்கு அங்காலையும் ஆமி வந்திற்றான். சரியான செல்லடி. சத்தம் எந்த நேரமும் காதைப் பிய்த்துக் கொண்டிருக்கும்.

அப்பா கஷ்ரப்பட்டு உழைச்சுச் சேர்த்த எல்லாத்தையும் வீட்டோட விட்டுட்டு எங்களைக் கூட்டிக்கொண்டு இடம்பெயர வெளிக்கிட்டார். அண்டையில இருந்து எனக்கும் தம்பியாக்களுக்கும் பள்ளிக்கூடமும் இல்ல படிப்பும் இல்ல. பொக்கணைக்கு ஓடிப்போய் சாப்பாடு, தண்ணியில்லாமச் செல்லடிக்குப் பயந்து செத்துப் பிழைச்ச காலமது. கடைசியா முகாமுக்க போய் ரெண்டு வருசத்துக்குப் பிறகுதான் பள்ளிக்கூடத்தையும் புத்தகம் கொப்பியையும் கண்ணில கண்டன். 6ஆம் ஆண்டும் 7ஆம் ஆண்டும் போக 8ஆம் ஆண்டில இருந்துதான் பிறகு படிக்கத் தொடங்கினன்"


சிவரதன் சிறுவயதில் போரால் மிகவும் பாதிக்கப்பட்டவன் என்றாலும் படித்துத்தான் ஒரு உயர் நிலைக்குவரவேண்டும் என்ற தனது மிகப் பெரிய மனப்பலத்தைக் கடைசி வரைக் கைவிடவில்லை.

"2012இல திரும்பவும் எங்கட வீடு வாசலுக்கு வந்தம். எல்லாமே தரை மட்டமாகக் கிடந்திச்சு. மிசின், இரும்புக்கலப்பைகள் எல்லாமேசிதறிச்சின்னாபின்னமாகிப் போய்க் கிடந்திச்சு. சிலதைக் காணவும் இல்லை. அஞ்சாறு வளவுகள் தள்ளியும் தூக்கி எறியப்பட்டுச் சிலதுகள் கிடந்துது. அப்பா கஷ்ரப்பட்டு உழைச்சுச் சேர்த்திருந்த எல்லாம் ஒன்டுமில்லாமப் போயிற்று. வயல் செய்யவும் சின்னதாத் தோட்டம் வைக்கவும் அப்பா சரியாக் கஷ்ரப்பட்டார். ஆனால் எங்களைப் படிப்பிக்க அவர் பின்னிக்கேல்ல. ஆனா எனக்கு அடிக்கடி செல்லடிக்கிற, கிபிர் குண்டுபோடுற பயக் கனவுகள் நிறையவரும். இப்பிடியான நிலைமையிலதான் சின்ன வயசிலயிருந்தே நிறையக் கஸ்ரங்களை அனுபவிச்சு வளந்த எனக்கு நல்லாப் படிச்சுப் பெரிய ஆளா வரவேணும் என்ட எண்ணம் வந்துது. சண்டையில எல்லாத்தையும் இழந்து வாழவழியில்லாமல் கிடந்த அப்பா, அம்மாவுக்கும் கொஞ்சநாள ஒரே யோசினை. பிறகு கொஞ்சம் கொஞ்சமா அப்பா தேற வெளிக்கிட்டார்.

சின்னச் சின்னதாத் தோட்டமும் வைக்க வெளிக்கிட்டார். யோசிச்சு யோசிச்சு என்ன வரப்போகுது...எல்லாத்தையும் விட்டுட்டுப் படிப்பம் என்டு நானும் முடிவெடுத்தன். இப்ப கம்பெஸ் வரைக்கும் போயிற்றன். தொடர்ந்தும் பெரிய படிப்புகள் படிக்கவேணும்..." என்ற சிவரதன் சிறிது நேரம் யோசித்தான். போர் இவனைப் பக்குவப்படுத்தியிருப்பது மட்டுமன்றி எவ்வளவு பெரிய தடைகளையும் தாண்டவும் அவனுக்குக் கற்றுக் கொடுத்திருக்கின்றது போலும்...!

சி.ப.வேந்தன்

ஈழத்து சினிமா





# வேலி

## வலியை உணர்த்தும் காவியம்

உலகில் உள்ள பல் வேறுதுறைகளிலும் இருப்பது போன்றில்லாமல் சினிமாத்துறையில் பெண்களின்பங்களிப்புஎன்பது ஒப்பீட்டளவில் மிகக் குறைந்த ளவிலேயே காணப் படுகின்றது. நடிப்புத்துறையில் இவர்களின் வகிபங்கு ஓரளவுகாணப்பட்டாலும்திரைப்படஇயக்கம் மற்றும் அதனுடன் சார்ந்த பல்வேறு தளங்களிலுமான அவர்களது பங்கு மிகச்சொற்பஅளவிலேயே காணப்படுகின்றது.

இயக்குநர்களைத் தேடினால் அபர்னாசென், தீபா மேத்தா, சமீரா மெக்பல்ப் தமிழிலில் சுகாசினி, ரேவதி, சுதாபோன்றசிலரையும்நாம் விரல்விட்டு எண்ணிவிடலாம். தமிழ் சினிமாவில்விடுதலைப்புலிகளதுகாலத்தில்சகல துறைகளிலும் தம்மை அடையாளப்படுத்தி வந்த பெண்கள் திரைப்படத்துறையி லும் தம்முடையமுத்திரையைமிகஆழமாகவும் அழகாகவும் பதித்திருப்பது கவனிக்கத் தக்கது.

வெறுமனே திரைப்பட நடிப்பில் மாத்திரம் தம்மை அடக்கிக்கொள்ளாது திரைத் துறை சார்ந்த அனைத்துப்பிரிவுகளிலும் தம்முடையதிறனைவெகுவாகக்கட்டமைத்திருந்தனர். உலக ஒழுங்கைப்போலவே இங்கேயும் ஒப்பீட்டளவில் ஆண்களுக்கு நிகரான எண்ணிக்கையில் பெண்களின் இருப்பு அமையாதுவிட்டாலும்படைப்பின்தரத்தில் சமஉயரத்தைப்பெண்கள்எட்டியிருந்தனர் எனலாம். அவர்களில்நிமலாகுறிப்பிடத்தக்க இயக்குநராகத் தன்னை அடையாளப்படுத்தியவர். இதன்படிவேலிதிரைப்படம்அனைவரது கவனத்தையும் ஈர்த்த அவரது மிகச் சிறந்த படங்களில் ஒன்று.

மனிதகுலவரலாற்று ஆரம்பங்களிலிருந்து குறிப்பிட்டசிலசமூகங்களிடையேகடைப்பிடித்துவரும் சடங்குசார்ந்த வாழ்வியல் முறையில் காலங்காலமாக மிக முக்கிய பிரச்சினையாக இருந்துவரும் மறுமணம் பற்றிப் பேசுகின்றது திரைப்படம். ஆதிலட்சுமிசிவகுமாருடையவேலிஎனும்சிறுகதையைத் திரைக்கதையாக்கி படத்தொகுப்புச் செய்து இயக்கியிருக்கின்றார் நிமலா. தமிழீழத் தேசியத்தொலைக்காட்சி தயாரித்திருக்கின்றஇந்தப்படத்தில்முக்கியபாத்திரமேற்று நடித்திருக்கின்றார்இசைப்பிரியா. இவரோடு வேந்தனா, கண்ணன், கரிகாலினி, இராசம்மா ஆகியோரும் நடித்திருக்கின்றனர். அகல்விழியின் ஒளிப்பதிவுக்கு இசையமைத்திருக்கின்றார் ராஜா. போர் தந்துவிட்டுப் போனபலவாழ்வியல்சுமைகளில்பெண்எதிர்கொள்ளும்பிரச்சினையைப்படம்பேசுகின்றது. போர்நெருக்கடிகளில், போராளிகள்பற்றாக் குறையால் போராளி அல்லாத பலர் தங்களால் ஆன பல உதவிகளை பின்தள களமுனைகளில் செய்துவந்தனர். அவர்களில் திருமணமான ஆண்கள் குடும்பச் சூழல் காரணமாக ஊதியத்துக்கும் தம்மாலான உதவிகளைச்செய்துவந்தனர். அப்படிஊதியத்துக்காகக் களமுனை செல்லும் லட்சுமியின்கணவன்இராணுவத்தால்சுட்டுக்கொல்லப்பட லட்சுமியால்தான் தங்கள் மகன் இறந்தான் என்ற கணவனது உறவுகளின் பழியோடு தனது மூன்று வயது மகளுடன் வாழ்ந்து வருகிறாள் லட்சுமி.

தோட்டவேலை, மாவிடித்தல், வீட்டுவேலைகள் எனத் தன்னுடைய வறுமையைப் போக்கலட்சுமி கிடைக்கும் வேலைகளைச் செய்து காலத்தைக் கழிக்கிறாள். தோட்டத்தில் கணக்காளராக இருக்கும் முத்துவோடு லட்சுமியின் மகள் சுபி அன்பாகப் பழகுகின்றாள். சிறியவயதில்தன்னுடையவாழ்க்கையைத் தொலைத்துவிட்டு அநாதரவாக நிற்கும்லட்சுமி மீது முத்துவுக்குக்காதல்ஏற்படுகின்றது. அதை அவன் ஒரு நாள் தோட்டத்தில் வைத்து நாகரிகமான முறையில் தெரிவித்தபோது லட்சுமி எதுவும் பேசாது சுபியைத் தூக்கிக்கொண்டு வீடு வந்துவிடுகிறாள். ஊர்ப் பெண்கள் முத்துவையும் லட்சுமியையும் சேர்த்துவைத்துத் தவறாகப்பேசத் தொடங்குகின்றனர். கணவனுடைய குடும்பத்தாரும் தவறாகப்பேச இறுதியில் சுபியைத் தன்னுடைய மகளாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கும் முத்துவை அவள் ஏற்றுக்கொள்கின்றாள்.

காலங்காலமாகப் பெண்களை நோக்கி வீசப்படும் சம்பிரதாய அம்புகள், ஒருபெண் தன்னுடைய சுய விருப்பின் மீதான வாழ்க்கையைக்கட்டியெழுப்பஎப்படித்தடைகளாக வருகின்றன? அதை எப்படி அவள் எதிர் கொள்கின்றாள் என ஒரு வாழ்வியல் பாடத்தைநிகழ்த்திவிட்டுப்போகின்றதுபடம். பலகாலங்களுக்கு முன்பே புரட்சிகரமாகக் கையாளப்பட்ட அரைப்பழசான கதையாக இருந்தாலும்இன்றுவரையிலும்அதற்கான தீர்வுகள்பலரால்நிராகரிக்கப்படும்ஒன்றாக இருப்பதால் எந்தக் காலத்துக்கும் பொருந்தும் என்பதால் அது படமாக்கப்பட்ட நேரமும் சரி இன்றைய நேரமும் சரி காலத்தோடுஒன்றித்துப்போகின்றது. இறுதியில் பெண் ஆணைச்சார்ந்துதான் வாழ வேண்டுமென முடித்திருப்பதும் படத்தின் தலைப்போடு கதை ஒத்துப்போவதும் புரட்சிப்பெண்களுக்கும் விதிவிலக்கல்ல என்பதைக் காட்டுகின்றது.

மிக இளவயதில் கணவனை இழக்கும் ஒரு பெண் தான் வாழும் சமூகத்தால் எவ்வாறு ஒதுக்கப்படுகின்றாள்? எப்படியான பிரச்சினைகளை அவள் எதிர்கொள்கிறாள்? என்பதைப்படம் மிக இயல்பாகவே பேசுகின்றது. கிணற்றில் தண்ணீர் அள்ளவரும்போது சகுனம் பார்த்தல், பிற ஆணோடு இணைத்துத் தவறாகப் பேசுதல் எனக் காலங்காலமாகஎமதுவாழ்க்கைக்குள்நிகழும்சமுதாய எதிர்மறைப் பழக்கவழக்கங்களை அப்படியே பச்சையாகக் காட்டுவது படத்தினதும் வாழ்க்கையினதும் நேர்மையைக் காட்டுகின்றது. தண்ணீர்அள்ளவேண்டாம்எனத் தடுத்தபோதுஇரவில், விளக்குவெளிச்சத்தில் தனித்துக் கிணற்றை வெட்ட லட்சுமியை அவளது தன்மானமும் சுயகௌரவமும் தூண்டிவிடுவது லட்சுமியைப்போன்ற ஒட்டுமொத்த பெண்களதும் மன வைராக்கியத்தைக் காட்டுகின்றது.

அதேலட்சுமிஇரவில்தினமும்தன்னுடைய நிலையை நினைத்து அழும்போதும் அவர்களதுஉள்மனமென்மையையும்ஒருசேரக் காட்டியிருப்பதில் பெண்களது மனவெளியைமிகசரியாகப்படம்பிடித்துக்காட்டுகின்றார் இயக்குநர். கணவனின் தந்தையார் திட்டும்போதும், தாயார் மகளை(சுபி) வலுக்கட்டாயமாகவீட்டில்கொண்டுசென்றுவைத்திருக்கும்போதும் ஒரு மருமகளாக அமைதியாகவும் ஒரு தாயாக ஆக்ரோசமாகவும் செயற்படும் லட்சுமி அனைத்துப் பெண்களின் பிரதிபலிப்பும்கூட.



ஏராளமான உயிர்களைத் தின்றுவிட்ட போர் அற்புதமான கலைஞர்களையும் தன்னுடைய பசிக்கு இரையக்கிக்கொண்டது காலத்துயர். கலைஞன் வீழலாம் அவனால் விதைத்துவிட்டுப்போன கலை அழியாது. இசைப்பரியா எனும் அற்புதமான கலைஞரைத் தின்றுவிட்டதில் காலமும் இனமும் வெட்கப்படட்டும்.

சகலஇளம்விதவைப்பெண்களின்பிரதிநிதியாகலட்சுமிஎனும்ஒருபாத்திரம்மூலம் வாழ்ந்திருக்கின்றார்இசைப்பிரியா. இழந்தவைகளின் வலியை அவரது கண்கள் மிக அற்புதமாகப் பேசிவிடுகின்றன.

பேசாதவார்த்தைகள்ஒவ்வொன்றையும் அந்தக் கண்களால் கடத்தி அனைவரையும்கலங்கவைத்துவிடுகின்றார். ஆறுதல் சொல்லும் கிழவியிடம் சலித்த பார்வையாகட்டும், "அம்மா ஏன் சிரிக்கிறேல்லை" என்று மகள் கேட்கும்பொழுது ஒப்புக்குச் சிரித்தலாகட்டும், "ஏன்பிள்ளைநீஒருகலியாணத்தைசெய்யன்"எனக்கூறும்போது ஒரு சந்தோசத்தோடு பார்த்தலாகட்டும், கணவனின் ஒளிப்படத்தைப் பார்த்தல், மகளைக் கட்டிக்கொண்டு எதிர்கால முடிவை எடுக்கும்போது உதடுபிரியாத ஒற்றைச்சிரிப்பாகட்டும் எல்லாவற்றிலும் வார்த்தைகளின்றித் தன்னுடைய முக அசைவுகளாலேயே பாத்திரத்தை நிரப்பிவிடுகின்றார் அவர்.

அவருக்குப் போட்டியாகத் தன்னுடைய இயல்பானசெய்கைகளால்நடிக்கவைக்கப்படுகிறோம் எனத்தெரியாமல் வெகுவாக இரசிக்கவைக்கின்றது வேந்தனா எனும் குழந்தை. தான்தோன்றும்ஒவ்வொருசட்டகத்திலும்தன்னைநிறைத்துவிட்டுப்போவது அனைவர் மனதையும் குழந்தையாக்கி விடுகின்றது. "அம்மா என்னில கோவமா" எனும்போதும், முத்துவுடன்தந்தையுடைய நினைவுநாளில்உணவுண்ணும்போதும், கண்களைச் செருகிச் சிரிக்கும்போதும் தோன்றும் காட்சிகளில் அழகாக இரசிக்கவைக்கின்றது குழந்தை. முத்துவுடைய பாத்திரமும் ஊர் வம்பு பேசும் பெண்களது பாத்திரமும் மாமா, மாமி எனவரும் பாத்திரங்களின் உணர்வுப்போதாமை படத்தின் உயிரோட்டத்தைக் குறைக்கின்றது. வயதான பெண் பாத்திரங்கள் தமது இயல்பான நடிப்பால் இரசிக்கவைக்கின்றன.

இசை மிக மிக இதமாகக் கதையோடு நெருங்கவைக்கின்றது. வாத்துச் சத்தம், நாய்களின் ஊளையிடல், சுபாவின் குரலிசை எனப் பிண்ணனி இசை படத்துக்குப் பலத்தைக்கொடுத்திருக்கின்றது. ஒளிப்பதிவுக் காட்சிகள் நெருக்கமாகத் தம்மோடு பார்வையாளனை அழைத்துப்போவதில் வெற்றிகண்டிருக்கின்றன. நெருப்பும் தண்ணீரும் ஒரு குறியீடாகவே படம் முழுவதும் வந்துபோகின்றன. ஒரு குண்டின் சன்னம் குறித்தஒருவரின்உயிரைமாத்திரம்விழுங்கிவிடுவதில்லை ஒரு குடும்பத்தை, ஒரு சமூகத்தை, தனி மனித உணர்வுகளை என்று அவைமிகநீண்டபாதிப்பைத்தந்துபோகின்றது. இழப்பின்பின்னரானவாழ்தல்என்பது இழப்பைவிடக்கொடியதுஎனஉணரவைக்கின்றது வேலி திரைப்படம். ஏராளமான உயிர்களைத் தின்றுவிட்ட போர் அற்புதமான கலைஞர்களையும் தன்னுடைய பசிக்குஇரையக்கிக்கொண்டதுகாலத்துயர். கலைஞன் வீழலாம் அவனால் விதைத்துவிட்டுப்போனகலைஅழியாது. இசைப்பரியா எனும்அற்புதமானகலைஞரைத்தின்றுவிட்டதில் காலமும் இனமும் வெட்கப்படட்டும்.

"அம்மாஅப்பாவைஆமியேசுட்டவன்"என்று லட்சுமியை(தாய்)சுபி(மகள்)கேட்கும்போது அவளுடைய மௌனம் ஏராளம் பதில்களைச் சொல்ல விளைந்திருக்கும் அதில் "என்னையும்தான்" எனும் ஒற்றை வார்த்தையும் இருந்திருக்கலாம்...!





# மகிழ்வான குடும்பம்

அ.அஜந்தன்

கட்டுரை



மகிழ்வாக உள்ள குடும்பங்களில் பெரும்பாலான குடும்பங்கள் சிறுவர்களைக் கொண்ட குடும்பங்களாகவே இருக்கும். ஏனெனில் சிறுவர்களாலேயே குடும்பத்தின் மகிழ்வைத் தக்கவைக்க முடியும். அதற்கான அர்ப்பணிப்பும் சிந்தனையும் பெரியவர்களின் மனங்களில் இருக்கவேண்டும். அதற்கான சில வழிமுறைகளே இங்கு தரப்படுகின்றன.

## குடும்பத்தவர்கள் பிள்ளைகளுக்கு உதவுதல்

ஒரு மகிழ்வான குடும்பம் தமது பிள்ளைகளோடு பரஸ்பரப் புரிந்துணர்வுடன் கூடிய உதவி மனப்பாங்கை வளர்ப்பது அவசியம். ஒருவரை ஒருவர் வாழ்வில் உயர்த்துவதற்கான உதவிகளைச் செய்வதனூடாக அவர்களை ஊக்கப்படுத்தி மகிழ்விக்க வேண்டும். அதேபோல் அவர்கள் சோர்வடையும் போதும் தோல்விகளால் துவழும்பொழுதும் அவர்களின் தோல்விகளையும் பிரச்சினை களையும் சுட்டிக்காட்டிமேலும்புண்படுத்துவதைத் தவிர்த்து தட்டிக்கொடுத்து தகுந்த வழிகாட்டல்கள் மூலம் அவர்களுக்கு உதவுதல் வேண்டும்.

## அன்பு மற்றும் கவனிப்பு உணர்வைக் கொடுத்தல்

பிள்ளைகள் அன்பும் கவனிப்பும் தமது குடும்பத்தினுள் இருப்பதை உணரவேண்டும். பல சந்தர்ப்பங்களில் நாம் குழந்தைகள் மீது அன்புசெலுத்தத் தவறுகின்றோம். அதேபோல நாம் அன்பு செலுத்தும்போது அவர்கள் அதை உணரும்விதமாக நடந்துகொள்ள வேண்டும். அன்பும் கவனிப்பும் எப்பொழுதும் அவர்களுக்கு ஒரு பாதுகாப்புச் சூழலை உணரவைக்கும். அத்தோடு உடல், உள ஆரோக்கியத்தையும் கொடுக்கும். அன்பும் ஆதரவும் கிடைக்கின்ற பிள்ளைகள் ஆளுமை மிக்கவர்களாகவும் திகழ்வர்.

## பிள்ளைகளுடன் நெகிழ்ச்சிப் போக்கைக் கடைப்பிடித்தல்

பிள்ளைகளுடன் எப்பொழுதும் ஒரு நெகிழ்ச்சிப்போக்கு இருக்கவேண்டும். பொறுமையோடு அவர்களைக் கையாள்வதுடன் அதிக கட்டுப்பாடுகளற்ற ஒழுக்க விதிமுறைகளையும் கற்பிக்கவேண்டும். இந்த நெகிழ்ச்சித் தன்மை அவர்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதோடு சுதந்திரமாகச் சிந்தித்துச் செயற்படவும் உதவும். அதனால் அவர்கள் தமக்குரிய மகிழ்ச்சியான சூழலை ஏற்படுத்திக் கொள்வதோடு குடும்பத்தினுள் நல்லதொரு நெருக்கமான உறவுமுறையையும் பேணமுடிகிறது.

## உடன்பிறந்தவர்களின் ஒற்றுமையை ஊக்கப்படுத்தல்

உடன்பிறந்த சகோதரர்களுக்கிடையில் நல்லதொரு உறவுமுறையை தொடர்ந்து பேண வேண்டும். அவர்களுக்கிடையில் புரிந்துணர்வையும் விட்டுக்கொடுத் தலையும் பகிர்ந்து கொள்ளுதலையும் வளர்ப்பதன்மூலமாக ஒற்றுமையை ஊக்கப்படுத்துதல் நன்று. இதனூடாக அவர்களுக்குள் மகிழ்வான தருணங்களை அதிகரிப்பதுடன் பெரியவர்களும் மகிழ்வுடன் இருப்பர்.

## கூடியிருந்து உணவருந்தல்

குடும்ப அங்கத்தவர்கள் ஒன்றாக உணவருந்தும் தருணங்கள் மிகக்குறைவாகவே உள்ளது. குறைந்தது இரவுவேளையிலாவது ஒன்றாக இருந்த உணவருந்தி பிள்ளைகளுடன் உணவோடு அன்பையும் பரிமாறுதலும் ஒருவரை ஒருவர் அன்புசெய்வதைக் காண்பிப்பதும் மிகவும் அவசியமாகும்.

## மெதுவாகக் கதைத்தல்

பிள்ளைகள் இருக்குமிடத்தில் பெரியவர்கள் மென்மையாகவும் மெதுவாகவும் கதைத்தல் அவசியம். உரத்துக் கதைத்தல், வன்மையாகக் கதைப்பதைச் சிறுவர்கள் விரும்ப மாட்டார்கள். கதைக்கும்பொழுது உணர்வுகளைக் கட்டுப்படுத்தல் அவசியம். அவர்கள் எப்பொழுதும் அன்பான உரையாடலையும் அமைதியான சூழலையுமே விரும்புகின்றனர்.

## பிள்ளைகளைச் செல்லப்பெயர் கொண்டு அழைத்தல்

பிள்ளைகள் தம்மை செல்லப்பெயர்வைத்து அழைப்பதை மிகவும் விரும்புவர். அவ்வாறு செல்லப் பெயரால் அழைப்பவர்கள் தம்மீது அதீத அன்பைக்கொண்டவர்களாக அவர்கள் உணர்வார்கள். இந்தச் செல்லப்பெயரில் அவர்களுக்குப் பிடிப்பும் திருப்தியும் இருக்கும்.

## சமத்துவம் பேணுதல்

பிள்ளைகளிடையில் அன்பிலிருந்து அனைத்துப் பொருட்களையும் பகிர்வதிலும் உரையாடுவதிலும் அவர்களைக் கையாள்வதிலும் பாரபட்சமின்றி சமத்துவம் பேணப்படுதல் அவர்களுக்குள் ஆரோக்கியமான குடும்ப உறவுக்கும் மகிழ்வுக்கும் வழிசமைக்கும்.

## பிள்ளைகள் முன் சண்டையிடுவதைத் தவிர்த்தல்

பிள்ளைகளின் முன்னிலையில் சண்டையிடுவது அவர்களின் உள்ளத்தைப் பாதிப்புக்குள்ளாக்கும். அது அவர்களின் நீண்டகால மகிழ்ச்சியைப் பாதிக்கும். பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்குமிடையிலான உறவில் சிக்கலை உருவாக்குவதோடு பெற்றோர்கள் மீது வெறுப்பும் அச்சமும் மேலோங்கும். பிள்ளைகளுக்கு தவறான முன்மாதிரிகளாகவும் திகழ்வர். இது குடும்பத்தின் மகிழ்வையும் சீர்குலைக்கும்.

## நண்பர்கள் உறவினர்களின் உறவை கட்டியெழுப்புதல்

நண்பர்கள் உறவினர்களின் வீட்டிற்குச் செல்லுதல் அவர்களின் வருகையை ஏற்படுத்திக் கொடுத்தல் பிள்ளைகளின் மகிழ்வை இரட்டிப்பாகும். புதிய நண்பர்களைத் தேடிக் கொள்வார்கள் புதிய உறவுமுறைகளை உருவாக்கிக் கொள்வர்.

## சடங்குகள் சமய கலாசார நிகழ்வுகளை நடாத்துதல்

சடங்குகள், சமய, கலாசார நிகழ்வுகளை நிகழ்த்துவதனூடாக பிள்ளைகளின் மகிழ்ச்சியை இரட்டிப்பாகலாம். வேலைப்பளுவுடன் உள்ள குடும்ப அங்கத்தவர்களும் தம்மை புத்துணர்ச்சியூட்டும் தருணமாக இது அமைவதால் பிள்ளைகளின் பங்கு இதில் அளப்பெரியது.

## பாடசாலைக்குப் பின்னரான கற்றற் செயற்பாட்டை மட்டுப்படுத்தல்

பிள்ளைகளின் விளையாட்டு பொழுதுபோக்கு ஓய்வு என்பவற்றிலும் அதிக அக்கறை செலுத்திக் கற்றல் செயற்பாட்டை ஊக்கப்படுத்துவது நன்று. பாடசாலைக்குப் பின்னரான நேரத்தை இதற்கு ஒதுக்குவதும் கற்றலுக்கான நேரத்தை அவர்களின்பாட்டில் தெரிவுசெய்து கற்றற் செயற்பாட்டை மட்டுப்படுத்துவதும் அவர்களை மகிழ்விக்கும்.

## கதை கேட்டல்

கதைகூறுதல் பிள்ளைகளுடனான உறவை வளர்ப்பதோடு நாளாந்தச் செயற்பாட்டை பெரியவர்களுக்குச் சொல்லும் ஆவலைத் தூண்டி அதனூடாகத் தமது மகிழ்ச்சியான தருணங்களைப் பகிர்ந்து கொள்வர். இதன்போது தம்மைப் பாதித்த மகிழ்ச்சியான சம்பவங்களை அதிகளவில் பகிர்ந்து ஆனந்தப்படுவர்.

## சேர்ந்து விளையாடல்

பெரியவர்களும் பிள்ளைகளுடன் விளையாடுவது அவர்களுக்கு அளவற்ற மகிழ்வைத் தரும். பெரியவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான இடைவெளி குறைந்து சுதந்திரமான சூழலை உணர்வர்.

## சுற்றுலா செல்லுதல்

விடுமுறை நாட்களில் சுற்றுலா செல்வது சிறுவர்களுக்கு ஒரு புதிய அனுபவத்தைக் கொடுக்கும். புதிய விடயங்கள் பலவற்றைக் கற்றுக் கொள்வர். சிறுவர்கள் எப்பொழுதும் புதிய இடத்தையும் புதிய அனுபவங்களையுமே அதிகம் விரும்புவர். சுற்றுலாவில் கிடைத்த அனுபவங்களைத் தமது ஏனைய குடும்ப அங்கத்தவர்களுடன் பகிர்வதிலும் மகிழ்வைச் சில நாட்கள் தொடர்ந்து தக்க வைத்தும் கொள்வர்.

இவ்வாறான வழிகளூடாகப் பிள்ளைகளை மகிழ்வித்து வாழ்தல் குடும்பத்தின் முழு மகிழ்ச்சியையும் மீட்டுத்தரும். பொருளீட்டும் இயந்திர வாழ்வில் பிள்ளைகள் மீதான கரிசனை குறைவாகவே உள்ளது. நாம் பிள்ளைகளை கையாளும் முறையும் மகிழ்விக்கும் முறைகளுமே பின்பு அவர்களின் பிள்ளைகளையும் சென்றடையும் எனவே இதன் தாக்கம் பரம்பரையாகத் தொடரக்கூடியது. பிள்ளைகளை மகிழ்வித்து ஆரோக்கியமான மகிழ்வான குடும்பத்தை உருவாக்குவோம்.

# கைவாளைப் பதுக்கிய கடல்



நிலவு
பொழியுமொரு முன்னிரவில்
நந்திக்கடல்
எரிந்துகொண்டிருந்தது.

விடத்தல்
முட்பற்றைகளால் கிழிந்து
சொட்டிய நிலவு
தசைத்துண்டங்களால்
உறுஞ்சப்பட்டு
சிவந்திருந்தது.

உயிரின்
இறுதிச் சொட்டு
ஊசலாடிக் கொண்டிருந்த
உடல்கள் கேவியும்
கூவியும் குழறியும்
உறவுகளைத் தேடி
அலைந்தன.

கையிலும்
வயிற்றிலும் எதுவுமேயில்லாமல்
கால்போன போக்கில்

அலைவுறுவதற்கு
இடம்
இருக்கவே இல்லை.

எஞ்சியிருந்தது
துண்டுப் பிடிநிலம்
சனம்....சனம்....சனம்....

குற்றுயிரிகள்..குறையுயிரிகள்....
புண்ணங்கள்
பிய்ந்துதிர்ந்திருந்த அங்கங்கள்
தசை...நிணம்...

எலும்பு
மட்டும் நிறைந்திருந்தன.
ஏப்போதும்
கூடவேயிருந்து வந்த
நம்பிக்கை
அதற்குள் தொலைந்து போனது
அல்லது
யாருக்கும் சொல்லாமல்
போயே விட்டது.

குருவிச்சிநாச்சியின்

கடைசியில் கடலுள் இடப்பட்ட
கைவாளுக்கு இனியும்
கண்ணகியாச்சியேதான்
நந்திக்கடலோரம்
காவலிருக்க வேண்டியதாயிற்று
என்றார்கள்.

நம்பிக்கையும்
கைவாளும்
அங்கேயே இருக்கட்டும்
அதுதான் முன்னைப்போலவே
பாதுகாப்பு.

இன்றைய நிலவிலும்
நந்திக் கடல் கொதிப்புறுகிறது.

கைவாள் சுழலும்
காலமொன்றின் வரவை
வழி பார்த்து
ஒவ்வொரு நிலவிலும்.

கை.சரவணன்

நடராஜன் மைந்தன்

## கருத்துக்கள்



முதலாவது தெரிவையே துணைவேந்தராக அரச தலைவர் நியமிக்கவேண்டும் என்றால், துணை வேந்தரை நியமிக்க அரச தலைவர் ஏன் இவ்வளவு கால தாமதம் எடுக்கவேண் டும்...? இவை பற்றித் தெளிவாகத் தெரியாமலோ, விபரமான தகவல் களைப் பெற்றுக் கொள்ளாமலோ எழுந்தமனமாகக் குற்றம் சாட்டுவது எதற்காக என்பது தெரிந்த விடயம்தான்.

# யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவு




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துணை வேந்தர் பதவியைத் தற்போது பொறுப்பெடுத்தவர் அரசியல்வாதிகளின் கால்களில் விழுந்தே அதைப் பெற்றுக்கொண்டார் என்ற வெடியென்று அண்மையில் கொளுத்திப் போடப்பட்டுள்ளது. தங்கள் வசதிக்காக மேலும் பலபேர் அதை இன்னமும் ஆங்காங்கே கொளுத்திப்போட்டுக் கொண்டுமிருக்கின்றார்கள். தெருத் தெருவாக அதைச் சிலபேர் காவித்திரிகின்றார்கள்.

யாழ்ப்பாண வரலாறோ, யாழ். பல்கலைக்கழக பின்னணியோ தெரியாதவர்கள்போல பலர் இப்போது நல்ல பூசாரிகளாக நடிக்கப் புறப்பட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் முதலாவது தலைவராக நிர்ணயிக்கப்பட்ட பேராசிரியர் க. கைலாசபதியின் நியமனமே அரசியல் பின்புலத்தில் வந்ததுதானே. அவரைவிட மூத்த பேராசிரியர்களைக் காக்க வைத்துவிட்டு கைலாசபதியைத் தலைவராக்கினார்கள் என்பது மூடிமறைக்கப்பட வேண்டிய விடயமல்ல.

அதன் பின்னர் தொடர்ச்சியாக, மிக அண்மைக் காலம்வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்களாக நியமிக்கப்பட்டவர்கள் அத்தனைபேரும் பல்கலைக்கழகக் கவுன்சிலில் முதலாவது தெரிவாக மட்டும் தெரிவானவர்களா?

இப்போது வெடிகொளுத்திப் போடுபவர்களும் அவர்களுக்குப் பின்னால் நின்று உசுப்பேற்றுபவர்களுக்கும் இவை தெரியும்.

இதுவரை துணைவேந்தர்களாக நியமிக்கப்பட்டவர்களில் ஒருசிலரைத் தவிர மிகுதி அத்தனைபேரும் பல்கலைக்கழகக் கவுன்சிலின் தெரிவில் இரண்டாவது மூன்றாவது தெரிவுகளாக வந்தவர்களே. இவர்கள் யார்? யார்? எனப்பெயர்சுட்டிக் குறிப்பிடுவது தேவையில்லை.

உண்மையில் பல்கலைக்கழக கவுன்சில் வாக்கெடுப்பில் மூன்று பேரைத் தெரிவு செய்வது ஏன்? எல்லோரும் சேர்ந்து உறுதியாகவும் இறுதியாகவும் ஒருவரைத் தெரிவு செய்து அவரையே துணைவேந்தராக நியமிக்கிறார்கள் என ஏன் அரச தலைவருக்குச் பரிந்துரை செய்யவில்லை?

அதற்குரிய திராணி பல்கலைக்கழகக் கவுன்சிலுக்கு இருக்கின்றதா? கவுன்சில் அங்கத்தவர்களுக்கு இருக்கின்றதா? என்ற கேள்வி இங்கு எழுவதைத் தவிர்க்க முடியாது.

பல்கலைக்கழகக் கவுன்சில் வாக்கெடுப்பை முடித்து மூன்றுபேரைத் தெரிந்து அரசதலைவருக்கு அனுப்பிய பின்னர் அவர்கள் மூன்றுபேரும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடம் பெற்றவர்கள் எனக் கணிக்கப்படாது அவர்கள் மூவரும் சமமாகவே கணிக்கப்படுவார்கள். இல்லாவிட்டால் பல்கலைக்கழகக் கவுன்சில் தெரிவுசெய்த முதலாவது தெரிவையே துணைவேந்தராகத் தெரிவுசெய்வதென்றால் பிறகு எதற்கு அரச தலைவருக்கு அனுப்பி வைக்கும் கைங்காரியம் நடைபெற வேண்டும்...?

முதலாவது தெரிவையே துணை வேந்தராக அரச தலைவர் நியமிக்க வேண்டும் என்றால், துணை வேந்தரை நியமிக்க அரச தலைவர் ஏன் இவ்வளவு கால தாமதம் எடுக்கவேண்டும்...?

இவை பற்றித் தெளிவாகத் தெரியாமலோ, விவரமான தகவல்களைப் பெற்றுக் கொள்ளாமலோ எழுந்தமானமாகக் குற்றஞ் சாட்டுவது எதற்காக என்பது தெரிந்த விடயம்தான்.

மைத்திரிபால சிறிசேன அரச தலைவராக வருவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகத்திலும் சரி ஏனைய கல்வித் துறைகளிலும் சரி அரசியல் எப்படியெல்லாம் புகுந்து விளையாடியது என்பதைப் பல பேர் இப்போது வசதியாக மறந்துபோய் விட்டார்கள்.

சிறிதர் தியேட்டர் வாசலில் மூலஸ்தானத்தின் கதவு திறப்புக்காகக் காத்திருந்த கல்வியலாளர்களின் கதையை எப்படிச் சொல்வது.

அப்போது அந்த அரசைக் காவித்திரிந்த பலர் இப்போது நடுநிலை வாதிகளாகச் சாபவிமோசனம் பெற்று எல்லாவற்றிலும் அரசியல் ஆதிக்கம் கூடிவிட்டது எனப் போதிக்கின்றார்கள்.

இலங்கை முழுவதிலும் சரி யாழ்ப்பாணத்திலும் சரி சாதாரணமான சிற்றூழியர்களில் இருந்து சகல நியமனங்களும், பிரதேச செயலர்களின் இடமாற்றம், ஒரே இடத்தில் தொடர்ந்து இருப்பது என எல்லாமே அரசியல் மயமாக்கப்பட்ட பின்னர் இப்போது தான் புதிதாக இவை நடைபெறுவதாக குதித்துக் கும்மாளமிடுவது யாரை ஏமாற்ற...?

# நாங்கள்தான் மாறிவிட்டோமே...

நாங்கள் மீண்டுவிட்டோம்
ஒரு பட்டாம்பூச்சியின் தலையில்
தீயைச்சொருகிவிட்டு
காய்ந்த காடுகளுக்குள் பறக்கவிட்ட
நயவஞ்சக
கறுப்பு எல்லைகளை
நாங்கள் தாண்டிவிட்டோம்

விசம் தடவிய கோப்பைகளுக்குள்
வார்க்கப்பட்ட எங்களுக்கான
குடிதண்ணீரிலிருந்து
நாங்கள் தப்பிவிட்டோம்

அவிழ்த்துக் காட்டப்பட்ட
எங்களது அந்தரங்க அதிர்ச்சியிலிருந்து
மெல்ல மெல்ல
விடுதலையாகத் தொடங்கிவிட்டோம்

இப்போது எங்களுக்கு
இந்த உலகமும் அரசும் தந்த
அடிமைச்சுதந்திரம் கிடைக்கின்றது
அதை நாங்கள் அனுபவிக்கப் பழகிவிட்டோம்

அதனால் பழையன எல்லாவற்றையும்
மறந்து விட்டோம் அரை பிண்டமாய்
மேலதிக உறுப்புகள் தேவையில்லையென
பறித்தவைபோக
மீதி உறுப்புக்களோடு
வாழப்பழகிவிட்டோம்

இப்போதெல்லாம்
சிறுநீர் கழிப்பதற்குக்கூட
எமக்குக்கோசம் போடத்தெரியும்
என்பதில் ஒரு கௌரவம்
பிடிபடத்தொடங்கியிருக்கின்றது
கத்தியை எறிந்துவிட்டு
இனிமேல் கத்திக்கேட்பது என
முடிவு செய்துவிட்டோம்



யாரும் எங்களை
பயங்கரவாதிகள் என்றோ
குழப்பவாதிகள் என்றோ
ஆர்ப்பாட்டக்காரர்கள் என்றோ
சொல்லமாட்டாத ஒரு
புதுப்பெயரை நாங்கள்
சூட்டிக்கொண்டுள்ளோம்

இனிமேல் அகிம்சாவாதிகள்
காந்திய வம்சாவளிகள்
சிறந்த ராஜதந்திரிகள்இப்படி
ஏதாவதொரு கௌரவப்பெயர் கிடைக்கும்

எங்களுக்கு
குருதி, வன்முறை
வெஞ்சினம், சுடுசொல்
போர் எதுவும் பிடிக்காது
எங்களுக்கு இப்போது
பேசமட்டுமே தெரியும்
இதை முதலே செய்திருந்தால்
இழப்பே இருந்திருக்காது.

அப்படியாயின் திலீபன்?
திலீபனா? யாரவர்
பூபதி?
ஓ..ஓ.. இப்பதான்
புதிதாகக் கேள்விப்படுகின்றோம்.
அதை விடுங்கள்

இப்போது எங்களுக்கு தெரிந்ததெல்லாம்
அகிம்சைதான்.
நாங்கள்தான் மாறிவிட்டோமே.

சிவ.பரமேஸ்வரி

வரலாறு



# இலங்கையில் 2000 வருடங்களுக்கு முற்பட்ட தமிழ்க் கல்வெட்டுகள் II



பேராசிரியர் சி. பத்மநாதன்

வழிபாடு, சடங்கு, கோயில் என்பன தொடர்பான பண்பாட்டுச் சின்னங்கள் பெருந்தொகையானவற்றிலும் தமிழ்ப் பிராமி வரிவடிவங்களில் எழுதிய சொற்கள் காணப்படுகின்றன. வடகிழக்கு மாகாணங்களிலுள்ள கி.பி. 4ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்துப் பௌத்த சின்னங்கள் யாவற்றிலும் பெயர்கள் தமிழ் மொழியில் மட்டுமே எழுதப்பட்டுள்ளன. புத்தர் படிமங்கள், போதிசத்துவர் வடிவங்கள், ஆசனக் கற்கள், புத்தர் பாதச் சுவடுகள், சேதியங்களின் உச்சிப்பகுதிகளின் துண்டங்கள், தூபிகளின் அத்திபாரப் பகுதிகள் முதலானவற்றிலே காணப்படும் பெயர்கள் யாவும் தமிழ்ப் பெயர்களாகும்.

இந்த நிலை, முன்னே குறித்த மாகாணங்களுக்கு வெளியிலுள்ள பல இடங்களிலும் காணப்படுகின்றது. இதே காலமளவில் உருவாக்கப்பட்ட பௌத்த சமயச் சின்னங்கள் எதனிலும் சாசன வழக்கான பிராகிருத மொழிக் கல்வெட்டுகள் காணப்படவில்லை என்பதுவும் இங்கு கவனித்தற்கு உரியதாகும். ஆதியான பௌத்த சின்னங்களில் காணப்படும் தமிழ்க் கல்வெட்டுகள் இலங்கைப் பௌத்த சமய வளர்ச்சியிலே தமிழர் கொண்டிருந்த பங்கை முதனிலைப் படுத்துகின்றன.

## சிவ பூமி என்பதன் பொருத்தம்

தமிழ்ப் பிராமி வரிவடிவங்களின் அறிவுணர்ச்சியால் இலங்கையில் சைவ சமயம் பற்றிய விளக்கத்திலே புத்தொளி பரவியுள்ளது. இதுவரை இலங்கையின் புராதனமான சைவ சமய வரலாறு, பாடல்பெற்ற தலங்களின் குறிப்புகளோடு நின்று விட்டது. ஆனால் பெரும்பாலும் வெற்றிடமாக இருந்த அந்த வரலாறு இப்பொழுது பரந்ததாக விரிந்துள்ளது. திருக்கோணஸ்வரம், திருக்கேதீஸ்வரம் என்பன 2000 வருடங்களுக்கு மேற்பட்ட பழமை கொண்டவை என்பது தொல்லியல் சான்றுகளின் மூலம் நிரூபணமாகிவிட்டது. அவற்றை நாகர்குல அரசர்கள் அமைத்தனர் என்பதையும் இப்பொழுது அறிய முடிகின்றது. இவற்றைப் போன்றளவு புராதனமான வேறு பல சைவக் கோயில்களும் உள்ளன. முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம், இடைக்காட்டுச் சிவன் கோயில், திருக்கரசை, வந்தாறுமூலை நீர்முகப் பிள்ளையார் கோயில் என்பன அவற்றுள் அடங்கும். வன்னி மாவட்டங்களிலும் இவற்றைப் போன்ற கோயில்கள் பல உள்ளன.

கடவுட் பெயர் பொறித்த சிவலிங்கம், ஆவுடையார், நந்தி, மயூரம், மூஷிகம், நகுலம் போன்றவற்றின் உருவங்களும் வேறு பல கோயிற் பாவனைப் பொருட்களும் உள்ளன. இதுவரை தமிழ்ப் பிராமி வடிவங்களில் பெயரெழுதிய ஆறு நந்தி வடிவங்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. அவற்றிலொன்று சிகிரியா அருங்காட்சியகத்தில் உள்ளமை குறிப்பிடற்குரியது.

திருக்கேதீஸ்வரம், திருக்கரசை, காரைக்காடு (இணுவில்), பனங்காமம் முதலான இடங்களில் 2000 வருடங்கள் பழமையுடைய இலிங்க வடிவங்கள் காணப்படுகின்றன. பிராமி எழுத்துகளிலே தமிழில் பெயர் எழுதிய நடராஜர் வடிவம், விநாயகர் படிமம், வைரவர் படிமம் போன்றன கிடைத்துள்ளன. இசுறுமுனிய, கடலாதெனிய, பொலநறுவை போன்ற இடங்களிலும் இவ்வாறான சில வடிவங்கள் கிடைத்துள்ளமை குறிப்பிடற்குரியது. சற்று அவதானமாக நோக்குமிடத்து இந்தப்பட்டியல் மேலும் நீண்டு செல்லும்.

இலங்கையில் ஏற்பட்ட சைவசமய வளர்ச்சியின் ஆரம்ப கட்ட வரலாற்றை ஆழமாக ஆராய்ந்து, விரிவாக எழுதுவதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது. தமிழகத்திலே சமகாலத்தில் இதுவரைக் கிடைத்திராத பல அரும்பொருட் சின்னங்கள் இலங்கையிலே கிடைக்கின்றன. தகுந்த காரணத்தோடு தான் சிவ பூமி என்று இலங்கையைக் குறிப்பிட்டனர் போலத் தெரிகின்றது.

## நாகரும் நாக வழிபாடும்

இதுவரைக் கிடைத்துள்ள தொல்பொருட் சின்னங்களின் அடிப்படையில் நோக்குமிடத்து இலங்கையில் நிலவும் வழிபாட்டு முறைகளில் நாக வழிபாடு காலத்தால் முற்பட்டது போலத் தெரிகின்றது. ஆதிக்குடிகளான நாகர் ஐந்தலை நாகத்தைத் தெய்வாம்சம் பொருந்தியதாகக் கருதி வழிபட்டனர். பல விதங்களில் நாகவேதனை வழிபட்டனர். வழிபட்ட பொருட்களிலும் தலங்களிலும் நாகதேவனின் பெயரைத் தமிழ்ப் பிராமி வடிவங்களிலே பொறித்துள்ளனர். மணிணாகன் என்பதே நாகர் வழிபட்ட கடவுளின் பெயர். இலங்கையிற் பலவிடங்களிலும் குறிப்பாக வன்னி மாவட்டங்களிலும் மணிணாகனை ஐந்தலை நாகத்தின் உருவமாகச் சிற்பங்களில் வடித்துள்ளனர். நாகர் சைவசமயக் கடவுளர், புத்தர், போதிசத்துவர், சைவ, பௌத்த வழிபாட்டுச் சின்னங்கள் ஆகியவற்றிலே மணிணாகன் என்ற பெயரையே பொறித்துள்ளமை குறிப்பிடத்தக்க மிக முக்கியமான விடயமாகும். இது புராதன காலத்தில் வேறெங்கும் காணப்படாத வழமை. அத்துடன் கிறிஸ்து யுகத்தின் ஆரம்பம் முதலாகப் புத்தர் பெருமானை நாகர் கடவுள் மயப்படுத்தி விட்டமை பௌத்த சமய வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## பண்பாட்டுக் கலப்புக்களும் ஈழமும்

ஈமத் தலங்களிலும் தமிழ்ப் பெயர்கள் எழுதிய கலன்கள், கற்கள், கற்றூண்கள் முதலானவை கிடைத்துள்ளன. அத்தகைய தலங்கள் ஆதி இரும்புக் காலப் பண்பாட்டிற்குரியவை. அதனை

> இதுவரைக் கிடைத்துள்ள தொல் பொருட் சின்னங்களின் அடிப்படையில் நோக்குமிடத்து இலங்கையில் நிலவும் வழிபாட்டு முறைகளில் நாக வழிபாடு காலத்தால் முற்பட்டது போலத் தெரிகின்றது. ஆதிக்குடிகளான நாகர் ஐந்தலை நாகத்தைத் தெய்வாம்சம் பொருந்தியதாகக் கருதி வழிபட்டனர். பல விதங்களில் நாகவேதனை வழிபட்டனர்.

அண்மைக் காலம் வரை பெருங்கற் பண்பாடு ((Magalithic Culture)) என்று குறிப்பிட்டுள்ளனர். அந்தப் பண்பாடு தென்னிந்தியாவில் கி.மு.1200 முதலாகவே நிலைபெற்றுள்ளது. அது இலங்கையில் கி.மு.8ஆம் நூற்றாண்டில் பரவியது. அதனைச் சார்ந்த மக்களிடையே இன, பண்பாட்டுக் கலப்புகள் ஏற்கனவே ஏற்பட்டிருந்தன. தென்னிந்தியாவில் நுண்கற்கால ((Mesolithic)) ச் சமூகமும் புதிய கற்காலச் சமூகமும் அதனுடன் இணைந்து விட்டன. அவ்வாறு கலப்புற்ற சமூகமே இலங்கையிற் பரவியது. எனவே இலங்கையிற் பரவிய அச்சமுதாயத்தின் ஈமச் சடங்குகளிற் சில வேறுபாடுகள் தெரிகின்றன.


கற்காலங்களும் மனித நகர்வும் இலங்கையில் நுண்கற்காலப் பண்பாட்டு மக்கள் கி.மு. 28,000 வருடங்கள் வாழ்ந்தனர் என்பது இலங்கைத் தொல்லியல் ஆய்வாளரின் முடிவாகும். கி.மு.800 முதலாகப் பரவிய ஆதி இரும்புக் காலப் பண்பாட்டு மக்கள் அங்குள்ள குறுணிக் கற்கால மக்களை இலகுவிலே அடக்கி ஆதிக்கம் பெற முடிந்தது. பயிர்ச் செய்கை, மந்தை வளர்ப்பு, காடு வெட்டி நாடாக்குதல், கட்டட வேலைப்பாடுகள் முதலியவற்றில் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. அதனால் இனக்கலப்பும் பண்பாட்டு மாற்றமும் பெருமளவில் ஏற்பட்டதனாற் கற்காலம் முடிவடைந்தது. ஆதி இரும்புக் கால மக்களாகிய நாகர் இலங்கையில் உற்பத்தி முறை ஒன்றை உருவாக்கியதும் நாகரிக வளர்ச்சிக்கு அத்திபாரம் இடப்பட்டது.

தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் இலங்கையிலுள்ள பிராகிருத மொழிக் கல்வெட்டுகளிலிருந்தும் வேறுப்பட்டவை. வெல்லாவெளியிலுள்ள, சமண சமயத் தொடர்பான கல்வெட்டினைத் தவிர்ந்த மற்றையவை யாவும் அளவிற் சிறியவை. வினைச் சொற்கள் இல்லாதவை. பெரும்பாலானாவை நாகரைப் பற்றியவை. அவை நாகர்குல வேளிரைக் குறிப்பிடுகின்றன. அவ்வாறானவற்றில் வேள்ணாகன் மகன் வேள்கண்ணன், வேள்கண்ணன் மகன் வேள்ணாகன் என்ற வசனங்கள் காணப்படும்.

அவை மூன்று தலைமுறை வேளிரின் பட்டப் பெயர்களாகும். இந்தக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்ட காலத்திலே நாகரால் அமைக்கப்பட்ட பெருந்தொகையான வேள்புலங்கள் உருவாகியிருந்தன என்பது குறுநில அரசு இலங்கையில் வேள்புலங்கள் மிகப் பெருந்தொகையானவை. சமகாலத் தமிழகத்தில் இருந்தவற்றைக் காட்டிலும் தொகையில் மிகக் கூடியவை.

ஸூடோ ஸ்வாமி

கட்டுரை






# வெசாக் தோரணங்களுக்குப் பின்னால்...

மற்றுமொரு வெசாக் பௌர்ணமி தினம் கடந்து போயிருக்கின்றது. இலங்கையைப் பொறுத்தளவில் இந்தமுறை கொண்டாடப்பட்ட வெசாக் தினம் சற்று முக்கியத்துவமுடையதாக விளங்கியிருந்தது. ஐக்கிய நாடுகள் சபையின் 14ஆவது வெசாக் கொண்டாட்டங்கள் இலங்கையில் நடைபெற்றிருந்ததுடன் அந்த நிகழ்வின் சிறப்பு விருந்தினராக இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியும் பங்கேற்றிருந்தார். வைகாசிப் பௌர்ணமி தினத்தில் இடம்பெற்ற புத்தரின் பிறப்பு, விழிப்பு மற்றும் இறப்பு ஆகிய சம்பவங்களை நினைவுறுத்தும் வகையில் இந்த நாள் பௌத்த மக்களால் வருடம் தோறும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

பௌத்தர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்த நாட்டில் வெசாக் தினத்தை முற்றுமுழுதான விடுமுறை தினமாக்குவது என்பது 1885களில் தான் முதல் முதலாக அறிவிக்கப்பட்டது. இதற்கு முதன்மைக் காரணகர்த்தாவாக இருந்தவர் சேர். பொன்னம்பலம் இராமநாதன் என்பதை வரலாற்றுத் திரிபுபடுத்தல்கள் இருப்பினும் நாம் மறந்துவிட முடியாது. அதே போன்று 1999இல் வெசாக் பௌர்ணமி தினத்தை பன்னாட்டு



ரீதியிலான விழாவாகக் கொண்டாடப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் முன்மொழிந்தவரும் இலங்கைத் தமிழர் ஒருவர் தான் என்பது வரலாறு.

இத்துடன் குருநாகல் ரம்பொடகல எனும் இடத்தில் அமைந்துள்ள சமாதிநிலைப் புத்தர் சிலை தான் சமீபகாலத்தில் உலகில் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட மிகப்பெரிய சமாதிநிலைப் புத்தர் சிலையாகும். இதற்கான பிரதான பங்களிப்பின் பின்னாலும் தமிழ் மகன் ஒருவரே இருந்திருக்கின்றார்.

ஊடகவியலாளரும் மனித உரிமை ஆர்வலருமான சுனந்த தேசப்பிரிய அவர்கள் கடந்த 8ஆம் திகதி தன்னுடைய ருவிட்டர் கணக்கில் பதிவிட்டிருந்த விடயம் ஒன்று எனது கவனத்தை ஈர்த்திருந்தது. யாழ்ப்பாண நகரில் இராணுவத்தினர் வெசாக் பந்தல்களை அமைக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதைச் சித்திரிக்கும் ஒளிப்படங்களை உள்ளடக்கி "இலங்கை இராணுவத்தினர் ஏனைய சமய விழாக்களையும் (இது போன்று) கொண்டாடுகிறார்களா? தென்னிலங்கையில் இலங்கை இராணுவத்தினர் இவ்வாறு செய்வதில்லையே! ஏன்?" என்ற ஆங்கில வசனங்களுடன் அந்தப் பதிவு அமைந்திருந்தது. மறுநாள் 9ஆம் திகதி கிளிநொச்சி வெசாக் அலங்காரங்களை உள்ளடக்கியதான இன்னொரு பதிவையும் அவர் இட்டிருந்தார்.

தொழிலாளர் உரிமைகளை அடித்தளமாகக் கொண்ட மே தினம், இலங்கையில் எவ்வாறு அரசியல் மயமான தினமாக உருமாற்றம் பெற்றதோ அத்தகையதொரு கலாசாரப் போக்கு வெசாக்குடன் வடக்கில் உலாவருவதைக் கடந்த சில வருடங்களாகக் கண்டுணர முடிகின்றது. வெறுமனே விரல் விட்டு எண்ணக்கூடிய பௌத்த குடிகளை கொண்ட வடபுல பிரதேச நகரங்கள், வெசாக் தினத்தன்று விழாக் கோலம் பூணுவது வேடிக்கை விநோதத்துக்குரியதாகத் தென்பட்டாலும் குறித்த அலங்காரங்களுக்கு பின்னால் இராணுவத் தரப்பினரின் கைகள் இருப்பது காணாமலும் உணரப்பட்டே வருகின்றது. இராணுவத் தரப்பினரின் கைவண்ணத்துடனும் அரச இயந்திர ஆசீர்வாதத்துடனும் முன்னெடுக்கப்படும் இத்தகைய நடவடிக்கைகள் இராணுவ மயப்படுத்தல் மற்றும் இராணுவ நிலைப்படுத்தல் செயற்பாடுகளின் ஒரு வகைக்குரியதாகவே நோக்கவேண்டியிருக்கிறது.

### வடக்கில் முளைக்கும் விகாரைகள்!

கடந்த 3ஆம் திகதி நாடாளுமன்றத்தில் மாத்தறை மாவட்ட, ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான புத்திக பத்திரண எழுப்பிய வாய்மூல கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், வடக்கில் தொல்பொருள் திணைக்களத்துக்குரிய 131விகாரைகள் இருப்பதாகவும் அதில் 61விகாரைகள் மாத்திரமே பௌத்த விவகாரங்கள் அமைச்சில் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியப்படுத்தியிருக்கின்றார்.

இதில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 6விகாரைகளும், வவுனியா மாவட்டத்தில் 35விகாரைகளும், முல்லைத் தீவு மாவட்டத்தில் 67 விகாரை களும், மன்னார் மாவட்டத்தில் 20 விகாரைகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 3விகாரைகளும் இருப்பதாக அங்கு வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

### தொல்லியல் பிரகடன வர்த்தமானி

கடந்த 2013ஆம் ஆண்டு ஆவணி மாதம் வெளியாகிய 1823/73ஆம் இலக்க வர்த்தமானியின்படி, அப்போது தேசிய மரபுரிமைகள் அமைச்சராக இருந்த ஜகத் பாலசூரியவால் தொல்லியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 170 புராதன இடங்கள் மற்றும் ஆக்கங்கள் புராதன சின்னங்களாக அறிவிக்கப்பட்டிருந்தன.

இதில் 83அறிவிப்புக்கள் வடபிரதேசத்துடன் தொடர்புடையவையாக அமைந்திருந்ததுடன் அவற்றில் பல பௌத்த வணக்கஸ்தலம் சார்ந்த நினைவுச் சின்னங்களாகவே விளங்கியிருந்தன.

வடபுலத்தில் பெரும்பான்மையாகவும் பாரம்பரியமாகவும் விளங்கும் இந்துக்கோயில்கள் பற்றியோ ஏனைய மதச்சார்பு ஸ்தலங்கள் பற்றியோ வெகு சொற்பமாகவே அதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தற்போது பௌத்த விகாரைகள் மாத்திரம் 131 என அறிவிக்கப்பட்டிருக்கிறது!

### கூரே கூறிய வில்லங்கம்

போருக்குப் பின்னர் வடக்கில் விகாரைகளை அமைக்கும் மற்றும் விகாரைகளை புனரமைக்கும் பணிகள் மும்முரமாக முன்னேடுக்கப்பட்ட போது அவை பெரும் சர்ச்சையை எதிர்கொண்டிருந்தன. பல சந்தர்ப்பங்களில் நீதிமன்றத் தலையீடுகளை நாடவேண்டிய நிலைமைகளும் எழுந்திருந்தன.

கடந்த டிசெம்பர் மாதத்தில் கொக்கிளாய் பிரதேசத்தில் முளைவிடும் விகாரை தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்த வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே, தமிழ் மக்களால் கொழும்பில் கோவில்கள் கட்ட முடியுமாக இருந்தால், கொக்கிளாயில் விகாரை அமைப்பதில் பிரச்சினை எதுவும் உள்ளதாவெனக் கேள்வி எழுப்பியிருந்தார்.

வடக்கில் விகாரைகளும் புத்தர் சிலைகளும் பாதுகாப்புத் தரப்பின் அனுசரணையுடனும் கண்காணிப்புடனும் எழுந்துகொண்டிருக்க கொழும்பிலோ நாட்டின் ஏனைய பிரதேசங்களிலோ வாழும் தமிழர்கள் தமது சொந்தப் பிரயாசையினாலேயே தாம் ஆலய அமைப்பு வேலைகளைச் செய்து முடிக்கி றார்கள். இதனை எவ்வகையிலும் பொருத்தமில்லாத முறையில் ஒப்பிட்டு உரைத்திருந்தார் கூரே.

### இராணுவ ஆதிக்கம்

இராணுவத் தரப்பினரிடம் இருக்கும் பொதுமக்களின் காணிகள் மெல்ல மெல்ல விடுவிக்கப்பட்டாலும் இராணுவ ஆதிக்கத்தை நீக்குவதற்கான, தளர்த்துவதற்கான கோரிக்கைகள் தொடர்ச்சியாக விடுக்கப்பட்டே வருகின்றன.

உயர் பாதுகாப்பு வலயம் என்றும் தேசிய பாதுகாப்பு என்றும் இன்னமும் பொதுமக்களின் ஏராளம் காணிகள் விடுவிக்கப்படாமல் இருக்க, மக்கள் போராடிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இராணுவத்தினரோ கோலகலமாக வெசாக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்தப் பின்னணியில் தான் இந்தியப்பிரதமர் மோடியின் இலங்கைக்கான வருகையும் அமைந்திருக்கின்றது. வெறுமனே ஐ.நா. வெசாக் விழாவுக்கான சிறப்பு அழைப்பாளராக இலங்கைக்கு வந்திருந்தாலும் பிராந்திய ஆதிக்கத்தில் இலங்கையில் தனது இருப்பை உறுதிப்படுத்தும் நிலைப்பாடே அதற்குள் இருக்கின்றது.

நரேந்திர மோடியின் இலங்கை வருகையும் வடக்கில் தோன்றி மறையும் வெசாக் தோரணங்களும் தோன்றி மறையாத அடையாளங்களும் ஒரு மைய வட்டங்களாகவும் சமாந்தரக் கோடுகள் போலவும் தென்படுவதைக் கூர்ந்து கவனித்தால், இலங்கையின் இனவாதமும் அதற்கிருக்கும் இந்தியாவின் உடன்பாடும் உங்களுக்கும் புரியலாம்.

கட்டுரை



# முறுகல்களுக்கு முடிவுகாணும் மூன் ஜெ இன்



பிரகாஸ்

கொரியத்தீபகற்பத்தில் கடந்த சில வாரங்களாக நிலவிவரும் போர்ப் பதற்றம் தென்கொரியாவில் நிகழ்ந்துள்ள ஆட்சி மாற்றத்துடன் தற்போதுபடிப்படியாகத் தனது வலிமையை இழக்கத் தொடங்கியுள்ளது. இதன்படி பெரும்பாலானநாடுகளின் நின்மதிப்பெருமூச்சுக்குக் காரணமாக விளங்குகிறார் மூன் ஜெ இன்.



தென்கொரியாவின் அரச தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர் தான் நிகழ்த்திய முதல் உரையிலேயே பலரது மனங்களையும் கவர்ந்து விட்டார் மூன் ஜெ இன். தனது நாட்டுக்கான சுய பாதுகாப்பை வழங்குவதற்கு அவர் ஆயுதங்கள் மற்றும் அணுவாயுதங்கள் போன்றவற்றைத் தெரிந்தெடுக்கவில்லை. மாறாக அமைதிப் போக்கைக் கடைப்பிடிக்கும் அறிகுறிகளை வெளிப்படுத்தியுள்ளார்.

### கொரியத் தீபகற்பத்தில் ஏற்பட்டிருந்த போர்ப் பதற்றம்

ஐக்கிய நாடுகள் சபை ஏற்படுத்திக் கொடுத்திருந்த பன்னாட்டுச் சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகளை மீறி வடகொரியா பல்வேறு ஆயுத மற்றும் அணுவாயுதச் சோதனைகளை நடத்திவந்தது. தனது சோதனைகள் அனைத்தும் தென்கொரியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குஎதிரானவைஎன்றும்வடகொரியா எச்சரித்தது. இதனால் கோபம்கொண்ட அமெரிக்கா தனது போர்க் கப்பல்களைக் கொரியத் தீபகற்ப தத்துக்கு அண்மையாகக்கொண்டுவந்துநிறுத்தியிருக்கின்றது. இந்த நிலைமை மூன்றாம் உலகப் போர்ப்பதற்றம்என்றுஉலகஊடகங்கள் சுட்டிநின்றன. சீனா, ரஷ்யா உள்ளிட்ட ஒவ்வொருநாடுகளும் தம்மைத் தற்காத்துக்கொள்ளத்தேவையானவழிவகைகளைக் கையாண்டதால் உலக அரசியல் மேலும்பரபரப்பானது.

### தென்கொரியாவில் ஏற்பட்ட ஆட்சிமாற்றம்

தென்கொரியாவின் முன்னாள் அரச தலைவரான பார்க் கியூன் ஹை மீது, ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் ஈடுபட்டார், தனது நண்பியான சோய் சூன் சில் என்பவரை அரசவிவகாரங்களில்தலையீட்டுவதற்கு அனுமதித்தார் போன்ற குற்றச்சாட்டுக்களை எதிர்க்கட்சிகள் அவர் மீதுஅடுக்கியிருந்தன. இந்தக்குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து பார்க் கியூன் ஹை மீது நம்பிக்கை இல்லாத்தீர்மானம்கொண்டுவரப்பட்டுஅவர் பதவியில்இருந்துநீக்கப்பட்டார். இதையடுத்து அங்கு புதிய அரசதலைவருக்கான தேர்தல்கடந்தசெவ்வாய்க்கிழமைநடைபெற்றது. அதில் மூன் ஜெ இன் தென்கொரியாவின்புதியஅரசதலைவராகத்தெரிவு செய்யப்பட்டார்.

### உலக அபிப்பிராயத்தை வென்ற மூன் ஜெ இன்னின் முதல் உரை

தென்கொரியாவின் அரச தலைவராகப் பொறுப்பேற்றபின்னர் தான் நிகழ்த்திய முதல் உரையிலேயே பலரது மனங்களையும்கவர்ந்து விட்டார் மூன் ஜெ இன். தனதுநாட்டுக்கான சுய பாதுகாப்பைவழங்குவதற்கு அவர் ஆயுதங்கள் மற்றும் அணுவாயுதங்கள் போன்றவற்றைத்தெரிந்தெடுக்கவில்லை. மாறாக அமைதிப் போக்கைக் கடைப்பிடிக்கும்அறிகுறிகளை வெளிப்படுத்தியுள்ளார். தென்கொரியாவைதனது பரம எதிரியாகப் பார்க்கின்றது வடகொரியா. ஆனால் மூன், கொரியத் தீபகற்பத்தில்பதற்றத்தைத் தணிக்க வடகொரியாவுக்குச் சென்று அங்கு பேச்சு நடத்தத் தான் தயார் என்று குறிப்பிட்டார். தவிர கொரியத் தீபகற்ப விவகாரத்தில் நேரடித் தொடர்புடைய அமெரிக்கா, சீனா, ஜப்பான்போன்றநாடுகளுக்கும் விரைவில் சுற்றுப்பயணம் செய்யவுள்ளதையும்அவர்வெளிப்படுத்தினார்.

### அலைபேசி உரையாடல்கள்

கொரியத் தீபகற்பத்தில் ஏற்பட்டுள்ள பதற்றத்தைத் தணிக்க ஒவ்வொரு நாடுகளுக்கும் சுற்றுப்பயணம் செய்வேன் என்று சொல்லிவிட்டதுடன் நின்று விடாமல் அதைநடைமுறைப்படுத்தவும்முனைந்துள்ளார் மூன் ஜெ இன். முதல்கட்டமாக, சீன அரச தலைவர் ஜி ஜின் பிங், ஜப்பான் தலைமை அமைச்சர் சின்சோ அபே ஆகியோருடன்கொரியத்தீபகற்பப்பிரச்சினை தொடர்பில் நேற்றுமுன்தினம் அலைபேசியில் உரையாடியுள்ளார். இதில் எந்தெந்த விடயங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன என்று உறுதிபடத் தெரிவிக்கப்படாத போதிலும் ஆக்கபூர்வமான கருத்துக்கள் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. ஜனி பிங், சின்சோ அபே ஆகியோரைவிட கொரியத் தீபகற்பத்தின் நிலைமையைத்தீர்மானிப்பவராகஅமெரிக்க அதிபர் ட்ரம்ப் உள்ளார். எனவே மூன் - ட்ரம்ப் இடையிலான சந்திப்பை அல்லது அலைபேசி உரையாடலைத் தொடர்ந்தே தீபகற்பத்தின் அடுத்தகட்ட நகர்வுகள் பற்றிக் கணித்துக் கொள்ளலாம்.

### அமெரிக்கா போடும் முட்டுக்கட்டை

வடகொரியா 6ஆவது முறையாக அணு ஆயுதச்சோதனைநடத்தத்தயாராகிவருவது செயற்கைக்கோள் ஒளிப்படங்கள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. எனினும் அமெரிக்கா, சீனா உள்ளிட்ட நாடுகளின்நெருக்குதல்காரணமாகஅந்தநாடு அந்தச் சோதனையை நடத்தவில்லை. ஆனாலும் அவ்வப்போது அதிநவீன ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது. அண்மையில்வடகொரியாநடத்திய இரண்டு ஏவுகணைச் சோதனைகள் தோல்வி அடைந்தன. இந்தப் பின்னணியில் வடகொரியாவை உன்னிப்பாகக் கண்காணிக்கஅமெரிக்காவின்உளவுப் பிரிவில்சிறப்புப்பிரிவென்றும்அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் சி.ஐ.ஏ (உளவுத்துறை) இயக்குநர் மைக் பாம்பே, "வடகொரியாவால் அமெரிக்காவுக்கும் அதன் நட்பு நாடுகளுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே அந்த நாட்டை மிகத் தீவிரமாகக் கண்காணிக்க தனிப் படை உருவாக்கப்பட்டுள்ளது.
மூத்த அதிகாரி ஒருவரின் தலைமையில் அந்தப் படை செயல்படும்' என்று தெரிவித்திருந்தமைஇன்னும்அதன்வலுவை உணர்த்தியிருந்தது.
முழுமையாக மூன், இதுவரைகாலமும் வடகொரியாவுடன் தென்கொரியா காட்டி வந்த நகர்வுகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டுச்செயற்படஎத்தனித்துள்ளார். ஆனால் அமெரிக்கா வடகொரியாவுடன் மோதல்போக்கைக்கடைப்பிடிப்பதுஎன்ற தன் எண்ணத்தில் விடாப்பிடியாக உள்ளமை அந்த நாட்டின் சில நகர்வுகளில் தெரியவந்துள்ளது. இன்னும்சிலவாரங்களில்தெரிந்துவிடும்தீபகற்பத்தின்நிலை என்னவென்பது.



# தென்கிழக்குத் திசையிலிருந்து.....!

## செய்தித்தொகுப்பு



## மறுபடியும் அரசியலா..!

அனார்கலி

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் கல்முனையில் நடத்திய மேதினப்பொதுக்கூட்டத்தில் கிலந்து கொண்ட பிரதிநிதிகளுக்குத் தாங்கள் ஆற்றும் உரையில் அரசியல் பேசவேண்டாமென அன்புக் கோரிக்கை விடுத்திருந்தது.
சங்கத்தலைவர் எஸ்.லோகநாதனும் தனது உரையின்போது அதனை இன்னும் வலியுறுத்தினார்.
நடந்தது என்ன?
உள்ளூர் அரசியல்வாதி ஒருவர் எழுந்தார். மைக்கைப் பிடித்தார். 'பேசாதீர்...' என்று கூறியிருந்த அரசியலையே தனது உரையில் விளாசு விளாசு என விளாசித்தள்ளினார்.
இதன் பின்னால் எழுந்த மற்றொரு முக்கியஸ்தர் மட்டுமென்ன அரசியல் பேசச் சளைத்தவரா?
அவரும் விளாசித்தள்ளினார்.
சங்க முக்கியஸ்தர்களெல்லாம் தலையில் கையை வைத்து அமர்ந்திருந்த சமயம் "அரசியல்வாதிகள் கையில் மைக் கிடைத்தால் இதுதான் கதியென" கடுகடுப்புடன் அங்கு வந்த சங்க ஆலோசகர் ஒருவர் முணுமுணுத்துக் கொண்டார்.



## இலவச மூக்குக் கண்ணாடிகள்

நிந்தவூர் ரைட்டன்ஸ் கழகத்தின் கோரிக்கைக்கு இணங்க நிந்தவூர் சமூக சேவையாளருமான வை. எல். சுலைமாலெவ்வை எடுத்த பெருமுயற்சியால் நிந்தவூர் பிரதேச மக்களுக்கு ஆயிரம் இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.
சமூக வலுவூட்டல் அமைச்சின் அனுசரணையுடன் நிந்தவூர் இமாம் கஸ்ஸாலி வித்தியாலயத்தில் நடைபெற்ற சிறப்பு முகாமின்போது வறிய மக்கள் இந்த இல வச மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொண்டனர்.

## வேண்டும் விசாரணை

படுகொலை செய்யப்பட்ட, கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்கள், ஊடகப் பணியாளர்கள் தொடர்பிலான நீதியான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென அரசைக் கோரும் தீர்மானம் ஒன்று அகில இலங்கை மக்கள் ஜனநாயகக் கட்சியின் 27ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
கல்முனையில் நடைபெற்ற இந்தப் பொதுக் கூட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தொடரும் ஊடகவியலாளர்கள் மீதானதும் ஊடக நிறுவனங்கள் மீதானதுமான அடக்குமுறைகள், தாக்குதல் சம்பவங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டுமென்றும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.




## திருட்டுப் பட்டக் கடை

அம்பாறை மாவட்ட மருத்துவபீட மாணவர்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்த சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிரான மாபெரும் பேரணியும் பொதுக்கூட்டமும் கல்முனையில் நடைபெற்றது.
கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியாசாலை முன்றிலிலிருந்து ஆரம்பமான அந்தப் பேரணி கல்முனை சந்தாங்கேணி மைதானம் வரை இடம்பெற்றதுடன் அங்கு சைட்டத்துக்கு எதிராகச் சூடுபறக்கும் கருத்துக்களடங்கிய பொதுக் கூட்டமும் நடைபெற்றது.
இந்தப் பேரணிக்கும் பொதுக் கூட்டத்துக்குமென அழைப்புவிடுத்து கல்முனைப் பிராந்தியத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.
"சைட்டம் திருட்டுப்பட்டக் கடைக்கு எதிரான பேரணியும் பொதுக் கூட்டமும்" என அந்தச் சுவரொட்டிகளில் வாசகமும் குறிப்பிடப்பட்டிருந்தது.

## தாவுகிறது அதிருப்தி அணி

முஸ்லிம் காங்கிரசிலிருந்து ஒதுங்கி நின்று கட்சியைத் தூய்மைப்படுத்தும் போராட்டத்தை முன்னெடுத்துவருவதாகப் பறைசாற்றும் முன்னாள் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி தலைமையிலான அதிருப்தி அணியினர் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் தமது வெற்றிகரமான பரப்புரைக் கூட்டங்களை நடத்தியுள்ளனர்.
அடுத்த கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களுக்கு இதே வழியில் தாவுவதற்கு இந்த அதிருப்தி அணியினர் முடிவு செய்துள்ளதாகவும் கட்சியைத் தூய்மைப்படுத்தும் கூட்டங்கள் வாழைச்சேனை, ஏறாவூர் பிரதேசங்களில் முதலில் நடத்தப்படவுள்ளதாகவும் அறிய வருகின்றது.



## கிழக்கில் புதியகட்சி?

கிழக்கு மாகாணத்தில் புதிய அரசியல் கட்சி ஒன்று முஸ்லிம்களுக்கு மத்தியிலிருந்து விரைவில் முளைவிடுமெனத் தகவலொன்று அடிபடத் தொடங்கியுள்ளது.
குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸின் அதிருப்தி அணியினரான முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகம் ஹஸனலி தலைமையிலான அணியினரே அந்தப் புதியகட்சி உருவாக்கத்துக்கு வித்திடுவதாக வம் கூறப்படுகின்றது. உண்மை நிலையைப் பொறுத்திருந்து தான் பார்ப்போமே!

## தலையிருக்க வாலா...?

"இறக்காமம்- மாயக்கல்லிமலையில் புத்தர் சிலை வைக்கப்பட்டபோது வெகுண்டெழுந்து அதனை அகற்ற முயற்சிக்காத முஸ்லிம் தலைமைகள் இன்று அங்குவிகாரை நிர்மாணம் பற்றிப் பேசுவதும் எதிர்ப்பதும் வேடிக்கையானதும் அர்த்தமற்றதுமாகும்"
இப்படிக் கூறியிருக்கிறார் அம்பாறை மாவட்டத்தின் அரசியல் அதிகாரம் எமது கட்சியிடமேயுள்ளது என்று கூறிவரும் முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி.
அவரும் ஒரு முஸ்லிம் அரசியல் தலைவர் தானே என்பதை மறந்து விட்டாரோ? அல்லது மறக்கடிக்கப்பட்டுள்ளதோ?

## இரங்கல் கூட்டம்

ஈழத்து இலக்கியப்பரப்பில் சிறந்த மரபுக் கவிஞராகவும் கல்விப்புலத்தில் சிறந்த அதிபராகவும் சமூக செயற்பாட்டாளராகவும் திகழ்ந்த துறை நீலாவணையைச் சேர்ந்த (மட்டக்களப்பு) கதிரேசன் செல்லத்துரை எனும் துறையூர் செல்லத்துரையின் மறைவு இலக்கியவாதிகள், கல்வியியலாளர்கள் மத்தியில் பெரும் துயரை ஏற்படுத்தியுள்ளது.
1960களில் மறைந்த கவிஞர் நீலாவணன் தலைமையில் உருவாக்கப்பட்ட கல்முனை எழுத்தாளர் சங்க முக்கிய உறுப்பினராகவும் கவிஞர் ஜீவா ஜீவரத்தினம் தலைமையில் உருவாக்கப்பட்ட துறைநீலாவணை இலக்கியப் பேரவையின் செயலாளராகவும் இருந்தவர் அமரர் துறையூர் செல்லத்துரை. 'பாச்சரம்' கவிதை நூல் 'காலச் சுவடு' வரலாற்று நூல் போன்றவற்றைத் தந்தவர் அவர். அன்னாரின் மறைவையொட்டிய இரங்கல் கூட்டம் மூத்த ஊடகவியலாளரும் கவிஞருமான செல்லையா பேரின்பராசா தலைமையில் துறைநீலாவணையில் நடைபெற்றது. தமிழரசுக் கட்சியின் மூத்த உப தலைவர் பொன்.செல்வராசா, கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா. துரைரெட்ணம் உட்பட பலர் இரங்கலுரையாற்றினர்.

## நினைவின் நிழலில்

நாடறிந்த கவிஞர் அமரர். சண்முகம் சிவலிங்கத்தின் 5ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு 'நினைவின் நிழலில்' எனும் தலைப்பில் கல்முனையில் நடைபெற்றது.
பிரபல எழுத்தாளர் உமாவரதராஜன் தலைமையில் கல்முனை கார்மேல்பற்றிமா தேசியப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் கவிஞர் சோ.பத்மநாதன் (விரிவுரையாளர்) சிறப்புரையாற்றினார். பேராசிரியர் சி.மௌனகுருவின் ஒருங்கிணைப்பில் மட்டக்களப்பு அரங்கு ஆய்வுகூடம் வழங்கிய மறைந்த கவிஞரின் கவிதையொன்றை உணர்வுபூர்வமாக எடுத்தியம்பிய அரங்காற்றுகையும் இடம்பெற்றது.
கல்முனை நெற் எனும் ஊடகவலையமைப்பின் ஏற்பாட்டில் இந்த நினைவு நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

**இந்திய ரூபாய் செலவில் இலங்கையில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனை**





**எங்கட விவசாயி காசில்லாம அல்லாடுது ஆட்டக்காரிக்கு 500 வோவா கேக்குதா**

**உலகத்துல நல்லவன் எப்பவுமே கடைசில தான் ஜெயிக்கிறான்**




**அதுக்குள்ள கெட்டவன் நல்லா வாழ்ந்துட்டு போயிடுறான்!**

**பொங்கல்ல இருக்கிற பத்து முந்திரில ஒண்ணு கூட நமக்கு வராது...**



**ஆனா முப்பது மிளகும் நமக்கு தான் வரும்... அதான் வாழ்க்கை...!**

**லீவு போட்டு தூங்குறவன் மனுசன்...**



**எவ்ளோ டயர்டா இருந்தாலும் அலுவலகம் போய் தூங்குறவன் பெரிய மனுசன்...**



## படப்பிடிப்புக்கு முன்பே வியாபாரம்

நடிகர் சங்கக் கட்டட நிதிக்காக விஷாலும் கார்த்தியும் கைகோர்த்திருக்கும் படம் 'கருப்பு ராஜா வெள்ளை ராஜா'. இப்படத்தைப் பிரபுதேவா இயக்குகிறார். கதாநாயகியாக 'வனமகன்' படத்தில் நடித்துள்ள சாயிஷா நடிக்கிறார். முக்கிய வேடத்தில் நடிகர் ஆர்யாவும் நடிக்கவிருக்கிறார்.

இப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்கவுள்ள நிலையில், இப்படத்தின் வியாபாரமும் தொடங்கியுள்ளது. பிரபல நடிகரும், தயாரிப்பாளர், விநியோகஸ் தருமான அருண்பாண்டியன் ஒரு மிகப்பெரிய தொகைக்கு வெளிநாட்டு வெளியீட்டு உரிமையை வாங்கியுள்ளார்.

இப்படத்துக்கு ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைக்கிறார். மறைந்த இயக்குனர் கே.சுபாஷின் கதைக்குப் பிரபுதேவா திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார். மூன்று முன்னணி நடிகர்கள், படப்பிடிப்புக்கு முன்பே வியாபாரம் ஆகியவை இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகமாக்கியுள்ளது.




### காதல் கவிதைகள் @Kavitha4u

தவறுகளை ஒப்புக் கொள்ளும்
தைரியமும், அதைத் திருத்திக்
கொள்ளும் பலமும் தான்
உண்மையான வெற்றிக்கு வழி

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** சிறிய முயற்சியில் கூட நற்பலன் உண்டாகும். விலகிச் சென்ற நண்பர்கள் நட்பு பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் சரா சரியை விடப் பண வரவு அதிகரிக்கும். பணி யாளர்கள் நன்மதிப்பைப் பெறுவர்.

**இடபம்:** கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத் தாமதம் ஆகலாம். பிள்ளைகளின் வகையில் செலவு ஏற்படும். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை பெறுவது நல்லது.

**மிதுனம்:** சுறுசுறுப்புடன் பணியில் ஈடுபடுவீர்கள். பிறருக்காகத் தகுதிக்கு மீறிய வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். பெண்கள் செலவுக்காகக் கடன் வாங்க நேரிடலாம்.

**கடகம்:** பிறர் உங்கள் மீது நல்லெண்ணம் கொள்வர். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு அதிகரிக்கும். இல்லறத்துணை விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். அரச வகையில் நன்மை உண்டாகும்.

**சிங்கம்:** யதார்த்தப் பேச்சால் சிலர் சங்கடத்துக்கு ஆளாகலாம். அடுத்தவர் விடயத்தில் தலையிட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவை. லாபம் சுமாராக இருக்கும்.

**கன்னி:** தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்படச் சமாளிப்பர். பெண்கள் பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காகப் பாடுபடுவர்.

**துலாம்:** பேச்சில் நிதானம் கடைபிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் ஆடம்பரமாகச் செலவழிப்பர்.

**விருச்சிகம்:** நல்லவர்களின் அறிமுகத்தால் நன்மை உண்டாகும். வாழ்க்கைத் தரம் மேம்படும். தொழில், வியாபார வளர்ச்சியால் லாபம் அதிகரிக்கும். உறவினர் வருகையால் குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**தனுசு:** குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் லாபம் உயரும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள்.

**மகரம்:** முக்கிய பொறுப்புகளைப் பிறரிடம் தரக்கூடாது. தொழில், வியாபார நடைமுறை சிறக்க கூடுதல் உழைப்பு அவசியம். சுமாரான லாபம் கிடைக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**கும்பம்:** உறவினர் செயல் அதிருப்தி அளிக்கும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் சீராக இருக்கும். பிள்ளைகளைக் கண்டிப்பதில் நிதானம் தேவை. நண்பரால் உதவி உண்டு.

**மீனம்:** கடந்த கால உழைப்பின் பயன் கிடைக்கும். உறவினர் வருகையால் குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். புத்தாடை, நகை வாங்க யோகம் உண்டு.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 5 | | 8 | 2 | 9 | 3 |
| | | | | 3 | | 7 | | |
| | | 8 | | 1 | 2 | | | |
| 1 | 4 | | 3 | 2 | 5 | | | 7 |
| 2 | 9 | | | | 7 | 1 | | |
| | 8 | | | 9 | | | | 2 |
| 4 | | | | 5 | | | 2 | |
| | | 1 | | | | | | |
| | | 2 | 6 | | 9 | | 5 | |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறு வனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 8 | 5 | 3 | 2 | 1 | 7 | 6 | 9 |
| 1 | 9 | 3 | 6 | 7 | 5 | 4 | 8 | 2 |
| 6 | 7 | 2 | 4 | 8 | 9 | 5 | 1 | 3 |
| 7 | 5 | 6 | 1 | 3 | 2 | 9 | 4 | 8 |
| 2 | 1 | 8 | 9 | 5 | 4 | 3 | 7 | 6 |
| 9 | 3 | 4 | 7 | 6 | 8 | 2 | 5 | 1 |
| 3 | 6 | 1 | 5 | 9 | 7 | 8 | 2 | 4 |
| 5 | 2 | 9 | 8 | 4 | 6 | 1 | 3 | 7 |
| 8 | 4 | 7 | 2 | 1 | 3 | 6 | 9 | 5 |

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# உட்கார்ந்தே இருந்தால் ஏற்படும் உபாதைகள்

இன்றைக்கு கணினி முதல் பல்வேறு பணிகள் வரை உட்கார்ந்தே வேலை பார்ப்பவர்கள் அதிகம். சூழ்நிலை காரணமாக நாம் இப்படி வேலை பார்க்கிறோம் என்றாலும், இது ஆரோக்கியத்துக்கு நல்லதல்ல என்று எச்சரிக்கிறார்கள் மருத்துவர்கள். உடலுக்கு தசை இயக்கம் நடக்கிற மாதிரி உழைப்பை கொடுத்துக்கொண்டே இருப்பதுதான் சரியான வாழ்க்கை முறை. அப்போதுதான் நீண்ட ஆரோக்கியத்தோடு வாழ முடியும் என்று அவர்கள் கூறுகி றார்கள்.

ஒருவர் தொடர்ச்சியாக 3 மணி நேரம் உட்கார்ந்து கொண்டே இருந்தால் நிமிடத்துக்கு ஒரு கலோரி எரிய ஆரம்பிக்கும். அத்தோடு குருதிக் குழாயும் சுருங்க ஆரம்பிக்கும். இதனால் நாளடைவில் ரைப் 2 நீரிழிவு நோய் போன்ற தொந்தரவுகள் வரலாம்.

தொடர்ச்சியாய் பல மணி நேரம் உட்கார்ந்து வேலை செய்தால் கொழுப்பைக் கரைக்கும் நொதிகள் சுரப்பது குறையும். கெட்ட கொழுப்பு எரியாமல், உடல் எடையை அதிகரிக்கச் செய்யும்.

உட்கார்ந்து வேலை செய்வது வருடக் கணக்கில் தொடர்ந்தால், எலும்பு வளர்ச்சி குறையவதோடு, அடர்த்தியும் குறையும்.

உடலில் இயக்கம் இல்லாதபோது போதிய குருதி மூளைக்குச் செல்லாது. இதன் காரணமாக செல் வளர்ச்சி பாதிக்கப்படும். அதன் விளைவாக இளமையிலேயே முதிய தோற்றம் உண்டாகும் வாய்ப்பு அதிகம் ஏற்படும். சீரான ஹோர்மோன் சுரப்பும் தடைப்படும்.

10 முதல் 20 வருடங்கள் தொடர்ச்சியாக அமர்ந்தே பணிபுரிவதால் இதய நோய்கள், பக்கவாதம் உள்பட பல உபாதைகள் உண்டாகலாம்.


எல்லாவற்றையும் விட கசப்பான உண்மை, நமது ஆயுள் காலம் குறையலாம்.

தொடர்ந்து அதிக நேரம் உட்கார்ந்திருப்பவர்களுக்குத்தான் 64 சதவீதம் இதய நோய்கள் உண்டாகின்றன. புராஸ்டேட் மற்றும் மார்பகப் புற்றுநோய், 30 சதவீதம் அளவுக்கு ஏற்படுகின்றன என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நமக்கு அமையும் பணி, உட்கார்ந்து செய்யக்கூடியது என்றால், அதைத் தவிர்ப்பது கடினம்தான். அதை ஈடுகட்டும் வகையில் பிற உடற்பயிற்சிகள், உடல் உழைப்பு சார்ந்த வேலைகளை மற்ற நேரங்களில் செய்யுங்கள்.

# சிந்தனை தெளிவடைய செய்யும்

## ஞான சின் முத்திரை



தியானம் செய்வதற்கு இந்த முத்திரை உகந்தது. மனஅமைதி வேண்டுபவர்கள் இந்த முத்திரையை தினமும் செய்து வரலாம்.

**பலன்கள் :**

இது தியானத்திற்கு ஏற்றது. சிந்தனை தெளிவு அடையும். நரம்பு மண்டலங்கள் நன்றாகச் செயற்படும். குருதி அழுத்தம் சீர்ப்படும்.

**செய்முறை :**

இரு கைகளையும் முழங்கால் மீது உள்ளங்கை மேல் நோக்கி இருக்குமாறு வைத்துக் கட்டைவிரல் ஆட்காட்டி விரல் நுனியைத் தொட்டவாறு லேசான அழுத்தம் தர வேண்டும்.

காலை, மாலை என 10 முதல் 15 நிமிடம் தினமும் செய்ய வேண்டும்.

இந்த முத்திரையை தரையில் அல்லது கதிரையில் அமர்ந்து கொண்டு செய்யலாம்.

ஒரு மாதம் தொடர்ந்து இந்த முத்திரையை செய்து வந்தால் நல்ல பலன் கிடைப்பதை காணலாம்.



## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கன்னாகம் |
|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 60 |
| கத்தரி | 120 | 100 | 120 | 140 |
| கரட் | 160 | 180 | 180 | 300 |
| மரவள்ளி | 60 | 80 | 60 | 70 |
| பயிற்றை | 100 | 80 | 80 | 80 |
| பாகல் | 160 | 200 | 120 | 240 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 90 | 100 |
| சி.வெங்காயம் | 240 | 280 | 200 | 300 |
| பூசணி | 60 | 40 | 50 | 60 |
| தக்காளி | 100 | 80 | 100 | 100 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 50 |
| கீரை | 25 | 30 | 15 | 40 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 40 | 30 |
| பச்சை மிளகாய் | 100 | 160 | 160 | 140 |
| புடோல் | 80 | 80 | 100 | 100 |
| கோவா | 120 | | 200 | 120 |
| வெண்டி | 100 | 80 | 80 | 100 |
| போஞ்சி | 160 | | 240 | 240 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 | 120 |
| தேங்காய் | 70 | 65 | 50-60 | 70 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 110 | 110 |
| தேசிக்காய் | 70 | 60 | 60 | 70 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 10 |
| கறிமிளகாய் | 120 | - | 240 | 100 |
| இராசவள்ளி | 160 | - | 250 | 200 |
| முருங்கைக்காய் | 160 | 60 | 100 | 120 |

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|
| இறால் | 600 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 500 | 300 |
| கணவாய் | 600 | 800 | 800 |
| பாரை | 500 | 700 | 600 |
| சுறா | 500 | 1000 | 1000 |
| சீலா | 400 | 500 | 400 |
| விளை | 500 | 500 | – |
| முரல் | 350 | 400 | 500 |
| கும்பிளா | 400 | 400 | 500 |
| கிளாக்கன் | 900 | 600 | – |
| ஓரா | 400 | 600 | 450 |
| திரளி | 250 | 200 | 200 |
| நகரை | 300 | 300 | – |
| சூடை | 200 | 200 | 250 |
| ஒட்டி | 200 | 300 | 450 |
| திருக்கை | 350 | 400 | 400 |
| மதனம் | 200 | 300 | – |
| கொய் | 150 | 100 | 100 |
| பாலை | 250 | 600 | 400 |
| வாழை | 150 | 500 | – |

## இது புதுசு







பெண்கள் தலை அலங்காரம் செய்துகொள்ளும்போது அதனை மேலும் அலங்கரிக்கும் விதத்தில் கிளிப் குத்துவது வழமையானதாகும். அந்த கிளிப் வகைகளில் நவீன வடிவிலான கிளிப்கள் தற்போது சந்தைக்கு வந்துள்ளன. இவை 250 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## கட்டுரை





# அன்னையர் தினம்

எஸ்.மல்லிகா

இன்று நாம் கொண்டாடிக்கொண்டிருக்கும் அன்னையர் தினத்தை அன்னையருக்கெல்லாம் அன்னையாகத் திகழ்ந்த அன்னா மரியா ஜார்விஸ் என்பவர்தான் ஆரம்பித்து வைத்தவர். இவர் திருமணமானவரோ, பிள்ளைகளைப் பெற்றெடுத்துத் தாயானவரோ அல்ல. அன்னைகளுக்காக அரும்பாடுபட்டவர் என்பதாலேயே இவரை மையப்படுத்தியதாக அன்னையர் தினமும் உருவாக்கப்பட்டது. தனது அன்னையைப் பாராட்டி, அன்னையர் தினம் கொண்டாடிய முதல் பெண் என்ற பெருமையையும் இவரே பெறுகின்றார்.

சமூக நலனில் அக்கறை கொண்ட அன்னா மரியா ஜார்விஸ், குறித்த ஒரு நாளிலாவது அனைவரும் தமது தாயை, அவர் உயிரோடு இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி கௌரவிக்க வேண்டும் என்று விரும்பி னார். அதற்காக அவர் கடுமையாக உழைத்தார். சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். அன்னா மரியா ஜார்விசும் அவரது ஆதரவாளர்களும் பொதுமக்களுக்கு நேரடியாகக் கடிதங்களை எழுதி அன்னையர் தினத்துக்குப் பெரும் ஆதரவு திரட்டினர். இதன் காரணமாக 1911ஆம் ஆண்டு அமெரிக்காவின் பல மாகாணங்களிலும் அன்னையர் தினம் கொண்டாடப்பட்டது. இதைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட பரப்புரைகளால், 1914ஆம் ஆண்டு மே 8ஆம் திகதி அரசதலைவர் உட்ரோவ் வில்சன் அதை ஏற்றுக் கொண்டு கையெழுத்திட்டார். அதன்படி ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை அன்னையர் தினம் அனுட்டிப்பது என்பது நடமுறைப்படுத்தப்பட்டது. அமெரிக்காவில் வாழ்ந்த அன்னா மரியா ஜார்விஸ்வினின் தாயன்பை அடியொற்றியே அன்னையர் தினம் உருவாக்கப்பட்டது என்று கூறப்பட்டாலும், முந்தைய காலத்தில் பெண் தெய்வங்களைச் சிறப்பித்துக் கொண்டாடுவதற்காகவே இந்தத் தினம் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. எது எவ்வாறாயினும், அன்னையின் தியாகங்களை மெச்சி அவளை ஆராதிக்க ஒரு தினம் மலர்ந்துள்ளமை வரவேற்கத்தக்கதே.

### பெருமைக்குரிய அம்மா

கடவுளின் படைப்பில் உன்னதமானவள் தாய். அவளால் மட்டும்தான் குழந்தையைச் சுமக்க முடியும். ஆயிரம் உறவுகள் இருந்தாலும், அத்தனை உறவுகளதும் ஆர்த்மார்த்தமான அன்பை ஒருமிக்கச் செய்து அன்பின் உச்சநிலையைக் காட்டுவது தாயன்பு மாத்திரமே. தன்னலமற்ற இந்தத் தாயின் அன்பை உலகில் வேறெங்கும் காணமுடியாது. எதிர்பார்ப்பற்ற இந்த அன்புக்கு எதுவும் ஈடிணையாகாது. தான் பெற்றெடுத்த பிள்ளையைப் பாராட்டிச் சீராட்டி, பாலூட்டி, அல்லும் பகலும் தனது தூக்கம் தொலைத்து, வேண்டியனவெல்லாம் அதற்கு அளித்துக் கண்ணை இமை காப்பதுபோல் காப்பவள் தாய். பிள்ளையின் துன்பத்தில் துவழ்ந்து, மகிழ்ச்சியில் மகிழ்ந்துவலம் வருபவள் தாய். பிள்ளைகளுக்காக வேராகி விழுதாகி, அவர்களின் இனிய பொழுதாகி உயிர்வாழ்பவள் தாய். பிள்ளைகளை ஆளாக்கி, அந்த அழகை இரசித்துச் சுவைப்பவள் தாய். அவர்கள் மீது தன்னலமற்ற அன்பை வாரி இறைப்பவள் தாய்.


### தாய்மையைப் போற்றுவோம்

அம்மாக்களின் மகத்துவத்தை அறநூல்களும், இலக்கியங்களும் ஏற்றிக் கூறுகின்றன. சினிமாப் பாடல்களும் வரிக்கு வரி போற்றிப் பாடுகின்றன. "ஈன்ற பொழுதினில் பெரிதுவக்கும் தன்மகனை சான்றோன் எனக்கேட்ட தாய்" என வள்ளுவரும், "தாயிற் சிறந்த கோவிலுமில்லை" என ஔவையாரும், ".ஈன்றாளோடு ஒப்பிடத் தெய்வமும் இல்லை" என நான்மணிக்கடிகையும் தாய்மையைப் போற்றியிருப்பது கண்கூடு.

தமது உடலை இருப்பிடமாக்கி, குருதியைப் பாலாக்கி வளர்த்தெடுத்த அம்மாக்களைப் போற்றித் துதிக்க, தியாகத்தால் நிறைந்த அம்மாக்களின் வாழ்க்கையைக் கௌரவிக்க வருடந்தோறும் இந்தத் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. ஆனால், அம்மாவை உண்மையிலேயே நேசிப்பவர்களுக்குத் தினமும் அன்னையர் தினம் தானே!

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 471



அனுப்புபவர் பெயர்:...........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

...........................................................

கையொப்பம்:...................................................

### இடமிருந்து வலம்

1. பெருங்கடல்
6. கன்னம்
7. விதவையின் நிலை. மை இழந்துள்ளது.
8. அடர்த்தியாக மரங்கள் உள்ள இடம்
9. ஒரு புல் வகை
10. அந்தரப்படு
11. வேலவனது ஆயுதம்
12. வடக்கின் கற்பக தரு
14. சத்தம்
16. கணபதி
19. தெரு
20. வித்தை
21. கைக்கு ஐந்து
22. நாங்கள்
23. ஆங்கில வருடத்தில் முதலாவது மாதம்

### மேலிருந்து கீழ்

1. எந்த நேரமும்
2. பின்னுதல்
3. பிரமிப்பு
4. தேவலோகத்து ஆடலரசி
5. காப்பிய நாயகி
8. பரீட்சை
11. யாகம்
12. கடதாசிகளை ஒட்டுவதற்குத் தேவைப்படுவது
13. ஒரு வகை மீன்
14. ஒன்று
15. எல்லையில் கட்டுவது
17. பாம்பு வகைகளில் வீரியம் மிக்கது
18. பாடல்
19. திறல்
21. ரக

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 469 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) சம்பாதி (4)அசதி (7) தனவந்தன் (8) பதிகம் (10)தம் (11) திறம் (12)மார் (14)அலை (15)நடு (16)கோபுரம் (18) விடம் (19)சமிபாடு (21) மையம் (22) சிதிலம்

**மேலிருந்து கீழ்**

(1) சதிபதி (2)பாதகம் (3) தினம் (4) அந்தர் (5)சதம் (6)தின் (9)திறப்பு (12)மாலை (13)குடும்பம் (14)அம்மி (15)நட (16)கோதுமை (17)ரசம் (18)விடுதி (20)பாசி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 469 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
T.கௌரிதரன் (சுரேஸ்),
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

**2 ஆம் பரிசு**
பி.குகன்ஜா,
கொட்டாவத்தை,
கல்வளை, சண்டிலிப்பாய்.

**3 ஆம் பரிசு**
செல்வி மா.வைஷயா,
இல.97/1, திருவையாறு,
கிளிநொச்சி.

**4 ஆம் பரிசு**
செல்வி. அமிர்தலிங்கம் அனோயா,
கரப்புக்குத்தி, கனகராயன்குளம்,

**5 ஆம் பரிசு**
ஜி.ராஜேந்திரம்,
இல.57, இரண்டாம் குறுக்குத்தெரு,
வவுனியா.

**பாராட்டுப் பெறுவோர்**

யதுஷா பானுராஜா,
வடமத்திய மகளிர் கல்லூரி,
கரவெட்டி.

தே.திசானி (குட்டி அம்மா)
இல. 154 கே.கே. எஸ். வீதி,
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.

சூ.ஞானப்பிரகாசம்,
4ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல.471 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (24.05.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.471இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 28.05.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான. முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 469 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# இந்த வாரம்

**14.05.2017 முதல் 20.05.2017 வரை**

உங்களுக்கு எப்படி?

## மேடம்

புதன், குரு, சுக்கிரன் நற்பலன் களை வழங்குவர். மனம், செயலில் புத்துணர்வு ஏற்படும். தாய் வழி உறவி னர்களால் உதவி கிடைக்கும். சுபவிடயத்தில் எதிர்பார்ப்பு ஓரளவு நிறைவே றும். குடும்பச் செலவுக்கு தேவையான பணம் தாராளமாக கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது. பிள்ளைகள் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். உடல்நலனில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் கடந்த கால உழைப்பின் பலனைப் பெறுவீர்கள். மாணவர்கள் அக்கறை யுடன் படித்து அதிக மதிப்பெண் பெறுவர்.

## இடபம்

பெரும்பான்மை கிரகங்கள் நற்பலன் தர காத்திருக்கின்றனர். வாழ்வில் இனிய அனுபவம் காண்பீர்கள். உடன் பிறந்தவர் உறுதுணையாக செயல்படுவர். வாகனப் பயணத்தால் நன்மை காண்பீர்கள். புத்திரர் படிப்பு வேலைவாய்ப்பில் முன்னேற்றம் அடைவர். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். தொழில் விடயமாக வெளியூர் பயணம் மேற்கொள்ள நேரிடும். பணியாளர்களுக்கு, விரும்பிய சலுகை கிடைக்கும். பெண்கள், புத்தாடை, நகை வாங்க வாய்ப்புண்டு. மாணவர்கள், பெற்றோருக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் படிப்பர்.

## மிதுனம்

சனி, ராகு, புதனால் அளப்பரிய நன்மை உண்டாகும். மனதில் தைரியம் மேலோங்கும். பொதுநலனில் அக்கறை கொள்வீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டாகும். பிள்ளைகள் படிப்பு வேலைவாய்ப்பில் முன்னேற துணை நிற்பீர்கள். எதிர்ப்பு விலகி வாழ்வில் நன்மை அதிகரிக்கும். நண்பருடன் சுற்றுலா சென்று வருவீர்கள். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி உண்டாகும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும். பணியாளர்கள், புதிய தொழில்நுட்பங்களை ஆர்வமுடன் கற்றுக் கொள்வர். பெண்களுக்கு, தாய் வீட்டினரின் உதவி கிடைக்கும்.



## கடகம்

சுக்கிரன், சந்திரன் நன்மை அளிப்பர். செயல்களில் முன்யோசனையுடன் ஈடுபடுவது அவசியம். குடும்பத்தில் செலவு அதிகரிக்கும். வீடு வாகன வகையில் விழிப்புடன் இருப்பது அவசியம். புத்திரரின் குறையைசரிசெய்வதில் இதமான அணுகுமுறை தேவை. அலைச்சலால் உடல் அசதிக்கு ஆளாகலாம். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். மனைவியின் அன்பைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும். பெண்கள், பிறருக்காக பணம், நகை பொறுப்பு ஏற்பது கூடாது.

## சிங்கம்

கேது, சுக்கிரன், சந்திரன் நன்மை தருவர். நண்பர்களின் உதவி கிடைக்கும். சுபவிடயத்தில் எதிர்பார்த்த நல்ல முடிவு கிடைக்கும். அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். வாகனத்தில்மிதவேகம்பின்பற்றவும். பிள்ளைகள் அலட்சிய மனப்பான்மையுடன் செயல்படுவர். நோய் தொந்தரவு குறையும். தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். பணியாளர்கள், கடமையில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. பெண்கள், பிள்ளை களின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள், அக்கறையுடன் படித்து வளர்ச்சி காண் பர். பணியாளர்களுக்கு, சலுகை கிடைக்கும்.

## கன்னி

கேது, சந்திரன், சனீஸ்வரரால் நன்மை உண்டாகும். மனதில் தைரியம் அதிகரிக்கும். உடன்பிறந்தவர்கள் பாசத்துடன் நடப்பர். பூர்வீக சொத்து மூலம் ஆதாயம் கிடைக்கும். பிள்ளைகள் பெற்றோரின் சொல்லுக்கு மதிப்பு கொடுப்பர். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும். அரசு வகையில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். விருந்து, விழாவில் அடிக்கடி பங்கேற்பீர்கள். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். பணியா ளர்களுக்கு, எதிர்பார்த்த சலுகை விரைவில் கிடைக்கும். பெண்கள், குடும்பத்தினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வர். மாணவர்கள், படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## துலாம்

ராகு, சூரியன், புதனால் நன்மை பெறுவீர்கள். தாமதித்த செயல் புதிய முயற்சியால் நிறைவேறும். சமூகத்தில் மதிப்பு உயரும். தம்பி, தங்கை உங்கள் சொல் கேட்டு நடப்பர். கடந்த கால உழைப்பின் பயன் வந்து சேரும். வாகனப் பயணத்தால் இனிய அனுபவம் உண்டாகும். பிள்ளைகளின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். உடல்நிலை சீராக இருக்கும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு துணைநிற்கும். தொழில், வியாபாரத்தில் சேமிக்கும் விதத்தில் ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள், எதிர்பார்த்த சலுகைஒவ்வொன்றாககிடைக்கும். பெண்கள், குடும்பநலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள், படிப்பில் ஆர்வமுடன் ஈடுபடுவர்.

## விருச்சிகம்

செவ்வாய், சுக்கிரன், குரு தாராள நற்பலன் தருவர். வாழ்வில் இனிய அனுபவம் உண்டாகும். பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். வாகனப் பயணம் நன்மையளிக்கும். பிள்ளைகள் கல்வி, வேலைவாய்ப்பில் சிறந்து விளங்குவர். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பூர்வ சொத்து மூலம் வருமானம் கிடைக்க வாய்ப்புண்டு. பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவி வழி உறவினர்களுடன் நெருக்கம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் இடையூறுகளை முறியடித்து முன்னேறுவீர்கள். பெண்கள், வீட்டுஉபயோகப்பொருள் வாங்கி மகிழ்வர். மாணவர்கள், திட்டமிட்டுப்படித்து முன்னேற்றம் காண்பர்.

## தனுசு

சூரியன், குரு, சுக்கிரன் கேது சகல வளமும் தருவர். திட்டங்கள் நல்லபடியாக நிறைவேறும். தாய்வழி உறவினர்களின் உதவி மனதிற்கு தெம்பளிக்கும். புத்திரர்களின் படிப்பு, வேலையில் மெதுவான முன்னேற்றமே இருக்கும். பகைவர்களால் கெடுசெயல் பலமிழக்கும். மனைவியின் அன்பில் நெகிழ்ந்து போவீர்கள். விருந்து, விழாவில் கலந்து கொள்ள வாய்ப்புண்டு. தொழில், வியாபாரத்தில் ஓரளவு லாபம் இருக்கும். பணியாளர்கள் கேட்ட சலுகை தாமதமாகும். பெண்கள் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர். மாணவர்களுக்கு ஞாபகசக்தி அதிகமாகி படிப்பில் முன்னேறுவர். மாண வர் கள், ஆசிரியர்களின் ஆலோசனைப்படி சிறப்பாகப் படிப்பர்.



## மகரம்

சனி, சூரியன், குரு, சுக்கிரன் அதிர்ஷ்ட பலன்களை வாரி வழங்குவர். பெற்றோரின் அன்பும், ஆசியும் கிடைக்கும். எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். புதிய முயற்சியில் வெற்றி உண்டாகும். வீண்செலவு இனி இருக்காது. பிள்ளைகள் விருப்பம் அறிந்து நிறைவேற்றி மகிழ்வீர்கள். பொது விடயங்களில் ஆர்வம் அதிகரிக்கும். அலைச்சலால் அசதிக்கு ஆளாக நேரிடும். மனைவியின் ஆலோசனையை ஏற்பது நன்மையளிக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறும். நிலுவைப்பணம் வசூலாகும். பணியாளர்கள், சக ஊழியர்களின் ஆதரவைப் பெற்று மகிழ்வர். பெண்கள், குடும்ப ஒற்றுமை மேலோங்கும். மாணவர்கள், பாதுகாப்பற்ற இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

## கும்பம்

சந்திரன், செவ்வாய், சுக்கிரனால் நன்மை பெறுவீர்கள். மனம், உடலில் புத்துணர்வு மேலோங்கும். நண்பரின் உதவியால் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தாயின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். பிள்ளைகள் உங்களின் வழிகாட்டுதலை ஏற்றுக் கொள்வர். பூர்வீகச் சொத்து பிரச்னையில் சமரச தீர்வு கிடைக்கும். மனைவி வழி உறவினர்களுடன் நெருக்கம் உண்டாகும். தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாளர்கள், நிலுவைப் பணிகளை விரைந்து முடிப்பர். மாணவர் கள், படிப்பில் கூடு தல் அக்கறை தேவை. பெண்கள், பிள்ளைகளின் நலனில் கவனம் செலுத்துவர்.

## மீனம்

குரு, ராகு, சுக்கிரனால் அளப்பரிய நன்மை உண்டாகும். எதிர்பார்ப்பு ஒவ்வொன்றாக நிறைவேறும். சுபவிடயத்தில் நல்ல முடிவு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும். தாய்வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். வாகன வகையில் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். பிள்ளைகள் திறமையை பயன்படுத்தி வாழ்வில் வளர்ச்சி பெறுவர். விருந்து விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்தபடி பணவரவு அதிகரிக்கும். பணியாளர்களுக்கு, எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். சக ஊழியர்களின் ஆதரவு உண்டு.

எம்.ஐ.முபாறக்

பலதும் பத்தும்



# அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா!







## அந்த ஆடைகள் தயார்!

மகிந்த அணியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான கீதா குமாரசிங்கவால் இனி அந்தப் பதவியை வகிக்க முடியாது என்று உயர் நீதிமன்றம் கடந்த வாரம் தீர்ப்பு வழங்கி இருந்ததை நாம் அறிவோம். இரட்டைக் குடியுரிமை உள்ள ஒருவரால் நாடாளுமன்ற உறுப்பின ராக முடியாது என்ற 19ஆவது திருத்தச் சட்டத்தின்படியே அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

கீதா, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தால் அவரது இடத்துக்கு நியமிக்கப்படவிருப்பவர் முன்னாள் அமைச்சர் பியசேன கமகே ஆவார். விருப்பு வாக்குகளின் அடிப்படையில் அவர்தான் கீதாவுக்கு அடுத்த இடத்தில் இருக்கின்றார்.

“19 ஆவது திருத்தச் சட்டத்தின்படி கீதாவால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க முடியாது என்றிருப்பதால் நிச்சயம் அவர் பதவியை இழக்க நேரிடும். நீதிமன்ற தீர்ப்பும் அவ்வாறுதான் அமையும். ஆகவே,கீதாவின் இடத்தை நிரப்புவதற்குத் நீங்கள் தயாராக இருங்கள்” என்று பியசேனவின் அரசியல் சகாக்கள் பல மாதங்களுக்கு முன்பே அவரிடம் கூறி இருந்தனராம்.

அன்றிலிருந்தே பியசேன கமகே அந்தப் பதவியை எதிர்பார்த்து ஆவலுடன் காத்துக் கிடக்கின்றாராம். நாடாளுமன்றத்துக்கு அணிந்து செல்லும் தேசிய ஆடையை அப்போதிருந்தே தயார் நிலையில் வைத்திருக்கின்றாராம்.

தேர்தலில் தோற்றதும் அந்த ஆடையை எங்கோ ஒரு மூலையில வீசிவிட்ட அவர், மேற்படி நம்பிக்கைச் செய்தி தெரிவிக்கப்பட்டதும் அந்த ஆடையைத் தேடிப் பிடித்து –துவைத்து –‘அயன்’ பண்ணி – அழகாக்கி வைத்திருந்து அதை அணியும் நாளை எதிர்பாத்துக் காத்துக் கிடக்கின்றாராம்.

## நூறு ரூபா தாங்களேன்...

மீதொட்டமுல்ல குப்பை மேடு இடர் ஏற்படுவதற்குக் காரணம் அர சியல்வாதிகளின் ஊழல் மோசடிதான் என்பதில் சந்தேகமில்லை. மக்கள் வாழ்கின்ற இடத்தைத் தேடிக்கண்டுபிடித்துக் குவிக்கப்பட்ட குப்பைகள் அவை என்பதால் அந்தக் குப்பை மேடு சரிந்து வீழ்ந்ததை இயற்கை இடராக ஏற்க முடியாது என்பதே மக்களின் நிலைப்பாடாகும். உண்மையும் அதுதான்

இதனால் அந்தப் பகுதி மக்கள் அரசியல்வாதிகள் மீது கடுப்பாகவே உள்ளனர். மகிந்த ஆட்சியில் அந்தக் குப்பைகள் கொட்டப்பட்டதால் மகிந்த அணி உறுப்பினர்கள் அந்த மக்களைப் பார்க்கச் செல்லும்போதெல்லாம் மக்கள் அவர்கள் மீது பாயவே செய்தனர்.

அப்படித்தான் பாவம் உதய கம்மன்பிலவும் அவர்களிடம் சிக்கினார். இடரால் பாதிக்கப்பட்டவர்களைப் பார்ப்பதற்காக அண்மையில் அங்கு சென்றார். அவரைச் சூழ்ந்துகொண்ட மக்கள் வெவ்வேறு கேள்வி களைத் தொடுத்தனர். சிலர் ஏசித் தள்ளினர். அவர்களுள் ஒருவர் கேட்டார்

“என்ன! எங்களுக்கு நட்டஈடு கொடுப்பதற்கு வந்தீர்களோ? அப்படியென்றால் ஒரு...100ரூபா தாங்க போதும்” என்றார்.

இதனால் கம்மன்பில வெட்கப்பட்டு அசடு வழியத் தொடங்கினார். 100 ரூபா கேட்டதும் கம்மன்பில ஏன் அசடு வழிந்தார் தெரியுமா? கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அவர் தேர்தல் செலவுக்காக இந்த நாட்டு மக்கள் ஒவ்வொருவரிடமும் 100ரூபா கேட்டிருந்தார். செலவழிப்பதற்குத் தன்னிடம் பணம் இல்லையாம்...! என்றும் கூறி இருந்தார்.

## நடந்தால்... மகிந்த அவுட்!

2015 அரசதலைவர் தேர்தலில் மகிந்த தோல்வியடைந்தபோதிலும் அவருக்கு இன்னும் கணிசமான அளவு மக்கள் செல்வாக்கு இருக் கவே செய்கின்றது. இதை நிரூபிப்பதற்காகவே மகிந்த அணியினர் மிகவும் சிரமப்பட்டு கடந்த மே தினக் கூட்டத்துக்கு அதிகமான மக் களை அழைத்து வந்தனர்.

அந்த மக்கள் அலையைப் பார்த்து ஐக்கிய தேசியக் கட்சியினர் சற்றுக் கலங்கிப் போய்த்தான் உள்ளனர். ஆனால், பிரதமர் ரணில் சற்றும் அசராமல் உள்ளாராம்.

சத்தமின்றி இராஜதந்திரரீதியில் மகிந்தவின் செல்வாக்கைத் உடைத்து வீசுவதற்கு அவர் எப்போதோ திட்டமிட்டுச் செயற்படத் தொடங்கியுள்ளமையே இந்த நிதானத்துக்குக் காரணம் எனவும் அறிய முடிகிறது.

தென் கரையோர மாவட்டங்களில் மகிந்தவுக்கு இருக்கின்ற செல் வாக்கை அழித்தால்போதும். ஏனைய மாவட்டங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சவாலானவை அல்ல என்று ரணில் கருதுகிறார். அதற்கு அவர் வகுத்த திட்டம்தான் அம்பாந்தோட்டை சுதந்திர வர்த்தக வல யம்.

இந்த வர்த்தக வலயத்துக்குள் 20நிறுவனங்களை அமைத்து தென் கரையோர மாவட்டங்களுக்கு மாத்திரம் ஒரு இலட்சம் வேலை வாய்ப் புகளை வழங்குவதற்கு ரணில் திட்டமிட்டுள்ளார். தனது திட்டம் வெளிப்படுத்தப்பட்டால் அதை மகிந்த அணியினர் குழப்பிவிடுவர் என்று அஞ்சியே அவர் அமைதியாக வேலை செய்து வருகிறாராம். இது நடந்தால், மகிந்தவின் கதை அவ்வளவுதான் என்கின்றன ரணிலைச் சுற்றியுள்ள வட்டாரங்கள்.

## மூன்று வெற்றிலை சப்பினால்...



நாம் ஒரு இடத்துக்குப் போகப்போகின்றோம் என்றால், மணிக்கு இத்தனை கிலோ மீற்றர் வேகத்தில் போனால், இத்தனை மணிக்கு செல்ல வேண்டிய இடத்தை அடைந்துவிட லாம் என்றுதான் அளவுகோலை வைத்தி ருப்போம். ஆனால், மகிந்த அணியின் அம் பாறை மாவட்ட உறுப்பினரான விமலவீர திசாநாயக்கவோ இதற்கு வேறு ஓர் அளவு கோலை வைத்துள்ளார்.

வெற்றிலைதான் அந்த அளவுகோள். அவர் வெற்றிலை போடும் பழக்கம் உடையவர். பயணத்தின்போது தொடர்ந்து வெற்றிலை உண்ணக்கூடியவர். அவர் பயணம் தொடங் கிய இடத்தில் இருந்து முடிவிடம் வரைக்கும் எத்தனை வெற்றிலை சப்பப்பட்டது என்று எண்ணிப் பார்த்தே அந்தப் பயணத் தூரத் தைக் கணக்கிடுவாராம்.

உதாரணத்துக்கு மகிந்த அரசு காப்பெற் வீதி களைப் போடுவதற்கு முன்னர் அம்பாறை யில் இருந்து திருகோணமலை செல்வதற்கு 10வெற்றிலை சப்ப வேண்டுமாம். ஆனால், இப்போது மூன்று வெற்றிலை யைச் சப்பி முடிப்பதற்குள் அவர் திருகோணமலையை அடைந்து விடுகிறாராம்.

மகிந்த அனைத்து நெடுஞ்சா லைகளையும் காப்பெற் செய்ததே இதற்குக் காரணம் என்று அவர் கூறுகிறார். மகிந்தவின் வீதி அபிவி ருத்தி பற்றிப் புகழ் பாடும்போதெல் லாம் இந்த வெற்றிலை அளவுகளைத் தான் இவர் உதாரணமாக முன்வைக் கின்றார். எப்படிக் கண்டுபிடிப்பு?



## மைத்திரியும் வேண்டும் மகிந்தவும் வேண்டும்

மகிந்தவை வெற்றி பெற வைப்பதற்குப் பாடுபட்ட சுதந்திரக் கட்சி பிரமுகர்கள் பலர் மைத்திரியின் வெற்றியைத் தொடர்ந்து மைத்தி ரியுடன் இணைந்துகொண்டதை நாம் அறிவோம். அவ்வாறு இணைந்தவர்களுள் அதிகமானவர்கள் அவர் வந்தால் அவர், இவர் வந்தால் இவர் என்ற நிலைப்பாட்டில்தான் இன்றும் உள்ள னர்.

மகிந்த அணியையும் இணைத்துக் கொண்டுபோனால்தான் அடுத்த தேர்தல்களில் சுதந்திரக் கட்சியால் வெற்றிபெற முடியும், தனித்து ஆட்சி அமைக்க முடியும் என்று அவர்கள் கருதுகின்றனர். மைத்திரியும் வேண்டும் மகிந்தவும் வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். அவ்வாறானவர்களுள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீரவும் ஒருவர். இரண்டு தரப்பையும் ஒன்றிணைப்பதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்ட அவர் தோற்றுப் போனார்.

ஆனால்,கடந்த காலங்களில் தான் அவ்வாறு முயற்சிகளை மேற் கொண்டபோது எதிர்கொண்ட கசப்பான அனுபவங்களையெல் லாம் அவர் அவர்களிடம் பகிர்கின்றாராம்.

மகிந்த அணியில் உள்ள அனைத்துக் கட்சிகளையும் அழைத் துப் பேசுவதற்காக உத்தியோகபூர்வ அழைப்புகளைத் தயார் செய்யும்போதே மகிந்த அணியில் இருந்து நிராகரிப்பு வந்து விடுமாம்.

அழைப்புக் கடிதம் அனுப்பப்படவுள்ளதை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் விமல் வீரவன்ச “கடிதம் வந்தால் கிழித்துக் குப்பைத் தொட்டிக்குள் வீசுவேன்” என்று செய்தி அனுப்புவாராம்.



# உள்ளத்தின் செம்மையே ஆரோக்கியம்

> இயந்திர வாழ்க்கையால் ஏற்படும் நெருக்கடிகளால் எமது சிந்தனைகள் எதிரான சிந்தனைகளாக மாற்றப்படுவதற்குரிய சாத்தியங்கள் இருக்கின்றன. இந்தச் சிந்தனை மாற்றத்தால் எமது மனம் அழுத்தத்தைச் சந்திக்கின்றது. இது எமது உடலிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. மனத்தில் ஏற்படும் அழுத்தத்தால் உடலில் ஏற்படும் நோய்நிலைமையை உளவியலாளர்கள் 'மெய்பாட்டு' நோய்கள் எனக் கூறுவர்.

நா.நவராஜ்

"உள்ளம் பெருங்கோயில்" என்றார் திருமூலர். உள்ளுதல் என்றால் நினைத்தல் என்று பொருள். நினைத்தல் என்ற தொழிலைச் செய்பவன் மனிதன். அவனிடம் இருப்பது உள்ளம். உள்ளத்துக்கு ஒத்தகருத்து மனம். இன்று மனம் பற்றிய, உளம் பற்றிய கல்வியும் ஆராய்ச்சியும் வளர்ச்சிகண்டு வருகின்றது. மனிதன் மனத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளத் தலைப்பட்டிருக்கின்றான் என்பது இதன் பொருள். இதன் அடிப்படையில் உடம்பில் ஏற்படும் பல விளைவுகளுக்கும் உள்ளம் காரணமாக இருப்பதைக் கண்டு உடலுக்கும் உள்ளத்துக்கும் - உள்ளத்துக்கும் உடலுக்கும் இடையில் ஓர் இறுக்கமான பிணைப்பு இருப்பதை உணர்ந்து கொள்ளலாம். நோயற்ற நிலைதான் ஆரோக்கியம் என்ற நினைப்பை மாற்றி வெறுமனே நோயற்றிருப்பதோ அங்கவீனம் அற்றிருப்பதோ ஆரோக்கியம் அல்ல, உடல், உள, சமூக நன்னிலை அடைதலே ஆரோக்கியம் எனப்புரிந்து இந்த நன்னிலையை - ஆரோக்கியத்தை அடைவதற்கு உள்ளத்துக்கு உதவுவது ஆன்மிகம் என்பதால் அதையும் சேர்த்து வரைவிலக்கணத்தை உருவாக்கி தற்பொழுதுவரை அதையேபின்பற்றியும்வருகின்றான் மனிதன்.இந்த முன்னேற்றம் நடந்திருப்பதை ஒரு சிலர் மாத்திரமே அறிந்திருக்கின்றனர். பலருக்கு இந்த விடயங்கள் தொடர்பான அறிவு இருந்தாலும்; சமூக நாணம் என்ற வலைக்குள் சிக்குண்டு வெளிவரமுடியாமல் இருக்கின்றனர்.



### உள்ளத்தில் தங்கியுள்ள உடல்

உடலுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைப்போல உள்ளத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்க அவர்கள் தயங்குகின்றனர். உடலுக்கு ஒரு பிரச்சினை என்றால் அதற்குரிய மாற்றத்தை அறிந்து செயற்படுத்துவதில் காட்டும் வேகத்தை உள்ளத்தைப் பிரச்சினையில் இருந்து விடுவிப்பதிலும் செம்மைப்படுத்துவதிலும் அவர்கள் காட்டுவதில்லை. ஏன் அதனைச் செம்மைப்படுத்த வேண்டும் என்றும் சிலவேளைகளில் கேட்கலாம்!

உடம்பில்ஒரு நோய் வந்தால் மனம் பல எதிரான எண்ணங்களை உருவாக்கி தானும் துவண்டு விடுகிறது. அதுபோல மனதில் ஒரு கவலையோ துன்பமோ குடிகொண்டு விட்டால் அது உடம்பில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இந்த இரண்டு வகையான நிலைக்கு உட்பட்டுத் துன்புறுவது சிலரின் நாளாந்த அனுபவமாக இருக்கிறது. எமது இன்றைய வாழ்க்கை முறையில் நாம் பயன்படுத்தும் உணவு தொடங்கி கையில் இருக்கும் கைபேசி வரை உடலையும் மனத்தையும் பாதிக்கின்றவையாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. எமது வாழ்க்கையோ இயந்திரமாக நகர்கின்றது. வேலைப்பழுவால் ஓய்வில்லாமல் பலர் தவித்துக் கிடக்கின்றனர்.

எமது நீண்ட வாழ்க்கைக்குச் அது சவாலாக இருப்பதை நாம் உணரமறுக்கின்றோம். கடந்த ஆண்டு ஐக்கிய அரபு எமிரேட்சில் 45வயதைக் கூட எட்டாத 403 பேர் சாவடைந்தார்கள். இவர்களில் 71 வீதம் பேர் இயற்கையாகச் சாவடைந்தார்கள். அதில் 91வீதம் பேர் வேலைப்பழுவால் ஏற்பட்ட மன அழுத்தத்தாலேயே இறந்தார்கள் என்பது கசப்பான உண்மையாக இருக்கிறது.

### மன அழுத்தம் எனும் எமன்

இயந்திர வாழ்க்கையால் ஏற்படும் நெருக்கடிகளால் எமது சிந்தனைகள் எதிரான சிந்தனைகளாக மாறப்படுவதற்குரிய சாத்தியங்கள் இருக்கின்றன. இந்தச் சிந்தனை மாற்றத்தால் எமது மனம் அழுத்தத்தைச் சந்திக்கின்றது. இது எமது உடலிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. மனத்தில் ஏற்படும் அழுத்தத்தால் உடலில் ஏற்படும நோய்நிலைமையை உளவியலாளர்கள் 'மெய்பாட்டு' நோய்கள் எனக் கூறுவர்.

மனஅழுத்தங்கள் எம்மில் காணப்படும் சில உடல் சார்ந்த பிரச்சினைகளை அதிகரிக்கச் செய்கின்றன. அவை நோய்களாக எம்மில் ஆரம்பிக்கின்றபோது, இந்த நோய்கள் தொடர்பான "மாத்த முடியாத வருத்தம் எனக்கு வந்திட்டுது", "நான் வருத்தக்காரன் ஆயிட்டன்" போன்ற தளர்வான எண்ணங்களும் இவர்களுக்கு மனஅழுத்தத்தை ஏற்படுத்தி நோயை அதிகரிக்கச் செய்கின்றன. இது தொடர்ச்சியாக நடைபெறுகின்றது. இதைப் பலர் உணர்வதில்லை.

### உடலாலும் உள்ளத்தாலும் கட்டமைக்கப்படுவதே உயிர்

உடலில் உண்மையாகவே (மெய்பாடுகள் அல்லாத) நோய் ஏற்பட்டிருப்பினும் அந்த நோயைக் குணமாக்கும் தன்மை மனத்திலும் தங்கியுள்ளது. தீர்க்க முடியாத நோய்களுக்கு உட்பட்டிருப்பவர்கள் கூடத் தமது வாழ்நாள்கள் வரையறுக்கப்பட்ட நிலையிலும் தமது மனத்தை எவ்வாறு அழுத்தமில்லாமல் வைத்திருக்கிறார்கள் என்பதைப் பொறுத்து அவர்களின் ஆயுள் நிர்ண யிக்கப்படுகின்றது.

அண்மையில் மார்பகப் புற்றுநோய் இருக்கும் பெண்களுடைய வாழ்க்கை முறை, அவர்களின் எண்ண் ஓட்டம் போன்றவை பற்றி ஆராய்ச்சி ஒன்று செய்யப்பட்டது. மார்பகப் புற்று நோய் உருவாகுவதற்கு சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பாகவே அந்தப் புற்றுநோய் வந்த அத்தனை பேரின் எண்ண ஓட்டமும் எதிர்மறையான எண்ண ஓட்டமாக இருந்தது. ஆய்வு செய்த 100பேரில் 98பேர் 10ஆண்டுகளுக்கு முன்னரே புற்றுநோயை வரவழைக்கும் எதிர்மறையான மன அமைப்பை உருவாக்கியிருந்தனர் என்பது தெளிவாகியது. இந்த ஆய்வுகளின் சரி, பிழைக்கு அப்பால் நாம் சிலவற்றை விளங்கிக் கொள்ளவேண்டிய தேவை இருக்கின்றது. முன்னர் கூறிய ஆரோக்கியத்தைப் பற்றிய வரைவிலக்கணத்தின்படி உடல், உள, சமூக மற்றும் ஆன்மிக நன்னிலை அடைதல் படிநிலை இருக்கிறது. இவற்றில் உடலையோ, சமூகத்தையோ, ஆன்மிகத்தையோ முதன்மையாகச் சொல்லிவிட முடியாது. காரணம் உடலைச் செம்மையாக வைத்திருத்தல் என்னும்போது அதனோடு உளம் தானாகவே இணைகின்றமை வெளிப்படை.

### ஆன்மிகம் தரும் உளத்தூய்மை

சமூகம் என்பது தனிநபர்கள் பலர் சேர்வது. எனவே அதைச் செம்மைப்படுத்த வேண்டுமெனில் அது தனிபரைச் செம்மைப்படுத்துவது என்பதையே சார்கின்றது. தனிநபர் எனும்போது அது அவரது உள்ளத்தைச் செம்மைப்படுத்தல் என்ற நிலைக்கே இட்டுச்செல்கின்றது.

ஆன்மிகம் என்பதும் ஒரு நபர்சார்ந்த, அவரது உளம் சார்ந்த ஒரு விடயம் . மனித உள்ளத்தைச் செம்மைப்படுத்தும் ஒரு கருவி. இதன்படி நோக்கும் போது இங்கு உளம் என்பது முதன்மை நிலை பெறுவது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கின்றது. முதன்மை பெறும் இந்த உள்ளத்தைச் செம்மைப் படுத்தும் ஒரு கருவியாக ஆன்மிகம் இருக்கிறது.

நாடகம், நடனம், சினிமா போன்ற கலைகளை இரசித்தல், நல்லவர்களுடனான சேர்க்கை, நகைச்சுவையை இரசித்து மனம் விட்டுச் சிரித்தல் போன்றனவும் உள்ளத்தைச் செம்மையாக்கும் கருவிகளாகத் தொழிற்பட வல்லன. இவ்வாறான செயற்பாடுகள் மூலம் உள்ளத்தைச் செம்மையாக்கினால் எமது வாழ்வு புதிய பாதையில் பயணிக்கும். மனம் தெளிவாக நலமாக இருந்தால் உடலுக்கு வரும் பிரச்சினைகள் குறையும். நோய் நிலையுற்றாலும் "நோய் கூட ஒரு வரம்" என்ற ஜென்னின் அருமையான வாக்கியத்தை மனத்திலிருத்துவோம். மனதைக் காத்து மாண்புற வாழ்வோம்.



பிரகாஸ்

# சங்கா, மகேல செய்த தவறை செய்கின்றனர் மிஸ்பா, யுனிஸ்

ஒருநாள் ஆட்டங்களில் இலங்கை அணி இன்று பெருமளவு தடுமாற்றத்தை எதிர்கொண்டுள்ளதென்றால்அதற்குமுக்கியமான காரணங்களில் ஒன்றுசங்கா, மகேல இருவரும் ஒரே நேரத்தில் ஓய்வெடுத்தமையே. இதை இலங்கை கிரிக்கெட்டின் முன்னாள் வீரர்கள் சிலரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இலங்கை அணி எதிர்கொண்ட இந்தச் சரிவை, அடுத்ததாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணி டெஸ்ட் ஆட்டங்களில் எதிர்கொள்ளவுள்ளது.

பாகிஸ்தான் டெஸ்ட் கிரிக்கெட்டின் முக்கிய வீரர்களில்இருவர்மிஸ்பாஉல்ஹக்மற்றும் யுனிஸ்கான். மேற்கிந்தியத் தீவுகளுக்கு பாகிஸ்தான் அணி சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இந்தத்தொடரின்மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

ஆட்டத்தின் ஐந்தாவதும் இறுதியானதுமான நாள் இன்றாகும். இன்றுடன், பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவர் மிஸ்பா, நட்சத்திர வீரர் யுனிஸ்கான் இருவரும் பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் இருந்து விடைபெற்றுச் செல்கின்றனர்.

பாகிஸ்தான் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் மிஸ்பா,யுனிஸ்கான்இருவரும்இருதுருவங்களாகப்பார்க்கப்படுகின்றனர். கடந்தவருடம் மத்தியபகுதியில்பாகிஸ்தான்கிரிக்கெட்அணி பன்னாட்டுடெஸ்ட்தரப்படுத்தலில்முதலிடம் பிடித்தது. 2009 ஆம் ஆண்டின் பின்னர் பாகிஸ்தானில்எந்தஅணியும்சுற்றுப்பயணம் செய்துவிளையாடாதநிலையில்வெறுமனே அன்னிய மண்ணில் அத்தனை ஆட்டங்களையும் எதிர்கொண்டு அணியை முதலிடத்துக்குக் கொண்டுசெல்வதென்பது மிகப் பெரும் சாதனையே.

யுனிஸ்கானைப் பொறுத்தவரையில் அவர் பாகிஸ்தானின் நட்சத்திர வீரராக இன்றும் உள்ளார். அணியில் தொடர வேண்டும் என்று கோரிக்கைகள் வைக்கப்படுகின்ற போதிலும் திறனில் இருக்கும்போதே அணியை விட்டுச் சென்றுவிடவேண்டும் என்பதில்தெள்ளத்தெளிவாகஉள்ளார். பத்தாயிரம் ஓட்டங்களைக் கடந்த முதல் பாகிஸ்தான்வீரரும்ஒரேயொருபாகிஸ்தான்வீரரும் இவரே.

எனவே மிஸ்பா, யுனிஸ்கான் இருவரின் விலகல்சங்கா, மகேலஇருவரும்ஒரேநேரத்தில் அணியை விட்டுச் சென்றமைக்கு நிகரானது. இதனால்தனதுமிகப்பெரும்இருஅனுபவங்களை இழந்துள்ள பாகிஸ்தான் அணி அடுத்த சில ஆட்டங்களில் பெரும் தடுமாற்றத்தை எதிர்கொள்ளும் என்பதில் ஐயமில்லை.



# பொண்டிங்கின் ஐ.பி.எல். அணி; தலைவராக டோனி நியமனம்

ஐ.பி.எல். தொடரில் முன்னதாக முடிவடைந்த 9 தொடர்கள் மற்றும் தற்போது நடைபெற்றுவரும் தொடர் என அத்தனையும் சேர்த்துதனதுகனவுஅணியைஅறிவித்துள்ளார்ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் பொண்டிங். இந்த அணிக்கு டோனி தலைவராக நியமிக்கப்பட்டார்.

பொண்டிங்கின் கனவு அணி - கெய்ல், வோர்ணர், கோக்லி, ரோகித் சர்மா, ரெய்னா, டோனி, பிராவோ, மிஸ்ரா, ஹர்பஜன், மலிங்க, நெக்ரா.

தனது தெரிவுக்கான காரணங்களையும் பொண்டிங் குறிப்பிட்டுள்ளார். கியிஸ்கெய்ல்நடப்புவருடத்தொடரில்படுமோசமான பெறுபேற்றை வெளிப்படுத்துகின்ற போதிலும் ரி-20 வகை ஆட்டங்களில் முதன்முதலில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரராக உள்ளார்.

இதன் அடிப்படையிலேயே அவரது தெரிவு அமைந்தது. நடப்பு வருடத் தொடரில் அதிக ஓட்டங்களைக் குவித்ததன் அடிப்படையில் வோர்ணர் தெரிவுசெய்யப்பட்டார். கடந்த தொடரில் 4 சதங்களை விளாசியதன் அடிப்படையில் கோக்லியும், ஐ.பி.எல். தொடரில்அதிகஓட்டங்கள்குவித்தவர்என்றஅடிப்படையில்ரெய்னாவும், அதிககிண்ணங்களைவென்றதலைவர்என்றஅடிப்படையில் டோனி தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.




# ராவிட்டுக்குப் பேராதரவு

ஐ.பி.எல். தொடரில் டெல்லி அணியைக் கட்டமைத்ததில் ஓர் பயிற்சியாளர் மற்றும் ஆலோசகராக ராவிட் தோல்வியடைந்துள்ளார் என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் ஆகாஸ் சோப்ரா முன்வைத்த கருத்துக்கு எதிராக ராவிட்டுக்கு தற்போது பெரும் ஆதரவு அலை எழுந்துள்ளது.

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் டெல்லி அணி தோல்வியடைந்தமைக்கு ராவிட்டும் ஓர் காரணம். அவர் அணியைக் கட்டமைக்கும் போது முழுவதும் இளம் வீரர்களை மட்டுமே நம்பினார் என்று விமர்சித்தார்சோப்ரா. இதற்குருவிற்றர்வாசிகள்தற்போதுபதிலடிகொடுக்கஆரம்பித்துள்ளனர்.

டெல்லியின் தோல்விக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகராவிட்டின் அணித்தெரிவைக் குறிப்பிட இயலாது. முன்னணி வீரர்களான சகீர்கான், டுமினி, குயின்டன் டி ஹொக் போன்ற வீரர்கள் காயம் காரணமாக விளையாடவில்லை என்பதை சோப்ரா நினைவில் கொள்ள வேண்டும் என்று டுவிட்டர்வாசிகள்தமது கருத்துக்களைப் பதிவுசெய்துள்ளனர்.

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் டெல்லி அணி தோல்வியடைந்தமைக்கு ராவிட்டும் ஓர் காரணம். அவர் அணியைக் கட்டமைக்கும் போது முழுவதும் இளம் வீரர்களை மட்டுமே நம்பினார் என்று விமர்சித்தார் சோப்ரா.







சுழிபுரம் மேற்கு கலைமகள் விளையாட்டுக் கழகத்தின் மாணவர்களுக்கான கௌரவிப்பும், பரிசளிப்பு விழாவும் கடந்த 15 ஆம் திகதி றாத்தலடி கலைமகள் கலையரங்கில் கலைமகள் விளையாட்டுக்கழகத் தலைவர் செல்வன் வ. கோகுலநேசன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வின் முதன்மை விருந்தினராக புளொட் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக வைத்திய கலாநிதி இரத்தினசிங்கம் தணிகைவாசன் (தேசிய வைத்தியசாலை, கொழும்பு), நோபேட் உதயகுமார் (கோட்டக் கல்வி பணிப்பாளர், சங்கானை) ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக திருநாவுக்கரசு உதயசூரியன் (நிர்வாக உத்தியோகத்தர், வலிமேற்கு பிரதேச செயலகம்) இந்திரா தவநாயகம் (ஆசிரியை, யா.விக்ரோறியாக் கல்லூரி) ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (ஐ)





தொழில்நுட்பக் கலை கலாச்சார மற்றும் பெண்கள் மேம்பாட்டு அமையத்தின் ஏற்பாட்டில் துணுக்காய் பிரதேச அறநெறி ஆசிரியர்களுக்கு வைத்திய கலாநிதி இலம்போதரனால் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. இதில் துணுக்காய் பிரதேச செயலர், கலாசார உத்தி யோகத்தர், சிவஸ்ரீ உருத்திரமூர்த்தி குருக்கள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர். (ஐ)




புலம்பெயர்ந்ததாயகஉறவுகளால்உதவிவழங்கும்செயற்திட்டத்தின் கீழ் புளொட் அமைப்பின் ஜேர்மன் கிளையினர், புதுக்குடியிருப்பு, கைவேலி கிராமத்தில் அமைந்துள்ள 'சுயம்' என அழைக்கப்படும், வறியநிலையில்உள்ளபெண்களால்ஒன்றிணைந்துநடாத்தப்படும் உணவுப் பொருள்கள் உற்பத்தி நிலையத்தை மேம்படுத்தும் செயற்பாடுகளுக்காக ரூபா 25 ஆயிரம் நிதியுதவியை வழங்கி னார். (ஐ)



மறுமலர்ச்சி மன்றத்தால் வடமாகாண அளவில் நடாத்தப்படுகின்ற ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டியின் முதல் மற்றும் இரண்டாவது சுற்றுப் போட்டிகள் கடந்த 23 ஆம் திகதி சாவகச்சேரி கலாமன்றத்தில் இட ம்பெற்றது. (ஐ)




யாழ். நீரிழிவுக் கழகத்தின் ஏற்பாட்டில் எஸ்.லோன் நிறுவன அனுசரணையுடன் நீரிழிவு விழிப்புணர்வுப் பதாகைகள் யாழ் நகரின் பல்வேறு இடங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. யாழ். நீரிழிவுக் கழகத் தலைவர் தி.மைக்கல் விழிப்புணர்வுப் பலகை யைத் திறந்து வைத்தார். (ஐ-135)




பன்னாட்டு லயன்ஸ் கழகத்தின் நூற்றாண்டு பூர்த்தியை முன்னிட்டு நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகம் 100 பய னாளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கிய நிகழ்வில் 306 பி 1 லயன்ஸ் மாவட்ட ஆளுனர் லயன் மருத்துவர் வி.தியாகராசா முதலாவது உப மாவட்ட ஆளுனர் லயன் கமிலஸ் பெர்னான்டோ இரண்டாவது மாவட்ட ஆளுனர் லயன் தேவா பீற்றர் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (ஐ-173)




யாழ். கிறின்பீல்ட் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ். நீரிழிவுக் கழகத்தின் அனுசரணையுடன் மருத்துவ முகாம் கடந்த வாரம் 22 ஆம் திகதி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. யாழ். பேராலயப் பங்குத்தந்தையும் யாழ். மறைக் கோட்ட குருமுதல்வருமான அருட்பணி சி.நேசராஜா அடிகளார் நிகழ்வை ஆரம்பித்துவைத்தார். (ஐ-135)

## English Medium Tution Classes From Preschool to A/L

ஆங்கில மொழிமூல பிரத்தியேக வகுப்புக்கள் வெளிநாடு செல்பவர்களுக்கான **Spoken English class**

**O/L, A/L** மாணவர்களுக்கான ஆங்கில **Paper Class** என்பன கற்பிக்கப்படும்.

**Specializingin:**
**English Language Maths**
**Triple Science**
***Both Srilankan Cambridge Syl labus**
***Spoken English For School Stu dents**
***People Trying to go abroad**
***Paper Class For Scholarship O/Level, A/Level (English Lan guage)**
***IELTS Paper Class + Spoken(Group +Individual Class)**

**Contact - 077 8986 715**
**077 809 4534 (Nallur)**

## தேவை

இங்கிலாந்தில் (UK) உள்ள ஆலயத்திற்கு குருக்கள்/ அர்ச்சகர் தேவை. (2 வருட ஒப்பந்தம்)
தொடர்புகளிற்கு:
beeamman@gmail.com

## வேலையாள்கள் தேவை

கடையில் வேலை செய்ய கூடிய படித்த பெண் பிள்ளைகள் தேவை.
**0771595826**

## காணி விற்பனைக்கு

மல்லாகம் சந்திக்கும் துர்க்கை அம்மன் கோவிலிற்கும் இடைப்பட்ட பகுதியில் ( K. K.S வீதிக்கு அருகில்) 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு.0779151247**

## வீடு விற்பனைக்கு அல்லது வாடகைக்கு

K.K.S றோட், 3rd MilePost கொக்குவில் பகுதியில் மூன்று அடுக்கு மாடி வீடு பதினொரு படுக்கை அறைகளுடன் கூடிய இணைந்த குளியலறை வசதி கொண்ட நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட வீடு விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உள்ளது தரகர்கள் தேவையில்லை.
**தொடர்பு.0773464756**

## வீடு விற்பனைக்கு வேண்டும்

யாழ். நகர் அல்லது திருநெல்வேலி / கல்வியங்காடு பகுதிக்கு உட்பட்டது.
விலை -5000000 -உட்பட்டது.
**071709 6969**

## காணி குத்தகைக்கு தேவை

யாழ். நகர், A9 வீதி, அரியாலை பகுதிகளில் கோழிப்பண்ணை அமைப்பதற்கு காணி குத்தகைக்கு தேவை.
**0772453673**

## வேலைக்கு ஆள்தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பான்சி கடை ஒன்றிக்கு பெண் ஊழியர் தேவை. தகைமை எதுவும் தேவையில்லை வயது எல்லை 18-30 உட்பட்டவராகவும் அடிப்படைச்சம்பளம் 8000/= பின் திறைமைக்கேற்பசம்பளம்வழங்கப்படும்.
**தொடர்பு.0757637372**

## விற்பனையாளர் தேவை

புடைவைக் கடை வேலை பழகியவரும் பழக விரும்புபவரும் விற்பனையாளராக தேவை.
**சீமாட்டி**
**122,மின்சார நிலைய வீதி,யாழ்ப்பாணம்**
**0212228564,2215111**

## கணக்கு உதவியாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கு கணக்கியல் துறையில் அனுபவமும் தேர்ச்சியுமுடைய 40 வயதுக்கு மேற்பட்ட பெண் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். தகுதியும் ஆர்வமும் உடையோர் கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு 22.05.2017 இற்கு முன் தங்களது சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை அனுப்பி வைக்கவும்.

**விளம்பர இல- 5534**
**மே/பா உதயன்,**
**இல.361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.**

## நாகபூஷணி
## திருமண சேவை

நீங்கள் விரும்பும், டாக்டர், எஞ்சினியர், எக்கௌண்டன், அரச உத்தியோகத்தர், தனியார் துறையினர் மற்றும் வெளிநாட்டு மணமகன்கள் / மணமகள்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகப் பொருத்தமாக உடன் மணமக்கள் ஜாதகங்கள் தரப்படும்.

**ஏழு நாள்களும் திறந்திருக்கும்**

383/14B, **கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**(நல்லூர் கோவில் வடக்குப் பக்கம்)**
**T.P: 077 138 7596 / 021 222 9306**

(003960)(10)

## உடல் எடை குறைய வேண்டுமா ?

*எடை கூடுகிறதா ?
*உடல் எடை கூடி பல்வேலு நோய்களால் அவதிப்படுகிறீர்களா ?
*வயிறு, மார்பு குறைக்க வேண்டுமா ?
*உடல் எடை குறைகிறதேயில்லை என்கிற கவலையா ?
*ஊளைச்சதையா ?
*வயிற்று கோளாறா ?

**100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம் (பால்மா, குளிசை, கிறீம்) 2 வாரங்களின் அற்புதமான மாற்றத்தை உணர்வீர்கள்.**
**(விலை - 3500, 5500, 9000)**

பதிவு இல : 16168
077 2106 155
**221, நாவலர் றோட், யாழ்.**

## தலைமுடி நீளமாக வளரவேண்டுமா ?

*தலைமுடி வளரவேண்டுமா?
*பேன் பொடுகு தொல்லையா?
*முடி கொட்டுகிறதா ?
*இள நரையா ?
*தலையிடியா ?
*முடி அடர்த்தி இல்லையா?

**பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சைவேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்து காய்ச்சிய எண்ணெய் 100 %ஆயுள் வேத முறைப்படி காய்ச்சிய இவ்வெண்ணெய்யை பாவித்து பலனடைய**

பதிவு இல : 16168
077 263 9037
**221, நாவலர் றோட், யாழ்.**

## இலங்கையில் முதல் தடவையாக

பெண்களுக்கு பொருத்தமான பாடநெறிகளைக்கொண்ட அழகுக்கலை பயிற்சி நெறிக்கல்லூரி

## ஒளி அழகன் ஸ்டூடியோ

**British College of Beauty Studies** இணைந்து நடத்தும் பாடநெறிகள் + அழகுக்கலைச்சேவைகள்.

**அழகுக்கலை | சிகையலங்காரம் | கேக்ஐசிங்**
**சமையற்கலை | ஆங்கிலம் | சிங்களம்**
**French | Dutch | Driving**

போன்ற அனைத்து பாடநெறிகளும் பெண் ஆசிரியர்கள் மூலமாகவே பயிற்சியளிக்கப்படும்.

**எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் இணையும் அனைத்து பயிற்சி மாணவர்களுக்கும் 3000 ரூபாய் Discount Voucher வழங்கப்படும்.**

**சர்வதேச சான்றிதழை அனைத்து பாடநெறிகளுக்கும் வழங்கி வருகின்றோம்.**

### Services

Threading, Perming, Carling, Straigthning, Relaxing, Cleanup, Bridal Dressing, Hair Cuts,Hair Colouring, Facials.

மணப்பெண்களுக்காக விசேட Package களை வடிவமைத்துள்ளோம். 25 இற்கும் மேற்பட்ட முக Makeup கள் இம் மாதம் மணப்பெண் அலங்காரத்தை பதிவு செய்பவர்களுக்கு Discount வழங்கப்படும்.

**அறிவித்தல்** - அனைத்து பெண்களும் கண்ட கண்ட கிறீம்களை பயன்படுத்தாதீர்கள் தோல் புற்று நோய் வருவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளது. உங்களுடைய சரும வகையை அறிந்து உபயோகியுங்கள் 16.05.2017 செவ்வாய்க்கிழமை இலவசமாக கருத்தரங்கில் இணைந்து கொள்ளுங்கள் தோல்பரிசோதனை SelfCleanup மேலும் பல இடம்பெறும்
(பதிவுகளை மேற்கொள்ளுங்கள்)

**British College of Beauty Studies**
கஸ்தூரியார் வீதி
(உதயன் பணிமனை அருகில்), யாழ்ப்பாணம். (076 570 3988)

## கண்ணீர் அஞ்சலி



சங்கத்தானை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட

*திருமதி*
*தம்பிராசா நாகேஸ்வரி*
[அக்கம்மா]

**தோற்றம்** 25.10.1940 **மறைவு** 12.05.2017

**அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் உற்றார்,உறவினர் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!
இரத்தினம் குடும்பத்தினர்.

## உடனடி வேலைவாய்ப்பு

பிரபல தளபாடங்கள் மற்றும் மின் உபகரணங்கள் விற்பனை நிறுவனத்தில் விற்பனை பிரதிநிதி வெற்றிடம் - (10), சம்பளம் 25000/= இற்கு மேல் ஆண், பெண் இருபாலாருக்குமான ஓர் அரிய வாய்ப்பு.

**வயதெல்லை - 18 -25**
**நேர்முகத் தேர்வு :- 15.05.2017**
**நேரம் :- முற்பகல் 10 மணி.**
**இடம்:- இல.83, காதி அபுபக்கர் வீதி, யாழ்ப்பாணம்**
**077 388 3879, 077 763 0214**

## Florance Nighhtingaale
### School of Nursing

**தற்போது எங்களின் புதிய சேவையாக நோயாளர்களை பராமரிக்கும் சேவையை ஆரம்பித்துள்ளோம்**

சிறுவர்கள், முதியவர்கள், கர்ப்பவதிகள் அனைவரையும் தங்கள் இல்லங்களுக்கு வருகை தந்து அக்கறையுடன் சேவை மனப்பாங்குடன் கவனித்துக் கொள்வதற்கு உதவித் தாதியர் பயிற்சிப் பெற்ற தாதியர்கள் எங்களிடம் இருக்கின்றனர்.

**தங்கள் தேவையறிந்து சேவை செய்ய நாங்கள் காத்திருக்கின்றோம்**

**தொடர்புகளுக்கு: 0777186438**
**கே.கே.எஸ் றோட், மருதனார் மடம்.**

(CS 3949) (10)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி கென்ஸ்மன் வீதியில் 3 நிலப்பரப்பு காணி. நன்னீர் கிணற்றுடன். மாமரங்கள். தென்னை மரங்களுடன் வீடு கட்டுவதற்கு உகந்த வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. தரகர்கள் ேவையில்லை.

தொடர்புகளுக்கு:
**T.P: 075 477 8721**

(ANE CS 00167)(10)

## விசா ஆலோசனைகள்

**நீங்கள் பட்டதாரியா? அல்லது 3 வருடங்களுக்கு குறையாத தொழில் அனுபவம் உள்ளவரா ?**
**உங்களுக்கோர் அரியவாய்ப்பு**
**குடும்பத்துடன் கனடாவில் குடிபெயர சிறந்த ஆலோசனைகள்**

**WINSTAR VISA CONSULTANTS**

*நான்கு வருடகால மக்களின் நன்மதிப்பை பெற்ற நிறுவனம்
*எங்குமில்லாத மிகக்குறைந்த கட்டணங்கள்
*IELTS 7 புள்ளி எடுப்பதற்கான சிறந்த ஆங்கிலப் பயிற்சிகள்
வயதெல்லை 35வயதிற்குட்பட்டவர்கள்

**2018 ஆம் ஆண்டுக்கான பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

**முதலில் வரும் தகைமை உள்ள 5 பேரின் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.**

**For Get Appointments - 021 300 4641**

**WINSTAR VISA CONSULTANTS**
**106, தபாற்பெட்டிச்சந்தி பலாலி வீதி, திருநெல்வேலி.**
**www.winstarjaffna.com**

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்** 29.12.1948
**மறைவு** 18.04.2014

*அமரர்*
*திருகதிர்காமு உமாமகேஸ்வரன்*
[கதிர் வெல்டிங் வேர்க்ஸ் உரிமையாளர்]
திதி: சங்கடசதுர்த்தி

**ஆண்டுகள் மூன்று ஓடிமறைந்தாலும் உங்கள் நினைவுகள் மட்டும் -எம் நெஞ்சங்களில் நீங்காதுநிலைத்திருக்கிறது எம் கண்களை மூடும் போது கூட-உங்கள் முகம் கலையாதுவந்துபோகிறது.**

கச்சாய் வீதி
சாவகச்சேரி.
குடும்பத்தினர்.





திருநெல்வேலிசிறுவர்பூங்காமுன்பள்ளிக்குழந்தைகள்காப்பகச்சிறார்களின்ஆக்கத்திறன் கண்காட்சியும், யோகா பயில்வு நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண ஆரம்பக் கல்விப் பணிப்பாளர் ஏ.சற்குணராஜா, சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற பீடாதிபதி எஸ்கே. யோகநாதன் காப்பகப் பணிப்பாளர் கர்ணி தனபாலன், இந்தியாவிலிருந்து வருகை தந்த யோகா நிபுணர் கலாநிதி நிவேதினி மற்றும்நிபுணத்துவஆலோசகர்கலாநிதிபா.தனபாலன்ஆகியோரைக்காணலாம். (ஜ-29)





மறுமலர்ச்சி மன்றத்தால் வடமாகாண அளவில் நடாத்தப்படும் ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டி கடந்த 6 ஆம் திகதி மன்னார் கலை அருவி மண்டபத்தில் இடம்பெற்றது. (ஜ)







வலி.மேற்கு, சங்கானை பிரதேச செயலராக கடந்த 6 வருடங்களாகக் கடமையாற்றி, வேலணைபிரதேசசெயலக, செயலாளராக இடமாற்றம்பெற்றுச்செல்லும்அம்பலவாணர் சோதிநாதனுக்கு, வலிமேற்கு, பிரதேச செயலக அலுவலர்கள், பல்வேறு சமாசங்கள், சங்கங்கள் அண்மையில் பிரியாவிடை நிகழ்வை நடத்தினர். (ஜ-29)





யாழ். போதனா வைத்தியசாலையின் வேண்டுகோளுக்கமைமவாக, சங்கானை மாவடி இளைஞர் மன்றத்தினரால் ஆலய கலாசார மண்டபத்தில் அண்மையில் குருதித்தான நிகழ்வு நடைபெற்றது. (ஜ-29)



சாவகச்சேரிசங்கத்தானை இத்தியடிவீரசத்திவிநாயகர் ஆலயப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்றது. (ஜ-9)







கொடிகாமம்தெற்குபாலர்பகல்பராமரிப்புநிலையச்சிறார்களின்விளையாட்டு விழா கடந்த 7 ஆம் திகதி நிலைய மைதானத்தில் நடைபெற்றது.
நிலையத்தலைவர்மா.மதிவண்ணன்தலைமையில்நடைபெற்றநிகழ்வில் தலைமை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர் அ.பரம்சோதி, தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம், போக்கட்டி அ.த.க.பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-9)

# மனித விடுதலைக்காகக் குரல் கொடுப்பவர்களே ஆயர்கள்; அவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள் சான்று பகர்கின்றன

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

ஒருவர் தனது வாழ்க்கை வரலாற்றை எழுதி வெளியிடுவது சுயசரிதை எனப்படும். பல பெரியோர்களும் சான்றோர்களும் அவ்வாறு தம் கைப்பட எழுதும் சுயசரிதைகள் உன்னத இடத்தைப் பெற்றுப் பலராலும் விரும்பிப் படிக்கப்படுவதுண்டு. அந்த வரிசையில் யாழ். மறைமாவட்டத்தின் மறைந்த முன்னாள் ஆயர் கலாநிதி வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை (1972 1992) யாழ். மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை (1992 2015) மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர்இராயப்பு யோசேப்பு ஆண்டகை (1992 2016) ஆகியோர் தமது வாழ்க்கை வரலாற்றை சிறப்பான விதமாக பணிக் குறிப்புக்களாக எழுதி வெளியிட்டுள்ளனர்.

**ஆயர் கலாநிதி வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை**




யாழ். மறைமாவட்டத்தின் மறைந்த முன்னாள் ஆயர் கலாநிதி வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை (1972 1992) 1998ஆம் ஆண்டு தம் வாழ்க்கைக் குறிப்புக்கள் அடங்கிய சுயசரிதை நூல் ஒன்றை வெளியிட்டார். இந்த நூல் ஆங்கில மொழியிலும்; தமிழ் மொழியிலும்; வெளியிடப்பட்டது. நூலின் தமிழ் மொழி பெயர்ப்பை ஆயர் வ.தியோகுப்பிள்ளை அவர்களின் வாழ்வும் பணியும் (ஞாபகக் குறிப்புக்கள்) என்னும் தலைப்பில் வெளிடப்பட்டது. இதன் மொழியாக்கத்தை செல்வி வயலற் இம்மானுவேல் செய்திருந்தார். யாழ். மறைமாவட்டத்தின் மறைந்த முன்னாள் ஆயர் கலாநிதி வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை முதலில் திருமலை மட்டுநகர் துணை ஆயராகவும் (1967 1972) பின்னர் யாழ். மறைமாவட்டத்தின் ஆயராகவும் (1972 - 1992 பணியாற்றியவர். அவரின் இளமைப் பருவம் முதல் இந்த நூல் தெரிவிக்கிறது.

**ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை**


யாழ். மறை மாவட்ட ஓய்வு நிலை ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் வாழ்க்கைக் குறிப்புக்கள் அடங்கிய சுயசரிதை நூல் ஆங்கில மொழியில் 2016ஆம் ஆண்டு குருக்களுக்கான கிறிஸ்மஸ் ஒன்றுகூடலின்போது வெளியிட்டு வைக்கப்பட்டது. யாழ். மறைமாவட்டத்தை ஆயனாக வழிநடத்தல் ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை என்னும் தலைப்பில் யூட் தாஸ் அடிகளாரின் தொகுப்பாசிரியப் பணியில் நூலாக வெளிவந்துள்ளது.
யாழ். மறை மாவட்ட ஓய்வு நிலை ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் பணி இரண்டு மறைமாவட்டங்களில் ஆற்றப்பட்டது. முதலில் மன்னார் மறை மாவட்டம் (1981 1992) இரண்டாவது யாழ். மறைமாவட்டம் (1992 2015). இவரின் நூலில் மன்னார் மறைமாவட்டப் பணி பற்றிய குறிப்பு இணைக்கப்படவில்லை. அதனை வெளியிடுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது ஒரு நல்ல தகவலாகும். யாழ். மறை மாவட்ட ஓய்வு நிலை ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் இளமைக்காலம் பற்றிய குறிப்பு எதுவும் இந்த நூலில் இல்லை என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

**ஆயர் கலாநிதி இராயப்பு யோசவ் ஆண்டகை**


மன்னார் மறை மாவட்ட ஓய்வு நிலை ஆயர் கலாநிதி இராயப்பு யோசவ் ஆண்டகையின் வாழ்க்கைக் குறிப்புக்கள் அடங்கிய சுயசரிதை நூல் ஆங்கில மொழியில் ஓர் வாழும் நாயகன் என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது. கலாநிதி வின்சன் பற்றிக் அடிகளார் இந்த நூலை வெளியிட்டுள்ளார்.
மன்னார் மறைமாவட்ட சமுகத் தொடர்பு அருட்பணி மையம் கலையருவி அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற மேற்படி வாழும் நாயகன் நூல் வெளியிட்டு விழா மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் விக்ரர் சோசை அடிகளார் தலைமையில் இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் கலாநிதி கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

**ஓர் வாழும் நாயகன் என்னும் நூல்**

ஓர் வாழும் நாயகன் நூலின் ஆசிரியர் கலாநிதி வின்சன் பற்றிக் அடிகளாரை இந்த ஆக்கம் தொடர்பாக பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் கேட்போர் கூடத்தில் சந்தித்தபோது மேலும் பல விடயங்களை அறியக்கூடியதாக இருந்தது. "இந்த நூலில் ஆயரின் 22 ஆண்டு கால மறைமாவட்டப் பணிகளை பதிவது எனது முக்கிய நோக்கமாக இருக்கவில்லை, மாறாக அவர் தழிழ் மக்களுக்காக அவர்களின் அடிப்படை உரிமைகளுக்காக இன மத வேறுபாடின்றி துணிவோடு கொடுத்த குரலைப் பதிவதே நோக்கமாக இருந்தது" என்றார் அவர்.



"அவர் ஒரு விடயத்தில் தெளிவாக இருந்தார். தமிழ் மக்கள் சிறுபான்மை மக்கள் என்பதால் அவர்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படமுடியாது. தமிழ் பேசும் மக்கள் அனைவரும் மதிக்கப்பட வேண்டும். அவர்களின் உரிமைகள் வழங்கப்படவேண்டும். இதையே அவர் ஒவ்வொரு கட்டத்திலும் ஆணித்தரமாக உரத்துச் சொன்னார். எல்லா வேளைகளிலும் இதை உறுதிப்படுத்தவே உழைத்தார். முஸ்லிம் மக்கள் மட்டிலும் அவர் கரிசனை கொண்டிருந்தார். சிறைக் கைதிகள், காணாமற்போனோர், முன்னாள் போராளிகள், ஏழைகள் என எல்லோர் மேலும் அவரின் இரக்கப் பார்வை இருந்தது. மன்னார் மறைமாவட்டத்தில் நான் பணியாற்றிய காலத்தில் ஆயரின் வாகனத்தில் அவருடன் பயணம் செய்ய எப்போதுமே பயந்ததுண்டு. எல்லா நேரத்திலும் எல்லார் கண்களும் அவர்மேல் இருந்ததால் எப்போ என்ன நடக்கும் என்ற பய உணர்வு என்னிடம் இருந்தது. அவர் அச்சுறுத்தப்பட்டிருந்தாஜ ́.; பகிரங்கமாகவே இனவாதியாகப் பேசப்பட்டார். எப்போ குண்டு வெடிக்கும். எங்கிருந்து துப்பாக்கிக் குண்டு பாயும் என்ற பயமே எப்போதும் இருந்தது. ஆனால் இந்தப் பயத்தின் மத்தியிலும் இந்த மாமனிதனின் அபார துணிவையும் அசைக்கமுடியாத மன உறுதியையும் பார்த்து வியந்ததுண்டு. அதுவே இந்த நூலை வெளியிட உந்து சக்தியாய் அமைந்தது" என்று அவர் மேலும் தெரிவித்தார்.



"எமது மக்களின் நன்மையிலும் தீமையிலும் வாழ்க்கையிலும் இறக்கும் தறுவாயிலும் பக்கத்தில் நின்று, இறுக்கமான ஒரு காலத்தின்போதும் எம்மக்களுக்கு அரிய பல சேவைகள் புரிந்து வந்துள்ளார். இனிவருங்காலத்தில் இறுக்கம் தளர்ந்த நிலையில் ஆனால் குழப்பம் மிகுந்த சூழலில் அடுத்த கட்டமாக தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் ஒரு பொதுவான அரசியல் முடிவுக்கு வர உதவ வேண்டிய நிலையில் உள்ளார்"

**வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் ஆயர் இராயப்பு யோசவ் ஆண்டகைக்கும் இடையிலான சந்திப்பு**

ஆயர் இராயப்பு யோசவ் ஆண்டகை 75 ஆவது வயது நிறைவு தினமான ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி மன்னார் ஆயர் இல்லத்தில் ஆயர்கள் குருக்கள் துறவியர்கள் கன்னியர்கள் விசேட அதிதிகள் மத்தியில் பிறந்த தின விழா கொண்டாடப்பட்டபோது வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் அதில் கலந்துகொண்டு உரையாற்றினார்.
"எமது ம்க்களின் நன்மையிலும் தீமையிலும் வாழ்க்கையிலும் இறக்கும் தறுவாயிலும் பக்கத்தில் நின்று, இறுக்கமான ஒரு காலத்தின்போதும் எம்மக்களுக்கு அரிய பல சேவைகள் புரிந்து வந்துள்ளார். இனிவருங்காலத்தில் இறுக்கம் தளர்ந்த நிலையில் ஆனால் குழப்பம் மிகுந்த சூழலில் அடுத்த கட்டமாக தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் ஒரு பொதுவ்ான அரசியல் முடிவுக்கு வர உதவ வேண்டிய நிலையில் உள்ளார்" எனத் தெரிவித்தார் என முதல் ஆக்கத்தில் தெரிவித்தோம்.
அண்மையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் கலாநிதி இராயப்பு யோசவ் ஆண்டகையை நேரில் சென்று சந்தித்து அவர் உடல் நலம் பற்றி விசாரித்துள்ளார். மதங்களுக்கு இடையிலான உறவையும் நல்லெண்ணத்தையும் ஏற்படுத்தும் நோக்கில் இந்தச் சந்திப்பு மேற்கொள்ளப்பட்டது.

**மன்னார் ஆயரை கௌரவப்படுத்துங்கள்**

மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் கலாநிதி இராயப்பு யோசவ் ஆண்டகையின் பணி மகத்தானது. அது என்றும் போற்றுதற்குரியது. அவர் நோய்வாய்ப்பட்டது துரதிஸ்டவசமானது. இரக்கம் நிறைந்த இறைவன் என்றும் அவரை பாதுகாப்பாராக. ஆயர் அவர்களே தமிழ் கூறும் நல்லுலகம் உங்களை வாழ்த்தி உங்கள் தூர நோக்கும் துணிவும் கொண்ட பணிகளை பாரட்டி நிற்கிறது. நற்சுகம் பெற்று மகிழ்வாக வாழ இறையாசீர் வேண்டி நிற்கிறது.
இன்று இலங்கை வாழ் கத்தோலிக்க மக்கள் மட்டுமல்ல இந்து சமய மக்கள் மற்றும் புலம் பெயர் நாடுகளில் வாழும் மக்கள் அனைவர் மத்தியிலும் இன்னும்; அதிகம் பேசப்பட்டும் ஒருவர் தற்போதைய மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் கலாநிதி இராயப்பு யோசவ் ஆண்டகை.
உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் இவரை ஒரு துணிவான மதத் தலைவர் என நிமிர்ந்து பார்ப்பது நீதியை நிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்ரோர் ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர் (மத்தேயு 5:6) என்று இயேசு மலைப்பொழிவில் திருவாய் மலர்ந்த பேறுபெற்ரோர் என்ற வாழ்த்திற்கு உரியவராய் வாழ்ந்ததாலாகும்.
இறைவன் இவருக்கு கொடுத்த நீதியின் பக்கம் நிமிர்ந்து நிற்கும் நல்ல குணத்திற்காக இறைவனுக்கு நன்றி சொல்வோம். தமிழ் பேசும் மக்கள் இரணடாம் தரப்பிரசைகள் அல்லர். அவர்கள் உரிமைகள் மறுக்கப்படலாகாது. மதிக்கப்படவேண்டும் என்ற ஆயரின் எண்ணத்தை எல்லோரும் எமக்கே உரிய சிறிய வழியில் பேணிப் பாதுகாப்போம்.

Development Fortune
அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 39
சீட்டிழுப்பு திகதி 13.05.2017 சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள் 26 43 48 62
சுப்பர் இலக்கம் 05
அதிர்ஷ்ட மாதம் ஜீலை

அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் 11, 173, 058/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் 3, 378, 122/=
அடுத்த ஜக்பொட் 1, 421, 564/=

18.05.2017 திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டீ சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

## கண்ணீர் அஞ்சலி



எமது பேரவை உறுப்பினரும்,
பிரபல ஆன்மீக
சொற்பொழிவாளருமான

**நித்தியானந்தம் தசிதரன்**
அவர்கள்

நேற்று (13.05.2017) சனிக்கிழமை இறைபதம் எய்திய செய்தியறிந்து அதிர்ச்சி அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சந்நிதியான் பாதக்கமலங்களில் இன்புற்றிருக்க முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**
**சந்நிதியான் ஆச்சிரமம்**
(CS 3944)(10)

## ஈர விழிகளுடன் மூன்றாண்டுகள்



**கண்ணகைப்பிள்ளை**
**மயில்வாகனம்**

தோற்றம்
13.10.1924

மறைவு
19.04.2014

திதி: சித்திரை மாத சங்கட ஹரசதுர்த்தி
(14.05.2017)

அன்புத் தெய்வமே ஆண்டுகள்
மூன்று போனது அம்மா
எங்களுடன் வாழ்ந்த அழகிய நினைவுகளும்
தங்கள் அன்பும் எம்மை வழிநடத்தி செல்லும்
தங்களை நேரில் காண இயலாது
இருப்பினும் நீங்கள்
எப்போதும் எம்முடனே வாழ்கிறீர்கள்

**இல.140, பரமேஸ்வராச்சந்தி,**
**திருநெல்வேலி.**
**மகன் - குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

# நடராஜா சிவபாக்கியம்

*(சிவா அக்கா ரீச்சர்)*



*தோற்றம்* *02.12.1937* *மறைவு* *11.05.2017*

மலேசியா Kuala Lumpur ஐப் பிறப்பிடமாகவும் யாழ். இடைக்காடு, பண்டத்தரிப்பு, வடலியடைப்பு, வவுனியா வடக்கு, நெடுங்கேணி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட நடராஜா சிவபாக்கியம் 11.05.2017 வியாழக்கிழமை வவுனியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜா-பிள்ளைநாயகம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சின்னத்தம்பி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி நடராஜா (ஓய்வுபெற்ற பல. நோ. கூ சங்க பொது முகாமையாளர், வவுனியா வடக்கு) வின் அன்பு மனைவியும் கிருஷ்ணபாமா (பபு), ஜெயாநிதி (கனி-லண்டன்), ரகுலகரன் (ரவி-சுவிஸ்), யாழினி (சைலி-சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் பாலசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற கணக்காளர்), இராஜாதணிகாசலம் (ஓய்வுபெற்ற மாநகர ஆணையாளர்), புவனேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), ஞானேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பொன்னம்பலம் (கணேஷ்), கிருஷ்ணநாதன் (கிருஷ்ணா-லண்டன்), காந்திமதி, முரளிதரன் (முரளி-சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற தவரத்தினம், சந்திராதேவி, காலஞ்சென்ற ஐங்கரநாதன், செல்வரத்தினம் (ஓய்வுபெற்ற பிரதேசசபை விசேட ஆணை யாளர்), காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும் தினேஸ்காந்த் (கனடா), ஜனந்தினி தினேஸ் காந்த், கிந்துஜா, சரவணன், திக் ஷிகா, விசாகன், சஞ்சய், கிருஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் தச்சன்குளம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 50, 7ஆம் ஒழுங்கை,**
**வேப்பங்குளம், வவுனியா.**

தகவல்:
**பொன்னம்பலம்,**
**கிருஷ்ணபாமா**

## நீங்காத நினைவுகளில்

**20 ஆம் ஆண்டு**
தோற்றம் 07.12.1926 மறைவு 14.05.1997

**03 ஆம் ஆண்டு**
தோற்றம் 01.08.1926 மறைவு 21.02.2014



**அமரர் புவனேஸ்வரி அரியதுரை**



**அமரர் வேலுப்பிள்ளை அரியதுரை**

இரண்டு தசாப்தங்கள் சென்றாலும் எம் இதயங்கள் உங்களை மறக்காது - தாயே
பதினேழு ஆண்டுகளின் பின் - மீண்டும் எமை பரிதவிக்க வைத்ததேனோ - தந்தையே
சீரும் சிறப்புமாக எம்மை வாழவைத்த தெயங்வங்கள் நீங்கள் - இன்றும்
ஈரவிழிகளுடன் உங்கள் நினைவுகளைச் சுமந்து நிற்கின்றோம்.
ஓம் சாந்தி

**வேலப்பர் லேன்,**
**அரியாலை.**

**என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

## கண்ணீர் அஞ்சலி



**கலங்கரை விளக்கொன்று**
**கானல் நீராய் கரைந்த மாயமென்ன....?**


எமது ஸ்தாபனத்தில் காசாளராகக் கடமையாற்றும் **திரு.செல்வராஜா** அவர்களின் அன்பு மனைவி

**திருமதி சசிகலா செல்வராஜா**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**உரிமையாளரும், ஊழியர்களும்.**
**அற்புதா றேடிங்கொம்பனி, யாழ்ப்பாணம்.**
(cs/3946)(11,17)

## மரண அறிவித்தல்



### சாதுலிங்கம் பத்மநாதன்

உடுப்பிட்டி இலக்கணாவத்தையை பிறப்பிடமாகவும், தற்சமயம் நாவலர் றோட், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சாதுலிங்கம் பத்மநாதன் நேற்று (13.05.2017) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாதுலிங்கம் - பாக்கியம் தம்பதியரின் மூத்தமகனும் காலஞ்சென்றவர்களான நடேசப்பெருமாள் - விஜயம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திராதேவி, செல்வநாதன் காலஞ்சென்ற வைத்தியநாதன் மற்றும் றகுநாதன் காலஞ்சென்ற லோகநாதன், மற்றும் புஸ்பநாதன், இந்திராதேவி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற சேதுநாதன் மற்றும் சற்குணதேவி (நோர்வே) காலஞ்சென்ற கோபுநாதன் மற்றும் பிறேமநாதன் (பிரான்ஸ்), சுகிர்தாதேவி, கிருஷ்ணதேவி (கனடா) ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## வெற்றி கிண்ணம் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 14

மறுமலர்ச்சி மன்றத்தின் ஏற்பாட்டில் வடமாகாண அளவில் நடத்தப்பட்ட ஆங்கில எழுத்துக் கூட்டல் போட்டித் தொடரில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான வெற்றிக் கிண்ணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணியளவில் நடைபெறவுள்ளது. மறுமலர்ச்சி மன்றத்தின் தலைவர் சு. சுந்தரசிவம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வு காலையடி, பண்டத்தரிப்பு என்ற முகவரியில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராஜா மகேந்திரன் குடும்ப ஞாபகார்த்த உள்ளரங்கில் இடம்பெறவுள்ளது. முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட செயலர் நா. வேதநாயகன் கலந்துகொள்வார். (ற-10)

## நூல் வெளியீட்டு விழா

நல்லை க.கண்ணதாஸ் எழுதிய "முப்பத்தைந்து தாளங்களில் தனியாவர்த்தனம்" நூல்வெளியீடு நல்லூர் சட்டநாதர் கோயில் வீதியிலுள்ள இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி எஸ்.சுதாகரும், சிறப்பு விருந்தினராக மட்டக்களப்பு விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் சி. ஜெயசங்கரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற)

## மகிந்த...

பொதுச் செயலாளர்கள் சூளுரைத்துள்ளனர். வட மத்திய மாகாண சபையின் பெரும்பான்மை மகிந்த அணியிடம் சென்றுள்ள நிலையிலேயே பொதுச் செயலர்கள் இவ்வாறு கருத்துரைத்துள்ளனர்.

“மாகாண சபைகளில் ஆட்சி மாற்றங்கள் இடம்பெறாது. எந்தவொரு சவாலையும் எதிர்நோக்க சுதந்திரக் கட்சி தயார். கூட்டு அரசை ஒரே ஆண்டில் கவிழ்ப்பதாக மகிந்த அணியினர் பரப்புரை செய்திருந்தனர். அந்தப் பரப்புரையை மெய்ப்பிக்க முடியாத அவர்கள் தற்போது மாகாண சபைகளில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதாக அறிவித்துள்ளனர்.

மாகாண சபைகளில் ஆட்சி மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் எதுவும் கிடையாது. சில மாகாண சபைகளின் பதவிக் காலம் இந்த ஆண்டில் நிறைவடைய உள்ளன. சில மாகாண சபைகளுக்கான தேர்தல்களை இந்த ஆண்டில் நாம் நடத்த உத்தேசித்துள்ளோம். வடக்கு மாகாண முதலமைச்சரைத் தவிர ஏனைய அனைத்து மாகாண முதலமைச்சர்களும் அரச தலைவருடன் இருக்கின்றார்கள். மாகாண சபை தேர்தல் நடத்தப்படும் வரையில் மாகாண சபைகளில் ஆட்சி மாற்றம் செய்யப்படாது” என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் துமிந்த திசாநாயக்கா தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர, “வட மத்திய மாகாணத்தின் ஆட்சியை ஒரு வாரத்துக்குள் முடியுமானால் அதிகாரத்தை நிரூபித்துக் காட்டுமாறு மகிந்த அணிக்குச் சவால் விடுக்கின்றேன்.

மகிந்த அணியில் உள்ள உறுப்பினர்கள் ஒவ்வொரு வேளையிலும் நகைச்சுவையாக கதை சொல்லிவருகின்றனர். வட மத்திய மாகாணத்தை வீழ்த்துவதும் இதுபோன்ற ஒரு கதைதான். நாம் ஒருவாரம் அவகாசம் தருகின்றோம்.

அமைச்சுப் பதவிகள் இல்லாதபோதும், அமைப்பாளர் பதவிகள் நீக்கப்படும் போதும் ஒவ்வொருவரும் தங்களது மனக் கவலைக்கும், கோபத்துக்கும் ஒவ்வொரு விதமாக கதைகளைப் பரப்பி வருகின்றனர். இதனால் நாம் குழப்பமடையவில்லை” என்றார். (வ-5)

## பலரிடம்...

கையெழுத்து மற்றும் கடிதத் தலைப்புக்களைப் பயன்படுத்தி மோசடிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

காணாமற்போனோரின் உறவினர்களைக் கண்டுபிடித்துத் தருவதாகப் பலரிடம் பல லட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டார் என்று அவர் மீது மற்றொரு குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

‘வேலை வாய்ப்பு மற்றும் இடமாற்றம் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து சந்தேகநபர் பலரிடம் பணம் வாங்கியுள்ளார். யாழ்ப்பாண மாவட்டச் செயலரின் கையெழுத்துப் போன்று கையெழுத்திட்டு, மாவட்டச் செயலகத்தின் போலிக் கடிதத் தலைப்பை அவர் பயன்படுத்தியுள்ளார். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு, பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலரின் கையெழுத்துப் போன்று கையெழுத்திட்டு சிலரை மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பியுள்ளார். காணாமற்போனோரின் உறவினர்களிடம், உறவுகளைக் கண்டு பிடித்துத் தருவதாகத் தெரிவித்து பல லட்சம் ரூபா பணத்தை சந்தேகநபர் பெற்றுள்ளார்.

இடமாற்றம் பெற்றுக் கொடுப்பதற்கு 4 லட்சம் ரூபா பணத்தை ஒருவரிடம் அவர் பெற்றுள்ளார். இந்த விடயம் மாவட்டச் செயலருக்குத் தெரிய வந்தது. போலிக் கையெழுத்துடன் கடிதத் தலைப்பைப் பயன்படுத்தியமை தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர், எம்மிடம் முறைப்பாடு மேற்கொண்டிருந்தார்’ என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நேற்று முன்தினம் வாய்மொழி மூலமான முறைப்பாடு மேற்கொண்டதைத் தொடர்ந்து குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்பு அணியினர் தேடுதல் நடவடிக்கையில் இறங்கினர்.

பாசையூர் பகுதியில் வைத்து நேற்றுக் காலை சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவரிடம் இருந்த தேசிய அடையாள அட்டையில், அவர் வவுனியா குருமன்காட்டைச் சேர்ந்தவர் என்றும், அவரது பெயர் லோகநாதன் ரவீந்திரன் (வயது59) எனவும் தெரிய வந்துள்ளது.

பொலிஸார் மேற்கொண்ட முதல் கட்ட விசாரணையில், பல லட்சம் ரூபா பணத்தை சந்தேகநபர் பலரிடம் பெற்றுள்ளார் என்று தெரிய வந்துள்ளது. அத்துடன் மாவட்டச் செயலகத்தில் வேலை செய்வதாகப் பலரிடம் கூறி அவர் பணத்தைப் பெற்றுக் கொண்டார் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (வ-5-101-106)

## ஊழல்...

அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. அதற்கு வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமை தாங்கினார். அதிலேயே மேற்குறிப்பிட்ட விசாரணைக் குழு உருவாக்கப்பட்டது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் (ஈ.பி.டி.பி) சார்ந்த யோகேஸ்வரி பற்குணராஜா யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வராகப் பதவிவகித்தபோதே இந்தக் கடைத் தொகுதி உருவாக்கப்பட்டது. அதன் உருவாக்கத்துக்கு முன்னரான ஆயத்தங்களில் உரிய விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்று கூறப்படுகின்றது. சட்டமுரணான வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது என்றும், பண மோசடி நடந்துள்ளது என்றும் பல தரப்புகளால் குற்றஞ்சாட்டப்பட்டது. கட்டடத் தொகுதி அமைக்கப்பட்ட பின்னர் கடைகள் வாடகைக்கு வழங்கப்பட்ட முறையும் சட்டத்துக்கு முரணாக நடைபெற்றது என்றும் கூறப்படுகின்றது.

இந்த விடயங்கள் நேற்றுக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டன. இறுதியில் முதலமைச்சர் 5 பேர் கொண்ட விசாரணைக் குழுவை நியமித்தார். அதில் வடக்கு மாகாண சபையின் பேரவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா ஆகியோர் உட்பட மூன்று அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். இந்தக் குழு தனது விசாரணை அறிக்கையை இரு வாரங்களில் முதலமைச்சரிடம் கையளிக்க வேண்டும்.

வடக்கு மாகாண சபையின் யாழ்ப்பாண மாவட்ட உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் , அமைச்சின் செயலாளர்கள் ஆகியோர் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (ற-4- 101)

## மைத்திரியின்...

மத்தியமாகாண சபை யில் ஆட்சி மாற்றம் ஏற்படும் என்று தெரிய வரு கின்றது.

பொலநறுவை மாவட்டத்தை உள்ளடக்கிய வட மத்திய மாகாண சபையின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தரப்புகளுக்கு இடையே கடும் போட்டி எழுந்துள்ளது.

மைத்திரிபாலவுக்கு ஆதரவானவர்களின் வசமுள்ள வட மத்திய மாகாண சபையின் அதிகாரத்தை கைப்பற்றப்போவதாக மகிந்தவுக்கு ஆதரவான அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்திருந்தார்.

பொது எதிரணியின் தொழிலாளர் தினப் பேரணியில் பங்கேற்ற வட மத்திய மாகாண சுகாதார அமைச்சர் நந்தசேனவை நீக்கி விட்டு, அவருக்குப் பதிலாக, அரச தலைவர் மைத்திரிபாலவுக்கு ஆதரவான ஹேரத் பண்டா அமைச்சராக நியமனம் பெற்றார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மகிந்த சார்பு வட மத்திய மாகாண போக்குவரத்து அமைச்சர் எஸ்.எம். ரஞ்சித் பதவி விலகினார்.

வட மத்திய மாகாண சபையில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்பட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 22 உறுப்பினர்களில், 17 பேர் தனியான குழுவாக செயற்படவுள்ளனர் என்று அறிவித்திருந்தனர். இந்தக் குழுவே நேற்றுமுன்தினம் இரவு மகிந்தவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது. கலந்துரையாடலில் முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் கலந்து கொண்டார்.

வட மத்திய மாகாண சபையில் 17 ஆசனங்களைப் பெற்றால், பெரும்பான்மையைப் பெற முடியும். அந்த வகையில் மகிந்த அணி 17 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இதனால் விரைவில் வடமத்திய மாகாண சபையில் ஆட்சி மாற்றம் ஏற்படும் என்று தெரிய வருகின்றது. அந்த மாகாண சபையின் ஆட்சிக் காலம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முடிவடையவுள்ள நிலையிலேயே, இந்த ஆட்சி மாற்றம் ஏற்படும் அறிகுறி தோன்றியுள்ளது. (வ-5)

## தெருநாய்களை...

களும் நாளாந்தம் அதிகரிக்கின்றன. அதனால் தெருநாய்களை பிடிப்பது தொடர்பில் ஆராயப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்துக்கு உட்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று வடக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்றது. வடக்கு முதலமைச்சர் அதற்குத் தலைமை தாங்கினார். அதிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

“மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு தெருநாய்களைக் கட்டுப்படுத்த அனுமதிக்க வேண்டும். கடந்த 6 ஆண்டுகளுக்கு மேலாக எடுக்கப்பட்ட நடவடிக்கையில் தெரு நாய்களின் எண்ணிக்கை குறையவில்லை. அவை பல்கிப் பெருகியுள்ளன.” என்று சுட்டிக்காட்டப்பட்டது.

மகிந்த சிந்தனையின்படியே நாய்களைப் பிடிப்பது தடை செய்யப்பட்டது. சட்டரீதியாகத் தடை செய்யப்படவில்லை. எனவே தெரு நாய்களைப் பிடிப்பதை நடைமுறைப்படுத்த முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

கலந்துரையாடலில் கலந்து கொண்ட பலரும் இந்தக் கோரிக்கை தொடர்பாக ஒத்த கருத்துடன் இருந்தபோதும், இது விடயத்தில் தீர்க்கமான முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை. (ற-101)

## மே 18...

வெளியிடப்பட்டுள்ளமை தொடர்பில், அரச தலைவர் செயலகம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

வறுமை ஒழிப்பு தேசிய நிகழ்சித் திட்டத்தை எதிர்வரும் 18ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து ஆரம்பிப்பது என்றும், இந்த நிகழ்வில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்வார் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மே 18ஆம் திகதி முல்லைத்தீவுக்கு அரச தலைவர் வரக் கூடாது என்று தெரிவித்திருந்தார். இதன் பின்னர் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், அரச தலைவர் வருகை தந்தால் எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்படும் என்று கூறியிருந்தார்.

இந்த எதிர்ப்புக்கள் தொடர்பில் அரச தலைவர் செயலகம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது. (வ-5)

## இருவேறு...

வாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இரண்டாம் நாள் அஞ்சலி நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன. வல்வெட்டித்துறையிலும், மிருசுவிலும் இவை முன்னெடுக்கப்பட்டன.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலைக்கு அண்மையாக நேற்றுக் காலை அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. 1985ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட இளைஞர்களின் நினைவிடத்தில் இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

மிருசுவிலில் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட எண்மர் நினைவாகவும், நேற்று மாலை நினைவேந்தல் நடைபெற்றது. ஏ9 வீதியில் அமைந்துள்ள மிருசுவில் தொடருந்து நிலையத்தின் முன்பாக இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. (வ-5-26)

## வடக்கில்...

காற்று வீசக்கூடும்” என்று வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. (வ)

## 3 மாகாண...

மாகாண சபையின் பெரும்பான்மை மகிந்த அணியின் கைக்குச் சென்றுள்ளது. விரைவில் அந்த மாகாண சபையில் ஆட்சி மாற்றம் ஏற்படக் கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோன்று மத்திய மாகாண சபை மற்றும் தென் மாகாண சபையில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சியில் மகிந்த அணி தீவிரமாகக் களமிறங்கியுள்ளது. அந்த மாகாண சபைகளில் ஆளும் கட்சியில் உள்ள மைத்திரியின் அதிருப்தியாளர்களை ஒன்றிணைக்கும் முயற்சிகளை மகிந்த அணி மேற்கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (வ-5)

## மூன்றாம்...

இலங்கை அனுமதி மறுத்த பின்னர் சீனா இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது.

அதில், நீர்மூழ்கியின் பயணத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டது தொடர்பாக நேரடியாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனினும் “கடற்கொள்ளை எதிர்ப்பு அணியில் ஈடுபட்டுள்ள நீர்மூழ்கிகளுக்கு அவற்றின் பயணப்பாதையில் மீள் வழங்கலை மேற்கொள்வதற்கான ஒரு இடம் தேவைப்படுகிறது.

ஏடன் வளைகுடாவிலும், சோமாலிய கடற்பரப்பிலும், பன்னாட்டு அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் கீழ் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள எமது இராணுவ நீர்மூழ்கிகளுக்கு விநியோகங்களை மேற்கொள்வதற்கான தரிப்பிடம் தேவை.” என்று அந்த அறிக்கையில் சீனா கூறியுள்ளது.

அண்மைய ஆண்டுகளில் சீன, இலங்கை இராணுவத்தினர் பரஸ்பர பயணங்கள், பயிற்சி போன்ற துறைகளில் பயனுள்ள, காத்திரமான ஒத்துழைப்பை கொண்டுள்ளனர். பிராந்தியத்தின் அமைதி மற்றும் உறுதிப்பாட்டுக்கு நன்மையளிக்கிறது. இது மூன்றாவது தரப்பு ஒன்றை இலக்காக கொண்டதல்ல. மூன்றாவது தரப்பு ஒன்று அதில் தலையீடு செய்யவும் கூடாது.” என்றும் சீன பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ற-4)

## செயலாளர்கள்...

வைக்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரியுள்ளார் என்று தெரிய வருகின்றது.

அதேவேளை, இந்த இடமாற்றத்தை எதிர்த்து, வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் மேன்முறையீடு மேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராக, முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச் செயலராகக் கடமையாற்றி கடந்த ஜனவரி மாதம் வடக்கு மாகாண சபைக்கு இடமாற்றம் பெற்று வந்த சி.ஏ.மோகன்ராஸ் நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டிருந்தார். இதுவரை காலமும் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராக கடமையாற்றிய திருமதி ரூபினி வரதலிங்கம், வடக்கு மாகாண முதலமைச்சரின் செயலராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்த நியமனங்களை நிறுத்தி வைக்குமாறு வடக்கு மாகாண ஆளுநரிடம், வடக்கு முதலமைச்சர் கோரியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5-101)

## தேசிய...


மாறு வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக, வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைக் குழப்பும் வகையில், மே 18ஆம், 19ஆம் திகதிகளில் அவசர தேசிய டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கொழும்பு சுகாதார அமைச்சால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே, வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் அதனை மாற்றியுள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்ததாவது:

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தின் பின்னரும் டெங்கு நோய்த் தொற்றின் தாக்கம் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. இதனையடுத்து அவசரமாக தேசிய டெங்கு ஒழிப்பை முன்னெடுக்க கொழும்பு அரசு திட்டமிட்டது.

கொழும்பு அரசு இதனை முன்னெடுக்க திட்டமிட்டுள்ள நாள்கள், முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் இறுதி நாள்களாகும். எமது மக்கள், உயிரிழந்த தமது உறவுகளை அஞ்சலிக்கும் நாளில் இவ்வாறு தேசிய நிகழ்வை நடத்துவதில் இடையூறு காணப்படும் என்று கண்டறியப்பட்டதால், இந்தத் திகதியை மாற்றுமாறு கோரியுள்ளேன். வடக்கில், மே 22ஆம் மற்றும் 23ஆம் திகதிகளிலேயே அவசர தேசிய டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றார். (வ-5-101)



# சென். பற்றிக்ஸ் ஆடுகளம் பயன்படுத்தப்படுவதில்லை

## ஆர்வலர்கள் விசனம்

யாழ்ப்பாணம், மே 14

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கடினப்பந்து ஆடுகளம் யாழ்ப்பாணப் பாடசாலை அணிகளால் பெருமளவில் பயன்படுத்தப்படுவதில்லை என்று ஆர்வலர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

யாழ்ப்பாண பாடசாலை கிரிக்கெட் அணிகள் தென்னிலங்கைக்குச் சென்று தொடர்களில் விளையாடுகின்ற போதிலும் அதற்கேற்ற பயிற்சி பெறுவதற்கு முறையான ஆடுகளம் ஒன்று இங்கு இல்லாதமை பெரும் பின்னடைவாக இருந்தது. இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் விமாக கடந்த சில வருடங்களுக்கு முன்னர் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் கடினப்பந்து ஆடுகளம் அமைக்கப்பட்டது. இந்த ஆடுகளத்தை பயன்படுத்த பாடசாலை அணிகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ள போதிலும் பெரும்பாலான பாடசாலைகள் ஆடுகளத்தைப் பயன்படுத்துவதில்லை என்று குற்றச்சாட்டு உள்ளது. இது தொடர்பில் வடமாகாண துடுப்பாட்டச் சங்கத்தின் இணைப்பாளரும், சென் . பற்றிக்ஸ் துடுப்பாட்ட பயிற்றுநருமான நிசாந்தனுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, “வடமாகாண மற்றும் யாழ்ப்பாண மாவட்ட அணிகளே ஆடுகளத்தை பெருமளவில் பயன்படுத்துகின்றன.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய இரு பாடசாலை அணிகள் மட்டும் தென்னிலங்கைச் சுற்றுப்பயணத்துக்கு முன்பாக சில தடவைகள் பயிற்சி எடுத்துள்ளன. மற்றும்படி ஏனைய அணிகள் ஆடுகளத்தைப் பயன்படுத்துவதில்லை" என்று அவர் தெரிவித்தார். (ம)

# வடக்கு பாடசாலைகள் கால்பந்தாட்டம் நாளை

யாழ்ப்பாணம், மே 14

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான இருபாலாருக்குமான கால்பந்தாட்டத் தொடர் நாளை ஆரம்பமாகிறது. 16 வயதிற்குட்பட்ட ஆண்கள் அணிகளுக்கு இடையே மேற்பிரிவிற்கான ஆட்டங்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்திலும் கீழ்பிரிவினருக்கான ஆட்டங்கள் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.

18 வயதிற்குட்பட்ட ஆண்கள் அணிகளுக்கு இடையிலான மேற்பிரிவினருக்கான ஆட்டங்கள் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்திலும் கீழ் பிரிவினருக்கான ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.

20 வயதிற்குட்பட்ட ஆண்கள் அணிகளுக்கு இடையிலான மேற்பிரிவினருக்கான ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்திலும் கீழ் பிரிவினருக்கான ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.

20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு ஆட்டங்கள் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ம-422)

# யாழ்ப்பாண மாவட்ட கோலூன்றிப் பாய்தல்

யாழ்ப்பாணம், மே 14

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கோலூன்றிப் பாய்தல் போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நாளை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-23)

# சரஸ்வதி கழக அரையிறுதிகள்

யாழ்ப்பாணம், மே 14

உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழின் நட்சந்திர வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன.

பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறவுள்ள முதலாவது அரையிறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதவுள்ளது. (ம-23)

# ஜொனியன்ஸுடன் திருநெல்வேலி இன்று இறுதியில் பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், மே 14

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில், ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி மோதவுள்ளது. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர் சிவகாந்தன் கலந்துகொள்ளவுள்ளார். (ம-23)

# இன்றைய மோதல்கள்

கரணவாய், மே 14

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று சில ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. இதன்படி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

# வடமாகாண கூடைப்பந்தாட்ட அணித்தெரிவு

யாழ்ப்பாணம், மே 14

வடமாகாண கூடைப்பந்தாட்ட பெண்கள் அணிக்கான இரண்டாம் கட்டத் தெரிவு கொக்குவில் இந்துக் கல் லூரி மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 6 மணிவரை இடம்பெறவுள்ளது. (ம-23)

# கிளிநொச்சி பாரதிபுரம் வித்தியாலய கரப்பந்து அணி இம்முறை மாகாணமட்டத் தொடரில் இடம்பெறவில்லை

*வீரர்கள் கல்வியில் வெளிப்படுத்திய மோசமான பெறுதியே முடிவுக்கு முக்கிய காரணம் என அதிபர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மே 14

பாடசாலைகளுக்கு இடையே கடந்த வருடம் நடைபெற்ற கரப்பந்தாட்டத் தொடரில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தி தேசிய மட்டத்துக்குச் சென்ற கிளிநொச்சி பாரதிபுரம் வித்தியாலய கரப்பந்தாட்ட அணி நடப்பு வருடத்தில் மாகாண மட்டத் தொடரில் பங்கெடுக்க அனுமதிக்கப்படவில்லை.

மாகாணத்தில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்திய அணியொன்று அடுத்த வருடம் மாகாணமட்டத் தொடரில் களமிறக்கப்படாதமை பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. உடற்கல்வி ஆசிரியர்கள், விளையாட்டு ஆர்வலர்கள் எனப் பல தரப்பிடமிருந்தும் இந்த முடிவுக்கு கடும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் பாடசாலை அதிபருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, “அணியில் காணப்படுகின்ற மேலதிக வீரர்களையும் சேர்த்து ஏழு பேர் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையாத காரணத்தினால் மாணவர்களின் கல்வியை கவனத்தில் கொண்டு நாங்கள் அணியை தொடருக்கு அனுப்பவில்லை. இந்த முடிவு எழுத்து மூலம் உரியவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது" என அதிபர் தெரிவித்தார். (ம)







# அன்ரனிஸ் நக்கீரன் அடுத்த சுற்றுக்குள்

கரணவாய், மே 14

கலைமதியின் கால்பந்தாட்டத் தொடரில் மணற்காடு சென். அன்ரனிஸ் வி.கழகம் மற்றும் அல்வாய் நக்கீரன் வி.கழகம் என்பன அடுத்த சுற்றுக்கு முன்னேறின. இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று முன்னேற்றம் கண்டது அன்ரனிஸ்.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கரணவாய் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகம் மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது நக்கீரன் விளையாட்டுக் கழகம். (ம-108)

## ஆஸி. 'ஏ' அணிக்கு 3 பயிற்சியாளர்கள்


ஆஸ்திரேலிய 'ஏ' அணிக்கு அந்த நாட்டின் முன்னாள் வீரர்களான கிலெஸ்பி, ரோஜர்ஸ், ஹடின் ஆகிய மூவரும் பயிற்சியாளராகச் செயற்படவுள்ளனர்.
ஆஸ்திரேலிய 'ஏ' அணி ஜூலை மாதம் முதல் ஓகஸ்ட் மாதம் வரை தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து இரண்டு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. பின்னர் அந்த அணி தென்னாபிரிக்கா, இந்திய 'ஏ' அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடரிலும் பங்கேற்கிறது. இந்தத் தொடருக்கான தயார்ப்படுத்தல்கள் தற்போதிருந்தே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்படி கிலெஸ்பி, ரோஜர்ஸ், ஹடின் மூவரும் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டனர். கிலெஸ்பி பந்துவீச்சுப் பயிற்சியையும், ரோஜர்ஸ் துடுப்பாட்டப் பயிற்சியையும், ஹடின் களத்தடுப்புப் பயிற்சியையும் வழங்கவுள்ளனர். (ம)

## மீண்டும் மிரட்டுவாராம் கோக்லி

"இந்திய அணியின் தலைவரான கோக்லி, தடுமாற்றத்தில் இருந்து மீண்டு மீண்டும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவார்" இவ்வாறு தெரிவித்தார் அந்த அணியின் முன்னாள் வீரர் சேவாக்.
நடப்பு வருட ஐ.பி.எல். தொடரும், முன்னதாக முடிவடைந்த இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரும் கோக்லிக்கு மிக மோசமாக அமைந்தன. இதனால் கோக்லி மீது கடும் விமர்சனங்கள் உள்ளன. இந்த நிலையில் இந்திய ஊடகமொன்றுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய செவ்வியில் கோக்லி தொடர்பில் நம்பிக்கை தெரிவித்தார் சேவாக்.
"எந்தவொரு வீரருக்கும் மோசமான காலம் என்ற ஒன்று உண்டு. பன்னாட்டுதத்தர ஆட்டங்களில் விளையாடிய அத்தனை வீரர்களும் இவ்வாறான ஓர் மோசமான காலகட்டத்தை எதிர்கொண்டுள்ளனர். கோக்லி தற்போது தனது மோசமான கட்டத்தில் உள்ளார். அவர் நிச்சயம் மீண்டெழுந்து பெரிய அளவில் சாதிப்பார். அந்த நம்பிக்கை எனக்கு மிகையாகவே உள்ளது" என சேவாக் மேலும் தெரிவித்தார். (ம)



## மாகாண கூடைப்பந்து; யாழ்ப்பாணம் சம்பியன்



யாழ்ப்பாணம், மே 14
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாண மாவட்டம் சம்பியனானது.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று மாலை நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதியது. 42:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்ட அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-23)

மட்ரிட் ரென்னிஸ்

## சிமோனா கேலப் இறுதியாட்டத்தில்

மட்ரிட் ரென்னிஸ் தொடரில் (ஸ்பெய்ன் தொடர்) பெண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றார் சிமோனா கேலப்.
ருமேனிய வீராங்கனை கேலப்பை எதிர்த்து லத்வியா வீராங்கனை செவாஸ்டா மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 6:2, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றார் கேலப். (ம)



மினி உலகக்கிண்ணத் தொடர்


## இலங்கை அணிக்கு கடுமையானபயிற்சி

இங்கிலாந்தில் எதிர்வரும் முதலாம் திகதி மினி உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் இந்தத் தொடரில் கலந்துகொள்ளும் இலங்கை அணிக்கு தொடர்ந்து நான்காவது நாளாக நேற்றுக் கடும் பயிற்சி வழங்கப்பட்டது.
கண்டியில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. நேற்று கடுமையான களத்தடுப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இலங்கை அணி கடந்த சில ஆட்டங்களில் களத்தடுப்பில் மோசமான பெறுபேறுகளை வெளிப்படுத்தியமையால் பயிற்சி முகாமில் களத்தடுப்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது. (ம)

## 'பிளே ஓவ்' சுற்றில் நடப்புச் சம்பியன்




ஐ.பி.எல். தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் குஜராத்தை வீழ்த்தி 'பிளே ஓவ்' சுற்றுக்குத் தகுதி பெற்றது ஹைதாராபாத்.
இந்த ஆட்டத்தில் குஜராத் வெற்றிபெற்றால் கொல்கத்தா மற்றும் புனே அணிகள் 'பிளே ஓவ்' சுற்றுக்குத் தகுதிபெறும் என்ற நிலை இருந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது ஹைதராபாத்.
இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் மிகச்சிறந்த ஆரம்பம் கண்டது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களான சிமித், இசான் கிசானின் ஆட்டத்தில் 9.3 பந்துப்பரிமாற்றங்களில் 100 ஓட்டங்களைத் தொட்டது குஜராத். அணி 111 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார் சிமித். மத்திய வரிசை தடுமாற 123 ஓட்டங்களில் 5 இலக்குகளை இழந்து துவண்டது குஜராத். முடிவில் அந்த அணி 154 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக இசான் கிசான் 61 ஓட்டங்களைக் குவித்தார்.
பந்துவீச்சில் சிராஜ் 4 இலக்குகளையும் ரசிட்கான் 3 இலக்குகளையும், புவனேஸ்வர்குமார் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய ஹைதராபாத் 25 ஓட்டங்களுக்கு முதலிரு இலக்குகளையும் இழந்தபோதிலும் வோர்ணர், சங்கர் இருவரினதும் சிறந்த ஆட்டத்தால் 11 பந்துகள் மீதமிருக்க வெற்றிபெற்றது.
இந்த வெற்றியின் மூலம் 'பிளே ஓவ்' சுற்றுக்குத் தகுதிபெற்றது ஹைதராபாத். (ம)



2024ஆம் ஆண்டு அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ள நிலையில் அதற்கான கட்டுமானத் திட்டங்கள் தற்போது அங்கு முழு வீச்சில் நடைபெற்றுவருகின்றன. இது தொடர்பான ஒளிப்படங்கள் தற்போது வைரலாகப் பரவி வருகின்றன. வரலாறு காணாத பிரமாண்டமான முறையில் இந்தக் கட்டுமானங்கள் அமைந்து வருகின்றன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2876 திகதி: 13.05.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து | போனஸ் இல. | திங்கட்கிழமை ஜக்பொட்
25 35 40 71 T 18 ரூ. 60,812,237/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு: 1919
நீல நிற டிக்கட்டுக்கள் 2017.05.15 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 649
சீட்டிழுப்பு திகதி 13.05.2017 சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
04 42 58 71 L
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 44, 960, 576/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு: 1919
ஊதா நிற டிக்கட்டுக்கள் 15.05.2017 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ். நகரில் பிரபல்யமாக இயங்கி வரும் Everest Company யானது தனது கிளை நிறுவனத்தை யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் வியாவிப்பதற்காக வேலையாளர்களை இணைக்கவுள்ளது. ஆர்வமுடைய O/L மற்றும் A/L படித்த இளைஞர் யுவதிகள் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு.
076 864 3505, 077 517 9034

## கண்ணீர் அஞ்சலி



எமது மன்ற முதன்மை உறுப்பினர்
அமரர் இராசநாயகம் - ஞானசேகரம்
அவர்களின் மறைவை ஒட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.
காந்தி கலை வளர்ச்சி மன்றம்
சனசமூக நிலையம், நாவடி வடக்கு.

## உடன் தேவை

பெண்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும் Receptionist, Accountant, Manager, ect. உடன் தேவை.
076 507 3968

## வாகன விற்பனைக்கு

Ex2 TATA பட்டா ரகவாகனம் அலுமினிய Body உடன் பதிவு செய்யப்பட்ட (800km மட்டும் ஓடியது) புத்தம் புதிய வாகனமாக உடனடியாக விற்பனைக்குண்டு.
071 480 5738

## வீடு வாடகைக்கு உண்டு

கிளிநொச்சி நகரில் இருந்து 1 Km தூரத்திற்குள் 4 அறைகள் கொண்ட வீடு ஒன்று வாடகைக்கு உண்டு.
077 760 4667

## சேவை

உங்களின் வீட்டை அமைத்துக் கொள்ளவும் இருக்கும் வீட்டினை நவீன முறையில் புனரமைப்பு செய்யவும், வரைபடம் தயாரித்தல், உள்ளூராட்சி அனுமதி பெறல், உத்தேச மதிப்பீடு தயாரித்தல் (BOQ) போன்ற சேவைகளைப் பெற்றுக்கொள்ள எம்மை அழையுங்கள்.
Dush home & Construction
077 296 0017, 075 622 9565

## வர்த்தக நடவடிக்கைக்கு ஏற்ற காணி விற்பனைக்குண்டு

யாழ்.மாவட்ட தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு அருகில் தெல்லிப்பழை பலாலி வீதியில் வர்த்தக நடவடிக்கைக்கு ஏற்ப 13 பரப்பு (130 purch) காணி விற்பனைக்கு உண்டு. மேலதிக விவரங்களுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
071 864 3635

## Rent a Car

நாள், கிழமை, ப[illegible]த அடிப்படையில் கார்கள் வாடகைக்கு உண்டு.
077 469 6695, 075 204 0061

## HOUSE FOR RENT

JAFFNA CHUNDIKULI - BESIDE CHUNDIKULI GIRLS COLLEGE, THREE BEDROOM HOUSE, GARAGE, TWO BATHROOMS, KITCHEN FOR RENT.
cantact 011 236 1859, 021 222 9867

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பான்சிக்கடைக்கு அனுபவமுள்ள காசாளர், வேலையாள்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
T. P : 021 222 1565, 077 1324 319

## கட்ட இடிபாடு விற்பனைக்கு

100 Load அளவான கட்ட கொங்கிறீற் இடிபாடுகள் உடைக்கப்பட்ட நிலையில் யாழ்.நகரில் உடன் விற்பனைக்குண்டு. வேண்டியளவில் பெற்றுக்கொள்ளலாம்.
077 734 4801

SPOKEN SINHALA
அரச கருமமொழித் திணைக்களத்தின் பரீட்சைக்கான பாடநெறி
சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றது.
Hot line : 0777-596148
BRITISH COLLEGE of Education
23, Kachcheri nallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Pettah Rd, Mannar. Tel : 023-4924124
Main Street, Mullaithivu. Tel : 021-4927497

# Velona Cuddles by Thread works (Pvt) LTD


## தேவை



இதோ ஓர் சிறந்த சந்தர்ப்பம். வாழ்வில் சிறந்த இலக்கை அடையத் துடிக்கும் இளைஞர்களே! Velona cuddles உடன் இணையுங்கள்.
நாடளாவிய ரீதியில் முன்னிலை வகிக்கும் எமது உற்பத்தியான Cuddles (அறையங்கி) மற்றும் குழந்தைகளுக்காக வடிவமைக்கப்பட்ட மற்றும் பல தயாரிப்புக்களை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விநியோகிக்க சுறுசுறுப்பும், கவர்ச்சிகரமான தோற்றமும் மும்மொழி பேச்சாற்றல் திறமையும், விற்பனை அனுபவமும் உள்ள விநியோகத்தர்கள் ( Sales Representative ) தேவை.
உடன் உங்கள் சுயவிவரக் கோவையை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்
E-mail: hr@threadworks.lk

Thread works (Pvt) LTD
83/14, அங்குலான புகையிரத நிலைய வீதி, லக்ஷ்பதிய, மொறட்டுவ.
T.P: 070 2222278
(C29687) (10)

# STUDY IN EUROPE



Why Study In Europe?
* ஆகக்குறைந்த தகைமை GCE(A/L)
* ஆங்கில மொழி மூல பாடநெறி
* IELTS தேவையில்லை.
* வயது எல்லை கிடையாது.
* 100% விசா உத்தரவாதம்.
* மிகக்குறைந்த பாடநெறி கட்டணம்.
* பகுதிநேர வேலைவாய்ப்பு.

Admission open for Sep- 2017

***** Limited Seats Available *****

ICS DREAM BEYOND BOARDERS Foreign Education Services
Admisson:0773013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107, B 1/1 Galle Road,Colombo - 06

# Sri Lanka Institute of Information Technology
## SLIIT - JAFFNA

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் யாழ் கிளை
இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நேரடி அங்கீகாரம் பெற்ற நிறுவகம்
இலங்கை அரச பட்டதாரி வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய பட்டப்படிப்புக்கள்
யாழ் மண்ணில் எம்மிடம் மட்டுமே...!

விண்ணப்ப இறுதித் திகதி 25.05.2017
B.Sc(Hons)in Information Technology
B.BA(Hons)in HR/Marketing/Business/Accounting)
B.Sc Eng(Hons)in (Civil/Electrical & Electronics/Mechanical)

Certificate in Diplomas
Web Designing
Graphic Design & Multimedia
Auto CAD (2D & 3D)-CADD Centre
Mobile Application Development

Languages
Spoken English-CAMBRIDGE
Spoken Sinhala-ECTC

KIDS Program (Age 5 to 14) Cambridge University Press (CADD CENTRE)

Approved by :-
University Grants Commission (UGC - Sri Lanka)
Member of the Association of Commonwealth Universities (ACU)
Member of the International Association of Universities (IAU)

தொடர்புகளுக்கு:- No.53, Point Pedro Road, Jaffna.
www.sliit.lk - www.facebook.com/jaffnasliit.
021 720 4204



## ஆட்டம் கைவிடப்பட்டது

முத்தரப்புத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற பங்களாதேஷ் அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டது.

நியூசிலாந்து, அயர்லாந்து, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் அயர்லாந்தில் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பங்களாதேஷ் அயர்லாந்து அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று களத்தடுப்பைத் தீர்மானித்தது அயர்லாந்து. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 31.1 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகள் இழப்புக்கு 157 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மழை காரணமாக ஆட்டம் கைவிடப்பட்டது. இரு அணிகளுக்கும் தலா 2 புள்ளிகள் வழங்கப்பட்டன.

இந்தத் தொடரில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் அயர்லாந்து, நியூசிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.